பாரதியையும் குறளைப் போல மனனம் செய்து கிளிப்பிள்ளை மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்ல உபயோகித்து வருகிறார்களே தவிர, பாரதி சொல்கிற பாடத்தை, அவன் தருகிற நீதியை, யாரும் கற்றுக் கொள்ளவில்லை. தங்கள் தங்கள் கட்சிக்கும், அப்போதை தேவைக்கும் பாரதி கவிதைகளை எடுத்து உபயோகித் கொள்வதுடன் தமிழர்கள் திருப்தியடைந்து விடுகிறார்க

# இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்



க.நா.சுப்ரமண்யம்

Type your text

# இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்

(சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்)

திண்டிவனம்
நாள்:.........
எண்........
கிளை நூலகம்
35338

க. நா. சுப்பிரமணியம்

ஸ்ரீ அருண் பதிப்பகம்

மாவட்ட நூலக ஆணைக்குழு
விழுப்புரம் - 605 602
விழுப்புரம் மாவட்டம்

598013

## பதிப்புரை

க. நா. சுப்பிரமணியம் அவர்கள் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், விமரிசனக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு நாவல்கள் போன்றவை எழுதியுள்ளார்.

க. நா. சு. வின் படைப்புகள் தமிழக அரசால் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளது.

இவரது படைப்புகளில் 'இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்' என்ற கட்டுரைத் தொகுப்பு சாகித்திய அகாடமி பரிசு பெற்ற முக்கியமான நூல். வாசகர்கள் படித்து பயன்பெறும் நோக்கத்துடன் இந்நூலை வெளியிடுகிறோம்.

இதனை நல்ல முறையில் வடிவமைத்து தந்த லெக்ஷ்மி கம்ப்யூட்டர் மற்றும் அட்டை வடிவமைப்பு செய்த பாலாஜி அவர்களுக்கு நன்றி.

பதிப்பகத்தார்

35338

விலை 65 ரூபாய்

இலக்கியத்துக்கு ஓர் இயக்கம் ❖ கட்டுரைகள் ❖ ஆசிரியர் : க.நா.சுப்பிரமணியம் ❖ முதல் பதிப்பு : நவம்பர் 2005 ❖ வெளியீடு : ஸ்ரீ அருண் பதிப்பகம், 24சி, இராஜாக்கமங்கலம் ரோடு, செட்டிகுளம் ஜங்ஷன், நாகர்கோவில் 629 002, தொலைபேசி : 91 4652 230971, மின்னஞ்சல் : sreearun@yahoo.com ❖ அச்சுக்கோப்பு : லெஷ்மி கம்ப்யூட்டர்ஸ், நாகர்கோவில் 629 001 ❖ அட்டை வடிவமைப்பு : பாலாஜி ❖ அச்சாக்கம் : Hemamala Syndicate, சிவகாசி 626 124.

Illakiyathukku Oor Eyakkam ❖ Articles ❖ Author : K. N. Subramoniam ❖ Language : Tamil ❖ First Edition : November 2005 ❖ Size : Demy 1x8 ❖ Pages : 144 ❖ Copies : 1100 + 100 ❖ Published by Sree Arun Pathippagam, 24 C, Rajakkamangalam Road, Chettikulam Junction, Nagercoil 629 002, Phone : 91-4652-230971, e-mail: sreearun@yahoo.com ❖ Typeset by Lakshmi Computers, Nagercoil 629 001 ❖ Cover Design : Balaji ❖ Printed at Hemamala Syndicate, Sivakasi 626 124 ❖ Price : Rs.65

ISBN 81-903139-3-2

நீல. பத்மநாபன் போன்றவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போல எனக்கு விமர்சனத்தில் ஆற்றலும் குறைவு. இந்த நண்பர்களுக்கு நான் மிகவும் கடன்பட்டிருக்கிறேன். இலக்கியத்தில் செய்ய வேண்டிய விமர்சனத்தைச் செய்யும் பொறுப்பை இவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று ஏற்பட்டு விட்டால், நான் விமர்சனம் செய்வதை நிறுத்திவிட்டு எனக்குப் பிடித்த நூல்களைப் படிப்பதில் எஞ்சியிருக்கும் காலத்தைச் செலவிட்டு விடுவேன்.

நான் விமர்சனம் செய்வதன் நோக்கமே ஒரு சில நூல்களாவது ஒரு சில நல்ல வாசகர்களை எட்ட வேண்டும் என்கிற நோக்கத்தில் தான். தமிழில் இன்னமும் நல்ல வாசகர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் அதிகம் இல்லை என்பது வருத்தப்பட வேண்டிய விஷயம். நல்ல வாசகப் பரம்பரை இரண்டாயிரம், மூவாயிரம் என்று பெருக வேண்டும்; இது மிக மிக அவ்சியம்.

இந்த நூலைத் தமிழில் இன்று இருக்கிற இருநூறு, முந்நூறு நல்ல வாசகர்களுக்கும் இலக்கிய தீபத்தை மங்க விடாமல் எண்ணெய் வார்த்து, திரி போட்டுக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற பத்து இருபது பெயர் சொல்லக்கூடிய இலக்கிய ஆசிரியர்களுக்கும் சமர்ப்பணம் செய்கிறேன்.

மைலாப்பூர் — க. நா. சுப்பிரமண்யம்

*15. 12. 85*



## பொருளடக்கம்


| | |
|---|---|
| இயக்கியத்துக்கு ஓர் இயக்கம் | 9 |
| இலக்கிய விசாரம் | 11 |
| கம்பனின் காவியக் கட்டுக் கோப்பு | 31 |
| கவி பாரதியார் | 36 |
| எஸ். வி. வி. | 44 |
| டிகேசியின் இலக்கியப் பணி | 47 |
| இன்றைய தமிழ் இலக்கியம் | 52 |
| இலக்கியத்தில் கருத்தும் உருவமும் ஒரு சம்பாஷணை | 61 |
| உலக இலக்கியம் | 82 |
| பயிற்சி வேண்டும் | 91 |
| விமரிசனம் என்றால் என்ன? | 94 |
| விமரிசனத்தின் நோக்கம் | 98 |
| இலக்கியாசிரியனும் வாசகனும் | 101 |
| பத்திரிகைத் தரம் | 103 |
| இலக்கிய ரஸனை | 105 |
| இலக்கியத் தரம் உயர | 115 |
| இலக்கியத்தில் பயிற்சி | 117 |
| இன்றைய இலக்கியத் துறைகள் | 120 |
| தேசீய இலக்கியச் சங்கம் | 123 |
| படிப்பதும் ஒரு கலை | 126 |
| சோதனைகள் | 128 |
| திரும்பத் திரும்ப . . . | 130 |
| தமிழில் சிறுகதை | 132 |

நாடகங்கள் 135
வில்லியம் ஷேக்ஸ்பியர் 137
ஷேக்ஸ்பியரும் கம்பனும் பொருளகராதி 140

# இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்

சமூக சீர்திருத்தம், அரசியல், மத சம்பந்தமான விஷயங்கள், இது பற்றியெல்லாம் இயக்கங்கள் தோன்றி உருப்பெற்று, சில சமயம் நல்ல படியாக்வும், சில சமயம் விசித்திரமாகவும் பயன் தந்திருக்கின்றன.

தரமான இலக்கியத்துக்காக ஓர் இயக்கம் தோன்ற வேண்டிய காலம் வந்து விட்டது என்றுதான் தோன்றுகிறது.

உலக இலக்கிய இயக்கமும், அத்துடன் தரம் அறிந்து படிப்பதற்கான வழி வகைகள் வகுக்க ஓர் இயக்கமும், தமிழ் வளர – தமிழ் இலக்கியத்தின் எதிர்காலம் உருப்படியானதாக இருப்பதற்கு அவசியமாகும்.

இல்லாவிட்டால் படிப்படியாகத் தரம் தேய்ந்துகொண்டே போகும் என்கிற நிலைமைதான். இந்த நிலைமை நம் தலைமுறையில் தேய்ந்து வரும் வேகத்தைப் பார்த்தால், பயப்படுகிற மாதிரி இருக்கிறது. இதற்கு மாற்று ஒன்றுதான் உண்டு.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்கும் கோஷ்டி ஒன்று. ரசிகர் கோஷ்டி ஒன்று உதயமாக வேண்டும். எங்கு பிரசுரமான நூலானாலும், நல்லதாக இருந்தால் தெரிந்து கொண்டு படித்து, பாராட்டி, தமிழ் வளம் செழிக்க வழி செய்துதர ஒரு கோஷ்டி – சிறுசிறு கோஷ்டிகளாக ஊருக்கு ஒன்று – ஏற்பட வேண்டும்.

இன்று லைப்ரரிகள் தவிர, தனிமனிதர்கள் புஸ்தகங்கள் வாங்கிப் படிப்பதில்லை என்கிற நிலைமைதான் பெரும்பாலும்.

வாங்கி, விரும்பிப் படிக்கக் கூடிய புஸ்தகங்கள் வெளியிடுகிற பிரசுரகர்த்தர்கள் குறைந்துவிட்டார்கள். விற்கக் கூடியது. விளம்பரமானது – மட்டமானது எதையும் போடுகிறார்கள்.

தெரிந்து, தேர்ந்தெடுத்துப் படிக்கிற வாசகர்கள் இரண்டாயிரம் மூவாயிரம் பேர் தமிழ் நாட்டில் ஏற்பட்டுவிட்டால் போதும், நிலைமை சீர்திருந்திவிடும்.

அ, ஆ என்று தொடங்கி, இலக்கியத்தில் படிக்கக் கற்றுக்கொள்ள ஆர்வமுடையவர்கள் தேவை.

அவர்கள் படித்துத் தரம் அறிந்து கொண்டு ஒருவருக்கொருவர் இந்த அபிப்ராயங்களையும், தரம் பற்றிய சிந்தனைகளையும் பரிமாறிக் கொள்ளும் மனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

காலமும், பணமும் ஏதோ சொல்பம் விரயமானாலும் பாதக மில்லை. நல்ல நூலாக ஒன்றிரண்டு இந்த ஆண்டில், இந்த மாதத்தில், படித்தோம், படித்துப் பாராட்டினோம் – என்று இரண்டாயிரம் மூவாயிரம் பேருக்குத் திருப்தி ஏற்பட வேண்டும்.

அந்தத் திருப்தி ஏற்படுகிறபோது இலக்கியத் தரம் பற்றிய ஓர் இயக்கம் தமிழ் நாட்டில் செயல்படத் தொடங்கிவிடும்.

ஊருக்கு ஒன்பது பேர் ஆரம்பத்தில் இருந்தால் போதும்.

நன்றாக இருக்கிறது என்று எதையாவது பற்றிச் சொன்னால் தேடிப்பிடித்துப் படிக்க ஆர்வமுள்ளவர்கள் ஊருக்கு ஒன்பது பேர் இருந்தால் போதும்.

மாதத்தில் ஒரு தடவை இரண்டு தடவை கூட்டம் போட்டால் மட்டும் இயக்கம் வெற்றி அடைந்து விட்டதாக ஏற்படாது.

அரசியல், சமூகம், மற்றும் பொருளாதாரம், மதம், பழக்க வழக்கங் கள், பண்பு போல, இலக்கியம் என்கிற துறையும், நமது வாழ்விலே முக்கியமானது. அதைத் தரத்தில் குறைய விடக் கூடாது என்கிற ஆத்திரம் – தார்மிக ஆத்திரம் – இரண்டாயிரம் மூவாயிரம் பேருக்கு ஏற்பட்டுவிட வேண்டும்.

மற்ற விஷயங்களில் இருப்பது போன்ற உற்சாகம் இலக்கியத்திலும் ஏற்பட வேண்டும். சினிமாவில் – உதாரணமாக அளவு கடந்த உற் சாகம் தமிழனுக்கு இருக்கிறது. சினிமாத்தரம் மாதிரி இலக்கியத் தரமும் மட்டமாகி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டையும் சேர்த்துப் பிணைத்து ஒரே தரமாக மட்டமாக்கி விட பல பத்திரிகைகள் உதவுகின்றன. முயலுகின்றன.

இதற்கு அடிபணிந்துவிடுவது தமிழ் இலக்கியத்தின் எதிர்காலத்தை வீணாக்கிவிடும். தெரிந்து, தரம் குறைவதற்கான காரணங்களை, எதிர்த்துப் போராட வேண்டும்.

இலக்கியம் பற்றிய இயக்கம் நாடெங்கும் தமிழ் இலக்கியத்திலும் அதன் உயர்தரத்திலும் நம்பிக்கையுள்ளவர்களிடையே பரவ வேண்டும்.



## இலக்கிய விசாரம்

**ஓர் இலக்கியாசிரியரின் நாட் குறிப்பிலிருந்து –**

தமிழில் சிந்திக்கத் தெரிந்தவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார் கள். அதுவும் சிந்திப்பது தவறு என்கிற கருத்து – பெரியவாள், நமது முன்னோர்கள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள் – நாம் சிந்திக்க வேண்டிய அவசியமோ, அவசரமோ கிடையாது என்கிற மனப் பான்மை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

சநாதனிகளைப்பற்றிக் குறைவாக நினைப்பவர்கள்கூடக் கடின மான சநாதன மனப்பான்மையோடுதான் இருக்கிறார்கள். சநாதனம் என்பது ஒரு மத மார்க்கம் என்பதில்லை. அது ஒரு சிந்தனைப் போக்கு. எதற்கொடுத்தாலும் குறளை மேற்கோள் காட்டுபவர்களும், சிறு கதையைக் கூடத் தொல்காப்பியத்தில் காண முயல்பவர்களும், சநாதனிகள் தான். ஏதோ வேதத்தையும், கீதையையும் மேற்கோள் காட்டுபவர்கள் மட்டும்தான் சநாதனிகள் என்று நினைத்து விடுவது தவறு.

சநாதனம் தவறான பாதை என்று எண்ணுவதும் தவறு. பழமைப் போக்கு என்று சொல்ல வேண்டிய சநாதனம் பழமை பற்றி மட்டுமே சிந்திக்கிறது என்பதனால் இன்றைக்கு ஒவ்வாது என்பதுதான் விஷயமே தவிர வேறு அல்ல.

சநாதனமும் அதன் காலத்தில் புது மார்க்கமாக, புரட்சி மார்க்கமாக இருந்தது உண்டுதான். அதனால்தானே அது ஒரு மார்க்கமாக, வாழ்க்கை வழியாக வலுப்பெற்று, உருப்பெற்று, மக்களை ஆட்டி வைத்து ஆள முடிந்தது. அந்தச் சநாதனம் அதன் பழமையையும், அன்றையத் தேவையையும் எதிர்கால லட்சியங்களையும் கொண்டு உருவானதாகும் – அதனால்தான் அதற்கு அன்று வலு இருந்தது.

இன்று நாம் புரட்சி வழி தேட வேண்டும் என்று தேடிப் போக வேண்டியதில்லை. புரட்சி என்பது ஒரு கடவுளோ, விதியோ அல்ல. ஆனால் இன்றையச் சநாதனத்துடன் – அதாவது பழமை நோக்கு டன் – இன்றைய நோக்கும் நாளைய நம்பிக்கையும் சேருகிறபோது,

புதுவழிகள் தாமாகவே பிறக்கின்றன. இப்படிப் பிறக்கும் வழிகள், பழசிலிருந்து மிகவும் மாறுபட்டிருக்கும் போது, அதை நாம் புரட்சி என்கிறோம்.

மனித முன்னேற்றத்தில் புரட்சி என்று சொல்லப்படுவதெல்லாமே, புரட்சி உள்ளதைப் புரட்டுவது என்பதனால் முக்கியத்துவம் பெற்றது அல்ல. வளர்ச்சியை சாத்தியமாக்குவது என்கிற காரணத்தினால்தான் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுகிறது. புரட்சிகள் எல்லாமே சரித்திர நோக்கிலே சரிவர அமைகிற காரியங்கள்தான்.

இலக்கியத்திலே பழமைக்கு ஒவ்வாத அளவில் புதுமை சாத்தியமாகிறது. இந்தப் புதுமை இந்தத் தலைமுறைக்குத் தான் புதுமையே தவிர, அடுத்த தலைமுறைக்குப் பழமைதான் – சநாதனத்தின் விளைவுதான்.

இதைப் புரிந்துகொள்ளும்போது இன்றைய புதுமை, இலக்கிய மரபில் அமைகிற புதுமை, புரட்சி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது நமக்கு சுயமாகப் புரிந்துவிடும்.

இதைப் புரிந்துகொள்ள மறுத்து பழமை, பழமை என்று கொண்டாடுவதும், புதுமை... புதுமை என்று பாராட்டுவதும் பயனில் சொல்லாடல் (cant) என்று டி. கே. சியின் வார்த்தைகளிலே சொல்லி விடலாம்.

பழமை பாராட்டுவது cant என்று ஒரு சாராரும், புதுமை பாராட்டுவதும் cant தான் என்று ஒரு சாராரும், சுலபமாகவே ஒத்துக் கொண்டு விடுவார்கள். ஆனால் இரண்டுமே cant தான் என்று ஒரே சமயத்தில் ஏற்றுக்கொண்டு, இலக்கிய மனப்பான்மையுடன் இன்றைய இலக்கியத்தையும், நேற்றைய இலக்கியத்தையும், பார்த்து ரசித்து அனுபவிக்கும் ரசிகர்கள் தமிழுக்கு மூவாயிரம் பேர் ஏற்பட்டுவிட்டால் போதுமானது.

இந்த மூவாயிரம் பேர் என்பது என்ன கணக்கு என்று கேட்கலாம்.

இலக்கிய மனப்பான்மை அதிகம் படைத்த ஃபிரான்சு தேசத்திலேயும் கூட பழமை, புதுமை, சநாதனம், புரட்சி, மரபு, மரபுக்கு எதிர்ப்பு என்கிற உறவு முறைகளைப் பூரணமாக உணர்ந்தவர்கள் ஒரு கால கட்ட அளவில் மூணு ஆயிரம் பேர் வழிகள் இருப்பார்களா என்பது சந்தேகம்தான். ஒரு நூறு பேர் இருந்தாலே, இலக்கியத்திலே, தரமானதுதான் வேண்டும் என்று ஒரு புரட்சியை உண்டாக்கி விடலாம்.

இலக்கியத்தில் ரசனை, அனுபவம் என்பது ஆத்ம பரிசோதனையைப் போன்றது. அவரவர்தான், தன் மேன்மையை நாடித் தேடிக்கொள்ள வேண்டுமே தவிர, உலகம் பூராவையும் தன்னுடன் அழைத்துச் செல்வது என்பது ஒரு சில மகான்களுக்குத் தவிர மற்றவர்களுக்குக்



கைகூடி வரமுடியாத விஷயமாகும். இலக்கிய விமர்சனம் மற்றவர்களுக்கு இது இப்படி என்று சுட்டிக் காட்டலாமே தவிர வழிநெடுக அழைத்துச் செல்ல முடியாது.

இலக்கிய ரசனைக்கு ஒரு குறுகிய பாதையிலே நடந்து தேர்ச்சி பெற வேண்டியது மிகவும் அவசியம். குறுகிய பாதையா என்று நிதானம் இழந்து சிலர் கேட்கலாம் – ஆமாம், குறுகிய பாதைதான்.

இலக்கியம் என்பதே ஒரு குறுகிய பாதைதான் – பைபிள் அந்த வார்த்தையை உபயோகிக்கிற அர்த்தத்தில் : ஈசுவரனை எட்டுவதற்கு உள்ள எந்த வழியுமே குறுகிய வழிதான் – It is the eye of a needle.

உலக இலக்கியம் பரந்து கிடப்பதுதான். சீனாவில் என்ன, ஜப்பானில் என்ன, ஐரோப்பிய நாடுகளில் என்ன, இன்றுள்ள நாடுகளில் மட்டும் அல்லாமல் அழிந்துபட்ட நாடுகளிலும் மொழிகளிலும் பண்பாடுகளிலும் என்ன, எல்லாவற்றிலுமாக உயர்ந்த இலக்கியம் பரந்து விரிந்து தான் கிடக்கிறது.

ஆனாலும் இவற்றை அணுக நமக்குள் ஒரே பாதை நம்முடைய மொழி ஒன்றுதான். இந்தியனாகப் பிறந்த தோஷம், சரித்திர பூர்வமாக, நமக்கு ஆங்கிலம் என்று சற்றே விரிவான பாஷை கிடைத்திருக்கிறது. ஆனால் அதுவும் எவ்வளவு குறுகலானது, நெருக்கடியானது என்பது ஐரோப்பிய மொழிகள் சிலவற்றுடனாவது பரிச்சயம் உள்ளவர்களுக்கு நன்கு தெரியும்.

ஆங்கிலத்தையோ ராஜபாட்டை என்று சொல்லலாம். தமிழை மிகவும் குறுகலான சந்து என்றுதான் சொல்ல வேண்டும். மொழிப் பற்றில்லாதவன் கூற்று என்று இதை சொல்பவர்கள் – என்னைக் குற்றம் சாட்டுபவர்கள்தான் உண்மையிலேயே மொழிப் பற்றில்லாதவர்கள் என்று நான் சொல்வேன்.

கண்ணை மூடிக்கொண்ட பூனையாக, கிணற்றுத் தவளையாக, நாட்டு வளப்பமறியாத சநாதனத் தமிழர்கள் நம்மிடையே அதிகம். இவர்கள் அதிகரித்துத் தமிழ் இலக்கியப் பாதை குறுகிய சந்தாக குருட்டுச் சந்தாக இருப்பதை சாத்தியமாக்கிக் கொண்டிருக்கிற தமிழர்கள், பண்டிதர்கள், பேராசிரியர்கள் தயவால் நம்மிடையே அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது மாற வழி செய்வது மொழி பக்தி உள்ள எல்லோருக்கும் கடமையாகிறது. தமிழுக்குப் புதுவழிகள் வகுத்துப் பாட்டையை ராஜ பாட்டையாகச் செய்ய முயன்றவர்களில் சுப்பிரமணிய பாரதியார் முக்கியமானவர் – இன்றைய முதல்வர் என்றும் சொல்லலாம்.

பாரதி தமிழுக்குத் தந்த வேகம் இன்னமும் நீடித்து வருகிறது. அதற்கு ஈடானதொரு இலக்கியக் காட்சி உலக இலக்கியத்தின் மற்ற பகுதிகளில் காணக்கிடைப்பது அருண்ம என்றே சொல்ல வேண்டும்.

பாரதியையும் குறளைப் போல மனனம் செய்து கிளிப்பிள்ளை மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்ல உபயோகித்து வருகிறார்களே தவிர, பாரதி சொல்கிற பாடத்தை, அவன் தருகிற நீதியை, யாரும் கற்றுக் கொள்ளவில்லை. தங்கள் தங்கள் கட்சிக்கும், அப்போதைய தேவைக் கும் பாரதி கவிதைகளை எடுத்து உபயோகித்துக் கொள்வதுடன் தமிழர்கள் திருப்தியடைந்துவிடுகிறார்கள்.

எந்தச் சமயத்திலும் உபயோகப்படக்கூடிய கவிகள் எழுதியிருக்கிற வனே பெரிய கவி. அதாவது பெரிய கவிகள் எழுதியிருப்பது எல் லாமே சந்தர்ப்பச் சூழ்நிலைக்கேற்ப உபயோகித்துக் கொள்ளக் கூடியதுதான். ஆனால் அதற்காகத் தான் அவன் எழுதினான் என்பதில்லை.

சுப்பிரமணிய பாரதியைப் பற்றி ஏன் தமிழில் நல்ல புஸ்தகங்களே வரவில்லை என்று விசாரிப்பது மிகவும் பொருத்தமான விஷயமாகும். (இது 1965ல்)

மற்ற என்ன வந்திருக்கிறது? இதைப்பற்றித் தனியாக விசாரிப் பதற்கு? என்றும் சொல்லலாம்.

தமிழில் நல்ல நூல்கள் வருவது படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. அடிப்படையில் ஏனோ எப்படியோ ஒரு கோணல், ஒரு கீறல் ஏற்பட்டுவிட்டது. ஏன் என்று விசாரித்து அறிந்து கொள்ள முயலுவது அவசியமாகும்.

பத்திரிகைகளின் அளவுமீறிய இலக்கிய ஆதிக்கமும் பிரசுரகர்த்தர் களின் நாணயமற்ற போக்கும் தான் இதற்குக் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

எந்தப் புஸ்தகத்தை வேண்டுமானாலும் – புஸ்தகம் என்று எதை வேண்டுமானாலும் போட்டு – எங்களால் லைப்ரரிக்காரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுத்தோ மற்ற எந்த வழிகளிலோ லாபம் தருகிறவகையில் விற்க முடியும் என்று பெருமை பேசுகிற பிரசுரகர்த்தர்கள் தமிழில் பெருகிக் கொண்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகள் – லட்சக்கணக்கான அளவில் விற்கிற பத்திரிகைகள் – இருப்பது பற்றித் தமிழர்கள் பெருமைப்பட வேண்டியதுதான். அது நல்லதுதான் – தவறில்லை. ஆனால் இந்தப் பத்திரிகைகள், இலக்கியத் துக்குச் செய்யக்கூடிய சேவை "இதில் எழுதப்படுவதெல்லாம் அவசிய மான முதல்தரமான எழுத்தல்ல, அது வேறு இருக்கிறது", என்று அடிக்கடி தன் வாசகர்களுக்குச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்க வேண்டும். அதில்லாவிட்டால் இந்தப் பத்திரிகைகளில் எழுதப்ப வதே இலக்கியம் என்று, பாவம், வாசகர்கள் நினைத்து விடுகிறார்கள். தங்களுடைய சமூக அந்தஸ்துக்கு அது சௌகரியமாக இருக்கிறது என்று இந்தப் பத்திரிகைகளில் எழுதுகிற ஆசிரியர்கள் இலக்கியாசிரி யர்களாகத் தங்களையும் பாவித்துக் கொண்டு விடுகிறார்கள்.



தொடர் நாவல் எழுதுகிற விஷயம் வேறு. நல்ல நாவல் எழுதுகிற விஷயம் வேறு.

இரண்டும் கதை தானே என்று கேட்பதில் சாரமில்லை.

இவர் எவ்வளவு நன்றாக தமிழ் எழுதுகிறார் என்று சொல்லியும் பயன் இல்லை.

தமிழ் நன்றாக எழுதுவது நல்லதுதான். அதற்காக தமிழ் மட்டும் இருந்தால் போதும்; காலத்தை மீறி நிற்கக் கூடிய விஷயம் வேண்டாம் என்பது தவறு.

தமிழில் பழசைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பவர்கள் சொல்வதற் கெல்லாம் என்ன அர்த்தம்? புதுசாகப் பேசும்படியாக எதுவும் இல்லையென்றுதான் அர்த்தம்.

சரி, இந்தப் பழசைத் தான் இப்படிப் பேசுகிறார்களே! அதை ப்பற்றி இந்தத் தமிழ்ப் பெரியார்கள் என்ன செய்திருக்கிறார்கள்? திரும்பத் திரும்ப முச்சங்கம், தொல்காப்பியம், திருக்குறள், சேக்கிழார் என்று இல்லாததையும் இருப்பதையும் ஒரே மாதிரியாகப் பாடிக் கொண்டும், தரம் தெரியாதவர்களாக, குருடர்களாய், செவிடர்களாய், ஊமையர்களாய் வாழ்கிறார்கள்.

பழசைப் பற்றி ஒரு முழுமையான நோக்குடன், எது இலக்கியம், எது இலக்கியமல்லாதது என்று உணர்ந்து பாகுபாடு செய்து கொள்ள முயல வேண்டும். ஓர் இலக்கிய நோக்குடன் தரம் பிரித்து பழசை அறிந்துகொள்ள இதுவரை தமிழில் எவ்வித முயற்சியும் செய்யப்பட வில்லை. அதனால்தான் தமிழ் வளரத் தொடங்குகிற மாதிரித் தொடங்கிவிட்டு, ஒவ்வொரு தடவையும் ஒரு சிறு அளவுக்கு மேல் வளராமல் முட்டிபோட்டுப் படுத்துவிடுகிறது.

உதாரணமாக, உலகத்து விஞ்ஞானத்தை, அறிவை, தமிழர்களுக்குத் தமிழில் எடுத்துச்சொல்ல 1870 முதல் 1962ல் கலைக்களஞ்சியம் முற்றுப் பெற்றது வரையில், பலவித முயற்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. தமிழில் முடியாதா? முடியத்தான் வேண்டும் – முடியத்தான் போகி றது. ஆனால் இம்முயற்சிகள் எல்லாமே பூரணமாக வெற்றி பெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று யோசிக்க வேண்டாமா?

அப்படி யோசிக்கும் வேளையில், தமிழர்களுடைய பகுத்தறி வின்றிப் பழமை போற்றும் மனப்பான்மை – சமுதாய இனவெறிச் சூழ்நிலை – பார்ப்பனர்கள்தான் இனவெறிக்காரர்கள் என்பதில்லை, மற்ற இனத்தவரும் அதே வெறிக்குள்ளாவதை நாம் காண்கிறோமே, அது ஒன்று. இன்னொன்று தூய தமிழ் வாதம். பண்டிதப் பேராசிரியர் கள் தமிழ்பற்றி பிரத்தியேகமாகப் போற்றி வளர்த்து வரும் பொய்க் கதைகள். இந்த இரண்டு காரணங்களாலேதான் தமிழ் வளராதிருந்து விட்டது என்று எனக்குத் தோன்றுகிறது.

ஒரு நல்ல சுகாதாரச் சூழ்நிலையில், தமிழை, இனத்தை, இலக் கியத்தை, கருத்துக்களை வளர்க்க ஒரு முயற்சியும் செய்யப்பட வில்லை. திட்டுத் திட்டாக சிலருடைய முயற்சி அறிவும் ஆற்றலும் சுகாதாரமும் நிறைந்ததாக நமக்குத் தோன்றுகிறது – அவர்களில் ஜோதிராமலிங்கம், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை, ஆறுமுக நாவலர், பி. ஆர். ராஜமையார், அ. மாதவையா, டாக்டர் உ. வே. சாமிநாதையர், சுப்ரமண்யபாரதி, வ. வே. ஸு. ஐயர் போன்றவர்கள் இலக்கியத்தைப் பற்றிய வரையில் முக்கியமானவர் களாக எனக்குத் தோன்றுகிறது.

சென்றுவிட்ட – அதுவும் சமீபத்தில் சென்று விட்ட – காலத்தை மதிப்பிடும்போது – அந்தக் காலப்பகுதியில் வாழ்ந்து பாடுபட்டவர் கள் எவரெவர் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் என்று கணித்துக் கொள்வது – நமது கால கட்டத்தின் நினைப்பிலிருந்து கண்டு கொள் வது அவசியமாகும். அப்படிக் கவனிக்கும்போது சென்ற நூற்றாண் டின் இலக்கிய சரித்திரத்திலே அதாவது 1820முதல் 1920வரை என்று எடுத்துக்கொண்டால், இந்த ஒன்பது பேரைத் தவிர வேறு யாரையுமே கவனிக்க வேண்டியது அவசியம் இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. பல அம்சங்களில் இவர்களையும் விடப் பெரியவர்கள், குறிப்பிட்ட ஒரு பகுதிக்குச் சிறப்பாகச் சேவை செய்தவர் பலர் இருக்கலாம்தான். ஆனால் அவர்களில் யாரும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இந்த ஒன்பது பேரைப் போல வழி செய்து தரவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இலக்கியத்தில் நல்ல அம்சங்கள், சிருஷ்டி அம்சங்கள், வளர வழி வகுத்துத் தருகிறவனைத்தான் நல்ல இலக்கியாசிரியன் என்று கொள்ளவேண்டும்.

இன்றைய நோக்கு – நல்லது என்பது பற்றி இன்றைய நம் நோக்கு எல்லாக் காலத்துக்கும் எற்றதாக இருக்குமா என்பது பற்றி கருத்து வேற்றுமை இருக்கலாம். இன்றைக்கு நல்லது எது என்பது பற்றியும் கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால் பொதுவாக ஒரு நோக்கு சாத்தியமே. அது எக்காலத்துக்கும் பொருத்தமாக இருக்கும் என்பதும் சாத்தியமேயாகும். அந்தப் பொதுநோக்கைக் கண்டுகொண்டு பழசைக் கணிப்பதே இலக்கிய விமரிசகனுடைய சிறப்பான காரியம் ஆகும்.

வெறுப்பு மட்டும் கொண்டு – எதன்மேல் வெறுப்பானாலும் சரி, வெறுப்புத்தான் – இயங்குகிற எவ்வியக்கமும் பொதுவாகக் காலப் போக்குக்கும்; வளர்ச்சிக்கும் நல்லதல்ல. அன்பு நம்மை வளர்க்கிறது; வாழ்விக்கிறது. வெறுப்பு குறுக்கி விடுகிறது; தேய வைக்கிறது. நல்லதில் அழுத்தமான அன்புடன் நல்லதல்லாததில் கூடிய அளவில் அடக்க மான வெறுப்பும் நமக்குத் தேவை இது என்று சொந்த அளவில் ஒவ்வொருவரும் உருவாக்கிக்கொள்ள வேண்டிய விஷயமாகும். இன்



றையத் தேவையாகும். நல்லதில் அன்பு என்றால் நல்லதல்லாததில் ஓரளவுக்கு வெறுப்பு இருந்தே தீரவேண்டும். இரண்டையும் ஒருங்கே வளர்ப்பது நல்லதே!

இலக்கியவுலகில் புகழ் என்றால் என்ன அர்த்தம்? ஆண்ட்ரே ழீட் என்கிற ஃபிரான்சு தேசத்து இலக்கிய மேதை தனது டைரியில் கூறு கிறார். கேட்போம். "பல லட்சம் பேர் வழிகளில், ஒன்றிரண்டு ஆயிரம் பேர்வழிகள், ழீட் எழுதியதில் சில நூல்களையாவது படித்திருப் பார்கள். இந்த ஒன்றிரண்டு ஆயிரம் பேர்களில், ஒன்றிரண்டு, நூறு ஆசாமிகளாவது ழீட் சொல்வதில் ஏதோ அர்த்தம் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். இந்த ஒன்றிரண்டு நூறு பேர்வழிகளில் ஒருவர் நிச்சயமாக ழீட் சொல்வதே சரி என்று எண்ணுவார் – அந்த ஒருவர் ழீட்தான்."

ஆனானப்பட்ட ஃபிரான்சு தேசத்திலேயே, இலக்கியப் புகழ் என் றால் இதுதான் என்று சொல்லும்போது, இலக்கிய விஷயங்கள் பற்றிக் கண்ணையும் கருத்தையும் திருப்ப மறுக்கும் இந்தியா போன்ற நாடு பற்றி என்ன சொல்வது?

பத்துப்பேர் இருக்கிற கூட்டத்தில் இரண்டு இலக்கியாசிரியர்கள் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்கிறார்கள். இவரைப் போல உண்டா என்கிறார் ஒருவர். அவரைப்போல உண்டா என்கிறார் மற்றவர். இப்படிப் பேசிவிட்டு வெளியே வந்த உடனேயே 'அவனுக்கு எழு தவா தெரியும்? இவனையும் இலக்கியாசிரியன் என்கிறீர்களே!' என்று கூசாமல் சொல்லுவர் – ஒருவர் மட்டும் அல்ல, இருவருமே.

குறிப்பிட்ட ஒரு நூலைப் பற்றியோ ஓர் ஆசிரியரைப் பற்றியோ முன்னுரை எழுதினால் ஒழிய – அபிப்ராயம் சொல்ல மறுப்பவர்கள் தான் நம்மிடையே அதிகம். இதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, எதையும் படிக்காதிருப்பதே அறிவாளியின் செயல் என்று இலக்கியா சிரியன் மிகவும் பாமரத்தனமாக நம்பியிருப்பது. இரண்டு, நல்லதோ கெட்டதோ, நான் சொல்லி மாட்டிக் கொள்வானேன்? என்றாவது பயன்படக்கூடிய ஓர் ஆசாமியை நான் பகைத்துக் கொள்வானேன்? இவரைப் புகழ்ந்தால் தன்னைப் புகழவில்லையே என்று ஆயிரக்கணக் கானவர் அதிருப்தியுறுவர். எனக்கேன் இந்த வம்பு? ஒதுங்கியிருந்து விடலாம்.

புதுசைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல மறுக்கும் துணிச்சல் இல் லாத குற்றமும், லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பது என்று வருவதாலும் தான் பத்திரிகாசிரியர்களுக்கும் உண்மையிலேயே எது நல்லது, எது கெட்டது என்று தெரிந்து கொள்ள இயலவில்லை.

ஓர் ஆங்கிலப் பேராசிரியர் – அவர் மகா நிபுணர் என்று தமிழ் நாட்டில் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாகவே நிலையான பெயர் பெற்றவர். இந்த முப்பது ஆண்டுகளாகவே அவரை எனக்கும் தெரி

யும். அவர் நிறையப் படிப்பார். ஆனால் புது நூல் ஏதாவது ஒன்றைக் கொண்டு போய்த் தந்து படித்து அபிப்ராயம் கேட்டால் உடனே சொல்லிவிடமாட்டார். லண்டன் டைம்ஸ் லிடரரி ஸப்ளிமெண்டலோ அல்லது நியூ ஸ்டேட்ஸ்மென் நேஷனனிலோ மதிப்புரை வரும்வரை காத்திருந்துதான் சொல்லுவார். (அவர் பிற்காலத்தில் இந்த இரண்டு பத்திரிகைகளையும் ஏர் மெயிலில் தருவித்துக் கொண்டிருந்தார் என்பதும் கவனிக்க வேண்டிய விஷயமாகும்) யாராவது ஒருவர் ஏதாவது சொன்ன பிறகுதான். அதே விஷயத்தை எடுத்துச் சொல்ல அந்தப் பேராசிரியருக்குத் தைரியம் வரும்.

இந்த ஆங்கிலப் பேராசிரியர் விஷயத்தை எதற்காகச் சொன்னேன் என்றால், தமிழ்ப் பேராசிரியர்கள்தான் இப்படி என்று நினைத்து விடவேண்டாம் என்பதற்காகத்தான், நூல்களை ரசித்துப் படிப்பது என்பதும், ரசித்ததை என்ன, ஏன் என்று எடுத்துச் சொல்வதும் அபூர்வமான விஷயமாகவே இருக்கிறது. நல்ல நூல்கள் எத்தனை அபூர்வமாக இருக்கின்றனவோ அத்தனை அபூர்வமாக இருக்கிறது ரசிப்பதும்.

நூல்களை விரும்பிப் படிக்கிற வாசகர் பரம்பரை, தமிழில் குறையத் தொடங்கியது. ஓர் இருபது ஆண்டுகளாக குறைந்து கொண்டே வந்திருக்கிறது. புஸ்தகங்களில் தீவிர ஆர்வம் காட்டுவதிலும் – படிப்பதிலும், படித்துப் பார்த்து எடுத்துச் சொல்வதிலும் நம்பிக்கையுள்ளவர்கள் என்று கணக்கெடுத்தால் ஒரு நூறு பேர்வழிகளாவது தமிழ் நாடு பூராவிலும் தேடினாலும் கிடைப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.

பத்திரிகை படிப்பவர்கள் இருக்கிறார்கள். பத்திரிகைகளில் படிப்பதெல்லாமே நூல்கள் தானே என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். தமிழ் நாட்டுப் பிரசுரகர்த்தர்கள் பத்திரிகைகளில் வந்த நூல்களை, நாவல்களை, கதைகளை, கட்டுரைகளை விரும்பிப் பிரசுரிக்கிற மாதிரி நூல்களாக மட்டும் எழுதப்படுகிற நூல்களை விரும்பிப் பிரசுரிப்பதில்லை. பத்திரிகைகளில் வெளியாகிற ஆசிரியனின் பெயர் லட்சக் கணக்கான வாசகர்களுக்குத் தெரிகிறது என்பது அவர்களின் கட்சி.

தவிர, எந்தப் பிரசுராலயத்தாருக்கும் விளம்பரம் செய்வதில் நம்பிக்கை கிடையாது. அதாவது சுய விளம்பரம் தவிர, வேறு எதுவும் அவசியமில்லை என்பது அவர்களின் நினைப்பு. ஒரு குறிப்பிட்ட ஆசிரியனை விளம்பரப்படுத்தி, ஒரு புது வாசக கோஷ்டியை எட்டச் செய்யலாம் என்று தமிழ்ப் பிரசுராலயங்களில் எதுவுமே செய்ததாக எனக்குத் தெரியவில்லை. திருக்குறளுக்கு வேண்டுமானால் விளம்பரம் போடுவார்கள். அல்லது ஏற்கனவே தொடர்கதையாக வந்த ஒரு நாவல் தலையணை புஸ்தகமாக வந்துவிட்டது; ஏற்கனவே படித்த அன்பர்கள் வாங்க விரும்பினால் வாங்கிக் கொள்ளலாம் என்று விளம்பரம் போடுவார்கள். மற்றபடி விளம்பரமே அவசியமில்லை என்கிற நினைப்புத்தான்.



இலக்கியாசிரியனுக்கு விளம்பரம் அவசியமா, புகழ் அவசியமா என்று யோசிக்க வேண்டியது அவசியம்தான்.

புகழ் என்று சொல்லப்படுவது, பொதுவாக பயனற்றது. 'புகழைச் சாப்பிடவா முடியும்' என்று ஹாஸ்யமாக ஷேக்ஸ்பியரின் போர் வீரன் ஒருவன் போர்க்களத்தில் கேட்கிறானே, அது எவ்வளவு உண்மையான கேள்வி? ழீட் சொன்னது போல புகழ் எனப்படுவதன் உருவம் சத்தில்லாததுதான். புகழே அப்படி என்றால், விளம்பரம் மட்டும் தேவையா என்று கேட்கலாம்.

ஆனால் விளம்பரம் தேவைப்படுகிறது – இரண்டு காரணங்களுக்காக. (ஒன்று) இப்படி ஒரு நூல் வந்திருக்கிறது என்று அதில் கவனம் கொள்ளக்கூடிய ஒரு கோஷ்டியினருக்கு எடுத்துச் சொல்வதற்காக. (இரண்டு) நன்கு விளம்பரப்படுத்தப்பட்ட நூலைப் பற்றிப் பேசுவதற்காக வேனும் ஓர் ஆயிரம் பேர் படித்துவிடுவார்கள்.

புகழ் பற்றி இவ்வளவு திட்டவட்டமாக எதுவும் சொல்ல முடியாது. புகழ் மண்டைக்கேறி கனத்துவிடுவதும் உண்டு. ழீட் போல புகழைப் பற்றிய உண்மையைக் கணிக்கத் தெரிந்தவர்களும் உண்டு. புகழை லட்சியமே பண்ணாமல் தங்கள் கருமமே கண்ணாக இருப்பவர்களும் உண்டு. இந்த மூன்றாவது தரம், தமிழ் இலக்கியவுலகில் எண்ணிக்கையில் அதிகமாக வேண்டியது அவசியமாகும்.

எழுதுவதற்கு ஒரு பயிற்சி வேண்டியிருப்பது போலவே படிப்பதற்கும் ஒரு பயிற்சி வேண்டியதாக இருக்கிறது.

படித்து ..... படித்ததில் நல்லது எது என்று உணர்ந்து, மீண்டும் படித்து அனுபவிப்பதற்கு ஒரு பயிற்சி வேண்டியதாக இருக்கிறது என்று சொல்வது மிகையே அல்ல.

படிப்பதில் பெரும் பகுதியைப் பலரும் பழக்க வேகத்தினால் மட்டுமே செய்கிறார்கள். யாரோ எதையோ படித்துச் சொன்னார்களே என்று சொன்னதற்காக ஏற்றுப் படித்து விடுகிறோம். படித்ததைப் பற்றித் தரம் கண்டு, இனம் கண்டு சொல்லச் சொன்னால் பலருக்கும் வருவதில்லை.

இதிலே முறையாகப் படித்தவர்கள் தான் அதிகமாகத் தவறு செய்பவர்கள். முறையாகப் படித்துவிடுவதினாலேயே, தமிழானால் என்ன, ஆங்கிலம் ஆனால் என்னா, சமஸ்கிருதம் ஆனால் என்ன – முறையாகப் படிப்பதினாலேயே ரசனை உணர்ச்சி தடித்து மரத்து விடுகிற மாதிரி இருக்கிறது. பல தமிழ்ப் பண்டிதர்கள், ஆங்கிலப் பண்டிதர்கள், சம்ஸ்கிருதப் பண்டிதர்களை வைத்து இதை நிரூபித்துக் கொள்ள இயலுகிறது.

'அவர் நன்றாகப் படித்தவர்' என்று ஒருவரைப் பற்றிச் சொன்னால் அவர் பற்றி எதுவும் அறிந்து கொள்ள இயலாத நிலையில் இருக்கிறது.

ஏன் படித்திருக்கிறார், எப்படிப் படித்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. உலக இலக்கியப் பரப்பில் எது எது நன்றாக இருந்தது? அவற்றுள் எதைப் படித்தேன் என்று அவர் சொல்கிறார் என்று கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. நாலு நல்ல நூல்களைப் பற்றி ஒருவர் வாய்திறந்து அபிப்ராயம் சொல்லிவிட்டாரானால் நாம் அவரது ரசனை பற்றி ஓரளவு தீர் மானித்துக் கொள்ளலாம்.

ஆனால் படித்த புஸ்தகங்களைப்பற்றிப் பேசுவதற்கே ஆள் கிடைப் பது அருமையாக இருக்கிறது. திருவனந்தபுரத்தில் ஒருவர், கீழ்ப்பாக் கத்தில் ஒருவர் என்று மூன்று பேரைத்தான் எனக்குத் தெரிகிறது. கடிதம் எழுதுவதில் அவ்வளவாக சிரத்தையில்லாத எனக்குப் புஸ் தகங்களைப் பற்றிப் பேசுவதற்கும் ஆள் கிடைப்பது சிரமமாக இருக் கிறது.

நல்ல புஸ்தகங்கள் படிப்பதும் குறைந்து கொண்டிருக்கிறது. இருக் கிற நல்ல நூல்களையெல்லாம் படித்தாகி விட்டது என்று அர்த்தமா? அதுவுமில்லை. எதைப் படித்தாலும் நன்றாக இல்லை போல ஒரு நினைப்பு ஏற்படுகிறது. ஆனால் புதுசு பற்றி – 1964ஆம் ஆண்டு நூல் கள் பற்றித்தான் குறை. பழைய ஆல்டவுன் ஹக்ஸ்லியைப் படித்தால் முன் செய்த முடிவு சரியல்ல என்று சொல்லத் தோன்றவில்லை. டப்ளினர்ஸ் கதைகளைப் படித்தால் – பத்தாவது தடவையாகப் படிக்கும்போதும் ரசிக்க முடிகிறது. அந்த அளவில் ஸோமர்ஸட் டாமை ரசிக்க என்னால் முடியத்தான் இல்லை.

நம்முடைய கெட்டிக்காரத்தனத்துக்கு இடம் தருகிற ஆசிரியர் களைத் தான் நாம் விருப்பிப் படிக்கிறோம் என்று ஃபிராங்க் ஓ கானர் சொல்லுகிறார். அது உண்மையா என்று சிந்தித்துப் பார்க்கிறேன். என்னைப் பற்றிய வரையில் என் கெட்டிக்காரத்தனத்தை வேண்டாத ஆசிரியர்களையே எனக்குப் பிடிக்கிற மாதிரி இருக்கிறது. உதாரண மாக தாமஸ் மன்னின் ஜோசப் சகோதரர்களில் என் கெட்டிக்காரத் தனம் என்ன செய்யும்? மன் என் கெட்டிக்காரத்தனத்துக்கு எதையும் விட்டு வைக்கவில்லையே!

இது பூரணமாகவும் உண்மையல்ல தான். ஜேம்ஸ் ஜாய்ஸின் உலி ஸிஸ் அல்லது ஃபின்னிகன்ஸ் வேக் படிக்கும் போது, ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தத்தை அறிய, பூரணமான உறவு முறைகளைக் கண்டு கொள்ள என் கெட்டிக்காரத்தனம் தேவைப்படுகிறது. ஆனால் காஃப்காவைப் புரிந்துகொள்ள அடிப்படையான ஒரு நம்பிக்கை – மதம் என்று சொல்லக்கூடிய அளவில், ஒரு நம்பிக்கை தேவைப்படு கிறது. ப்ரூஸ்ட், ரில்கே, அல்பேர் கேமு இவர்களைப் படிக்கவும் வெவ்வேறு விதமான நம்பிக்கைகள் எனக்குத் தேவைப்படுகிற மாதிரி இருக்கிறது. டூமாஸையோ கல்கியையோ படிக்க, கெட்டிக்காரத் தனமோ, மத நம்பிக்கையோ தேவைப்படவில்லை. அதனாலே தான் டூமாஸும், எட்கார் வாலஸும், கல்கியும் அதிகம் பேர் வழிகளினால்



படிக்கப்படுகிறார்களோ? சிரமப்படுவதைத் தவிர்க்கவே படிப்பிலும் எல்லோரும் விரும்புகிறார்கள்? சிரமப்பட்டுப் படித்த தலைமுறை களின் காலம் தீர்ந்துவிட்டதா? இனி சினிமா டெலிவிஷன் ரேடியோ காலத்தில் உறங்கிக்கொண்டே பார்க்கலாம்; கேட்கலாம் என்கிற நிலைதானா?

டாண்டேயையும், ஷேக்ஸ்பியரையும் படிக்க ஒரு கெட்டிக்காரத் தனமும், ஒரு மதம் போன்ற நம்பிக்கையும் தேவைப்படுகிறது. இருந் தும் சிரமப்பட்டுப் படித்து விடுவதாகத்தான் உலகம் பூராவும் சொல்லிக்கொள்கிறது. அது பொய்தானா? படிக்கத் தொடங்கி விட்டால் முதல் தரமான இலக்கியாசிரியர்கள் – டாண்டே, ஷேக்ஸ் பியர், டாஸ்டாவ்ஸ்கி, மன் போன்றவர்கள் – தன் வாசகர்களைக் கட்டாயப்படுத்தி விடுகிறார்கள். ஒரு மாயத்தினால் கட்டுப்படுத்தி விடுகிறார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு. இந்த மாயத்தை அலச முயலுகிற விமர்சனம் தோற்றுவிடும் என்றே தோன்றுகிறது. இலக்கிய விமர்சனம் இரண்டாந்தரமானதையும் பூரணம் பெறாததையும் தான் எட்டித் தொட முடியும் என்று ஏற் படுமா? அப்படியானால் இலக்கிய விமர்சனம் என்பது அப்படி ஒன்றும் பிரமாதமான இலக்கியத்துறை அல்ல என்று தான் சொல்ல வேண்டுமா?

தெரிந்ததையே திரும்பத் திரும்ப கண்டு கொள்வதில் மனித மனம் எல்லையற்ற திருப்தி காண்கிறது.

பிரயாணத்தில் நிம்மதி காண்கிற காரியம் இப்படி ஏற்படுவது தானோ?

இன்று பேச்சில் வல்லவர்களாகக் கருதப்படுகிறவர்களிலே ஒவ் வொருவருமே எல்லோருக்குமே தெரிந்ததைத் தான் திரும்பித் திரும்பிச் சொல்கிறார்கள். அதனாலேதான் அவர்கள் ஜனங்களுக்கு உகந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லலாமா?

சிந்தனைகளிலும் வார்த்தைகளிலும் பழக்கப்பட்டது தான் திருப்தியளிக்கிறது என்பது பயங்கரமான ஓர் உண்மை. இதிலிருந்து விடுபடுவது மிகவும் அவசியம் என்று கலை உணர்ச்சியுள்ள ஒவ் வொரு இலக்கியாசிரியனும் பாடுபட வேண்டியதாக இருக்கிறது.

சரித்திர நாவல் என்று சொல்லப்படுவதை எழுதுபவர்களும், தொடர் நாவல், நளபாக சாஸ்திரம் கற்றவர்களும், பத்திரிகைக் காரர்களும், வெற்றி பெறுகிற (அதாவது ஜனங்கள் விருப்பத்தைக் கவருகிற) இலக்கியாசிரியர்களும் பழக்கமானதையே திருப்பித் தந்து ஏமாற்றிவிட்டு நகர்ந்து விடுகிறார்கள்.

புதுசாக எதுவும் தருபவனை உலகம் – பத்திரிகை உலகம், பண்டி தர் உலகம், வாசகர் உலகம் – சுலபமாக அங்கீகரிக்க மறுக்கிறது.

அப்படியும் தங்களை அங்கீகரிக்க வைத்துள்ள மேதைகள் எண்ணிக்கை உலக இலக்கியப் பரப்பில் அதிகம் என்று சொல்லலாம். தமிழிலும் ஐந்தாறு பேர் இல்லாமல் இல்லை இன்றைய இலக்கியத்தில்.

காலம் என்பது முன்னோக்கி ஓடும் ஆறு என்று தோன்றுகிறது – இந்த ஆற்றின் வேகம் கடிகாரத்தால் அளக்கப் பெறுகிறது – காலண்டரால் அளக்கப் பெறுகிறது; ஆனால் மனித உள்ளம் கொண்டு காலத்தை அளக்கும் போது அது ஒரு சீரான வேகம் பெற்று ஓடுவதாகத் தெரியவில்லை. ஒரு விநாடியை ஒரு யுகமாகக் காண முடியும். ஒரு யுகத்தை ஒரு விநாடியாகக் காண முடிகிறது. முன்னோக்கித் தான் ஓடும் என்றும் சொல்ல இயலவில்லை.

'காண' என்கிறபோது எதைக் கொண்டு எப்படிக் காணுகிறோம்? என்பதையும் அறிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது.

காலத்தைக் காண, பலவிதமான உத்திகளை பல இலக்கியாசிரியர்கள் கையாண்டிருக்கிறார்கள். தாமஸ் மன் தனது ஜோஸஃப் நாவல்களில் காலத்தை சரித்திர நோக்கோடு, மனித குல அளவில் காண்கிறார். டால்ஸ்டாயின் 'போரும் அமைதியில்' காலம் சரித்திர நோக்கோடு காணப்படுகிறது. மார்சல் ப்ரூஸ்ட் காலத்தை – சென்று போனதையெல்லாம் – தன் கண் முன் நிறுத்தி, நுணுக்கமாக அலசி ஆராய்கிறார். ஃபிரான்ஸ் காஃப்கா என்கிற இலக்கியாசிரியர் தன் சிறுகதைகள் பலவற்றில் காலமும் இடமும் இல்லாமலே செய்து விடுகிறார். இந்திய வேதாந்திகள் கனவு உலகில் காலம் நமது நினைவு உலகத்தில் போல இல்லை என்று சுட்டிக் காட்டுகிறார்கள். தூக்க உலகத்தில் காலம் என்பதே கிடையாது என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

சமீப காலத்திய இலக்கிய உத்திகள் போக பழங்காலத்தில் இவ்வளவு விரிவாக வித்தியாசப்பட்ட அளவில் இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது காலம் பற்றிச் சில உத்திகளைக் கையாண்டிருக்கிறார்கள். ஹோமரும் வால்மீகியும் காலத்தை ஓரளவுக்கு நமது வாழ்வில் போலவே ஒரு சாதாணத்வத்துடன் கையாளுகிறார்கள். ஷேக்ஸ்பியரில் காலம் என்பது சாவு, வாழ்வு, கடவுள், சிந்தனை என்கிற தத்துவம் போல, ஓர் அடிப்படையாக அறிந்து கையாளப் படுவதைப் பல சோக நாடகங்களிலும் பல பிற்காலத்திய இன்பவியல் நாடகங்களிலும் காண்கிறோம். டாண்டேயின் காலம் பற்றிய சித்தாந்தம் மிகவும் சிக்கலானது. தெரிந்த உலகைக் கொண்டு தெரியாத உலகை அவர் அளக்க முற்படுகிறார். பழக்கமான காலத்தை வைத்து மனிதனுக்கு பழக்கமேயற்ற காலத்தை அளந்து காட்ட முற்படுகிறார்.

சாவு, மனிதத்தன்மை, கடவுள் சித்தாந்தம் என்பது போல உலக இலக்கியத்தில் காலம் என்பது ஓர் அடிப்படைச் சரடு. இந்தச் சரடு



இன்றைய சித்தாந்தங்களில் தத்துவப் போக்குகளின் விளைவாக உறுதி பெற்றுள்ள சரடு. சிக்கலும் ஆகிவிட்ட சரடு. இலக்கியாசிரியனின் எழுத்துக்கு, சிருஷ்டிக்கு, ஆழமும் அர்த்தமும் தருகிற, முறுக்கேற்றுகிற சரடுகளில் காலம் என்கிற இந்தச் சரடு மிகவும் முக்கியமானதொன்று என்று நாம் உணருகிறோம். மற்ற அற்புதங்களைச் சாதித்ததைவிட மார்சல் ப்ரூஸ்டும் தாமஸ், மன்னும் தங்கள் தங்கள் நாவலில் காலம் என்கிற போக்கை நிர்மாணித்ததைப் பெரிதாகச் சொல்லி ரசிப்பவர்கள் உண்டு.

ஓர் ஸ்பானிய சிறு கதாசிரியனின் கதையொன்று நினைவுக்கு வருகிறது. ஆசிரியர் பெயரும் எனக்கு நினைவில்லை; கதையின் பெயரும் நினைவில்லை. கதை மட்டும் மனத்தை விட்டு அகல மறுக்கிறது.

'ஸ்பெயின் தேசத்திலே ஒரு நாடகாசிரியர்; பல நாடகங்கள் எழுதி வெற்றி பெற்றவர், கடைசியாக ஓர் அற்புதமான நாடகம் எழுதிக் கொண்டிருக்கிறார். மிகச் சிறப்பான நாடகம். கடைசி அங்கம் மட்டும் எழுத வேண்டியது பாக்கி. அந்தச் சமயத்தில் அவரை ஃபிரான்கோ சர்வாதிகாரத்துக்கு எதிரி; சதி செய்தவர் என்று கைது செய்து விடுகிறார்கள். மறுநாள் விடியற்காலை சுட்டு விடுவார்கள்

இரவு முழுவதும் இந்த நாடகாசிரியருக்குச் சிந்தனையே ஓடவில்லை. மறுநாள் காலை அவரைச் சுவரோரமாக நிறுத்தி வைத்துச் சுடுவதற்கு ஃபிரான்கோ வீரர்கள் வந்துவிட்டார்கள். சுவரோரமாக நிறுத்தியும் விட்டார்கள். அதற்கும், சுடு என்று தலைவன் உத்தரவிட்டு அவர் சுடப்பட்டு விழுவதற்கும் இடையில் இரண்டு நிமிஷங்கள் தான் இருக்கின்றன.

அந்த இரண்டு நிமிஷங்களில், அந்த நாடகாசிரியருடைய மஹோந்நதமான நாடகத்தின் கடைசி அங்கம் எழுதப்பட்டு நடிக்கப்பட்டும் விடுகிறது – எல்லாம் நாடகாசிரியரின் மன அரங்கிலே தான் – என்பது கதை. படித்த போதும், நினைத்துப் பார்க்கும் போதும் அற்புதமாக வார்க்கப்பட்ட கதை என்று தோன்றுகிறது.

காலம் என்கிற மனித உலகத்தின் அடிப்படையை தகர்ப்பதும் அனுசரிப்பதும் இலக்கிய சிருஷ்டியில் ஓர் ஆதாரமான விஷயம்; உத்தி; சிறப்பு. இதை சுயப்பிரக்ஞையுடன் செய்ய முற்படுவது அவசியமாகும். சரித்திர நாவல் எழுதி, காலமற்ற காலத்துக்குத் திரும்பிவிடச் செய்யப் படுகிற முயற்சியல்ல இது. இன்றைத் தேவை என்று எண்ணிச் செயல் படுகிற காரியமும் அல்ல இது. ஒரு வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப் படையில் தோன்றுகிற ஒரு தவிர்க்க முடியாத நோக்கு இது – இது இருக்கிற இடத்தில் இலக்கிய சிருஷ்டிக்கே தனியாக ஒரு அர்த்தம், ஆழம், அநுபூதி கூடுவது போல இருக்கிறது.

காலத்தை ஒரு சித்தாந்த அடிப்படையில் அல்லாமலும் கையாள லாம் என்பதற்கு டாஸ்டாவ்ஸ்கி ஓர் உதாரணம். ஆனால் அது முன்மாதிரியாகப் பிரயோசனப்படாத உதாரணம். டாஸ்டாவ்ஸ்கி யின் மேதைக்குப் போவதெங்கே?

சொல்லுக்கும், செயலுக்கும், சிந்தனைக்கும், காரியத்துக்கும், லட்சியத் துக்கும், நடைமுறைக்கும் வித்தியாசம் இருந்துகொண்டே தான் இருக்கும் என்று நாம் ஏற்றுக்கொண்டு விடுகிறோம். அப்படி இல்லாமலும் இருக்கலாம் என்று நினைத்துப் பார்ப்பது இந்தக் காலத்து மரபு இல்லை.

இந்த இரு கூறான போக்குகள் இருக்கின்றனவே இவை மேலை நாட்டுப் பண்பால் நமக்கு ஏற்பட்டவை. அதற்கு முன், சொல்லும், செயலும், லட்சியமும் நடைமுறையும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நாம் எண்ணி வந்தோம். ரிஷிகளுக்கும், மகான்களுக்கும் சாத்தியமானதெல்லாம் நமக்கும் சாதாரண 'நாயினும் கடையனுக் கும்' சாத்தியம் என்று தான் எண்ணி வந்திருக்கிறோம். மொகலாய வம்சத்து மன்னனுக்கு பென்ஷன் கேட்கப் போன இடத்திலே, பிரிட் டிஷ் பார்லி மெண்டு மகிமைக்கு, ஜனநாயக ஆட்சி முறைக்கு ராஜா ராம் மோகன் ராய் மனத்தைப் பறிகொடுத்ததில் ஆரம்பித்தது இந்த இரு கூறு வாழ்வு. இந்திய சிந்தனை மறுமலர்ச்சியில் இந்த ஆட்சி பூரணமாகி விடவில்லை – பூர்த்தியாகிவிடவில்லை.

மேலை நாடுகளில் இண்டலெக்சுவல் (Intellectual) என்று ஒரு பிரிவினரைக் கூறுகிறார்கள். அந்த மாதிரி ஒரு பிரிவு நம்மிடையே இருந்திருப்பதாகவே தெரியவில்லை. வாழ்க்கை வேறு, சிந்தனை வேறு என்று பூரணமாக ஏற்றுக் கொண்டவர்களைத்தான் இண்டலெக்சுவல் என்று சொல்ல வேண்டும் என்று மேலை நாட்டு உதாரணங்களைக் கொண்டு கவனிக்கும்போது நமக்குத் தெரிகிறது. ஸாக்ரடிஸ் தனது பேச்சு வன்மையால் உலகம் பூராவையும் வசப்படுத்தலாம். ஆனால் அவர் வீட்டிலே அவர் பேச்சு எடுபடாது. ருஸ்ஸோ தனது புரட்சிகர மான கொள்கைகளால் ஒரு புரட்சியை உருவாக்கலாம். ஆனால் அந்தப் புரட்சியின் அடிப்படை அவரைத் தொடாது. மார்க்ஸ் ஒரு சித்தாந்தத்தை ஸ்தாபிக்கலாம். புரட்சி இப்படித்தான் வரும் என்று சொல்லலாம். ஆனால் புரட்சி அவர் சொல்லாத வழிகளிலே வந்து விடலாம். அதனால் பாதகமில்லை; அதுவும் மார்க்ஸியப் புரட்சி தான். உலகம் பூராவுக்கும் அறிவு புகட்ட முன் வருகிற தத்துவஞானி எண்பத்தியெட்டாவது வயதில் தனது நாற்பது வயதுக் காரியதரிசியை மணந்து கொள்ளலாம். தத்துவம் வேறு, வாழ்க்கை வேறு. இது இண்டெலக்சுவல் முறையில் குறைபாடான அம்சம்.

நிறையம்சங்கள் பலவுண்டு. ஒரு கட்சியை ஸ்தாபித்துக் கொண் டால் அதைக் கடைசி வரை கொண்டு போக எத்தனை வாதப் பிரதிவாதங்கள் உண்டோ அத்தனையும் சொல்லி விடுகிற திருப்தி அறிவுபூர்வமாக மகத்தானதுதான். இந்த அளவில் பார்க்கப் போனால் இந்தியச் சிந்தனையில் சங்கரர் ஒரு இண்டலெக்சுவல் என்று சொல் கிற அளவுக்கு எட்டியிருக்கிறார் என்று சொல்லலாம். இன்டலெக் சுவல்களுக்கு நாம் சொல்லப் போகிற ஒவ்வொரு வாதத்துக்கும் பிரதிவாதம் தெரியும். பிரதி வாதம் தெரியுமே தவிர அவர்கள் எதிரிடையானதை நம்புகிறார்கள் என்று ஏற்படாது. நம்பிக்கை என்று எதையும் எந்த அடிப்படையிலும் வைக்காமல் அறிவுக் கட்டிடம் மேலே மேலே கட்டிக் கொண்டு போகிறவர்களை இன்டலெக்சுவல் என்று சொல்லலாம். நம்பிக்கை, மதம், அடிப்படைத் தீர்மானம் உணர்ச்சியை உண்டாக்குகிறது. அறிவுமயமான இன்டலெக்சுவலுக்கு உணர்ச்சி என்பது கிடையாது.

கலை, உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு. இதிலே அறிவுக்குப் பிரதான்யம் தந்து விட்டால் கலை அழிந்துபட்டுவிடும் என்று சொல்லலாம் தான். இருந்தும் ஆல் பொர்கேமு போன்றவர் களுடைய நாடகங்கள், கதைகள், நாவல்களைப் படிக்கும்போது அறிவுடன் கூட ஓர் உணர்ச்சி வேகமும் வருவது நன்கு தெரிகிறது.

கலைஞர்களை இண்டலெக்சுவல்கள் என்று சொல்லக் கூடாது என்று ஒரு கட்சி. இண்டலெக்சுவல் அம்சம் மட்டும் இருந்தால் கலைஞனாகவே முடியாது என்பார்கள்.

இப்படியெல்லாம் மேலை நாடுகளிலே போட்டுக் கொண்டு குழப்புகிற ஒரு வார்த்தை இண்டலெக்சுவல் என்பதாகும். இதை ஏன் நாமும் கையாண்டு குழம்ப வேண்டும் என்று கேட்பவர்களுக்கு, ஓரளவுக்கு மேலை நாடுகளில் நடப்பதைத் தெரிந்து கொண்டால் நமது போக்குக்குச் சாதகம் ஏற்படும் என்கிற நம்பிக்கைதான். இண்டெலக்சுவல் என்கிற வார்த்தை இந்தியாவுக்கும் வந்துவிட்டது– அதைத் தப்ப முடியாது. விஷயத்தை தெளிவாக்கிக்கொள்ள அவ சியம் உண்டு என்பது தான் அடிப்படை விஷயம்.

கலைஞர்களை இண்டலெக்சுவல் என்று சொல்லக்கூடாது என் றால், பின் யாரைச் சொல்லலாம் என்கிற கேள்விக்கு விஞ்ஞானி களை, தத்துவப் பேராசிரியர்களை, மற்றும் அரசியல்வாதிகளைச் சொல்லலாம் என்று பதில் வரும் பெர்டிராண்ட்ரஸ்ஸல், ஆர்னால்டு டாயின்பி என்பவர்கள் உடனடியாக மனத்துக்கு வருகிற உதாரணங் கள். இவர்களுடைய சித்தாந்தங்கள் கலையைப் பாதிக்கின்றன என்பதால் இவர்களுடைய இண்டலெக்சுவல் போக்கு கலைஞனுக்கு முக்கியமானதாக இருக்கிறது. இது இந்த நாட்களின் நியாதி. ஃபிரான்ஸ் காஃப்காவைப் படிக்கும் போது ஓர் இண்டலெக்சுவல் போக்கு அவருக்கு இருப்பது போலத் தெரிகிறது. அதே போல தாமஸ் மன், ஸார்த்தர் என்கிற ஜெர்மன், ஃபிரெஞ்சு நாவலாசிரியர்களைப் பார்க்கும்போதும் ஓர் அறிவு நோக்கு இருப்பது போலத் தெரிகிறது.

ஒரு காலத்தில் மத. நம்பிக்கை என்பது மனிதனுக்கு உபயோகப்பட்டது போல இந்த அறிவு அடிப்படை நமக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் எழுதுகிற நம் எல்லோருக்கும், உபயோகப்பட வேண்டும்.

இவை ஓரளவுக்கு குழப்பமான, குழப்புகிற சிந்தனைகள் தான். ஆனால் உணர்ச்சி, அறிவு என்பதற்கிடையிலுள்ள உறவு முறைகள், கலை பற்றிய வரையில் தெளிவாக வேண்டிய அவசியம் உண்டு. அவை தெளிவு பெறுவதற்குப் பதில் சிக்கலாகிக் கொண்டே வருகிற மாதிரித்தான் தெரிகிறது. இந்தச் சிக்கலுக்கு மேலை நாட்டு இண்டலெக்சுவல்கள் மிகவும் உதவியிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

எத்தனையோ விஷயங்களைப் பற்றி எழுத வேண்டிய அவசியம் இருக்கும்போது எப்பவாவது ஒரு சிறுகதை எழுதிவிட்டுத் திருப்தி அடைந்து நானும் ஒரு இலக்கியாசிரியன் என்று திருப்தியடைந்து விடுபவர்களைப் பற்றி என்ன சொல்வது?

மதம் என்பது ஒரு காலத்தில் வாழ்க்கை வழியாக இருந்தது. இப்போது அதைப் பற்றிப் படித்தாலும் பேசினாலும் போதும் – proxy வைத்துச் சடங்குகளைச் செய்து கொள்ளலாம் என்று சொல்கிற அளவுக்கும் போய்விட்டது. ஒழிந்த நேரத்தில் ஒண்ணேகால் கதை – நமது நல்ல சிறு கதாசிரியர்கள் பலர் கூட ஆரம்ப காலத்தில் ஒரு கதை எழுதிவிட்டு அதற்குப் பிறகு நூற்றுக்கணக்கான கதைகள் – எல்லாம் சேர்ந்தாலும் கால் கதைக்குத்தான் கணக்காகும் – எழுதியுள்ளவர்கள் தான். மற்றபடி இலக்கியத்துக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லாதது போல இருந்துவிடுகிறார்கள். ஒரு நல்ல புத்தகமோ சிந்தனையோ, நினைப்போ இவர்களிடையே வேரூன்றி விடுவதில்லை. இலக்கியமும் ஒரு வாழ்க்கை வழிதான் என்கிற சிந்தனையே நம் எழுத்தாளர்களுக்கு ஏற்படுவதில்லையே – ஏன்?

எழுதுவது அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை – பரந்ததாக இருக்க வேண்டும். ஒரு தனித்துவம் இருப்பதாக இருக்கவேண்டும். வாழ்வில் ஏற்படுகிற பல அனுபவங்களையும் ஒன்று சேர்த்து ஒருமைப்படுத்திக் கொண்டு சிந்தித்தவன் எழுத்துத்தான் இலக்கியமாக இருக்க முடியும். இப்படி ஒருமைப்படாதவன் – சிந்திக்காதவன் – எழுத்து பிச்சைக்காரன் வாந்திதான். ஏதோ எங்கேயோ எப்படியோ ஒன்றிரண்டு நல்லதாக வந்துவிட்டால் போதாது. நல்லது வருவதற்கு எந்த நிமிஷமும் நிமித்தங்கள் இருக்கவேண்டும். அப்போது தான் ஒருவனை இலக்கியாசிரியன் என்று சொல்லலாம் – அவன் எழுதாவிட்டாலும் கூட சரிதான்.

இலக்கியத் திருட்டு என்று பேச்சு வந்தால், உடனே சில அரை வேக்காடுகள் ஷேக்ஸ்பியர் திருடவில்லையா என்று கேட்டுவிட்டு இதற்குப் பதில் ஏது என்று தங்கள் முதுகில் தாங்களேதட்டிக்



கொண்டுபோய் விடுகிறார்கள். ஷேக்ஸ்பியர் ஹோலின்ஷெட்டையும் ப்ளூடார்க்கையும் எடுத்துத்தான் எழுதினார். ஆனால் அதற்காக சார்லஸ் கார்விஸின் நாவலை எடுத்துப் படிக்க முடியாமல் பண்ணும் அஜலக்ஷ்மியையும், லியனார்டு மொர்ரிக்கின் சிறு கதையை எடுத்துப் பத்திரிகை கதையாக்கும் பத்திரிகைக் கிறுக்குகளையும் ஷேக்ஸ்பியர் என்று நினைக்கிற களிமண் மூளைகளைச் சொல்லி என்ன லாபம்? ப்ளூடார்க் என்கிற மேதை எழுதிய கோரியரானஸ் சரித்திரத்தை எழுத்து ஷேக்ஸ்பியர் கவிதையாக ஆக்கும் போது – இரண்டும் தரம் குறையவில்லை; உயருகிறது. நமது தமிழ் மேதாவியர்களின் எழுத்து லியனார்டு மொர்ரிக் எழுத்தை எடுத்து, அசடு வழியக் கையாளும் போது ஒரு புதுத் தொழில் பிறக்கிறது அவ்வளவு தான். மேதாவிலாஸத்துக்குப் போவதெங்கே?

இதே போலத்தான் தொடர்கதை எழுதுபவர்களைப் பற்றிச் சொன்னால் கோபித்துக் கொள்கிற அதிமேதாவியர்கள் சார்லஸ் டிக்கன்ஸுடைய நாவல்கள் தொடர்கதைகளாக வெளிவந்ததுதானே? டால்ஸ்டாயின் நாவல்களும் தொடர்கதைகளாக வந்தவைதான். ஒரு டால்ஸ்டாயிக்கு எதிராகப் பத்தாயிரம் தொடர் கதாசிரியர்கள் ருஷ்யாவில் இருந்தனர். இங்கு அவ்வளவில்லை. நூற்றுக் கணக்கில் தான் உண்டு.

விமரிசனத்தில் ஆங்கில அமெரிக்கப் பாணிகளைப் பின்பற்றுவது ஒரு அசட்டு மோஹம். மலையாளத்தில், வங்கத்தில், மராட்டியில் இந்த மோஹம் அசட்டுத்தனத்தின் எல்லையைக் கூடக் கடந்திருக்கிறது என்று சொல்லலாம்.

Realism என்கிற வார்த்தைக்கு எங்கும் யாருக்கும் அர்த்தம் தெரியாது. அவரவர் திறனுக்கேற்ப அர்த்தம் பண்ணிக் கொள்வார்கள். அதுவும் அரசியல் குழப்பம் வேறு வந்த பிறகு, இதற்கு வேறு வேறு அர்த்தங்கள் உண்டாகிவிட்டன. போலந்தில் ரியலிஸம் என்பது ருஷ்ய ரியலிஸம் அல்ல. ருஷ்ய ரியலிஸம் ஹங்கேரியன் ரியலிஸம் அல்ல. அது ஜப்பானிய ரியலிஸம் அல்ல. இப்படியாகக் கிளைத்துக் கொண்டே போகிற இது, விமர்சனத்தில் ஒரு ராஜபிளவை. தமிழில் இந்த அளவுக்கு நமது விமர்சனம் போய் விடவில்லை – ஒரு சில முயற்சிகள் எப்படியிருந்தாலும் – என்பது பற்றி நாம் சந்தோஷப்படலாம்.

ரியலிஸம் என்பது ரொமாண்டிசிஸம் என்பதற்கு எதிரிடை. ஆனால் ரொமாண்டிசிஸம் என்பது கிளாஸிசிஸம் என்பதற்கு எதிரிடை, அல்லது ரியலிஸம் என்பது ஐடியலிஸத்துக்கு எதிரிடை. (இந்த ஐடியலிஸம் என்கிற வார்த்தை இலக்கிய விமர்சனத்தில் அல்லாமல் சிந்தனை உலகில் மட்டும் ஏறிய வார்த்தை) இப்படியே நாச்சுரலிஸம், ஸம்பாலிஸம், எக்ஸிஸ்டன்ஷியலிஸம் என்று போகிறது. இதில் பாதி,

ஒரு கோஷ்டியை மட்டும் குறிக்கும் வார்த்தைகள், இந்திய அகராதியில் இலக்கிய உத்திகளைக் குறிக்கும் வார்த்தைகளையும், இலக்கியத்தைக் குறிப்பதாகத் தவறுதலாக ஏற்றுக் கொண்டு குழம்புபவர்கள் பலர்.

ஒரு மொழி இலக்கியத்தில் விமர்சனத்துக்கான வார்த்தைகள் அந்த மொழி மரபில், சிந்தனை மரபில் வந்தவையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதற்கு அர்த்தமில்லை – அர்த்தமிருக்க முடியாது. ஏற்கனவே சிருஷ்டி தத்துவம் சற்று சிக்கலானது. புரியாத விஷயங்களைக்கொண்டு அதை விளக்க முற்பட்டு மீண்டும் சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படுவானேன்? ஆங்கில அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மொழிகளிலும் விமர்சன நூல்கள் உண்டு தான் – அவற்றை யார் படிக்கிறார்கள்?

ஆங்கிலேயர் அமெரிக்கர்களைத் தவிர வேறு யாரும் இங்கு வந்து இலவசமாகப் புத்தகம் வாங்கிப் படிக்க வசதி செய்து தரவில்லையே! விமர்சன நூல்களைப் படித்து விட்டுத் தமிழில் விமர்சனம் செய்வதால் பலனில்லை ஆங்கில அமெரிக்க (முடிந்தால் ஐரோப்பிய) முதல் நூல்களைப் படிப்பது நல்லது; இலக்கிய அனுபவமாகும். இந்த அனுபவத்தை விமரிசன நூல்களை மட்டும் படித்து அடைய முடியாது. எந்த விமர்சகனும் ஓரளவுக்கு முதனூல் அனுபவத்துக்கும் வாசகனுக்கும் குறுக்கே நிற்பவன்தான். ஆங்கில ஐரோப்பிய விமர்சன வார்த்தைகளை, (அர்த்தம் தெரியாமலே தான்) முக்கால் வாசியும், உபயோகிக்கும் விமர்சகன் வீணன்.

தமிழில் எழுதுவதற்கு ஏராளமாக விஷயங்கள் இருக்கின்றன. செய்ய வேண்டிய பணியோ மிகவும் அதிகம் இதுவரை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லக் கூடியது மிகவும் சொற்பமே. என் பணியை மட்டும்தான் அடக்கமாகக் கூறிக் கொள்கிறேன் என்று எண்ணிவிடக் கூடாது என்பதற்காகச் சற்று விரிவாகக் கூறுகிறேன். எல்லோருமாகச் சேர்ந்து தமிழ் தமிழ் என்று ஒரு நூறு வருஷங்களில் செய்திருப்பதையும் சேர்த்துப் பார்த்தாலும் கூடப் போதாது என்று தான் சொல்ல வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில முயற்சிகள் செய்திருக்கலாம். அவற்றில் ஒரு சிலர் ஒரு சிறு துறையில் வெற்றியும் பெற்றிருக்கலாம்; மொத்தத்தில் போதுமானது செய்யப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

ஆங்கிலத்தில் ப்ருயர்ஸ் டிக்ஷனரி ஆஃப் ஃப்ரேசஸ் அண்ட் ஃபேபிள்ஸ் என்று ஒரு நூல் இருக்கிறது. ஆங்கிலத்தில் உபயோகத்திலுள்ள அத்தனை கதைகளும் வார்த்தைச் சேர்க்கைகளும் அதில் இடம் பெற்றுள்ளன. இந்த மாதிரி தமிழில் இதுவரை ஒரு நூல் உண்டா? முழுமையாகப் பழம் இலக்கியங்கள், பாடங்கள் மட்டும் வேண்டும் என்றால், ராஜம் அவர்கள் வெளியிட்டதைத் தவிர வேறு



ஏதாவது உண்டா? அதிலும் பாதிக்கு மேல் அச்சிலில்லை – நமக்குத் தேவை என்ற வாங்கப் போனால் புத்தகமே கிடைக்காது.

இது இலக்கியத்தை ஒட்டிய துறை. இலக்கியத்திலேயே சொல்லுங்கள் – கவி பாரதியாரைப் பற்றி ஒரு ஜீவிய சரிதம், ஒரு விமர்சன நூல், ஒரு தொகுப்பு நூல் திருப்தி தருகிற அளவில் இருக்கிறதோ? தமிழில் சிறு கதைகள் அடங்கிய ஒரு தொகுப்பு, ஒரு விமர்சன பூர்வமான முன்னுரையுடன் உண்டோ? பத்துத் தொகுப்புகள், பல தரப்பட்டவை வந்தால் அதில் ஒன்று திருப்தி தரும். இன்றைய நமது ஏக்கங்கள், அபிலாஷைகள், நோக்கங்கள், சிந்தனைகளைக் குறிப்பிடக் கூடியதாக ஒரு நூல் தமிழில் இன்று இருக்கிறதா? இல்லை, உலக சரித்திரம், கலை விஞ்ஞானம், நாடகம் எதில் தான் இருக்கிறது?

புத்தகங்கள் என்னவோ வந்து கொண்டுதான் இருக்கின்றன. பொருளாதார ரீதியில் முன்னேறுகிற பிரசுரகர்த்தர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் (!) நம்மிடையே குறையவில்லை. இலக்கியத்துக்காக என்று சப்பைக்கட்டு கட்டிக்கொண்டு வருகிற பிரசுரகரும்கூட, பிரசுரகராக, ஒரு குறிப்பிட்ட விமர்சகர் என் புஸ்தகங்களுக்கு எதற்காக மதிப்புரை எழுத வேண்டும்? அவருக்கு மதிப்புரை எழுதவும் தெரியுமா? விமர்சனத்தின் அடிப்படையையே அறியாதவராயிற்றே அவர் என்று விமர்சகரை விமர்சிக்கத் தொடங்கி விடுகிறார்.

அவரவர் அளவில், அவரவருக்குத் தெரிந்த அளவில் விமர்சனம் நையாண்டியாகவோ, விஷமத்தனமாகவோ, ஸீரியசாகவோ, தரமதிப்பீடாகவோ, பேதமையாகவோ நடந்துகொண்டே தான் வர வேண்டும். என் வழி இரண்டாமவனுக்கே சரிப்பட்டு வராது. மூன்றாவது வழி இரண்டாமவனுக்கு சரிப்பட்டு வராது. நாலாவது வழி முதல் மூன்று பேருக்கும் சரிப்பட்டு வராது. நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நையாண்டியாகவோ, ஒருவரை ஒருவர் பரிகசித்தும் கொள்ளலாம் – அதில் தவறில்லை. விவாதம் நடத்தி முடிவுகள் கட்டிவிட்டு, மேலே போ என்றோ, நீ இப்படி செய் இப்படித் தான் செய்யவேண்டும் என்று சொல்வதோ சரியல்ல.

செய்ய வேண்டிய காரியங்கள் நிறையவுண்டு. அதில் அடிப்படைகளை நினைவுபடுத்திக் கொள்வதும் – அடிக்கடி நினைவுப்படுத்திக் கொள்வதும் ஒன்று. வேறு ஏதோ பிரமாதமாகச் செய்வதாக நினைத்துக்கொண்டு ஸ்திரமற்ற அஸ்திவாரத்தில் கோட்டைகள் கட்டிப் பயன் இல்லை. அடிப்படைகளை நினைவுபடுத்திக் கொள்வதுடன், அடுத்தவன் என்ன செய்ய வேண்டும் என்பதை நினைக்காதிருப்பதும் நியாயமாகச் செய்யப்பட வேண்டிய காரியமாகவே எனக்குத் தோன்றுகிறது. ஊருக்கு உபதேசம் செய்வது மிக எளிது. நான் செய்ய வேண்டியது என்ன என்று தீர்மானித்துக் கொண்டு என் அளவில் உண்மை குன்றிவிடாமல் செய்து வருவதே இலக்கியத்தைப் பற்றிய வரையில் முக்கியமான விஷயமாகும் விவாதத்தில்

ஈடுபட்டுக் கொள்வது இந்தக் காரியத்தைச் செய்ய வொட்டாமல் செய்து விடும். அதனால் விவாதங்களைக் கண்டால் நான் ஒதுங்கி விடுகிறேன். காரியம் – அவசரக் காரியம் கெட்டுவிடும் தவிரவும் விவாதங்களுக்கு முடிவே கிடையாது. அறிவு பூர்வமாக எதையும் ஸ்தாபித்து விடலாம்தான். இலக்கியத்தில் அது போதாது இலக்கிய விமர்சனத்தில் – அது இலக்கியத்துறையாக வேண்டுமானால் – அறிவு பூர்வமான விவாதங்கள் பயன் தரமாட்டா. ஷேக்ஸ்பியரை ரசிக்க மாட்டேன் என்பவனுடன் எத்தனை பேசி விவாதித்தாலும் போதாது. விவாத பூர்வமான – அறிவு மயமான இலக்கிய விமர்சனம் ஷேக்ஸ் பியரின் கவிதை, நாடகம், வரையில் போகாமல் அவரைப்பற்றி எழுதப்பட்டிருப்பதுடன் நின்று விடுகிறது. இது நல்ல நிலை அல்ல.

இலக்கிய விமர்சனத்தில் இன்னொரு அம்சமும் இருக்கிறது. இன்று அரசியலில் பலருக்கும், சினிமாவில் எல்லோருக்கும் உள்ளது போல இலக்கியத்தில் ஈடுபாடுள்ள சிலருக்கு எரிச்சலூட்டுவதாக இலக்கிய விமர்சனம் அமைய வேண்டும் என்றே நாம் எண்ணுகின் றேன். உண்மையானது, என் வரையில் உண்மையானது. உலகம் பூரா வுக்கும் உண்மையானதாகவோ சரியானதாகவோ இருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியதில்லை. இலக்கிய அனுபவமே ரசனையே தனிமனிதனுடைய, தனிப்பட்ட ஒரு காரியம். அதிலே பொதுமை அவசியமில்லை. என் சித்தாந்தங்களில் சில, பிறனுக்கு அவனும் இலக்கியத்தில் என் அளவு ஈடுபாடுள்ளவனானால் எரிச்சலூட்டத் தான் செய்யும். இந்த எரிச்சல், அது காரணமாக எழுகிற கோபம், இரண்டுமே நல்லதுதான் – நல்ல காரியத்துக்குப் பயன்படும் அதை விவாதித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற அவசியம் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை.

எனக்கு, எனக்கு, எனக்கு – என்பதில்தான் இலக்கிய சிருஷ்டியும், இலக்கிய விமர்சனமும் அடங்கியிருக்கிறது. தத்துவ தரிசனம் ஆண வத்தைப் போக்க அவசியப்படுகிறது. ஆனால் இலக்கியத்தில் ஆண வம், தனித்தன்மை அவசியப்படுகிறது. அதில்லாவிட்டால் மெஷின் கள் உற்பத்தி செய்யும் இலக்கியம் தான் இருக்கும்; மனிதர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் மாறுபட்டுச் செய்யும் இலக்கியம் இராது.

இந்த இலக்கியத்தில் – பல்வேறு துறைகளில் இலக்கியத்தை ஒட் டிய துறைகள் பலவற்றிலும் ஏராளமாகவே இருக்கிறது. இன்று தமிழில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு என் நிலத்தை என் அளவில் உழுது பயிரிடுவதில். நான் கவனம் செலுத்துவது போதும். ஏன் விவாதங் களில், சிறு விஷயங்களில் காலங்கடத்த வேண்டும்? நாம் கலாஷேபக் காரர்களா? அல்லவே! அல்லது அரசியல்வாதிகளா? அதுவும் அல்லவே!



# கம்பனின் காவியக் கட்டுக் கோப்பு

*64ஆம் வருஷம் தேரழுந்தூரில் மார்ச் 28, 29 தேதிகளில் நடந்த கம்பன் திருவிழாவில் இது விஷயமாகப் பேசிய பேச்சின் சாராம்சம்).*

நேற்று உலகக் கவிஞர்களிலே உயர்ந்தவன் கம்பன் என்று பலரும் பேசினார்கள். அப்படி ஆயிரக்கணக்கான கவிஞர்கள் நூற்றுக்கணக் கான கவிகள் உலகப் பரப்பிலே இருப்பதாக நினைப்பது தவறு. இது கவிஞர்களுக்குள்ளே போட்டியல்ல. எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு இந்த வருஷம் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் பேர் வழிகள் போகி றார்கள் என்கிற கணக்கல்ல அது. உலகத்தில் நல்ல கவிகள் என்கிற எண்ணிக்கை ஒரு பத்திருபதுக்குள் அடங்கிவிடும் – அவற்றில் ஒரு வன், தமிழில் கவி எழுதிய கம்பன் என்பது நமது பெருமை.

நல்ல கவிகளிலும், காவியங்கள் எழுதியவர்கள் மிகக் குறைவு. ஒரு கை விரல்களுக்குள் அடங்கி விடக்கூடிய எண்ணிக்கையினர் தான். கீழை நாடுகள் என்று எடுத்துக் கொண்டால் சீனாவிலோ ஜப்பானிலோ காவியங்கள் என்று இலக்கியத்தரமாகச் சொல்லக் கிடையாது. இந்தியாவிலே இரண்டு – ஆதி கவி என்று சொல்கிற வால்மீகி. தமிழிலே கம்பன், உலகத்து ஆதி கவியாகிய ஹோமர் கிரேக்க காவியம் எழுதியவன். இலியாதும் ஒடின்ஸியும் அவன் காவி யங்கள். அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் லத்தீன் மொழியில் வர்ஜில் ஏனியது எழுதினார். பிறகு இத்தாலிய மொழியில் தெய்வ நாடகம் எழுதிய டாண்டே கம்பருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் இருந்தவர். பின்னர் ஆங்கிலத்தில் மில்டன் – இவ்வளவு பேர்தான் காவிய கர்த்தாக்கள்.

இந்தக் காவியங்களிலே கட்டுக்கோப்பு அமைந்த காவியங்களைச் சிருஷ்டித்தவர் என்று வால்மீகியையும் கம்பனையும் விட்டு விட்டால், வேறு டாண்டேயை மட்டும் தான் சிறப்பாகச் சொல்லலாம். டாண்டேயின் காவியம் ஆத்மானுபூதியால், வீட்டு உவமைகளால் சிறப்புப்பெற்றது. அதனுடன் ஒப்பிட்டு கம்பனின் உருவத்தைக் கணிக் கிற காரியத்தை விமர்சன பூர்வமாக நாம் இன்னும் செய்யவில்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக பாட்டையும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் பிய்த்துப் பிய்த்துக் கம்பனை அனுபவிப்பதையே

நாம் இதுவரை செய்து வந்திருக்கிறோம். முழுக் காவியமாகக் காண இதுவரை எவ்வித முயற்சியுமே செய்யப்படவில்லை. விமர்சன முறையில் வ.வே.ஸு. ஐயர் இதை ஓரளவு செய்ய முயன்று பார்த்தார். அவர் பல மொழிகளையும் அறிந்தவராயிலும், ஆங்கிலத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டு, மில்டனையே பெரிய காவிய கர்த்தாவாக எண்ணி அவனோடு கம்பனை ஒப்பிடுவதுடன் நிறுத்திக்கொண்டார். விமர்சன ரீதியில் மில்டனையும் வர்ஜிலையும் இரண்டாந்தரக் காவிய கர்த்தாக்களாகவும் முதல் தரமானவர்களாக ஹோமர், டாண்டே என்கிறவர்களைக் கருதுவதும் சமீபகாலத்து வழக்கு. இது இனி அழிபடாத வழக்கு என்றும் தோன்றுகிறது. கட்டுக்கோப்பு என்கிற அளவில் பார்ப்பதற்கு ஆதிகவிகளாகிய ஹோமரையும் வால்மீகியையும் விட்டு விட்டு கம்பருடன் ஒப்பு நோக்கத்தக்க்வர் டாண்டே. இந்தக் காரியம், விமர்சனம் இனித்தான் செய்யப்பட வேண்டும்.

கட்டுக்கோப்பு தவிர, இன்னும் ஒன்றிலும் கம்பனும் டாண்டேயும் ஒப்பிடத்தக்கவர்கள். டாண்டேயை மத்திய காலத்து அறிவு பூராவுக்கும், ஆத்ம அனுபூதி பூராவுக்கும் வாரிசாக மதிப்பது ஐரோப்பிய வழக்கு. அதே அளவில் கம்பன் இந்தியாவின் ஒரு முக்கியமான காலகட்டத்தின் அறிவு ஞானம், அனுபூதி இவற்றின் வாரிசு என்பது வெளிப்படை. ஆகையால் தான் அவனைப் பற்றி இவ்வளவு பேச முடிகிறது. அவன் காவியத்திலே இத்தனை விஷயங்களையும் காண முடிகிறது என்பது தெளிவு. இத்தனை விழாக்களையும் அவனால் தாங்க முடிகிறது.

கட்டுக்கோப்பு என்பதை மனப்பாடம் பண்ணிய பாட்டுக்களைப் பாடி ருஜுப்படுத்த முடியாது. எனக்கு இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. 1953 – ல் என்று நினைவு – பாரிஸ் நகரில் ஆண்ட்ரே மால்ரோ என்கிற ஃபிரெஞ்சு அறிஞருடன் ஒரு நாள் பூராவும் அளவளாவ எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் நல்ல இலக்கியாசிரியர் – நாவலாசிரியர் – உலகத்துக் கலையின் சரித்திரத்தை எழுதியிருக்கிறார் – வாய்ஸ் ஆஃப் ஸைலன்ஸ் என்கிற பெயரில் மதுரைக் கோயிலையும் தமிழ் நாட்டுச் சிற்பங்களையும்பற்றி அதிலே எழுதியிருக்கிறார். அவரைச் சந்தித்தபோது அதுபற்றி எனக்குத் தெரியாது. கலை பற்றிய அவர்நூல் அப்போது வெளிவரவில்லை. தமிழ் இலக்கியம் பற்றிய பேச்சிலே நான் கம்பனைப் பற்றிச் சொன்னேன் – தனியொரு சிறப்பான காவியமாக ராமாயணக் கதை தான் எனினும் தனிச்சிறப்புடையது என்று எனக்குக் கவிதையை மொழிபெயர்த்துச் சொல்ல வல்லமை இருப்பதாக நினைப்பு இல்லாதது காரணமாக மதுரைக் கோயிலை உதாரணமாகச் சொன்னேன்.

மதுரைக் கோயிலுக்கு, நம்முடைய கோயில்கள் எல்லாவற்றிற்குமே, ஒரு கட்டுக்கோப்பு உண்டு. அந்தக் கட்டுக் கோப்பு இத்தன்மையது; இதனால் அமைவது என்று சொல்ல இயலாது. ஆனால் அந்த கட்டுக்கோப்பை உணர முடியும். தென்னிந்தியக் கோயில்கள் போன்ற



தோர் சிறப்பான அமைப்புப் பெற்றது கம்பனின் காவியம் என்று சொன்னேன் மால்ரோவிடம். மால்ரோ பின்னர் இந்திய அரசாங்கத்தின் விருந்தினராக – அவர் அப்போது ஃபிரெஞ்சு தேசத்தின் கலாசார மந்திரி – தென்னிந்தியா வந்து மதுரையைப் பார்த்துவிட்டுப் போனார்.

மதுரைக் கோயிலின் ஆதி உருவம் என்ன என்பது யாருக்கும் தெரியாது. இடையில் எத்தனையோ சேர்க்கைகள், புது அமைப்புகள் உண்டாகியுள்ளன. அதே போல கம்பன் கவிதையிலும் செருகு கவிகள், போலிக் கவிகள் என்று யார் யாரோ பாடியவை பாடிச் சேர்த்தவை சேர்ந்துவிட்டன. பாட பேதங்கள் பிழைகள் ஏராளமாக இருக்கின்றன; உண்மைதான். அவையெல்லாம் சேர்ந்தும் விலகியுமே கம்பரின் காவியக் கட்டுக்கோப்பு உருவாகியுள்ளது. இதையெல்லாம் வைத்தே நாம் கம்பனின் காவியக் கட்டுக் கோப்பை அறிந்து கொள்ள வேண்டும். வாலி வதத்தையும், இந்திரஜித்தின் மாயத்தையும் மட்டும் பிரித்துப் பிரித்துச் சொல்லிக்கொண்டே காலங்கடத்திக் கொண்டிருப்பது சரியல்ல. முழுக் காவியமாக கம்பன் கவிதை பூராவையும் அறிந்து கொள்ள, இன்று அவசியம் இருக்கிறது.

இலக்கியத்தில் காவியம், நாவல் என்கிற இரண்டு துறைகளுக்கும தான் கட்டுக் கோப்பு என்கிற சிறப்பு அமைதி உண்டு. மற்ற துறைகளுக்கெல்லாம் – உதாரணமாக சிறுகதை, சிறு கவிதை, நாடகம், விமர்சனம் – இதற்கெல்லாமும் கட்டுக்கோப்பு என்று ஓரளவில் உண்டு என்றாலும் சிறப்பாக, Structure, architectonics என்பது காவியத்துக்கும் நாவலுக்குமே உரியது.

இன்றைக் கால கட்டத்தில் காவியங்கள் என்று எழுதுகிறவர்கள் கிடையாது. காவியங்களின் காலம் கடந்து விட்டது என்று நிச்சயமாகச் சொல்லலாம். காவியத்தின் குறிக்கோளை, நோக்கத்தைக் கொண்டு நாவல்கள் தோன்றியுள்ளன என்று சொல்வது மிகையாகாது. கம்பன் இன்று உயிருடன் இருந்தால், ராமாயணத்தையே எழுதுவதேயானாலும், அவன் இன்று நாவலாகவே தான் எழுதியிருப்பான். நாவலாசிரியன் – இன்று நாவல்கள் எழுதத் துணியும் இலக்கியாசிரியன் – என்கிற அளவில் நான் சொல்வேன். ராமாயணத்தைப் போன்றதோர் நாவலுக்கேற்ற விஷயம் கிடைப்பது அருமையிலும் அருமை. வசனத்தில், நம் இன்றைய சிறந்த இலக்கியாசிரியர்களில் சிலரேனும் ராமாயணத்தை எழுதிப்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்றே நான் சொல்வேன். ஒரு காலத்தில் நானே செய்து பார்க்கிற சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வேன் என்றும் சொல்லுவேன்

உலகத்து காவிய கர்த்தாக்களைப் போலவே உலகத்து மிகச் சிறந்த முதல் தரமான நாவலாசிரியர்களும் எண்ணிக்கையில் ஒரு கைவிரல்களுக்குள் அடங்கக் கூடியவர்கள்தான். டாஸ்டாவ்ஸ்கி (பல நாவல்கள்) டால்ஸ்டாய் (போரும் சமாதானமும் என்கிற ஒரு நாவல்), மார்சல் ப்ரூஸ்ட், லாகர்கெவ், தாமஸ் மன் (ஜோஸஃப் வரிசை)

என்று ஏழெட்டு பேருக்கு அதிகம் சொல்ல இயலாது. இவர்கள் சிருஷ்டிகளுக்குத் தந்த கட்டுக் கோப்புக்கு, காவிய கர்த்தாக்களில் கட்டுக் கோப்பு அவம்சத்தில் சிறப்புற்றவர்களான டாண்டே, கம்பன் இவர்கள் தங்கள் சிருஷ்டிகளுக்குத் தந்துள்ள கட்டுக்கோப்புக்கும் ஒப்புவமை காண வேண்டியது. கண்டு முடிவுகளை வற்புறுத்துவது விமர்சகனின் கடமையாகும்.

டாண்டேயைப் படிக்கும்போது நமக்குச் சந்தேகம் இன்றித் தெரிகிறது. காவியத்தின் ஒவ்வொரு பாட்டும், ஒவ்வொரு மூன்று அடிப்பாட்டும், முதல் இரண்டு நரகம் பர்கேடரி சுற்றில் வர்ஜில் அழைத்துச் செல்ல, மூன்றாவது சுற்றில் பியாட்ரிஸ் என்கிற மன உருவக்காதலி அழைத்துச் செல்ல, டாண்டேயின் மஹோந்நதமான சிந்தனை என்கிற தெய்வ சாந்நித்யத்திலே கொண்டு போய் டாண்டே யையும் அவனுடன் மனித குலத்தையும் நிறுத்தத் தான் என்பது தெரிகிறது. மனித அறிவின் பிரயாணம் டாண்டேயின் பிரமாதமான ஓர் அனுபவ ஆதாரம் எடுத்திருப்பதைக் காண இயலுகிறது.

ஆனால் மேலைநாடுகளிலும் ஃபாஷன் என்கிற பேய் பிடித்து இலக்கிய உலகத்தையும் ஆட்டத்தான் ஆட்டுகிறது. கொஞ்ச காலத் துக்கு முன் நம் நாட்டில் கம்பன் பற்றி இருந்த நிலைதான் டாண் டேயைப் பற்றி ஐரோப்பிய இலக்கியவுலகிலே, மில்டனைப் பெருங் காவிய கர்த்தாவாக மதிக்கிற பழக்கம் போய்விட்டது என்று சொன் னேன். அதற்குப் பிறகு டாண்டேயைப் பார்க்கிற பழக்கம் ஏற்பட்டு விடவில்லை – டாண்டேயைப் பாராட்டுவது டி. எஸ். எலியட் என்கிற ஆங்கிலக்கவி தொடங்கி வைத்த ஃபாஷன், இன்று ஆங்கில இலக்கிய வுலகிலே இருக்கிறதே தவிர படிப்பவர்கள் குறைவுதான்.

மேலை நாடுகளில் கவிதை என்றால் பயந்து கூட்டம் கலைந்து விடும் என்று ரசிகமணி டிகேசி அவர்கள் சொல்லிவிடுவார்கள். இங்கு இந்தியாவில் கவியின் பெயரைச் சொல்லிக் கூட்டம் கூட்டு வது சாதாரண காரியமாக இருக்கிறது. கம்பனைப் பற்றி விழாக்கள் வேண்டுமா? கம்ப ராமாயண வகுப்புகள், சிறு பெரு பிரசங்கங்கள், ஆராய்ச்சிகள், தனிஸ்தாபன பொதுத்துறை, சர்க்கார்த்துறை ஆதரவு டன் கம்பன் முயற்சிகள் எத்தனை எத்தனையோ நடக்கின்றன. ஒரு பதினைந்து ஆண்டுகளில் இருபது முப்பது லட்சங்கள் வரையில் சென்னை, டில்லி சர்க்கார்கள் கம்பன் பெயருக்காகச் செலவிட்டி ருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். புள்ளிக் கணக்கு விவரம் சரியா தப்பா என்று எனக்குச் சொல்லத் தெரியாது. ஆனால் ராஜம் மனமு வந்து அளித்த பதிப்பையும், பழைய வை. மூ. கோ. பதிப்பையும், கு. அழகிரிசாமி பதிப்பையும் விட்டால் கம்பனுக்கு நல்ல பதிப்பு என்று ஒன்றுகூட இல்லாத குறைதான். பேசிப் பேசியே, விழாவெடுத்தே நமது இலக்கியத் திணவு எல்லாம் தீர்த்துக் கொண்டு விடுகிறோம். குறிப்பிட்ட எத்தமிழ்த்துறையிலும் முழு ஈடுபாட்டுடன் உழைக்க ஒருவருமே தயாராக இல்லை. பேராசிரியராக இருக்கையிலே கம்பன்



ஒரு உப தொழில். இப்படித்தான் கம்ப சேவை வளர்கிறதே தவிர – வ. வே. ஸு. ஐயர் அன்று துவக்கி வைத்த பாதையிலே செல்லக் கூடிய யாரையும் காணவில்லை.

உலகத்துக் காவியங்களிலே பலவற்றிலும் காணப்படாத ஒரு கட்டுக்கோப்பு கம்பனில் காணப்படுகிறது என்று சொன்னேன். இந்த விஷயத்தில் டாண்டேயைத் தவிர வேறு யாரையும் கம்பனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கில்லை. ஹோமரிலும் வால்மீகியிலும் ஒரு சக்தியிருக்கிறது – அந்த சக்திக்கு ஒப்பிட உலக இலக்கியப் பரப்பிலே வேறு எதுவும் கிடையாது. அது தனி. ஆனால் கம்பனின் காவியத்தில் உள்ள சக்தியை செயற்கையால் பெற்றது Sophistication கவிநயம் தெரிந்து சுயப் பிரக்ஞை உண்டு. கம்பனின் காவியம் டாண்டேயினு டையது போலவே அறிவுமயமானது. ஒரு குறிக்கோளை நோக்கி நடப்பது. ராமராவண யுத்தம் மேலெழுந்த வாரியாக கதையின் முடிவுதான். அதுவும் கம்பனாக கற்பனை செய்து கொண்டதல்ல; வால்மீகி தந்து எடுத்துக் கொண்டாலும், அதற்கான பகைப்புலனும் சூழ்நிலையும், போர்க்களமும் கம்பனின் அறிவுக் கற்பனை. அதைக் குறித்தே காவிய முழுதும் அங்குலம் அங்குலமாக நகருவதை கட்டுக் கோப்பைக் கணிக்கிற போது நாம் காண்கிறோம்.

⌘

## கவி பாரதியார்

சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாரதியாரின் பிறந்த தின விழாவை சென்னை அரசாங்கமும், தமிழ் எழுத்தாளர் பெருமன்ற முகமாகச் சேர்ந்து பிரமாதமாகக் கொண்டாடினார்கள். இந்து ஆண்டு *(1964)* எவ்விதக் கொண்டாட்டத்தையும் காணவில்லை.

அது எப்படியானாலும், கவி பாரதியாரின் பிறந்த நாளை, இறந்த நாளை அரசாங்கத்தாரோ மற்றவர்களோ கொண்டாடினாலும் கொண்டாடா விட்டாலும் தமிழ் இலக்கியாசிரியர்கள் பாரதியாரின் விழாவை ஒவ்வொரு நாளுமே கொண்டாடக் கடமைப்பட்டவர்கள். அதுவும் இந்தத்தலைமுறையில் எழுதத் தொடங்கியவர்கள் பலருக்கும் – பல நல்ல இலக்கியாசிரியர்களுக்கும் – பாரதியாரே வழி காட்டியாகவும் முன்னோடியாகவும் இருந்திருக்கிறார்.

• தமிழுக்குப் புத்துயிர் தந்தவர் பாரதியார் என்று சொல்வது வெறும் உபசாரம் அல்ல. தமிழின் குரல்வளையைப் பண்டிதர்கள் பிடித்து அமுக்கி நெறித்துக் கொண்டிருக்கும்போது, அது சாகாமல் காப்பாற்றித் தந்தவர் பாரதியார் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. பாரதியார் எழுதத் தொடங்கிய காலத்தில் தமிழ் நாட்டில் விசுவரூபமெடுத்துக் கோரத் தாண்டவமாடிய சக்திகளைக் கவனித்துப் பார்க்கும் அறிவும் ஆற்றலும் உள்ள எவருக்கும் இது தெளிவாகவே புரியும்.

வசனத்திலும் கவிதையிலும் பாரதி செய்த காரியங்களை, சாதித்த மகத்தான சாதனைகளை எண்ணும்போது தமிழன் எவனுக்குமே பெருமிதம் பிறக்காதிருக்காது. காலத்துக்கேற்ற ஒரு வேகம், கவிக்கு வேண்டிய ஓர் ஆற்றல், தீர்க்க தரிசிக்கு வேண்டிய ஒரு திருஷ்டி, எல்லாமே பாரதியாருக்கு இருந்தன.

ஒரு ஸ்தாபனத்தின் ஆதரவில்லாமல், அல்பாயுஸிலே போனாலுங் கூட, தீவிரமும் ஈடுபாடும் உள்ள ஓர் இலக்கியாசிரியன் எத்தனை சாதிக்க முடியும் என்பதற்குப் பாரதி ஒரு சான்று. வாழும் போது கஷ்டப்பட்டதும், பணத்துக்குப் பறந்ததும், சாப்பாடு போட்டவர்கள் பெருமைப்பட்டதும் சில காலத்துக்கு மனதில் தங்கலாம். ஆனால் அத்தனையும் மீறி பாரதி என்கிற இலக்கியாசிரியனை நாம் காண்



கிறோம். அது ஒரு தனி எழுத்தாளனின் தீவிர நடைக்கு நமக்கெல்லாம் ஒரு தனி உதாரணம். நம்பிக்கை வறண்டு வருகிற நேரத்திலே நம்பிக்கையூட்டுகிற ஒரு முன்மாதிரியாக, ஒரு சின்னமாகப் பாரதியாரை என்னைப் போன்ற எழுத்தாளர்கள் கண்டு கொள்கிறார்கள்.

பாரதியாரின் கவிதையிலும் வசனத்திலும் எந்தப் பகுதியை எடுத்துப் பார்த்தாலும் அதிலே ஒரு முக்கியத்துவம், ஒரு வேகம், ஒரு உயிர்த் துடிப்பு, இன்றைய நடப்புக்கு ஒரு ஆதரிசம் எல்லாம் இருப்பதைக் காண்கிறோம். இலக்கியமாக உருவில் வெற்றி பெறாத இடத்தில்கூட பாரதியின் இலக்கியத் தனித் தன்மையை, பாரதி என்கிற வேகத்தை, நாம் அறிகிறோம்.

பாரதி இந்திய மரபில் வந்தவர்தான் என்றாலும் – இந்த மரபு வேகம் குறைத்து ஆண்டவன் நம்மை ஆள வேண்டும் என்று நம்பிக்கையுடைய மரபு தான் – ஆனால் இன்று வேகம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து கவிதையும் வசனமும் செய்தவர் அவர். இரண்டிலுமே பாரதி என்கிற வேகம் காணப்படுகிறது என்பதைத்தான் பாரதியாரின் தனிப் பெருமையாகக் கருத வேண்டும்.

பாரதி, பாரதி என்று முழக்கம் செய்து விழாக்கள் கொண்டாடுவதனால் மட்டும் பிரயோசனமில்லை. பாரதியாரின் வார்த்தைகளை டேப்ரிகார்டரை நெஞ்சில் வைத்திருப்பவர்கள் போல் சரமாரியாகக் கொட்டிப் பயனில்லை. வார்த்தைகளுக்கப்பால் பாரதி கூடவே ஒரு உயிர் இருக்கிறது. அந்த உயிரை இலக்கிய ரீதியில் ஒருவர், ஒருவர், ஒருவராகக் கண்டு கொள்ள முயலுகிறவர்வகளிலே இன்றைய தமிழ் இலக்கியாசிரியர்கள் முதல்வராக இருக்க வேண்டும்.

இப்படிக் கண்டுகொண்டபின் பாரதியாரிலே சிறந்ததையெல்லாம் தேர்ந்தெடுத்துப் பொது ஜனத்துக்கு, அறிவுள்ள வாசகர்களுக்குத் தரவேண்டும். 'ஜே' போடுகிற கூட்டம், 'வாழ்க வாழ்க' அல்லது 'வீழ்க வீழ்க' என்று பேசுகிற கூட்டம் அரசியல்வாதிகளுக்குப் போதும். இலக்கியவாதிகளுக்குப் போதாது.

இந்திய மரபையும், தமிழ் மரபையும் தெரிந்து கொள்ள பாரதியார் போதும் நமக்கு. அவரே சுட்டிக் காட்டியுள்ள முன்னோர்கள் போதும் நமக்கு. அதற்கு அப்பாலும் ஏதோ இருப்பதாக, பழம்பெருமை மட்டும் பேசுகிற பண்டிதப் பேராசிரியர்களின் ஆதிக்கத்திலிருந்து தமிழை விடுவிக்க, பாரதியாரின் எழுத்துக்கள் தரும் வேகம் போதுமானதாக இருக்கும்.

அதே போலத்தான் சமீபத்தில் உருவாகியுள்ள பத்திரிகைப் பாதிப்பும் – தமிழ் வாசகர்களைப் பற்றிய வரையில் ஓரளவுக்கு சொல்ல பாரதியாரின் வார்த்தைகளே போதும் என்று சொல்ல வேண்டும். பாரதியாரே சிறப்பான ஒரு பத்திரிகையாளர். காலத்தின் தேவைகளை உணர்ந்து சொற்களை உபயோகித்தவர். ஆனால் பத்திரிகையையே இலக்கியம் என்று எண்ணி ஏமாற்றி விடுபவர்களுக்

கும் மாற்று மருந்து பாரதியிடத்திலேயே இருக்கிறது. பத்திரிகைக்காரரான பாரதியார், தன் காலத்தை மீறி நிற்க முடிந்தது. அவர் எழுத்து இலக்கியமானதற்கு அதன் பத்திரிகைத் தன்மை மட்டும் காரணம் அல்ல.

பாரதியாரை மையமாக வைத்துத் தமிழ் மலர்ச்சி வெகு தூரம் முன்னேறியிருக்கிறது. இன்னும் நெடுந்தூரம் முன்னேற வேண்டியதாக இருக்கிறது. அதை நினைவில்கொண்டு கவிபாரதியாருக்கு அஞ்சலி செய்வோம். விழா எடுப்பதும் வாழ்த்துப் பாடுவதும் தான் அஞ்சலி என்பதில்லை. அவர் காட்டிய பாதையை முடிந்த வரை பின்பற்றுவதே சிறந்த அஞ்சலியாக இருக்க முடியும்.

வசனத்திலும் செய்யுளிலும் அவர் எழுதிய பல சிறந்த பகுதிகளைத் தொகுத்து வெளியிட வேண்டும். பலர் தொகுத்துப் பல தொகுதிகள் – ஒன்றுக்கொன்று ஆத்திரத்துடன் மாறுபட்டதாகவும் இருக்கலாம். பாரதியாரை கவியாகவும் இலக்கியாசிரியனாகவும் மட்டும் கவனிக்கிற அவர், ஜீவிய சரித்திரம் – இதுவும் பலருடைய நோக்குகளிலிருந்து – வெளிவர வேண்டும். இத்தனைக்கும் மேலாக அவர் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளும், அவ்வரைப் பாதித்த நூல்கள் கருத்துக்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் மிக மிக அவசியம்.

இதையெல்லாம் செய்யாமல் வெறும் விழாக்கள் மட்டும் கொண்டாடுவது – நாமும் ஏற்றுக்கொண்டு விட்ட தமிழ் மரபுதான் என்றாலும் – போதாது! போதாது!

## பாரதியார் – இன்றைய எழுத்தாளரின் முன்னோடி

*இவ்வாண்டு பாரதியாரின் 82வது பிறந்த தின விழா 29.12.63 அன்று சத்தியமூர்த்தி பவனில் நடந்தது. திரளாக மக்கள் கூடி உற்சாகமாக நாள் பூராவும் நடந்த நிகழ்ச்சிகளை ரசித்தனர். அச்சமயம் நான் எழுதி வாசித்த கட்டுரை.*

தலைவர் அவர்களே, நண்பர்களே, நமஸ்காரம்.

இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்பவர்களை அறிமுகம் செய்து வைத்தவர், என்னை வேறு பலவும் எழுதியிருந்தாலும் கடுமையான விமர்சகர் என்று அறிமுகம் செய்து வைத்தார். நான் பாரதியின் வாரிசு. பாரதி பரம்பரையில் வந்தவன். பாரதியாரும் கடுமையான விமர்சகர்தான் – மிக மிகக் கடுமையான விமர்சகர்தான்.

அரசியல் பொருளாதாரம் சமூகம் இவை பற்றிய பாரதி கருத்துக்களே அடிக்கடி எடுத்துக் கையாளப்பட்டு நமக்கு அவை மட்டுமே தெரிகின்றன. நமது பாரம்பரியம், கலைகள், மரபு இவை பற்றிய பாரதி மிகவும் கடுமையான விமர்சகர் என்பதை நாம் மறந்து விடுகிறோம். அன்று அன்னியர் ஆட்சி என்பதனால் விமர்சனம் தேவைப்படாது என்று சொல்வது தவறாகும். இன்றும் கலாசார, பண்பாட்டு விஷயங்களில் கடுமையான விமர்சனம் தேவைப்படு



கிறது. இன்னும் கடுமையாக விமர்சனம் செய்வதே பாரதி வழி செல்ல விரும்புகிற என் கடமையாகும் என்று எனக்குத் தோன்றுகிறது.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே எனக்கு ஒரு கற்பனை தோன்றுகிறது. பாரதியின் 82வது பிறந்த தினத்தை இப்போது இங்கு கொண்டாடுகிறோம். பாரதியாரே இன்று நம்மிடையே உயிர் வாழ்ந்திருக்கக்கூடிய பிராயம் தான். ஏதோ அதிசயம் நிகழ்ந்து அவரே இந்த விழாவுக்கு வந்திருந்தால் என்ன செய்வார் என்று எண்ணிப் பார்க்கிறேன். அதோ அந்தக் கடைசிக் கதவண்டை ஒடுங்கி ஒடுங்கி உட்கார்ந்திருப்பார். மேடைப் பேச்சு – இந்த மாதிரிப் பேச்சுக்கள் போகிற வேகத்தில் – தாங்க முடியாத கட்டத்தை எட்டும் போது சொல்லாமல் கொள்ளாமல் எழுந்து திருவல்லிக்கேணி கடற்கரைக்குப் போயிருப்பார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

அதிகமாக இந்த மாதிரி விழாக்களில் கலந்து கொள்ளாதவன் நான். நான் பேச எடுத்துக் கொண்ட விஷயமும் மிகவும் குறுகலானது. இங்கு சபையில் உள்ள நீங்கள் எல்லோரும் – முக்கால் வாசி தொண்ணூறு சதவிகிதம் எழுத்தாளர்கள் அல்ல – நல்ல வேளையாக! ஆகவே எழுத்தாளர்களுக்கு முன்னோடி என்று பாரதி பற்றிப் பேசுகிறபோது உங்களுக்கு மட்டுமின்றி, குறிப்பாக இங்குள்ள எழுத்தாளர்களுக்கு என்று பேசுகிறேன். பாரதி பரம்பரை என்று நாம் நினைவுபடுத்திக் கொள்ள அவசியம் இருக்கிறது என்று எண்ணியே பேசுகிறேன்.

பாரதியாரின் இன்றைய பாதிப்பு எப்படி நமது வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் வியாபித்து நிற்கிறதோ அவ்வளவுக்கு அவர் இருந்து பாடியபோதும் இருந்தது. இந்த அளவு விஸ்தீர்ணம் இல்லாதிருந்திருக்கலாம். ஆனால் அப்போது இருந்த அளவில் – விஸ்தீரணத்தில் – இன்றுள்ள பாதிப்புக்குச் சற்றும் தாழ்ந்ததல்ல. அவரைக் கேட்டவர்களும் அவருடன் பழகியவர்களும் ஒன்று, பத்து நூறாக இன்று அதைப் பெருக்கி சில சமயம் முன்னுக்குப் பின் முரணாகவும் சொல்வதற்குக் காரணம், இந்த பாதிப்பு என்றுதான் சொல்ல வேண்டும். வேண்டுமென்றே இவர்கள் மெய்யல்லாததைக் கூறுகிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன்; ஏதோ லாபத்தைக் கருதி கதைகளைப் பெருக்கிக் கூறுகிறார்கள் என்றும் சொல்ல மாட்டேன். உண்மையில் பாரதி என்கிற உருவம் அவர்கள் உள்ளத்திலேயே வளர்ந்து நிஜம் போன்ற விசுவரூபங்கள் பல எடுக்கும் அளவுக்குச் சக்தி வாய்ந்ததாக இருந்திருக்கிறது என்பதை பாரதிக்கும், பாரதி பற்றிப் பேசுபவர்களுக்கும் இழுக்காகக் கருத வேண்டியதில்லை.

பாரதி தன் வாழ்நாளிலேயே, நேரில் அறிந்தவர்களுக்கே ஒரு சுவாரசியமான மனிதராகவும் புரியாத புதிராகத்தான் இருந்திருக்கிறார். இந்த சுவாரசியத் தன்மை எங்கிருந்து வந்தது?

எதிர்பாப்பதை, பிறர் தன்னிடம் எதிர்பார்ப்பதைச் செய்யாதவர் என்பது ஒன்று. நெருங்கியவர்கள் கூடக் குறிப்பிட்ட ஒரு

சந்தர்ப்பத்தில் பாரதியார் எப்படி நடந்து கொண்டிருப்பார் என்று சொல்ல முடியாமல் தவித்திருக்கின்றனர்.

தான் தனிப்பட்டவன் என்கிற சிந்தனையும் பாரதிக்கு இருந்திருப்பதாகவே தெரிகிறது. கூட்டத்தில் முழங்கியது ஒரு புறம் இருக்க, அவர் கவிதையிலும் வசனத்திலும் பல இடங்களிலும் அவருடைய தனித்தன்மை தனியாகவே தொனிக்கிறது. இந்தத் தனிமைக்குக் காரணம் அவரை ஏற்றுக்கொள்ளாத – கடைசி வரையில் முழுவதும் ஏற்றுக்கொள்ளாத ஒரு சூழ்நிலையில், ஒரு கௌரதைத் தன்மையில் வாழ வேண்டியதாக இருந்தது. வாழ்வுக்கும் அவருக்கும் இடையே இடைவிடாத போராட்டம் இருந்தது. அவர் பணத்துக்காகக் கஷ்டப்பட்டார் என்பதையோ, பட்டினி கிடந்தார் என்பதையோ நான் சொல்லவில்லை; கஷ்டப்பட்டிருக்கலாம் – பட்டினியும் கிடந்திருக்கலாம். சின்னத்தனங்கள் பல செய்து பணம் தேட முயலாதவர்கள் அன்றும் இன்றும் என்றைக்கும் பட வேண்டிய கஷ்டங்கள் அவை – அதைச் சொல்லவில்லை நான்.

இந்திய மக்களின் போராட்டங்கள் பூராவும், பாரதியில் எதிரொலிப்பதை அவர் வரிகள் ஒவ்வொன்றிலும் நாம் காணலாம். நம்பிக்கைக்கும், நம்பிக்கையின்மைக்கும் போராட்டம் நடப்பதையும் – நம்பிக்கை, நமது பாரம்பரியமான தெய்வ நம்பிக்கை, அவர் கவிதையில் மலர்வதையும் நாம் உணரலாம். சாதாரண வரம்புக்கு ஒட்டிய வாழ்வும் கற்பனாதீதமான ஒரு வாழ்வும் அவர் கவிதையிலும் வசனத்திலும் போராடுவதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. உள்ளது மாறி, இருக்க வேண்டியதை உருப்பெறச் செய்ய, இடைவிடாத போராட்டம் அவசியமாகிறது. இந்தப் போராட்டத்தை தன் எழுத்தில் காட்டுபவனையே எழுத்தாளன், இலக்கியாசிரியன் என்று சிறப்பாகப் பாராட்ட வேண்டும். உள்ளதை மாற்றி எதிர்காலத்தை நோக்க முயலுபவனைக் கவி என்று சொல்லலாம். இலக்கியாசிரியன் என்று சொல்லலாம். கலைஞன் என்று சொல்லலாம். உள்ளதை உள்ளபடி இன்றைக்கு மட்டும் தேவைப்படுகிற அளவில் கூறுபவனை நல்ல பத்திரிகாசிரியன் என்று சொல்லலாம். உள்ளதை ஏற்காமல் பழமையை மட்டும் போற்றித் தொழுது கொண்டிருப்பவனை சநாதனி, பண்டிதன் என்று கூறலாம்.

எழுத்தாளனாக பாரதியைக் காணும்போது, அவர் காலத்தை எதிரொலித்து, மேலே எதிர்காலத்தை நோக்கி வளரச் செய்வதற்கு அடிகோலியவர். எப்படி வளருமோ என்று தவித்தவர் என்பது நிதரிசனமாகத் தெரிகிறது. சமூகப் பிரச்னைகள், அரசியல் தத்துவப்பிரச்சனைகள், நடப்பு முறைகள் எல்லாவற்றிலுமே இந்தப் போராட்டத்தைத் தன்னளவில் உணர்ந்து உருக்கொடுத்திருக்கிறார் பாரதியார். இந்தப் போராட்டம் காரணமாக எழுந்த பாரதித் தன்மையைத் தான் அவர் எழுத்துக்களைப் படிக்குந் தோறும் ஒரு வேகமாக நாம் உணருகிறோம். பாரதி வார்த்தைகளுக்கும் வாக்கியங்களுக்கும் உள்ள அந்த



வேகம், அவருக்கே உரியது. அவருக்கு முன்னும் பின்னும் அந்த வேகம் தமிழில் உருவாகவில்லை – இதே அளவில் – என்பது அவரைத் தனியொரு எழுத்தாளனாக நமக்குக் காட்டுகிறது.

கனவுகள் கண்டவர், தீர்க்க தரிசனம் வாய்ந்தவர், இன்றைய நடப்புகள் பற்றிக் குமுறி எழுந்து கடுமையான விமர்சனம் செய்தவர் என்று சொல்வது சகஜமாகிவிட்டது. இத்தனைக்கும் காரணம் காலத்தில் நடக்கிற போராட்டத்தையும், அது எத்திசை செல்ல வேண்டும் என்றும், உணர்ந்து நடக்க வேண்டும் என்றும், அதில் தனக்குள்ள பொறுப்பையும் உணர்ந்தவர் பாரதியார் என்பது தான்.

எழுத்தாளனின் இந்தப் பொறுப்பு மகத்தானது. இதன் சக்தியை உணர்ந்தவர் சிலர், இப்பொறுப்பை நம்மால் வகிக்க இயலாது என்று ஒதுங்கி விடுகின்றனர் – அல்லது தங்கள் எழுத்துக்கள், நோக்கங்களை மட்டும் காப்பாற்றிக் கொண்டு நகர்ந்து விடுகின்றனர். பாரதிக்கு இருந்த பொறுப்பு இன்று எழுத்தாளர்கள் எல்லோருக்குமே உண்டு. அப்பொறுப்பை, கவி பாரதியாரை முன்னோடியாகக் கொண்டு, இன்றுள்ள இலக்கியாசிரியர்கள் செய்ய வேண்டிய அவசியம் இன்று அதிகமாகவே இருக்கிறது.

அதிகம் குறைவு என்பதற்கு அர்த்தம் கற்பிப்பது பின்னர் ஆகட்டும். பொறுப்பை ஏற்றுக் கொள்கிற பணியில் பாரதி சிறப்பாகவே வழி காட்டியிருக்கிறார். எந்த எழுத்தும் இன்றையத் தேவையை மட்டும் பூர்த்தி செய்தால் போதாது. நாளை, நாளைக்கு மறுநாள், அதற்கும் மறுநாள் என்று வளர்ச்சிக்கு வழி செய்வது அவசியம். ஏதோ காலண்டரில் தாள்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றன என்று இன்று ஏற்றுக்கொண்டுவிடுவது சுலபமாக இருக்கிறது. ஆனால் எழுத்தாளன் என்கிற ஜாதியினராவது அப்படி எண்ணாதிருக்கப் பழக வேண்டும். நமது சொல்லாலும் செயலாலும் நாளையும் மறுநாளும் அதற்கடுத்ததாளும் உருவாகின்றன என்று உணர்ந்து அதற்குப் பொறுப்பும் ஏற்க வேண்டும்.

பாரதியைப் படிக்கும்போது, இது ஒரு முக்கியமான படிப்பினையாகத் தோன்றுகிறது. இன்று இன்று இன்று என்பதுடன் நின்று விடாமல் நாளை என்றும் அதற்கு மறுநாள் என்றும் வளர்ச்சியைச் சாத்தியமாக்குவதே நல்ல எழுத்து என்று.

இது, நோக்கம் பற்றிய அளவில் ஆகும். வேகம் பற்றியும் சிறிது கூறிவிட்டேன். அது தவிர நாம் பாரதியாரை முன்னோடியாகக் கருத வேண்டியது இன்னொரு அம்சத்தினாலும் சிறப்புப் பெறுகிறது. பாரதியாரின் வேகம், எதிர்கால நோக்கம் என்கிற இரண்டுமே அவர் மனத்தில், உள்ளத்தில், கற்பனையில், உண்மை என்கிற திரவத்தில் உருவானவை.

உண்மையை ஓரளவுக்கு கொண்டாடுபவர்கள்கூட பிழைக்கத் தெரியாதவன் என்று சாதாரணமாக அவரை ஒதுக்கிவிடுவார்கள்.

உண்மையை உள்ளபடி சொல்பவனைக் கண்டால், இது நமது இன்றைய அனுபவமாகும். யதார்த்தவாதி வெகுஜனவிரோதி என்றும் வழக்குண்டு. ஆனால் பாரதியார் உண்மை என்கிற அளவிலும் நமக்கெல்லாம் முன்னோடியாக நிற்பவர். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் அது வாக்கிலும் வரும் என்று பாரதியாரே சொன்னார். அதைக் கவனத்தில் வைக்க வேண்டியது மிக அவசியம்.

உண்மையும் ஓரளவுக்கு வளருகிறது. உண்மையும் வளர்க்கப்படுவது தான், பொய்யும் வளர்க்கப்படுவது தான். நான் இன்றைய உதாரணங்களை உள்ளபடிக் கூறி உங்கள் விரோதத்தை எல்லாம் சம்பாதித்துக்கொள்ள இங்கு தயாராக இல்லை. பாரதியாரின் வாக்கிலே, அவர் காலத்துச் சூழ்நிலையைப் பூரணமாக அறியாத இந்த நிலையிலும் கூட, உண்மை இருந்ததை இத்தனை நாள் கழித்தும் நாம் அறிய முடியாது. எவருடைய எழுத்திலேயும் உள்ள உண்மையை அறிந்துகொண்டுவிட முடியும் என்பது எழுத்தின் சிறப்பைக் காட்டுகிறது. உண்மையையும் அதல்லாததையும் கண்டு கொள்கிற காரியத்தை வாசகர்கள் செய்கிறார்கள். காலம் செய்கிறது. விமர்சகன் செய்கிறான்.

இந்த உண்மை உள்ளத்து உண்மையும் தனக்குத் தெரிந்தவை உண்மையென்று ஏற்று நடப்பதும் இலக்கியாசிரியனுக்கு மிகவும் அவசியமான தன்மைகளில் ஒன்றாகும். இந்த அம்சத்தை நாம் பாரதியின் வாக்குகளிலிருந்து நமக்குத் தேவைப்படுகிற அளவுக்கு நம்மால் தாங்கக்கூடிய அளவு கிரஹித்துக் கொள்ள வேண்டும். நமக்கெல்லாம் இன்றையச் சூழ்நிலையில் பணத்தையோ பதவியையோ தவிர வேறு ஒன்றும் தேவையில்லை போலத் தோன்றுகிறது. ஆனால் மனிதனுக்கு அவன் போய்விட்ட பிறகும் உயிர்தர உண்மை தேவைப்படுகிறது. இந்த உண்மைஸ்ய அடிப்படையாகக்கொண்டு எழுதிய பாரதியாரை முன்னோடியாகக் கொண்டுள்ள இன்றைய எழுத்தாளர் தலைமுறை, பாக்கியம் செய்ததே என்று எனக்குத் தோன்றுகிறது. பாரதி பாரதி என்று முழங்கிவிட்டு வீட்டுக்குப்போய், பாரதி வழியை மறந்து விடுவது சரியல்ல. பாரதியின் எழுத்திலே சக்தி சிறிதளவாவது இருக்குமானால் – அதிகமே உண்டு என்று நமக்குத் தெரியும் – அதை நம் உள்ளத்தில் வியாபிக்க விடுவதே நாம் பாரதியை முன்னோடியாக ஏற்றுக் கொள்வது என்பதற்குச் சரியான அர்த்தம்.

நான் சாதாரணமாகவே இந்த மாதிரி மேடைகள் ஏறிப் பேசாதவன். பத்துப் பேருக்கு இடையே, அதிகம் போனால் இருபது பேருக்கிடையே எனது கருத்துக்களைச் சொன்னால் போதும் என்கிற எண்ணம் உள்ளவன். ஆனால் நண்பர் திருலோக சீதாராம் வந்து, பேச வேண்டும்; எந்த விஷயமாகப் பேசுகிறீர்கள் என்று கேட்டபோது இன்றுள்ள நிலையை எண்ணிக் கொண்டு பாரதியைப்பற்றி இன்றைய எழுத்தாளர்களின் முன்னோடி என்று பேசுகிறேன் என்று மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். இன்றும் பாரதியாரை முன்னோடியாக ஏற்றுக்கொண்ட எழுத்தாளர்கள் இல்லாமல் இல்லை – இருக்கத்தான் இருக்கிறார்கள். எண்ணிக்கையும் தரமும் இன்னும் அதிகம் இருக்க வேண்டும் என்பதே என் கட்சியாகும்.



வேகம், நோக்கம், உண்மை என்கிற அம்சங்களில் பாரதி நமக்கெல்லாம் சிறப்பான முன்னோடியாக அமைவது எதிர்காலத்துக்கு மிகவும் நல்லது. அதிலும் மூன்றாவது அம்சமாகிய உண்மை – இன்று அது கணிசமான அளவுக்கு அரிதாகிக் கொண்டிருக்கிறது என்பதனால் – அதிகமாக அவசியமாகிறது.

இன்னும் ஒன்று. பாரதியாருடைய கவிதையையோ வசனத்தையோ படிக்கும்போது வரிக்கு வரி அவர் சுதந்தரத்தை நாடியது நமக்குத் தெரிகிறது. அந்த மாதிரியான, தேசசுதந்தரத்துடன் சொந்த சுதந்தரத்தையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இன்றும் இருக்கிறது. பாரதியைப் படிக்கும்போது, இந்த எழுத்தையும் இதை எழுதிய வரையும் எந்த விலை கொடுத்தும் யாரும் வாங்கி விட முடியாது என்கிற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இன்றைய எழுத்தாளர்கள் விலை பேசப்படாமல் இருக்க வேண்டும் என்கிற அவசியத்தை நாம் உணருவதற்கு பாரதியாரின் எழுத்துக்கள் நமக்குப் பயன்படும். அந்த அளவிலும் பாரதியார் நம் தலைமுறை எழுத்தாளருக்கு முன்னோடியாக விளங்குகிறார்.

வேகம், நோக்கம், உண்மை, இவற்றுடன் சுதந்திரம் என்பதையும் சேர்த்து பாரதியாரை முன்னோடியாகக் கொள்வது இன்றைய இலக்கியாசிரியர்களாகிய நமது பெரும் கடமையாகும்.

சொல்ல வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. முடித்துக் கொள்கிறேன். நமஸ்காரம்.

# எஸ். வி. வி.

**எஸ்.** வி. வி. என்கிற எழுத்தாளர் 1926, 1927 – ல் வேடிக்கையாக ஹிந்து பத்திரிகையில் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதத் தொடங்கி னார். 1933, 34ல் கல்கி அவர்களின் முயற்சியால் ஆனந்த விகடனில் ஹாஸ்யமாக எழுதத் தொடங்கினார். அவர் ஹாஸ்யமாக எழுதின தெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் – பத்திரிகைத் தேவைக்காக அவர் மார்க் ட்வெயின், ஸ்டீபன் லீகாக், ஜெரோம் கே ஜெரோம் என்பவர் களையெல்லாம் காப்பியடித்துத் தமிழில் எழுதித் தந்தது ஒருபுறம் இருக்கட்டும் – இந்தத் தேவை தாண்டியபின், அகப்பட்ட நூல்களை எல்லாம் காப்பியடித்து முடித்தான பின், எஸ். வி. வி. தன் பிரத்யேக சுபாவமான ஒரு நோக்குடன், பழசிலே நம்பிக்கையுடன், புதுசைப் பார்த்து அவருக்கே உள்ள ஒரு தனித்துவமும் தத்துவமும் தொனிக்க, இலக்கியம் செய்ய முடிந்தது. குறைந்தது ஒரு நாலைந்து நாவல்களும், பத்திருபது சிறுகதைகளும் அவர் எழுதியவை கனமான, சீரியஸ் இலக்கியம் (ஹாஸ்யமேயானாலும்) என்று சொல்கிற அளவுக்கு அமைந்தது. ராமமூர்த்தி, கோபாலன் ஐ. சி. எஸ்., ஸம்பத்து, பொம்மி, ராஜாமணி

முதலியவற்றை நல்ல நூல்களாக, எஸ். வி. வி. யின் சொந்த இலக் கிய மேதைக்குச் சான்றுகளாக தமிழ் வாசகர்கள் இன்னும் உணர வில்லை என்பது நமது இலக்கியத்தைப் பற்றிய பல துர்ப்பாக்கியங் களில் ஒன்றாகும்.

தமிழில் நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வேதநாயகம் பிள்ளையுடன் தொடங்கியது. ராஜம் அய்யர், அ. மாதவையா என்று இம்மூவருடன் நாலாவது மரபு ஒன்றை ஏற்படுத்தித் தந்தவர் என்று எஸ். வி. வியைச் சொல்ல வேண்டும். முதல் மூன்று நாவலாசிரியர்கள் மரபுடனும் ஒத்து வராமல் ஒரு புது பாணியைத் தனக்கென்று திறம் பட அமைத்துக் கொண்டு சிருஷ்டி செய்து தந்திருக்கிறார். தொழில் முறையில் ஹாஸ்ய ஆசிரியர் தான் எஸ். வி. வி. ஆனால் நாவல் என்று கலை அம்சங்களில் சிறப்பாகச் சொல்லக் கூடிய அளவில் எழுது வதற்கு வேண்டிய திறன் அவருக்கிருந்தது.



பழமைப் பிடிப்பும், உற்றுக் கவனித்துப் பல சிறு நுணுக்கங்களை அறிந்து வைத்துக் கொண்டு, சமயத்தில் உபயோகித்துப் பயன் பெறும் ஆற்றலும் எஸ். வி. விக்கு இருந்தன. ராமமூர்த்தி என்கிற நாவலைக் கவனிக்கும் போது எஸ். வி. வி. இந்தத் தரத்தில் இன்னும் அதிகம் எழுதவில்லையே என்று தோன்றுகிறது. ஸம்பத்தில் கதை பின்னுகிற வேலையை, பத்திரிகைத் தேவைகளுக்காகச் சற்று அதிகமாகவே, மற்ற தொடர் கதாசிரியர்களைப் போலவே, மிகையாக எழுதிவிடு கிறார். ராஜாமணியின் தகப்பன் மகன் உறவை ஒரு கோணத்திலிருந்து பார்த்தால் டர்கெனிவ் என்கிற ருஷ்ய மேதையுடன் ஒப்பிடுகிற அள வில் செய்துவிடுகிறார் என்று சொல்லலாம். டர்கெனிவில் கருத்துப் போராட்டம் இருந்தது – இங்கு எஸ். வி. வியில் இந்தியாவுக்கேற்ப போராட்டம் இல்லை; மாறுபட்டாலும் அனுசரணை இருந்தது. இந்த அனுசரணையைச் சிறப்பாகவே சொல்ல வேண்டும். மனிதர்களை மனிதர்களாக அவர்களுடைய குற்றங்குறைகளும் நிறை குறைகளுடன் உருவாக்கித் தந்துள்ளார் எஸ். வி. வி.

என்னளவில் சொல்லப் போனால், எஸ். வி. வி. யின் ராம மூர்த்தியை அவருடைய சிறந்த நாவலாக நான் சொல்வேன். ஒரு குடும்பத்தில் உறவு முறைகளை வெகு அழகாகச் சித்தரிக்கிறார். ராம மூர்த்தியை காதலிக்கிற அன்னபூரணி – (அவர் பெயர் அன்னபூரணி யென்றுதான் எண்ணுகிறேன். நான் நாவலை ஐந்தாவது தடவை யாகப் படித்து அனுபவித்தது சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன். அந்த நாவல் பற்றிய நினைவு எனக்குள் இன்னும் பசுமையாகவே இருக்கிறது) அவன் தனது தகப்பனாரின் இரண்டாவது மனைவி யாகிய தன் சிறு தாயாருடன் மகனாக அதே வீட்டிலே வாழ மறுக் கும் வரையில் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறாள். "எங்கே தகப்பன் தகப்பனாகவும், மகன் மகனாகவும், சகோதரன் சகோதரனாகவும் இருக்கிறானோ, அங்கே அரசன் அரசனாகவும், மந்திரி மந்திரியாகவும் இருக்கிறான்" என்கிற குரு கங்கின் தத்துவம் அந்த நாவலுக்கு நல்லதோர் கனம் தந்திருக்கிறது. கனம், அழகு இவற்றுடன் எஸ். வி. வி.க்கே உரித்தான பார்வையும், வாழ்விலே மரபு பூர்வமான கருத்தும் கலைக் கண்ணாடி மூலம் சுற்றிலுமுள்ள வாழ்வைக் காணும் சிறப்பும் சேர்ந்து ராமமூர்த்தி என்கிற நாவலை மிகப் பிரமாதமாக உருப்பெறச் செய்திருக்கிறது. அவர்கள் அதிர்ஷ்டம் அவர்களுக்குத் தெரிவதில்லை. பாவம், என்பது தவிர, தமிழர்கள் அதிர்ஷ்டக்காரர்கள் தான். எஸ். வி. வி. யின் ராமமூர்த்தி போன்ற நல்ல தரமான நாவல்கள் உலக இலக்கியத்திலேயே இருபது முப்பது தேறினால் அதிகம்.

நாவலுக்கு அத்யாவசியமான கட்டுக்கோப்பு என்கிற அம்சம் தான் சாதார்ணமாக எஸ். வி. வியில் மிகவும் குறைவாக பலஹீன மான அம்சமாகும். ராமமூர்த்தியின் கட்டுக்கோப்பு மிகவும் அற்புத மாக அமைந்துவிட்டது. மற்ற எஸ். வி. வி. நாவல்களில் இல்லாத

அம்சம் – சிறப்பாகச் சொல்ல வேண்டியதாகும். ஓரிரு இடங்களில் மிகைபடச் சொல்கிற (exaggeration) இருந்தாலும், அது கதைப்போக்கிலே அமுங்கி விடுகிறது. நாவலுக்குத் தேவையான விஷயங்களை கனகச்சிதமாகத் திரட்டித் தந்திருக்கிறார் எஸ். வி. வி. எங்கோ ஆரம்பித்து எப்படியோ முடித்து விடும் கலையல்லாத கலை எஸ். வி. வி. யினுடையது – அதை ராமமூர்த்தியிலும் காண முடிகிறது.



# டி. கே. சியின் இலக்கியப் பணி

நான் "சூறாவளி" பத்திரிகை தொடங்குவதற்காக சென்னை வந்து தங்கிய சமயத்தில் சொ. வி. (புதுமைப்பித்தன்) கி. ரா. வும் நானும், அங்கப்ப நாய்க்கன் தெருவில் ஓர் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்கியிருந்தோம். ஒரு நாள் அ. சீனுவாச ராகவன் வந்தார். அவர் அப்போது திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார் என்று எண்ணுகிறேன். பேச்சு டி. கே. சி. என்ற எனக்குத் தெரியாத ஒருவரைப் பற்றித் தொடங்கிறது. டி. கே. சி. தன்னைப் பற்றி "இவர் எதற்காகக் கதைகள் எழுதுகிறார்" என்று கேட்டார் என்று சொன்னார் சொ. வி. இலக்கியத்தில் அவ்வளவு ரசனையா என்று நான் கேட்டேன். அதற்குப் பதில் சொ. வி. யும் சீனுவாச ராகவனுமாகச் சேர்ந்தே அவர் அப்படியொன்றும் ரசனை யற்றவர் அல்ல – புதுமைப் பித்தன் கதைகளைப் பற்றிப் பிடிக்காதே தவிர மற்ற படி கம்பன் பற்றியோ, முத்தொள்ளாயிரம் பற்றியோ, நந்திக் கலம்பகம் பற்றியோ, பேசத் தொடங்கினால் ரசமாகத் தான் இருக்கும். அனுபவிக்கவும், அறிந்த அனுபவத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்லவும் அறிந்தவர் என்றார் சீனிவாச ராகவன். பேச்சு வேகத்தில் அன்றிரவே தியாகராய நகர் போய் டி. கே. சி. என்பவரைப் பார்த்து விடுவது என்று மூவரும் தீர்மானித்தோம் (கி. ரா. உடன் வந்ததாக நினைவில்லை) போனோம். டி. கே. சி. ஊரிலில்லை. நோய்வாய் பட்டிருந்த அவர் மகனையும் பின்னர் மு. அருணாசலம், ராஜாஜி, கல்கி முதலியவர்களையும் பார்த்து விட்டுத் திரும்பும் போது, ஓர் அசைவமான ஓட்டலில் சைவச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு அறைக்குப் பத்து மணிக்குத் திரும்பினோம்.

"டி. கே. சி. யைப் பார்க்க இயலாது போனது உமக்கு பெரும் நஷ்டம் தான்" என்றார் சீனுவாச ராகவன்.

"ஐயா டி. கே. சி. மாதிரியே பேசுவாக! ஒரு பிரசங்கம் பண்ணி விடுங்களேன். கே. என். எஸ்ஸுக்கும் தெரியட்டும்" என்றார் சொ. வி.

சற்றே தயங்கிய சீனுவாச ராகவன், டி. கே. சி. பாணியில் பேசத் தொடங்கினார். ஒரு மணிநேரம் பேசியிருப்பார் – சில விஷயங்கள்

மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம் தான். ஆனால் பின்னர் சிதம்பரத்தில் டி. கே. சி. வந்த போது நான் சந்தித்து அவர் பேசியதைக் கேட்டதும், முதலில் சீனிவாச ராகவனுக்குத் தான் கடிதம் எழுதினேன் – "அன்று ஏற்பட்ட அனுபவம் உண்மையானது தான். அது தமிழில் எனக்கும் புது அனுபவம் தான்" என்று.

டி. கே. சி. அவர்களைக் கேட்பது என்னைப் போலவே பலருக்கும் புது அனுபவமாகவே அமைந்தது என்பதை நான் பின்னர் தெரிந்து கொண்டேன். சற்றே நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அடிக்கடி சந்திக் கும் வாய்ப்பும் எனக்கும் ஏற்பபட்டது. பல நாட்கள் டி. கே. சி. அவர்களுடனிருந்து அவர் சொல்லுகிற கவியை அதன் சிறப்பை உணரும் வாய்ப்பும் கிடைத்தது. நான் பலரிடம் தமிழ்ப் பாடம் – புறநானூறு முதல் கம்பராமாயணம் வரையில் – கேட்க ஆவலுடன் தொடங்கி ஏமாந்து போனவன். தானாகப் படித்துக் கொள்வதே போதும் – பிறரிடம் கேட்டுப் பயனில்லை என்கிற முடிவுக்கு வந்தி ருந்த சமயம் தான் நான் – 1940 – என்று எண்ணுகிறேன் – முதல் தடவையாக டி. கே. சி. யைச் சந்தித்தேன். அவரிடம் முதலில் நான் கேட்ட பாட்டு முத்தொள்ளாயிரத்தில் "அன்னற்பழனத்து" என்கிற பாட்டு. பிறகு கம்பராமாயணத்தில் பல பகுதிகளை, பல பிரசங்கங் களைத் தொடர்ச்சியாகவும், உடன் இருந்து சாப்பிடும்போதும், உறங்கப் போகும்போதும் கேட்ட பாட்டுகள் பலப்பலவாகும். வெறும் சம்பவக் கோவையாக இந்தக் கட்டுரையை எழுத எனக்கு இஷ்ட மில்லை. டி. கே. சி. யின் இலக்கியப் பணி எந்த எந்த வகையில் சிறந்தது. தமிழுக்கு அவசியமானதாயிற்று என்பதை நான் அறிந்த அளவில் சொல்ல வேண்டும் என்று எண்ணுகிறேன். ஆகையால் டி.கே.சி.யைப் புற்றி பல விஷயங்களையும் அறிந்த வாசகர்களுக் காகவும், அல்லது அவரைப் பற்றி எதுவுமே அறியாத இளம் வாசகர் களுக்கு எழுதுவதாகவும் வைத்துக் கொண்டு இதை எழுத முயலு வேன். வெறும் பாராட்டுரையாக அல்ல – என் சொந்த லாபத்தைப் பற்றி மட்டும் அல்ல.

டி.கே.சியைக் கேட்கும்போது, கேட்பவருக்கு முதலில் தோன்றுகிற உணர்ச்சி, இந்த மனிதர் தான் ரசிப்பதை எவ்வளவு முழுமையுடன் வெளியிடுகிறார் என்பதுதான். பாடம் படிப்பது போலவோ அல்லது கற்றுச் சொன்னது போலவோ அல்லது நம்பிக்கையில்லாமலோ அவர் எதையும் சொன்னதில்லை என்பது என் அனுபவம். உண்மை என்கிற விஷயம் இலக்கியத்தில் அடிப்படையான ஒரு விஷயம். நீதி புகட்டுவதில் அயோக்கியனாக இருப்பவனும் பிறர் யோக்கியமாக இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு நகர்ந்துவிடலாம். ஆனால் கலை, இலக்கியம் என்கிற விஷயங்களில் உண்மை என்கிற அடிப் படையில்லாவிட்டால் எல்லாமே cant தான். டி. கே. சி. அந்த வார்த் தையை மொழி பெயர்த்த அளவில் பயனில் சொல்லாடல் தான். இந்த 'கேண்ட்' இல்லாத தற்காலத் தமிழறிஞர்களில் டி. கே. சியை



முதல்வர் என்று போற்ற வேண்டும். இதை மிகவும் சிறப்பாகச் சொல்ல வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் இலக்கியவுலகில் உண்மை என்கிற அம்சம், பண்டிதர்கள், பேரா சிரியர்கள் தயவால், கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து பட்டுக் கொண்டு வருகிறது. பாரதியும் பாரதிக்குப் பின் டி. கே. சியும் இந்தக் கலை உண்மைக்காகப் பெரிதும் உழைத்தவர்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விஷயம் இந்த உண்மை விரும்பும் பழக்கத் தினால் தான் இருவருக்குமே பாண்டித்தியம் என்று சொல்லப் படுவதில் வெறுப்பும், பண்டிதர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர் களிடமிருந்து தமிழை மீட்க வேண்டும் என்கிற எண்ணமும் எழுந்தது என்று நான் எண்ணுகிறேன்.

கலை, உண்மை என்கிற அடிப்படைத் தேவைப் பூர்த்தியுடன் டி.கே.சியிடம் கவிதை பற்றிய வரையில் ஓர் இலக்கியத் தரமான அளவுகோல் இருந்தது. இது நல்லதைப் படித்துப் படித்து அவராக ஏற்படுத்திக் கொண்டதாகும். அவர் அளவுகோல்கள் நமக்குப் பூரண மாக ஒத்துவரவேண்டும் என்கிற அவசியம் இல்லை. இதைத்தான் சொ. வி. முதலில் நான் சொன்னது போல 'அவர் என் சிறுகதைகளை மதிக்காதவர் என்றாலும் பல விஷயங்களிலும் ரசிகர்தான்' என்று சொன்னதின் அர்த்தம் என்று எனக்குத் தோன்றுகிறது.

தமிழ்க் கவிதை உலகம் இப்படிப்பட்ட அளவுகோல்கள் தேவை யில்லை என்று இரண்டாயிரம் வருஷமாக நம்பி வந்திருப்பது நமக்குத் தெரிகிறது. எட்டுத் தொகை, பத்துப் பாட்டு எல்லாம் – அதாவது ஆரம்ப காலத்திலிருந்தே தமிழ்க் கவிதையில் அகப்பட் டதை யெல்லாம் காமாசோமா என்று புத்தி சாமர்த்தியத்தினாலும் வார்த்தைப் பந்தலினாலும் பாராட்டும் வழக்கம் இருந்து வந்திருக் கிறதே தவிர, தரம் பார்த்துப் பிரித்துச் சொல்லும் பழக்கம் இருந்த தாகத் தெரியவில்லை. சுருக்கமாகச் சொன்னால் தொகை நூல்கள் கூட, தரம் பற்றித் தொகுக்கப்பட்டவையல்ல கிடைத்தவை தொடுக்கப்பட்டன என்று தான் சொல்ல வேண்டும். இதே கண் ணோட்டத்துடன் தான் சீவகசிந்தாமணியும், கம்பராமாயணமும், சேக்கிழார் பெரிய புராணமும் ஒரே தரத்தனவாகக் கருதப்படுகின் றன. அளவு என்பது இருந்ததே தவிர, தரம் என்கிற அறிவு தமிழில் ஏற்படவேயில்லை. இலக்கிய விமர்சனத்துக்குத் தமிழில் அடிகோலிய வர் என்று சொல்ல வேண்டியவர் வ.வே.ஸு. ஐயர். அவர் ஓரளவுக்கு மேல் தமிழ்க் கவிதையில் தரமதிப்பீடு செய்ய முயன்ற தில்லை. தமிழ் இலக்கியத்தில் முதல் தடவையாக நல்ல கவிதையுடன் பெரும்பாலான கவிதைகள் மட்டமானவையும் இருக்கின்றன என்று சொன்னவர் டி.கே.சி.தான். இது சற்று மிகையாகக் கூறப்படுவது போலத் தோன்றினாலும்கூட, உண்மைதான் என்பது சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் நிச்சயமாக விளங்கும், விஷயத்தில் அக்கறை யுள்ளவர்களுக்கு.

இந்தத் தராதரம் பார்க்கிற முறையை விமர்சனம் என்று சொல்லி யிருந்தால் டி. கே. சியே ஏற்று கொண்டிருப்பாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர் முறை விமர்சன முறை தான். தமிழில் இரண்டாயிர வருஷத்து இலக்கியத்தில் முதல் தடவை யாக விமர்சனம் பிறக்கிறது. டி. கே. சி. யுடன் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. அதைத் தன்னளவில் ஒரு முறையாகவும் செய்து கொண்டு, அம்முறை பிறழாமல் விமர்சனம் செய்து வந்தார் அவர். இந்த முறை காரணமாகத் தான் அவரால் தைதியமாகக் கம்ப ராமாயணத்தில் சில பகுதிகளைத் தள்ளிவிட்டு சில பாட்டுகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள முடிந்தது. அதே போல தமிழிலக்கியத் திலுள்ள பெரும்பகுதியான போலிக் கவிதைகளையும் ஒதுக்கிவிட்டு ஏதோ சிலதைப் பூரணமாக அவரால் பாராட்ட முடிந்தது.

டி. கே. சி.யின் இலக்கிய அளவைகள் என்னென்ன, எப்படிப்பட் டவை, எதை வைத்து அவர் சில கவிதைகள் உயர்ந்தவை, சில மட்டமானவை என்று சொன்னார் என்பதையெல்லாம் இந்தக் கட்டு ரையில் நான் அலசப் போவதில்லை. ஏனென்றால் அதற்கு இங்கு இடம் போதாது. டி. கே. சியின். கட்டுரைகள் பூராவையும் வைத்து, அவர் ஆயுட்காலம் முழுவதிலும் சொன்னவற்றையும் வைத்துக் கவ னிக்க வேண்டிய விஷயம் அது. ஒன்று சொல்லலாம் – எளிமை, உருவம், சந்தம், வேகம் இவை. இந்த டி. கே. சி. அளவுகோல்களின் அடிப்படைகள் சற்றே கசப்பானது. நெரடானது. அதீதமானது இவற்றை அவர் அவ்வளவாக ஏற்றுக் கொண்டதில்லை. மரபு பிற ழாத ஆழத்தை ஏற்று கொள்வார். மரபு பிறழ்ந்த – புதுமைப்பித்தனது போன்ற – ஆழத்தை ஏற்று கொள்ளமாட்டார். புரட்சிகரமானதும் நமது மரபிலே வருவது தான் என்று ஒரு தரம் அவரிடம் சொல்லி விட்டு நான் அவரது கிண்டலுக்கும் கேலிக்கும் உள்ளானது எனக்கு இன்னமும் நினைவுக்கு வருகிறது.

டி. கே. சியில் மூன்றாவது சிறப்பான அம்சம் அவர் இலக்கியத்தை, கலையை ஒரு முழுவாழ்க்கைத் தத்துவமாக ஏற்றுக் கொண்டிருந்தார் என்பது தான் என்று எனக்குத் தோன்றுகிறது. அரசியலில் பாதி, இலக்கியத்தில் பாதி, உத்தியோகத்தில் பாதி, இலக்கியத்தில் பாதி என்று அவர் ஆற்றில் ஒரு கால்; சேற்றில் ஒரு கால் வைத்திருந்தவர் அல்ல. இதுவும் கலையில் உண்மை என்பது பற்றி முன்பு கூறியது போல, இக்காலச் சூழ்நிலையில் சிறப்பாக எடுத்துச் சொல்லத் தோன்றுகிறது. ஸாக்கிலே கொஞ்சம்; பேக்கிலே கொஞ்சம் என்று இரண்டு அல்லது மூன்று உலகங்களில் சிறந்ததை அடைய அவர் உழைக்கவில்லை. முழுநேர இலக்கியவாதியாக அவர் இருந்தார் என் பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். 'இலக்கியத்திலோ கலையிலோ பேரம் பேசக் கூடாது" என்று எங்கோ ஓர் இடத்தில் டி. கே. சி. அவர்களே எழுதியிருக்கிறார்கள். பேரம் பேசாது வாழ்க்கை நடத்திய வர் அவர் என்பதை ஒரு தனிச் சிறப்பாகவே நான் சொல்லுவேன்.



டி. கே. சி. யைப் பற்றி எழுத – சில்லரையாகவும் மொத்தமாகவும் நிறையவே உண்டு தான் எனினும் இன்னும் ஒரு குறிப்புடன் இந்தக் கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்.

அவருடைய ராமாயணப் பதிப்பு என். கைக்கு வந்த சமயம், நான் அதைப் படித்துவிட்டு அவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அந்தப் பாடல்களுக்குச் சமமாகச் சொல்லக் கூடிய அளவில் அவர் வசனப்பகுதிகள் அமைந்து விட்டன என்று எழுதியிருக்கிறேன். அது எவ்வளவு உண்மை என்று அவர் எழுதிய கட்டுரைகளையும் ராமா யணப் பதிப்பையும் படிக்குந் தோறும் உணருகிறேன் நான். தமிழ்க் கவிதை கம்பனில் அதற்கு முன்னும் பின்னும் இல்லாத உயர்வை அடைந்தது என்றால், தமிழ் வசனம் டி. கே. சியின் வசனத்தில் ஓர் அற்புதமான உயர்வை அடைந்தது. டி. கே. சியின் தனித்துவமும் நோக்கும் அமைத்துத் தந்த வசன உயர்வு இன்றைத் தமிழ் இலக்கியத் தின் சிகரங்களில் ஒன்று. அர்த்தமும் ஆழமும் கனமும் கருத்தும் தெளிவும் ஓட்டமும் உள்ள நடை அது. மிகவும் வலுவானது. மற்ற மூன்று விமர்சன அம்சங்களையும் போல இதுவும் டி. கே. சியின் தனிச் சிறப்பாகும்.

✻

35338
ஆணைக்குழு
திண்டிவனம்
நாள்...........
எண்.......
கிளை நூலகம்

# இன்றைத் தமிழ் இலக்கியம்

QUEST ஆங்கிலப் பத்திரிக்கைக்காக *1959*–ல் எழுதப்பட்ட ஒரு கட்டுரை இது. தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தரப்படுகிறது. ஆனால் போக்குகளில் அதிக மாறுதல் இந்த 25 ஆண்டுகளில் இல்லை.

தமிழில் இன்று நிறையவே எழுதப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இதில் பெரும் பகுதியும் இலக்கியம் என்கிற பெயருக்கு லாயக்கானதா என்பது சந்தேகமே. தமிழ்ப் பத்திரிகைகளும், பிரசுராலயத்தார் உலகமும், ஜனரஞ்சகமானதை எழுதும் சக்திகளும், அறிவாளிகள் என்று சொல்லிக் கொள்பவர்களும் தமிழ் மொழியில் பலவும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைத் தேவைக்குத் தமிழ் மொழியைத் தயார் செய்கிற காரியத்தில் ஈடுபட்டு ஆரம்ப நூல்கள், மற்றும் அறிவுத்துறை சம்பந்தமான பெருநூல்கள் எல்லாம் எழுதுவதில் முனைந்திருக்கிறார்கள். இருபது நூற்றாண்டுகளாகத் தொடர்ச்சியான இலக்கிய மரபுள்ள ஒரு மொழியாகும் தமிழ். ஆனால் அதன் இன்றைய முன்னேற்றம், அரசியல் மற்றும் பல சந்தர்ப்ப சக்திகளை அண்டி நிற்கிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் இப்படித்தான். இப்பொழுது இந்த ஐம்பது அறுபது ஆண்டுகளாகத் தான், அது ஓரளவுக்குத் தானாகவே இயங்கி முன்னேறும் சக்தி பெற்றிருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

இந்த ஐம்பது அறுபது வருஷத்து தமிழ் இலக்கிய சரித்திரத்தை நோக்கினோமானால் பண்டிதர் போக்கு, பத்திரிகைப் போக்கு முதலியவையும் தெரிகின்றன. சுதந்தரத்துக்குப் பின் தோன்றிய இலக்கியப் போக்குகளைக் கவனிக்குமுன் இவ்விரண்டு போக்குகளையும் பற்றிப் பொதுவாகச் சிலது சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

பண்டிதர் போக்கு என்பது தமிழ் பற்றிய வரையில் தூய்மை வாதப் போக்காகவே தான் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அரசியல் காரியங்கள், சர்க்கார் இலாகாக்கள், கல்லூரிகள், பள்ளிகள் எங்குமே உடனடியாகத் தமிழை உபயோகிக்கத் தொடங்க வேண்டும் என்கிற கூச்சல் இந்தத் தூய வாதிகளின் அடிப்படைகளில் ஒன்று. ஆரிய பாதிப்பு, மற்றும் அந்நிய பாதிப்புகள் எல்லாம் தமிழ் மொழி, வாழ்வு எல்லாவற்றிலிருந்தும் உடினடியாக அகற்றிவிடப்பட வேண்



டும் என்று தமிழ்ப் பண்டித பேராசிரிய உலகம் விரும்புகிறது. இந்த இயக்கம் இருபதாம் நூற்றாண்டுக்கும் முன் 20 வருஷங்களுக்கு முன் தோன்றியதாகும். சுதந்தரத்துக்கு முந்திய ஆண்டுகளில் மொழித் தூய்மைக்கு உழைப்பதும், ஜனங்கள் பேசுகிற வேகத்தில் எழுதுவதும் இதன் அம்சங்களாக இருந்தன. சுதந்தரத்துக்கு பின் தூய்மைவாதிகளும் தனித்தமிழர்களும் அதிகத் தூய்மைக்கு வாதாடிய இன்று உபயோகமில்லாத, வழக்கொழிந்த சொற்களைக் கொணர்ந்து அசுரத்தனமாகப் புகுத்துவதில் கவனம் செலுத்துகிறார்கள். வையாபுரிப் பிள்ளை போன்ற அறிஞர்கள் ஏற்காத ஒரு பழசை. ஒரு பண்பாட்டைத் தமிழர்கள் விருப்புடன் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். பழசு பழசு என்கிற மோஹம் அளவு கடந்துவிட்டது. இது ஓரளவில் பயன் தரக்கூடியது எனினும் அந்தப் பழசில் எல்லா அம்சங்களும் நல்ல அம்சமும் அல்ல. தேவையானதும் அல்ல. கெடுதி விளைவிக்கிற அளவுக்குப் பழமை மோஹம் தமிழர்களுக்குத் தலைக்கேறியிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

இன்று தமிழில் உள்ள 'தூய' எழுத்து சற்றேறக்குறைய முக்கியமல்லாதது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அதில் பெரும் பகுதி அந்நிய பாதிப்பினால் உண்டானதேயாகும். சொந்தமானது அதிகம் இல்லை. உதாரணமாக திராவிடத் தலைவர் ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கரின் பல சிந்தனைகளும் சார்லஸ்பிராட்லா, ரால்ஃப் இங்கர்ஸால் போன்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பிய சிந்தனையாளர்களைத் தொடர்ந்து எழுந்ததேயாம். சி.என். அண்ணாதுரையும் அவர் சிஷ்யர்களும் எதிர்முகமாக இந்திய, ஐரோப்பிய இயக்கத்திலிருந்து தங்கள் நூல்களைத் தொடர்பவர்கள் – உதாரணமாக ரோமாபுரி ராணிகள், இந்திய கிரேக்க கடவுள்களின் லீலைகள். இந்த இரண்டு கோஷ்டியினருடைய நூல்களும் – இன்றைய நிலையைப் பற்றிப் பேசும் போது – ஒரு நடை வேகம் தவிர, வேறு எவ்வித சக்தியும் அற்றவையாகவே காணப்படுகின்றன. ஒரு தலைப்பட்சமான ஒரு காட்சியைக் கண்டபடி விவரிக்கின்றன. அவை வேறு சிறப்பு அம்சங்களே இல்லாத எழுத்துப் பகுதி.

இது ஒரு புறமிருக்க, குறுகிய கொள்கைகளை நேரடியாக ஏற்காவிட்டாலும் அடிப்படையாகக் கொண்ட புலமையாளர்கள் எழுதுகிற நூல்கள் மறுபுறம் இருக்கின்றன. தமிழில் உள்ள அறிஞர் உலகம் என்று சொல்லப்படுகிற கல்லூரி, சர்வகலாசாலை, பள்ளிப் பேராசிரியர்களும் தூயதமிழ்க் கட்சிகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிப்பவர்கள் தான். அது அவர்களுக்கு லாபகரமாக இருப்பது வெளிப்படை. இவர்களுடைய எழுத்தில் பெரும்பகுதியும் தூய்மை வாதத்தில் எழுபவைதான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த சங்க இலக்கியம் பற்றி எழுவதிலே மட்டும் இன்பங்காண்பவர்கள் இவர்கள். அந்தச் சமூக சூழ்நிலை இவர்களுக்கு உசுப்பாக உள்ளது. அல்லது திருவள்ளுவரைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வார்

கள். இலக்கியம் என்று பெயரளவில் ஒப்புக் கொள்ளக்கூடிய ஓர் எல்லைப் பிரதேசத்திலே நிற்பவர்கள் இந்தப் பண்டிதர்களும் பேரா சிரியர்களும். பழமைவாதிகள் தான் இவர்கள். நிச்சயமாகத் தெரியாத ஒரு பண்டைப் பெருமையை உற்சாகமாகப் பேசுபவர்கள் இவர்கள். அவர்கள் சமஸ்கிருதம் கலவாத தமிழ் பேச முயலுபவர்கள் – ஆனால் சரித்திரத்திலே சமஸ்கிருதம் கலவாத தமிழ் இன்றும் இல்லை – என் றும் இருந்ததாகவும் தெரியவில்லை. இந்தப் பேராசிரியர் பண்டிதர் களில் சிலராவது, அகம் புறம் குறள் தாண்டி சிலப்பதிகாரம் கம்ப ராமாயணம் போன்ற நூல்களையும் அவ்வளவாக இலக்கியத்தர மல்லாத வேறு பல நூல்கள் – சேக்கிழார் பெரியபுராணம், திருவிளை யாடற் புராணம் முதலியவை பற்றியும் பேசுபவர்கள், எழுதுபவர்கள். ஆர். பி. சேதுப்பிள்ளை டி. பி. மீனாட்சி சுந்தரனார் இன்னோரன்ன நூற்றுக்கணக்கான புலமையாளர்களை இதில் கண்டு கொள்ளலாம். அவர்களுக்குப் பழமையில் உள்ள நம்பிக்கை தமிழின் இன்றைய நிலையிலோ, எதிர் காலத்திலோ இல்லை என்பது சுதந்திரத்துக்குப் பின் இவர்களுடைய எழுத்துக்களிலிருந்து தெரிய வரும்...

இந்தப் புலமையாளர் எழுத்து தமிழில் வருகிற அறிவு இலக் கியத்தை ஓரளவுக்குப் பாதிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். பள்ளிகளுக்கும், பாட புஸ்தகங்களுக்கும் அப்பாற்பட்ட அளவில் இந்த அறிவு இலக்கிய முயற்சியை முடிந்து கொண்டிருக்கும் கலைக் களஞ்சியம் வாயிலாக நாம் காணலாம். பத்துப் பாகங்களில் இப் போது (1959 – ல்) ஐந்து பாகங்கள் வெளியாகிவிட்டன. வரவேற்கப்பட வேண்டிய முதல் முயற்சி. போதுமானதல்ல என்றாலும் பாராட்டப் பட வேண்டிய முயற்சி இது. திராவிடப் பழமை பற்றி மிகைபடக் கூறுகிற குற்றத்திலிருந்து கலைக் களஞ்சியமும் விலக்கல்ல. எனினும் மொத்ததில் முன்னேற்றமான முயற்சி என்றே கூறலாம்.

அப்புசாமி ஐயர், ஆர். கே. விசுவநாதன், காலஞ் சென்ற ராஜேசு வரி அம்மையார் முதலியோர் குறிப்பாக விஞ்ஞானம் பற்றி எழுதி வருபவர்கள் என்று சொல்லலாம் – இந்தத் துறையில் வேறு பலரும் ஈடுபட்டுள்ளார்கள். ஓரளவுக்கு விஞ்ஞான அறிவைத் தமிழில் தருவ தில் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றும் சொல்லத்தான் வேண்டும். கல்வி போன்ற துறையின் தேவைகளும் மற்றத் தேவைகளும் சேர்ந்து விஞ்ஞான எழுத்தைத் தமிழில் வளர்க்கவே செய்கின்றன – எனினும் தூய்மை வாதமும், தனித் தமிழ் வாதமும் முன்னேற்றம் திருப்தி தருகிற அளவுக்கு ஏற்படாமல் தடுக்கின்றன. இந்த தூய தனித் தமிழ் வாதம் ஓரளவு அரசியல் அடிப்படை ஏற்பால் வந்ததாகும்.

இந்தப் பேராசிரிய அறிவு இயக்கத்துடன் ஒப்பிடும் போது பத்திரிகை எழுத்தும் இயக்கமும் தமிழில் வெகு துரிதமாகவே வளர்ந்து உருப்பெற்றிருக்கிறது என்று சொல்ல வேண்டும் – எப் போதும் இது ஒரேபோக்காக இருந்திருக்கிறது என்று மட்டும் சொல்ல இயலாது. இன்றைப் பண்பின் வளத்திலே பத்திரிகைப் போக்கு ஒரு



குறிப்பிடக் கூடிய அம்சமாகும். தமிழ்ப்பத்திரிகைப் பண்பு ஓர் உருப் பெற்றிருப்பதாகவே நாம் ஏற்கலாம். ஆரம்ப காலத்திலிருந்தே தமிழ் அச்சும் பத்திரிகையும் தமிழ் மொழியையும் இயக்கங்களையும் பாதிப் பதில் சிரத்தைகாட்டி வந்துள்ளன. பாதிப்பில் வெற்றியும் பெற்றன. காந்தி சகாப்தத்தில், 1920–க்கு மேல் போதுமான அளவுக்குப் பத்திரி கைகள் வளர்ந்து முன்னேறின. உலக இயக்கங்களுடன் தமிழர்களைப் பிணைக்கவும், சர்வ தேசிய அரசியல் சமூகம் பொருளாதாரச் சிந் தனைகளைத் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லவும் பத்திரிகை எழுத்து மிகவும் உபயோகமாக இருந்து வந்திருக்கிறது. தமிழர்கள் பெருமை யுடன் சொல்லிக் கொள்வது போல் இந்தியாவின் சிறந்த பத்திரிகை யாளர்களின் பெரும் பகுதியினர் தமிழ்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தான். அவர்கள் எல்லோரும் தமிழில் எழுதினார்கள் என்று சொல் வதற்கில்லை.

காலஞ்சென்ற ஆர். கிருஷ்ணமூர்த்தி என்கிற கல்கியின் எழுத்திலே பத்திரிகை எழுத்து தமிழில் ஓர் உச்சத்தை எட்டிற்று என்று சொல்ல லாம். அவர் தயாரித்து உருக்கொடுத்த இரண்டு வாரப் பத்திரிகைகள் ஏராளமான வாசகர்களை எட்டின. ஆசிய வாரப் பத்திரிகை களிலேயே முதன்மை ஸ்தானம் வகிக்கிற அளவில் எண்ணிக்கையில் அவை உயர்ந்தன. இலக்கிய நோக்குடன் பார்க்கும்போது குமுதம் (1959 – மாதம் மும்முறை) தோன்றிப் பெரும் அளவில் விற்பனை யாவது பற்றிப் பயப்பட வேண்டியதாகத் தான் இருக்கிறது – வயது வராதவர் மனப்பான்மையையும் நோக்குகளையும் எழுத்துக்களையும் பரப்புவதில் இது அபாயகரமான வெற்றி பெற்றுள்ளது. ஆனால் பத்திரிகையாக, எழுத்திலே அது ஜீவனுள்ளதாக இருக்கிறது. முப்பது நாற்பதுகளில் இலக்கியப் பத்திரிகையாகத் திகழ்ந்த கலைமகள் சுதந் தரத்துக்குப் பின் குடும்பப் பத்திரிகையாகி இலக்கியத் தரத்தை வாச கர்கள் எண்ணிக்கைக்காகத் தியாகம் செய்து விட்டது. முன்னணியில் உள்ள இந்த நாலு பத்திரிகைகளும் இன்று (1959) படிக்கத் தெரிந்த வர்களுள்ள வீடுகளை எட்டுகின்றன. பத்திரிகை எழுத்துக்கு இவை உதாரணங்கள்.

பத்திரிகை எழுத்தின் தரம் அதன் தேவைகளை உத்தேசித்து நிர்ணயமாகிறது. கதைகளே அதிகமாகப் பத்திரிகைகளில் பிரசுர மாகின்றன – தொடர்கதைகளும் தான். அவை தவிர அறிவூட்டும் கட்டுரைகளும் பிரசுரமாகின்றன. நாட்டிலுள்ள மக்களின் தேவைக் கேற்ப அதிக முதிர்ச்சி அடையாத அவர்கள் அறிவுக்கேற்ப, அவர் களில் மிகத் தாழ்ந்த தரத்திலுள்ளவர்களும் புரிந்துகொண்டு அனு பவிக்கும் படியாக எழுத வேண்டியது பத்திரிகைகளுடைய முதல் தேவையாகும். நல்ல சிந்தனைகூட வெறும் பொழுது போக்காகவும், சிந்தனையற்றதாகவும் தர முயலுகின்றன பத்திரிகைகள். பல விஷயங் கள் பற்றி பத்திரிகைகள் பண்டிதர் பேராசிரியர் கட்சியை ஆதரிக் கிறது – இலக்கியத் தரமான கட்சியை ஆதரிப்பது என்பது அதற்குச்

சுலபமாக இல்லை. பல துறைகளிலும், முக்கியமல்லாததை, தொடர் கதை, அறிவுக் கட்டுரைகள் முதலிய துறைகளில் பொழுதுபோக் காகப் படிக்கக்கூடிய அளவில் எழுத்தை – தமிழில் மட்டுமின்றி மற்ற இந்திய மொழிகளிலும் தான் – பத்திரிகைகள் வளர்த்திருக்கின்றன. அதை ஸ்தாபிப்பதில் பத்திரிகைகளும் பெரும் பங்கு பெற்றிருக்கின் றன – பண்டித பேராசிரியர்களுடன் சேர்ந்து கொண்டு அறிவு இலக் கியத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்வதிலும் பத்திரிகை எழுத்து பின்வாங்குவதில்லை.

இன்றைய எழுத்தின் இன்றையத் தேவைகளைக் கோடிட்டுக் காட்டுவதில் பத்திரிகை எழுத்து பிரமிக்கத் தக்க அளவிலேயே தமி ழில் செயல்பட்டிருக்கின்றது. கல்கியிடமே சிறப்பாக பல பத்திரிகை எழுத்து அம்சங்கள் அடங்கியிருந்தன. அவரைத் தொடர்ந்து நடப் பவர்கள் தமிழ் நாட்டில் ஒரு இருபது பேர்வழிகளாவது இருப்பார்கள். இன்றும் ஜனரஞ்சகமாக இருப்பதற்கு பத்திரிகை எழுத்து பொழுது போக்காக, உல்லாசம் மட்டும் தருவதாக சிந்தனை கனம் இல்லாத தாக இருக்க வேண்டும். ஓரளவு உண்மையில்லாத ஒரு மனுஷ்யத்வம், உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர்த் துளி வர உள்ளுருக்கும் எழுத்தாக இருப்பது நல்லது என்று உணர்ந்து தமிழில் எழுதியவர் கல்கி.

பத்திரிகைகள் காரணமாகப் பழசு பற்றியும் தமிழர்களின் போக்கு ஒரு விதமாகப் பதமாகியிருக்கிறது என்பதை நாம் காணலாம். விழாக் கள் கொண்டாடுவதில் தமிழர்களுக்கு இந்தியரிடமே வேறு இணையே இல்லை என்று சொல்லலாம். கம்பன், வள்ளுவர், பாரதி போன்றவர்களின் விழாக்களைப் பற்றிப் பத்திரிகைச் செய்திகள் பலரையும் பாதிக்கத்தான் செய்கின்றன. தமிழ் மறுமலர்ச்சியின் முன் னோடியாக ஏற்கப்பட்டுள்ள பாரதிக்குக்கு மண்டபமே எழுப்பினார் கல்கி. இந்த மண்டபத்திலும் வேறு பல இடங்களிலும் பன்னிரண்டு ஆண்டுகளாகவே பெரிய அளவில் விழாக்கள் எடுக்கப்பட்டு வரு கின்றன. சில சமயம் பாரதி புகழ்வதில் தற்காலப் பெரியவர்கள் புக ழும் சற்று அதிகமாகவே இந்த விழாக்களில் அடிபடும். இருந்தாலும் சில சமயம் விழாக்களில் தப்பித் தவறி ஒருவர் இருவர் பாரதியின் இலக்கியம், இலக்கியத் தரம் பற்றியும் பேசி விடுவதால் பூரணமாக இதற்கு இலக்கியப் பயன் இல்லாது போய் விடுவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பதிரிகைத் தேவைகளினால் இன்று எழுதப்படுவதில் பெரும் பகுதியும் ஜனங்களுக்குப் பிடிக்க வேண்டுமே என்கிற பயத்தினால் தரம் அதிகம் போய்விடாமல் பார்த்துக் கொள்ளபடுகிறது. ஜனங் களுக்கு எழுதப்படிக்கத் தெரிய ஆரம்பித்திருக்கிறது – இன்னும் இலக்கிய அறிவு அவ்வளவாக ஏற்படவில்லை. ஆகவே உல்லாச வேகம், பொழுது போக்குத் தன்மை, குழப்பமான மனுஷ்யத்துவ லக்ஷியம் சமூக சீர்திருத்தம் என்று தெளிவில்லாத ஒரு கொள்கை ஏற்பு, புதுமை பற்றிய வரையில் உண்மையில் இல்லாத ஒரு வேகம்,



பழமை அங்கீகரிப்பு – முதலியவை தமிழ் எழுத்துப் பூராவிலும் ஆட்சி செலுத்துகின்றன. காந்தி சகாப்தத்தில் எழுந்து இன்னும் தெளிவாகாத பல காங்கிரஸ் சிந்தனைகளும் அடிக்கடி பத்திரிகை எழுத்தில் காணப்படும் ஓர் அம்சமாகும். சிறந்ததிற்குப் பதில் ரஞ்சகமானது, ஏற்றுக்கொள்ளக்கூடியது. உண்மைக்குப் பதில் ஏற்றுக் கொள்ளப் பட்ட பொய் சிருஷ்டி, காலத்தை மீறி நிற்கக் கூடியதற்கு பதில், காலத்தை அனுசரித்து எழுதுவது – இவையே பத்திரிகை எழுத்தின் போக்குகள்.

இப்படிச் சக்தி வாய்ந்த ஒரு பத்திரிக்கை எழுத்துலகம் இருந்த தையும் மீறி, சில சமயம் அதையே கருவியாகக் கொண்டு, இலக்கியம் அமைந்து விடுகிறது என்பது பற்றித் தமிழ் இலக்காசிரியர் சிலர், நிச்சயம் பெருமை கொள்ளலாம்.

தமிழில் இன்று (1959) உண்மையான இலக்கியத் தரமான எழுத்து பற்றிப் பேசப்புகுமுன் வேறு இரு விஷயங்கள் பற்றியும் கூற வேண்டி யது அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது.

பத்திரிகைகள் நன்றாக வளர்ந்திருப்பதன் காரணமாகத் தமிழில் எழுத்துக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது. பிரிட்டிஷ் பத்திரிக்கைகள் தருகிற தரத்தில் சன்மானம் கிடைக்கிறது என்றும், அமெரிக்கப் பத்தி ரிகைகள் அளவு கிடைப்பதில்லை என்றும், நான் சொந்த அனுபவத் திலிருந்து சொல்ல இயலும். ஆனந்தவிகடன், கல்கி போன்ற பத்திரி கைகளும் தமிழ்வளர்ச்சிக்கழகம், சாகித்ய அகாடமி போன்ற ஸ்தாப னங்களும் அடிக்கடி பரிசுகள் முதலியன தந்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்றன. இந்த ஊக்குவித்தல் எல்லாச் சமயங்களிலும் பய னுள்ளதாகவோ, நல்ல காரியமாகவோ படுவதில்லை. எனினும், இருக் கிறது. சிலசமயம் இந்தப் பரிசு முடிவுகள் ஆச்சரியம் விளைவிப்ப வையாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

மொழிபெயர்ப்புக் காரியமும் சுறுசுறுப்பாகவே தமிழில் நடந்து வருகிறது என்று சொல்லலாம். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் ஆரம்ப கர்த்தாக்களான பாரதியாரும் வ. வே. ஸு. ஐயருமே நல்ல மொழிபெயர்ப்பாளர்கள்தான். கவனிக்கப்படாமலே என்று தான் சொல்ல வேண்டும் – உலகத்தின் இரண்டாந்தர மூன்றாந்தர நூல்கள் பலவும் தமிழ் மொழியில் இறக்குமதி செய்யப்பட்டுவிட்டன. சுதந் திரத்துக்குப் பின் தமிழில் இந்த மொழிபெயர்ப்புச் சுறுசுறுப்பு அதிகரித்தேயிருக்கிறது. வங்காளி, ஹிந்தி, மராட்டி, மலையாள மொழி களிலிருந்தும், பல ஐரோப்பிய மொழிகளிலிருந்தும் முக்கியமாக ஸ்காண்டிநேவியன், ரஷ்யன், ஃபிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் – சில சில நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. கம்யூனிஸக் கோஷ் டியினரும் அமெரிக்கக் கோஷ்டியினரும் தங்கள் தங்கள் தரப்பு நூல் களைப் பெரும் செலவில் தமிழில் தர முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். மூல நூல்கள் தரமல்லாத குறை தவிர கம்யூனிஸ மொழிபெயர்ப்புகள்

தரமானவையாக இருக்கின்றன என்றும், அமெரிக்க மொழிபெயர்ப்புகள் நல்ல நூல்களையும் குட்டிச் சுவராக்கிவிடுகின்றன என்றும், இருதரப்புப் பற்றியும் பொதுவாகச் சொல்லலாம். தென்னிந்திய மொழிகள் புஸ்தக டிரஸ்டின் திட்டம் பெரிசுதான். ஆனால் நிறைவேற்றப்படுகிற விதம் நன்றாக இல்லை. சாகித்திய அக்காதெமி மொழிபெயர்ப்புகள் இன்னும் (1959) தமிழ் இலக்கியத்தின் போக்கைப் பாதிக்கிற அளவில் ஏற்படவில்லை.

உண்மையிலேயே இலக்கியம் என்கிற பெயருக்கேற்ற பகுதியை இவ்வளவும் சொன்னபிறகு அணுகலாம். முதலிலேயே ஒரு விஷயம் சொல்லி விடுகிறேன். இன்று (1959) சிறு பத்திரிகைகள் இலக்கியத் தரமானவை என்று சொல்லக் கூடியவையாக எதுவுமே இல்லை. கோஷ்டியாகச் செயல்படுகிற ஆசிரியர்களும் இல்லை. கனமான இலக்கிய ஆசிரியர்களும் கூடப் பொது ஜனங்களிடம் தங்கள் பெயர்களை அறிமுகப்படுத்துவதற்கு இந்தப் பத்திரிகைகளையே தான் நம்பியிருக்க வேண்டியதாக இருக்கிறது – வேறு விதமாக பொது ஜனத்தின் (சிறு பகுதியைக் கூட) கவனத்தைக் கவர சாதனம் எதுவும் இல்லை. பலதரப்பட்ட வழிகளில் ஓரளவு கௌரதைக் குறைவான வழிகளில் கூட, பத்திரிகைகளில் தங்கள் பெயர்கள் வந்தாக வேண்டுமே என்பதற்காக நல்ல இலக்கியாசிரியர்களும்கூடக் கஷ்டப்பட்டு, கட்டுப்படுத்திக்கொண்டு எழுத வேண்டியதாக இருந்திருக்கிறது. எழுதுவதை இலக்கியமாகக் கவனிக்க மறுக்கிற, அலட்சிய புத்தியுள்ள ஜனங்களின் கவனத்தைக் கவர வேண்டியதாக இருந்திருக்கிறது. பொழுது போக்காக மட்டுமே படிப்பதில் சிரத்தை உள்ள வாசகர்கள் கேட்பதைத் தர மறுத்தும் அவர்கள் அங்கீகாரத்தைப் பெற வேண்டியதாக இருந்திருக்கிறது. தனி மனுஷ்யத்துவத்துடன் எழுதுவது என்கிற ஒரு காரியமே நடைபெற்று வருகிறது. தனிமனிதனின் தனித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கான விசேஷங்களே தமிழில் சிறந்த இலக்கியத்தின் அம்சமாக இருக்கிறது. சமூகத்தில் சமுதாயப் போக்குக்குட்பட்ட மனிதனாகவும், உருவுள்ளவனைப் பற்றியே இந்த ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். தனது சிறு கதைகளில் ல. சா. ராமாமிருதமும், தனது நாவலில் (மோஹமுள்) தி. ஜானகிராமனும் ஒரு புதிய சமுதாயச் சூழ்நிலையில் தனிமனிதனின் பலத்தையும் பலமின்மையும் வர்ணிப்பதிலேயே தங்கள் திறமையைக் காட்டுகின்றனர் என்று உதாரணமாகச் சொல்லலாம்.

'இதயநாதம்' என்று சிதம்பர சுப்ரமணியம் எழுதியுள்ள நாவலில் ஓர் இசைமேதை தனது ஆன்ம கௌரவத்தையும் சுதந்திரத்தையும் புற உலகு உண்டாக்கும் இடைஞ்சல்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முயலுகிறார். க. நா. சுப்ரமண்யத்தின் 'ஒருநாள்' என்கிற நாவலில் உலகம் பூராவும் சுற்றி வந்தவனைச் சந்திக்கிறோம். ஆனால் அவன் தன் கிராமத்தில் ஒருநாள் வந்திருக்கும்போது அங்கு மாமா மாமி வாழும் வாழ்வு தனிமனுஷ்ய அளவில் அர்த்தமுள்ளதாக இருப்பதை உணருகிறான். பதினைந்து ஆண்டு மௌனத்துக்குப் பிறகு ந. பிச்சமூர்த்தி சமீப வருஷங்களில் எழுதிய சிறுகதைகளில் தினசரி வாழ்வு என்கிற அதிசயத்தை தனிமனிதன் எப்படிச் சாதிக்கிறான் என்பதைக் கலை அழகுடன் விவரிக்கிறார். அதிசயங்கள் நிகழ்ந்த பின் தான் அவை உணர்ச்சியிலே தைக்கின்றன என்பது விசேஷம். 'மோஹமுள்' என்கிற தன் நாவலிலே தி. ஜானகிராமன் நம்பிக்கையிழந்தது போன்ற காதலன் ஒருவன் கிட்டாததை அடைவதை விவரிக்கிறார். அதை விடத் திருப்தி தரக் கூடிய ஒரு கலை வாழ்வையும் பயிற்சியையும் எதிர்மாறாக கூறி அழைக்கவைக்கிறார். கு. அழகிரிசாமியின் கதைகளிலே சாதாரணத் தனிமனிதர்கள் எவ்விதத்திலும் விசேஷமற்ற ஒரு சமுதாயச் சூழலிலே விவரிக்கப்படுகிறார்கள். தி. ஜானகிராமனின் சிறுகதைகளிலே தனிமனிதனின் வக்கிரங்கள் கலையாக மாறுகின்றன; தியாகத்திலே அந்த வக்கிரங்கள் கரைவதைக் காண்கிறோம். ல. சா. ராமாமிருதத்தின் கதைகளிலே மனிதன் தனது தனித்துவத்தைக் காப்பாற்ற போராடுவது விவரிக்கப்படுகிறது. நோயுற்ற தனித்துவம் என்று கூறுகிற அளவுக்கு இத்தனித்துவம் உருவாகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு சில இலக்கியாசிரியர்களின் பெயர்களையும் நூல்களையும் குறிப்பிட்டு எழுதியுள்ளேன் என்பதனால் மற்றவர்களில் சிலராவது நன்றாக எழுதவில்லை, எதுவுமே எழுதவில்லை என்று ஏற்படாது. நிமிர்ந்து உயரமாக நிற்பவர்கள் என்று சமீப காலத்தில் எழுதுபவர்களில் என் கண்ணில் படுபவர்கள் இவர்களே. வேறு கண்களுக்கு, வேறு அளவுகோல்களால் அளந்து பெரியவர்களாகக் கணிக்கக் கூடியவர்கள் வேறு சிலர் இருக்கலாம்.

இலக்கியச் சூழ்நிலையே ஓரளவுக்குப் பொதுவாக உள்ள விமர்சன எதிர்ப்பினால் வீணாகிக் கொண்டிருக்கிறது, என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இலக்கியத்தரம் அளவுகோல்கள் இவற்றைப் பற்றியே பொதுவாக பலரும் சிந்திக்க மறுக்கிறார்கள். ஓரளவுக்கு சிறப்பாக இலக்கியாசிரியர்களாகவே கருதப்பட வேண்டிய க. நா. சுப்ரமண்யம், சி. சு. செல்லப்பா, சிதம்பர ரகுநாதன் போன்றவர்கள் இலக்கிய விமரிசனம் செய்ய முன் வந்திருப்பதே விமர்சனத்தின் அவசியத்தை உணர்ந்து தான் என்று சொல்ல வேண்டும். கம்பன் காலத்துக்கும் பிந்திய சில கவிதை நூல்கள் பற்றி கு. அழகிரிசாமி சிறப்பாகவே அளவு கோல்கள் தரம் பிரித்துக் காண்பது எல்லாவற்றையும் செய்திருக்கிறார். தமிழில் புது விமரிசன நோக்குக்கு ஒரு வேகம் தந்தவர் என்று காலஞ்சென்ற டி. கே. சி. அவர்களையும் காலஞ்சென்ற வையாபுரிப் பிள்ளையவர்களையும் சொல்ல வேண்டும். மேலை நாட்டு வழிகளில் விமரிசனம் செய்வது என்பது தமிழிலக்கியத்திலும் உரைக்கத் தொடங்கியிருக்கிறது. அது என்ன பயன் எப்படித் தரும் என்பது பின்னர்தான் நிச்சயமாக வேண்டும். தமிழர்களின் பழைய இலக்கியங்கள் பற்றியும் கூட இலக்கியத் தரமான அளவு கோல்கள்

இனிமேல் தான் உபயோகப்படுத்தப்பட வேண்டும். அவை பற்றித் தர நிர்ணயம் சிறிதும் செய்யப்படவேயில்லை. மரபு பிசகாத அளவில் பழசு பற்றி விமர்சனமோ (அல்லது விமர்சனம் போன்ற ஏதோ ஒன்று) செய்பவர்கள் என்று இந்த வரிசையில் பி. ஹ. ஆசார்யா, மு. வரதராசன், டி. பி. மீனாட்சி சுந்தரனார், கி. வா. ஜகந்நாதன் முதலியவர்களைச் சொல்லலாம். அ. ச. ஞானசம்பந்தத்தின் இலக்கிய விமர்சன முறை பாட புஸ்தக வகையைச் சேர்ந்தது. அதில் ஒரு பகுதி ஆங்கில மரபு வழியும் வந்ததாகும். தமிழ் விமர்சனம் உருவாக இன்னும் வெகுதூரம் நடக்க வேண்டும்.

நாடகம், கட்டுரை, சிந்தனை முதலிய துறைகளிலும் தமிழில் சுறு சுறுப்பு காணப்படுகிறது. எனினும் அதெல்லாம் இன்னும் இலக்கியத் தரத்தை எட்டவில்லை. இரண்டாயிரம் வருஷத்துக் கனம் இன்று கவிதையை அமுக்குகிறது தமிழில். புதுவேகம், புதுஉருவம், புதுப் பார்வை எதுவும் தோன்றவில்லை. கவிசுப்ரமணிய பாரதியாருக்குப் பின் பெரிய கவி என்று சொல்ல யாரும் இல்லை. தமிழ் நாடக மேடையிலே பழமைக்குத்தான் செல்வாக்கு அதிகம் இருக்கிறது. புதுசு என்று சொல்லப்படுவதும் பழமையின் ஒரு அம்சமாகக் காணப் படுகிறது. தமிழ் சினிமாவுடன் போட்டியிடவே அது முயலுகிறது. ரேடியோ சப்தம் போடுவதைத் தவிர வேறு எதுவும் உருப்படியாக சாதிப்பதில்லை – தமிழ் பத்திரிகை உலகம் எழுகிற அளவு கூட எழும்புவதில்லை அது.

கதையில் – நீளக்கதை, நாவல், சிறுகதை முதலிய துறைகளில் சாதனை இருக்கிறது. தமிழில் போதுமான அளவுக்கு நம்பிக்கை எழுப்பக் கூடிய சாதனை இருக்கிறது. கெட்டிக்காரத்தனமாக ஒதுங்கி நின்று – தன்னை வெறுக்கிற சமுதாயத்தை விட்டு ஒதுங்கியே நின்று உண்மை இலக்கியாசிரியன் தனது முயற்சிகளைச் செய்து கொண்டி ருக்கிறான். மௌனமாக, வாசகர் கவனத்தையும் கவர விரும்பாமல் திருட்டுத்தனமாக என்று கூட சொல்லலாம் – எழுதி சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறான். தனிமனிதனாக அவன் கௌரவப்படுகிறான். எழுதிவிட்டானானால் வாசகர்களில் ஒரு சிலரை எட்டுவதும் – பெரிய விஷயமாக இல்லை. வேறு என்ன வேண்டும் ஒரு நல்ல உண்மையான இலக்கியாசிரியருக்கு!



# இலக்கியத்தில் கருத்தும் உருவமும் – ஒரு சம்பாஷணை

ராஜா : வா, மணி வா.

மணி : நீ இப்படி வா. மணி வா என்று ஆரம்பித்தாலே எனக்குப் பயமாக இருக்கிறது. ஏதாவது இலக்கிய விவகாரத்தில் இறங்கி ஒரு இரண்டு மணி நேரத்தைப் போக்கிடுவாய்.

ராஜா : அதில் என்ன தவறு? பொழுது நல்ல பொழுதாய்ப் போனால் சரிதானே!

மணி : இலக்கியத்தைப் பற்றி பேசுகிற பொழுது நல்ல பொழுது என்று தான் எனக்கும் தோன்றுகிறது. இருந்தாலும் இப்படி இலக்கியப் பேச்சு பேசிக் கொண்டிருப்பதால் தினசரி நடைமுறைக் காரியங்கள் கெட்டு விடுகின்றன.

ராஜா : கெடட்டும், கெடட்டும், தினசரி நடைமுறைக் காரியங் களை சிலமணி நேரம் மறந்து விட்டுத்தான் இலக்கிய விசாரம் செய்வோமே. காரியங்கள் அப்புறம் எப்படியும் இருக்கவே இருக்கின்றன. இரண்டு மணி நேரம் தள்ளிப் போட்டதால் ஒன்றும் நஷ்டம் வந்து விடாது என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

மணி : அப்படி நினைப்பவர்கள் மிகவும் குறைவு. இலக்கிய விஷயத்தை தான் ஒத்திப் போட்டுக் கொள்ளலாமே என்று . . .

ராஜா : ஆயுள் பூராவும் ஒத்திப் போட்டு விடுபவர்கள் தான் இன்று நம்மிடையே அதிகம். ஆட்டு மந்தையில் ஓர் ஆடாக இராமல் சற்று விலகி நிற்கத்தான் பார்க்கலாமே.

மணி : சரி, உன்னிடம் வந்து நான் மாட்டிக் கொண்டாகிவிட் டது. தப்ப முடியாது. சொல்லு. எதைப் பற்றிப் பேசி என்னைத் திணற அடிப்பதாக உனக்கு உத்தேசம்?

ராஜா : இலக்கியத்திலே கருத்து, உருவம் என்று இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. கருத்து முக்கியமா? உருவம்

முக்கியமா? என்பது பற்றி எல்லாக் கோணங்களிலும் நின்று நோக்கிப் பார்ப்போமே.

மணி : கருத்து, உருவம் இரண்டுமே முக்கியம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : விவாதம் என்பதற்கே இடமில்லாமல் செய்து விட ஆரம்பத்திலேயே முயலுகிறாய் நீ. இரண்டும் முக்கியம தான். ஆனால் இலக்கிய விசாரகன் ஒரு நோக்கிலிருந்து பார்க்கப் போனால் உருவம் முக்கியமாகத் தோன்றுகிறது. வேறு ஒரு நோக்கிலிருந்து பார்க்கும் போது கருத்துத்தான் முக்கியம் என்று தோன்றுகிறது.

மணி : நான் எனக்குத் தெரிவதைச் சொல்லுகிறேன். ஒரு நல்ல நூலைப் படிக்கும்போது அதன் உருவத்தையோ அதன் கருத்தையோ பற்றிக் கவலைப்படாமல் அது தந்த ரசனை யையும், கலை அனுபவத்தையும் நுகர முயலுகிறேன் என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : அப்படியானால் அந்த நூலுக்கு கருத்துச் சிறப்போ, உருவச் சிறப்போ இல்லை என்று ஏற்பட்டு விடுமா என்ன? உருவச் சிறப்பும் இருக்கலாம். கருத்துச் சிறப்பும் இருக்கலாம். இரண்டுக்கும் மேலான ஒரு கலைச் சிறப்பு – மனுஷ்யச் சிறப்பும் இருக்கலாம்.

மணி : அதனால் . . .

ராஜா : எல்லாமாகச் சேர்ந்தேதான் அந்த நூலில் நமக்கு – அதாவது நல்ல வாசகனுக்கு ஓர் ஈடுபாட்டையும் அனுபவத்தையும் தருகின்றன.

மணி : நான் நல்ல வாசகனோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னால் சில நூல்களை விட வேறு சில நூல் களை நன்றாக அனுபவிக்க முடிகிறது.

ராஜா : இப்படி ஒன்றை விட மற்றொன்றைச் சிறப்பாக அனுபவிப் பதற்குக் காரணம், நூலின் கருத்தா, உருவமா என்று கேட்டால், என்ன பதில் சொல்ல முடியும்?

மணி : திட்டவட்டமாக ஒரு பதிலும் தர முடியாது என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : முடிவாக அந்த முடிவுக்கே நாமும் வரலாம்தான். ஆனால் கருத்து, உருவம் என்றால் என்ன என்று சற்று விசாரித்துப் பார்க்கலாமா?

மணி : உருவம் என்பது பற்றி விசாரிக்க, விவாதிக்க அநேகமாக இடம் இராது.

ராஜா : ஏன்?



மணி : இலக்கியத்தில் ஒரு குறிப்பிட்ட நூல், சிருஷ்டி, அதன் எந்த உருவப் பகுதியைச் சேர்ந்தது என்று அநேகமாக தெளிவாகவே தெரிந்துவிடுமே. கதை, கவிதை, நாடகம், நாவல், கட்டுரை, தத்துவ வியாசம், இலக்கிய விமர்சனம் என்று திடமான உருவங்கள் உண்டல்லவா?

ராஜா : உண்டு தான். இருந்தாலும் இதிலே கூட ஒரு மயக்கமும் குழப்பமும் இருக்கலாமே.

மணி : அதாவது.

ராஜா : நீ ரவீந்திரநாததாகூர் எழுதிய குமுதினி என்கிற நாவலைப் பார்த்திருக்கிறாயா?

மணி : படித்திருக்கிறேன். அது பற்றி நீ என்ன சொல்லப் போகி றாய் என்பதும் எனக்குத் தெரிகிறது. நானே பலர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். அது நாவல் என்று உருவ வகையில் இடம் பெற்றிருந்தாலும் உண்மையில் அது ஒரு நீண்ட சிறுகதை தான் என்று பலர் சொல்லக் கேட்டிருக் கிறேன்.

ராஜா : உருவ மயக்கம் தானே அது? அதே போல பி.எஸ். ராமையா எழுதிய கதைகளில் பலவற்றை, சிறுகதை என்று பெயர் சொல்வதைவிட நாவல்களின் சுருக்கங்கள் என்று ஒரு நண்பர் சொல்லுவாரே அடிக்கடி – அதுவும் உனக்கு நினை வில் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

மணி : ஆமாம்! இருக்கிறது. அதுவும் உருவ மயக்கம் தான் என்கிறாயா?

ராஜா : அது மட்டுமில்லை. கதைகளிலேயே பலவிதமான ரகங்கள், உருவங்கள் சொல்லலாமே! சிறுகதை என்பது சமீப காலத்தில் ஏற்பட்ட ஓர் இலக்கிய உருவம். அதற்கு முன்பும் கதைகள் சொல்லும் பழக்கம் உண்டு தானே? நாய்க் கதைகள், நரிக் கதைகள், ஓநாய்க் கதைகள், தேவதைக் கதைகள், புராணக் கதைகள், பாம்புக் கதைகள், நீதிக் கதைகள், அமானுஷ்யக் கதைகள் என்று எத்தனையோ? சமீப காலத்தில் பத்திரிகைக் கதை என்று ஒரு தனி உரு வமே இலக்கியத்தில் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல லாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

மணி : பத்திரிகைக் கதைகள் என்றால் வெறும் பொழுது போக்குக் கதைகள் என்று சொல்லலாமா?

ராஜா : அதை விட இன்றைய வாசகர்களை நினைவில் வைத்துக் கொண்டு, இன்றைய மக்கள் ரசனையை அனுசரித்து எழுதியகதைகள் என்று சொல்லலாம். அதிக கனமோ ஆழமோ காட்டாத கதைகள் அவை. இப்படியாக, கதை

களிலே இலக்கிய அந்தஸ்து பெற்ற சிறுகதைகள் முதல் நாளைய இலக்கிய வளத்தைச் சாத்தியமாக்குகிற சோதனைக் கதைகள் வரையில், குழந்தைக் கதைகள் முதல் பத்திரிகைக் கதைகள் வரை பல இலக்கிய உருவங்கள் சொல்லலாம், இல்லையா?

மணி : அதே போல கவிதையிலும் பல ரகரகமான உருவங்கள் சொல்லலாமே!

ராஜா : சொல்லலாம்தான். இத்தனை உருவங்கள் இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட இலக்கிய சிருஷ்டிக்கு இந்தக் குறிப்பிட்ட இலக்கிய உருவம் அமைந்தது ஏன்? எப்படி? வேறு இலக்கிய உருவம் அமைந்திருந்தால் என்ன ஆகும்? அது இதை விட நல்ல சிருஷ்டியாக இருந்திருக்குமா? மட்டமானதாக இருந்திருக்குமா? என்றெல்லாம் விசாரித்தறிய முயலுவது சுவாரசியமான விஷயமாக இருக்குமா இராதா?

மணி : இருக்கும். சுவாரசியமாக இருக்கும் என்று ஒப்புக் கொண்டாலும், விசாரித்து அப்படி ஒன்றும் திட்டமாக அறிந்து கொண்டு விட முடியாது என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : ஏன்?

மணி : சந்தர்ப்ப விசேஷந்தான். ஷேக்ஸ்பியர் என்பவர் தன் னுடைய சிருஷ்டிகளையெல்லாம் நாடகங்களாகவா நமக்குத் தந்தார்?

ராஜா : அந்த சந்தர்ப்பம், அந்த விசேஷம், அந்த ஷேக்ஸ்பியர் என்கிற கவியையோ, நாடகாசிரியரையோ எப்படி வந்த டைந்தது என்று விசாரித்து அறிந்து கொள்வதும், மாறுபட்ட சந்தர்ப்பங்களில் நாடகங்களுக்குப் பதில் ஷேக்ஸ்பியரே தன் சிருஷ்டிகளையெல்லாம் நாவல்களாக வெளியிட்டிருக்க மாட்டாரா என்றும் சிந்திப்பது இலக்கிய விசாரகனுடைய வேலைகளில் ஒன்று என்று எனக்குத் தோன்றுகிறது.

மணி : இதை எந்த நோக்கத்துடன் செய்கிறான் இலக்கிய விசாரகன்?

ராஜா : ஓர் இலக்கிய உருவத்திலே ஒரு குறிப்பிட்ட ஆசிரியனின் வளர்ச்சியை அளந்து காட்டவும், வேறு இலக்கிய உருவத்தை அவன் கையாண்டிருந்தால் இந்த வளர்ச்சியும் வளப்பமும் சாத்தியமாகியிராது என்று காட்டவும் இப்படிப்பட்ட இலக்கிய விசாரம் உதவும்.

மணி : உதவலாம். ஆனால் இந்த விசாரத்தை ஆசிரியனுடைய நோக்கிலிருந்து செய்வதா? வாசகனுடைய நோக்கிலிருந்து செய்வதா?



ராஜா : இரண்டு பேருடைய நோக்கிலிருந்தும் செய்வதுதான் நல்லது. பூரணமான ஓர் இலக்கிய விசாரணைச் சூழ் நிலையை நமக்கு ஏற்படுத்தித் தரும்.

மணி : ஒரு சிருஷ்டியில் உருவம், கருத்து என்கிற இரண்டு இலக்கிய அம்சங்கள் பற்றியுமே இரண்டு விதமான நோக்கிலிருந்தும் விமர்சனம் செய்து பார்க்கலாமே!

ராஜா : அதையேதான் செய்ய நினைத்தேன் நான்.

மணி : சொல்லு.

ராஜா : இந்த இரண்டு அம்சங்களையும் தனித்தனியாய்ப் பார்ப்பது டன், இந்த இரண்டு அம்சங்களுக்குமுள்ள தார தம்மியங் களையும் வித்தியாசங்களையும் ஒருமைப்பாட்டையும் உறவு முறைகளையும் கணித்துப் பார்ப்பது இலக்கிய விசார ரீதியிலே அவசியம் என்று தோன்றுகிறது.

மணி : ஆசிரியனுடைய நோக்கிலிருந்து முதலில் கவனிப்போம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தை சிருஷ்டிகர்த்தா, தனது இலக்கியப் படைப்பில் சிறு கதையாக, நாவலாக, நாடகமாக அல்லது சிறுகவிதையாக் ஏன் எழுதுகிறான்? வேறு எந்த உருவத் திலாவது அவன் அமைத்துத் தருவதில் தவறு என்ன? ஒரு குறிப்பிட்ட விஷயம் ஒரு குறிப்பிட்ட உருவத்தில் தான் சிருஷ்டியாக வேண்டும் என்கிற அவசியம் என்ன?

ராஜா : அந்த அவசியத்தை விசாரிக்க நாம் புகும் போது ஓரளவு சிருஷ்டி ரகசியத்தையே அறிய, கணிக்க முயலுகிறோம் இல்லையா?

மணி : கிரேக்க நாடகாசிரியர்கள் தங்கள் நாடகங்களை அந்த உருவத்தில் தான் எழுதி இருக்க வேண்டும் – வேறு இலக்கிய உருவம் தந்திருக்க முடியாது அவற்றிற்கு, என்று தெளி வாகவே நமக்கும் இன்று தெரிகிற மாதிரி இருக்கிறது.

ராஜா : எப்படி? ஏன்? என்று சொல்லு.

மணி : உருவமும் வடிவமும் அவற்றில் அப்படி அமைந்திருப்ப தினால் ஒரு தவிர்க்க முடியாத இலக்கியத் தன்மை ஏற் படுகிற மாதிரி நமக்குத் தோன்றுகிறது என்று நான் சொல்லு வேன். ஸோபாக்ளிஸின் நாடகங்கள் வேறு எந்த இலக்கிய உருவத்தில் வெளியாகி இருந்தாலும் இந்தப் பூரணத்வம், இந்த அமைதிச் சிறப்பு பெற்றிருக்க முடியாது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

ராஜா : கிரேக்க நாடகாசிரியர்களின் தனி இலக்கியச் சிறப்பாகவே நாம் அதைச் சொல்லலாம் இல்லையா?

மணி : சொல்லலாம் என்றுதான் தோன்றுகிறது. அதே போல இலக்கிய அமைதி காண்கிற நூல்கள் – அதாவது உருவமும் கருத்தும் தவிர்க்க முடியாதனவாக உள்ளன என்று

பண்டைய இலக்கியாசிரியர்களில் பலரையும் சொல்ல லாமே!

ராஜா : சொல்லு.

மணி : ஹோமரின் காவியங்களான இலியாதும் ஓடிஸ்ஸியும் வேறு எந்த இலக்கிய உருவத்திலும் இந்தச் சிறப்பு பெற்றிருக்க முடியாது. அதே போல வால்மீகியின் ராமாயண காவிய மும் வடிவமும், கருத்தும் அமைந்தது என்று தான் சொல்ல வேண்டும் – அல்லவா?

ராஜா : நான் ஒப்புக் கொள்கிறேன். நீ தொடர்ந்து உன் கருத்தைப் பின்பற்றி சமீபகாலம் வரையில் வா, பார்க்கலாம்.

மணி : சாக்ரடீஸின் சம்பாஷணைகளும், புத்தரின் பிரசங்கங்களும், ஏசுவின் தருமோபதேசக் கதைகளும், குருசிங்கின் உபதேசங்களும் இலக்கிய பூர்வமாகக் கவனித்தால் அவற்றிற் குரிய, அமைந்த, பூரணமான இன்றும் திருப்தி தருகிற உருவத்தில் அமைந்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : சரியாகச் சொல்லிவிட்டாய், என் அபிப்பிராயமும் அதுவே தான் என்று சொல்ல வேண்டும். இவர்கள் எல்லோரும் இலக்கியத்துக்கும் அப்பாற்பட்ட எல்லா அமைதிகளும் பொருந்திய மகான்கள் என்று கூற வேண்டும். ஆனால் ஷேக்ஸ்பியர், மொலியேர், இப்ஸன் இவர்களுடைய நாடகங் களையும், இளங்கோ, கம்பன் மில்டன், வர்ஜின் இவர் களுடைய காவியங்களையும் மாண்டேன், லாம்ப் முதலிய வர்களுடைய கட்டுரைகளையும், மோபஸான், போ, செக் காவ், ஓஹென்ரி முதலியவர்களுடைய சிறு கதைகளையும் பற்றிச் சொல்லும்போது எப்படிச் சொல்வது? என்ன சொல் வது என்று தோன்றுகிறது உனக்கு?

மணி : இலக்கியத்தில் பெரிய பெரிய பெயர்களைச் சொல்லி விட்டு அவர்களைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன என்று கேட்டு என்ன லாபம்? என் அபிப்பிராயம் அவர்களைப் பற்றி என்னவானால் என்ன?

ராஜா : அதுதான் இலக்கியத்தில் தவறான எண்ணம் என்று எண்ணுகிறேன் நான். என் அபிப்பிராயம் என்னவானால் என்ன என்று எண்ணுவது தவறு. வர்ஜிலோ, மில்டனோ, கம்பனோ எவ்வளவுதான் பெரிய கவியானாலும் ஏதாவது ஒரு காரணத்திலாவது எவ்வளவு முயற்சி செய்தும் என்னால் அவர்களை அனுபவிக்க முடியவில்லை என்றால் அவர்கள் கவிகளாக என்னைப் பற்றிய வரையில் உபயோகமற்றவர்கள், நல்ல கவிகளேயல்ல என்று முடிவு கட்டி விடுவதுதான் சரியான அபிப்பிராயம்.



மணி : அதாவது என் அனுபவம் ஒன்றுதான் இலக்கிய விசாரத்தில் முடிவான அளவுகோலாக இருக்க முடியும் என்கிறாயா?

ராஜா : ஆமாம். ஏனென்றால் இலக்கிய அனுபவமும் ரசனையும் தனித்தனி மனிதர்களுடைய சொந்த அனுபவம் தான். எந்த இலக்கிய சிருஷ்டியுமே அனுபவிக்கிறதற்காகத் தான் இருக் கிறதே தவிர, வைத்துப் பூட்டிப் படித்து ஆனந்திக்காமல் பூசிப்பதற்கல்ல.

மணி : என் அபிப்பிராயம் முக்கியமானது என்கிறாய் நீ.

ராஜா : உன்னைப் பற்றிய வரையில் அதுதான் முக்கியமானது என்று சொல்வதில் தவறே இல்லையே! இலக்கியம் என்பது பிறப் பதே, உருவெடுப்பதே தனி மனிதனின் இதய பூர்வமான அனுபவத்தினால் தானே! ஒரு நூலை ஊரார் எல்லோரும் கூடிப் புகழ்ந்தாலும் கூடி அதற்கிசைய என் ரஸானுபவம் மீட்டப்பட்டு லயிக்கவில்லை என்றால் அந்நூலால் எனக்கு என்ன லாபம்? '

மணி : வேதாந்தத்தில் நான்தான் ஆதாரம். அந்த நான் அகலவும் நானிலேதான் விசாரத்தைத் தொடங்க வேண்டும் என்று சொல்வார்கள். அதுபோல நீ சொல்லுகிறாய், இல்லையா?

ராஜா : ஆமாம். அது சரியான உதாரணமேயாகும். வேதாந்தத்தில் ஒவ்வொருவனும் எல்லாவற்றிற்கும் சாக்ஷுபூதமாக நிற்கிறான். தெரிந்தோ தெரியாமலோ சாட்சியாக இருக் கிறான் என்றும் சொல்வதுண்டு. இலக்கிய விசாரக் கண் ணோட்டமும், ரச அனுபவக் கண்ணோட்டமும் அந்த சாட்சியான கண்ணோட்டம் தான் என்று நான் சில சமயம் நினைப்பதுண்டு. அந்த விசாரத்தில் இப்போது இறங்க வேண்டாம். சற்று மேலெழுந்த வாரியாகவே, நம் படிப்புக்கு எட்டுகிற அளவில், இலக்கியத்தில் உருவத்தைப் பற்றி விசாரித்துப் பார்ப்போம் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் ...

மணி : அந்தச் சூழ்நிலையில் அந்த ஆசிரியர்களின் கையில் வேறு ஒரு இலக்கிய உருவமும் பெற்றிருக்க முடியாது என்று தான் சாதாரணமாக எல்லோருக்கும் தோன்றுகிற விஷயம்.

ராஜா : சபாஷ்! ஹாம்லெட் என்கிற நாடகத்துக்கு ஷேக்ஸ்பியர் என்கிற கவி தந்த நாடக உருவம் தவிர்க்க முடியாது – தப்ப முடியாது – நித்தியமானது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது இல்லையா? புயல் என்கிற நாடகத்துக்கும் அது பொருந்தும். காலிபான் என்கிற உருவமும் ஏரியல் என்கிற உருவமும் பொருத்தமானதென்றே நாம் உணர்கிறோம். பிராஸ்பிரோ பற்றியோ சொல்ல வேண்டிய தில்லை. அந்த அற்புதமான உருவ அமைதியை நோக்கும் போது மந்திரக்கோலை மறைத்து வைத்துவிட்டு ஓய்வு

எடுத்துக் கொள்ளும் ஷேக்ஸ்பியர் என்கிற நாடகாசிரியனையே நமக்கு நினைவூட்டுகிற அளவுக்கு அது அமைதி பெற்றுவிட்டது. ராஜா லியர், மாக்பெத், நாலாம் ஹென்றி முதலிய நாடகங்களிலும், வேனீஸ் வர்த்தகன் போன்றவற்றிலும் கூட இலக்கிய உருவ அமைதியை நாம் ஏற்றுக் கொண்டு விடலாம் தான். ஆனால் எல்லா ஷேக்ஸ்பியர் நாடகங்களுமே உருவ அமைதி பெற்றவையாகச் சொல்ல முடியுமா என்று கேட்டால் . . .

மணி : முக்கியமாக ரோமியோவும் ஜுலியட்டும் என்கிற நாடகத்தை ஷேக்ஸ்பியர் காவியமாக எழுதியிருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் எண்ணியதுண்டு. ஆனால் அதைப் பைத்தியக்கார யோசனை என்று ஒதுக்கி வைக்க முயன்று வந்திருக்கிறேன் என்று சொல்லலாம்.

ராஜா : ஷேக்ஸ்பியரைப் பற்றி அப்படி எண்ணுவது பைத்தியக்கார யோசனை என்று சொன்னாலும் கூட, ரோமியோவும் ஜுலியட்டும் என்கிற நாடகம் உன்னைப் பற்றிய வரையில் இலக்கிய உருவமாக அமைதி காணவில்லை. பெறவில்லை. திருப்தி தரவில்லை என்றுதானே சொல்ல வேண்டும்? இல்லையா? யோசித்துப் பார்.

மணி : ஷேக்ஸ்பியரின் கவித்வம் சிறப்புற்றுக் காணப்படும் ஸான்னெட்டுகளை (14 வரிக் கவிதைகளைப் படிக்கும் போது அவர் ரோமியோ – ஜுலியட் கதையையும் ஐந்தாவது ஹென்றிக் கதையையும்) காவியமாகச் செய்திருந்தால் மிகச் சிறப்பாகவே இருந்திருக்கலாம் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?

மணி : ஷேக்ஸ்பியரைப் பற்றி இவ்வாறெல்லாம் சிந்தித்து என்ன லாபம்? ஷேக்ஸ்பியரைப் பற்றிய வரையில் கிடைத்த உருவத்தில் இவ்வளவாவது கிடைத்திருக்கிறதே என்று படித்து ஆனந்திக்க வேண்டியதைத் தவிர நாம் செய்யக் கூடியது வேறு என்ன?

ராஜா : அது உண்மைதான். என்றாலும் இலக்கிய விசாரத்தின் அடிப்படையே உருவத்தில் அமைதி தான்.

மணி : உருவ அமைதி இல்லாவிட்டால் . . .

ராஜா : எந்த நூலையுமே ரசிக்க இயலாது. உருவ அமைதி பெற்ற நூல்களையே விமர்சகர்களும் வாசகர்களும் ரசித்து வருகிறார்கள். இந்த ரச அனுபவம் எப்படிப்பட்டது என்று கர்ண முயல்வதுதான் இலக்கிய விசாரத்தின் முதல் நோக்கம்.

மணி : ரச அனுபவம் தவிர இலக்கியத்தைப் பற்றிய வரையில் வேறு எதுவுமே எனக்கு முக்கியமாகத் தோன்றவில்லை.



ராஜா : ரச அனுபவம்தான் முக்கியம். ஆனால் அதைப் படித்துப் பார்த்து எப்படி ஏற்பட்டது. எதனால் என்றெல்லாம் கண்டு கொள்வதிலும் ஒரு இலக்கிய ரச அனுபவம் இருக்கிறது என்று சொல்லத்தானே வேண்டும்? இலக்கிய விசாரமும் இந்த இடத்தில் சிருஷ்டி இலக்கிய ரச அனுபவமாக மாறி விடக்கூடும். ஆகவேதான், இலக்கிய விமர்சனத்தையும், விசாரத்தையும் கூட ஒரு கலையாக, சிருஷ்டி இலக்கியத்தில் ஒரு பகுதியாக நாம் மதிக்கிறோம். அப்படி மாறவில்லை என்பது உண்மையானாலும் மாறலாம் என்பதும் உண்மை.

மணி : இருந்தாலும் ஷேக்ஸ்பியர் என்கிற சிறந்த கவி, சிறந்த நாடகாசிரியர் ரோமியோவும் ஜுலியட்டும் என்கிற கருத்தை நமக்கு நாடகமாக்கித் தந்தார். அதை அவர் காவியமாக்கியிருந்தால்? என்று விசாரிப்பதில் லாபம் என்ன என்று தான் எனக்குப் புரியவில்லை.

ராஜா : ஷேக்ஸ்பியர் விஷயத்தில் இந்த விசாரணை அவசியம் இல்லைதான். ஆனால் இதை ஷேக்ஸ்பியரை மையமாக வைத்து அறிந்து கொள்வதால், நமக்கு இன்றைய இலக்கியாசிரியர்களின் போக்கும், இலக்கியத்தைப் பற்றிய ஓர் அடிப்படை அறிவும் ஏற்படுகின்றன என்று சொல்லலாம் இல்லையா? அந்த அளவில் இலக்கிய லாபம் உண்டு தானே?

மணி : லாபம் உண்டு என்று ஏற்றுக் கொண்டாலும் கூட . . .

ராஜா : உன் தயக்கம் எனக்கும் தெரிகிறது. இதை நீ வியர்த்தமான விசாரம் என்று எண்ணுகிறாய். பலரும் உன் கட்சியிலேதான் இருப்பார்கள் என்பதும் உண்மைதான். ஆனாலும் இலக்கிய சிருஷ்டி பற்றி எவ்வளவுக்கெவ்வளவு நாம் அறிந்து கொள்ள முடிகிறதோ அவ்வளவுக்கு நல்லது. இலக்கிய சிருஷ்டியை அனுபவித்து ரசிப்பதில் இந்த அடிப்படை அறிவு நமக்கு உபயோகப்படும். அதையே, அதாவது இந்த விசாரணையையே, ஒரு கலை அனுபவமாகவும் நாம் கொள்ளலாம். இதற்கு வேறு பயன் இல்லாவிட்டாலும் கூட, இதற்கு அவசியம் கலை அனுபவம் என்பதனால் ஏற்படுகிறது என்றே நான் சொல்லுவேன்.

மணி : கருத்தும் உருவமும் பற்றி விசாரித்தே தீர வேண்டும் என்கிறாய் நீ.

ராஜா : சற்று யோசித்துப் பார். இலக்கியாசிரியன் என்பவன் காலத்தினாலும் தான் பிறந்த சமூகத்தினாலும் கட்டுண்டவன். அவன் கருத்துக்களில் பெரும்பாலானவை அவன் காலத்துக்குரியவை. அவன் பிறப்பு வளர்ப்பு படிப்பு முதலியன அவனுடைய கருத்துக்களைச் சமைக்கின்றன. இந்தக்

கருத்துக்களை அவன் எப்படியோ கையாண்டு ஒரு நூலை, ஒரு கதையையோ, கவிதையையோ நாடகத்தையோ சிருஷ்டித்துத் தருகிறான். ஆனால் அவன் காலத்தையும் சூழ்நிலையையும் அறிவுத்தரத்தையும் மீறி இலக்கியமாக இன்றைய மனிதனுக்கும் இனிக்கும் இன்ப அனுபவமாக அவன் சிருஷ்டி நிலைத்து நிற்கிறது. வருகிற தலைமுறைகளுக்கும் அது நிற்கும். எப்படிச் சாத்தியமாயிற்று என்பதை நாம் அறிந்து கொள்ள முயல வேண்டாமா? அறிவு என்று அதைச் சொல்வதோடு கலைப் பிரக்ஞை என்றும் ஏற்றுக் கொண்டால், அந்த விசாரப் பகுதியும் நமக்கு இனிக்கத் தொடங்கி விடும் – ரச அனுபவமாகி விடும்.

மணி : அனுபவம் இருக்க, சிருஷ்டி ரகசியத்தையும் காண முயல வேண்டும் என்கிறாய் நீ.

ராஜா : அனுபவம் பூர்த்தியாவது சிருஷ்டி ரகசியமும் தெரிந்த பிறகு தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

மணி : கருத்தில்லாமல் இலக்கியமில்லை. அந்தக் கருத்துக்களில் பெரும்பாலானவையும் அந்த ஆசிரியரின் காலத்துக்கே உரியவை. ஆனாலும் தரமான ஒரு சிருஷ்டியிலே அந்தக் கருத்து காலத்தை மீறித்தாண்டி நிலைத்து நிற்பது எப்படி, எதிர்த்து நிற்பதும் எப்படி என்று அறிவது அனுபவத்தின் ஆதாரமான வழி – படி – நியதி என்கிறாய் நீ.

ராஜா : ஆமாம். இலக்கியத்தில் ஒரு நிமிஷம் நித்தியமாவதைக் காண்கிறோம். ஒரு குறிப்பிட்ட நிமிஷம் எப்படி நித்தியமாகிறது என்று அறிந்து கொள்வது ஒரு நூலைப் பற்றிய வரையில் நமது ரச அனுபவம் ஆழ்ந்து பரிமளிக்க உதவும்.

மணி : நிமிஷத்துக் கருத்து, நிமிஷத்து உருவமாகி . . .

ராஜா : நிமிஷத்துக் கருத்து என்பதை ஒப்புக் கொள்ளுவேன் நான். ஆனால் நிமிஷத்து உருவம் என்று சொல்வது பொருந்தாது என்றே எண்ணுகிறேன். ஏனென்றால் இலக்கியத்தில் உருவம் ஒரு தரம் ஏற்பட்ட பின் – நித்தியமானதைத் தான் காட்டுகிறது.

மணி : உருவ அமைதி என்று தப்ப முடியாததால் நீ சொல்கிற இலக்கியத் தத்துவம் இந்த நிமிஷம் நித்தியமாகிறதை வைத்துத் தான் என்கிறாயா?

ராஜா : ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நாடகத்தில் உருவ அமைதி அமைந்து விட்டது என்பதும் அதனதன் அளவில் உண்மை. கருத்துக்கும் உருவத்துக்கும் உள்ள இசைவைப் பார்க்கச் சிறப்பாக இத்தாலிய மகாகவி டாண்டேயைப் பார்ப்பது ஒரு விஷயத்தில் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லலாம்.



மணி : டாண்டேயைப் பற்றி நீதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் எனக்கு டாண்டேயைப் பற்றி ஏதோ நிழல் போல லோசாகத்தான் தெரியுமே தவிர, அவ்வளவாகச் சிறப்பாகத் தெரியாது.

ராஜா : இன்றைய அறிஞர்களில் பலரும் அதே நிலைமையில் தான் இருக்கிறார்கள் என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏனென்றால் டாண்டேயைப் படிப்பதும் உதாரணமாக அறிவதும், அனுபவிப்பதும் இன்று சற்றுச் சிரமம். கருத்தால் முற்றிலும் வேறுபட்ட ஓர் உலகத்தை முழுவதும் ஏற்றுக் கொண்டு காவியம் அமைத்தவர் அவர். கிறிஸ்துவ தர்ம அறிவு அடிப்படையில், நல்லது தீயது ஆதாரத்தின் அன்றைய அறிவு பூராவுக்கும் வாரிசான டாண்டேயின் நூல், கருத்து அளவில் அக்காலத்துக்குச் சிறந்த பிரதிநிதியாக இருப்பது போல், எக்காலத்துக்கும் சிறப்பான கலையாகவும் உருவம் எடுத்திருக்கிறது என்பதை அதன் தனிச் சிறப்பாகச் சொல்லலாம். இலக்கியத்தில் கருத்து என்பதையும் உருவம் என்பதையும் அறிய விரும்புகிற இலக்கிய விசாரகன், டாண்டேயைச் சிறந்த உதாரணமாகப் படித்து அறிந்து கொள்ள முயற்சி செய்வதில் தவறில்லை என்றே சொல்லலாம்.

மணி : டாண்டே பூராவையும் உதாரணமாகக் கருதிப் பேசுவதில் சாரமில்லை. ஏதாவது ஒரு சிறு அம்சத்தைச் சுட்டிக்காட்டி அதை எப்படி நமது இலக்கிய விசாரத்துக்கும் பயன்படுத்திக் கொள்வது என்று சொன்னாயானால் நன்றாக இருக்கும் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருப்பேன் – அவ்வளவு தான் நான் செய்யக் கூடியது.

ராஜா : ஓரளவுக்குக் கடினமான விஷயம் டாண்டேயைப் பற்றிப் பேசுவதென்பது. அதற்குமுன் தமிழ்க் கவிகளில் கருத்தும் உருவமும் என்பது பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்கலாமே.

மணி : உன்னிஷ்டம் செய். நான் பட்டுக் கொள்ள விரும்பவில்லை.

ராஜா : இலக்கிய விமர்சனம் என்பது பற்றிய வரையில் தமிழ்நாட்டில் பலரும் இன்று உன்னைப் போலவேதான் இருக்கிறார்கள் – பட்டுக் கொள்ளாதிருக்க முயலுபவர்களாகத் தான் இருக்கிறார்கள். அதனால்தான் மட்டமான கவியையும் கவிதையையும் கூட ஐயோ பாவம் அவர் மனம் நோகக் கூடாதே. சிரமப்பட்டு எழுதியிருக்கிறாரே என்று அனுபவித்து, அல்லது அனுபவிக்க முயன்று வந்திருக்கிறார்கள் தலைமுறை தலைமுறையாகத் தமிழர்கள்.

மணி : நம்மிடையே மட்டமான கவிகள் அதிகம் பேர் உள்ளதற்கு காரணம், அவர்களிடம் தமிழ் வாசகர்களுக்கு உள்ள அனுதாபம் மட்டும் தான் என்று எனக்குத் தோன்றவில்லை.

ராஜா : பின் என்ன என்று காரணங் கண்டு நீ சொல்வாய்?

மணி : நல்ல பக்தி என்று எண்ணியே மட்டமான கவிகளைப் பலரும் மனனம் பண்ணிக் காப்பாற்றி விட்டார்கள்.

ராஜா : அதுவும் ஒரு காரணம் தான். அதிகமாக பக்தி வசப்பட்டு விட்டால், உணர்ச்சி வசப்பட்டு விட்டால் உருவம் மறந்து விடுகிறது. கருத்து கலைக்கு அப்பாற்பட்டதாகி விடுகிறது.

மணி : கவிதைக்கு பக்தி விஷயமாக இருக்கக் கூடாது என்கிறாயா நீ!

ராஜா : அப்படிச் சொல்ல நான் யார்? உலகத்தில் இன்று நிலைத்துள்ள கவிதைகளில் ஒரு பாதிக்கு மேல் பக்தியைப் பொருளாகக் கொண்ட கவிதை தான். இவற்றை இலக்கிய ரீதியில் மதிப்பிட ஆட்சேபங்கள் எழுந்து கொண்டே தான் இருக்கும்.

மணி : நான் கேட்ட ஒரு கதை – சமீபத்தில் நடந்த ஒரு கதை – சமீபத்தில் நடந்தது தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. கருத்தும் உருவமும் என்கிற விஷயத்திற்கு அது புறம்பானது என்றாலும் . . .

ராஜா : சொல்லு, புறம்பானதா அல்லவா என்று பிறகு பார்க்கலாம்.

மணி : சமீபத்தில் தற்காலக் கவிஞர் ஒருவரும் அவருடைய பணக்கார அன்பரும் – நான் மாற்றிச் சொல்லுகிறேன் என்று எண்ணுகிறேன் – பழனிக்குப் போனார்களாம். போன இடத்தில் கவிஞர் பழநி ஆண்டவர் சந்நிதியில் பணக்காரரைப் பற்றி காளமேகமாகக் கவிதையாக வருஷித்தாராம்.

ராஜா : பதிலுக்குப் பணக்காரர் பத்து ரூபாய் நூறு ரூபாய் நோட்டுகளாக வருஷித்திருப்பார். இது தலைமுறை தலைமுறையாகத் தமிழ்நாட்டில் மரபு பிறழாது நடந்து வந்திருக்கிற காரியம். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!

மணி : ஆச்சரியம் அதில்லை. முருகன் சந்நிதியில் முருகன் அருளால் கவிபொழிகிற கவிஞர், அதே கவிதைகளை, வேறு பெயருக்கேற்ப, வேறு சந்தர்ப்பத்திலும் பாடியிருக்கிறார் என்பது தான் விசேஷம்.

ராஜா : அதுவும் புதிசில்லை. முருகனுடைய வேல் துருப்பிடித்துப் போய் விட்டது என்று ஒரு நவீனக் கவிஞர் சொன்னார். அந்தத் தைரியமாக இருக்கலாம் இந்தக் கவிஞருக்கு.

மணி : அது மட்டுமல்ல எனக்கு எங்கோ படித்தது நினைவுக்கு வருகிறது. திருவல்லிக்கேணியின் சக்திவாய்ந்த பிள்ளையார் கோவிலுக்கு எதிரில் தான் நெய்க் கடைகள் பல இருக்கின்றன என்று எங்கோ படித்த ஞாபகம் வருகிறது.

ராஜா : பக்தி என்கிற விஷயத்திற்குப் பலர் நல்ல உருவமும் தந்திருக்கிறார்களே.



மணி : திருவாசகத்தையும், ஆழ்வார்களையும் . . .

ராஜா : அது எல்லாவற்றையும்விட அற்புதமான கவிதா உருவம் தந்தவர்கள் ஆண்டாளும் காரைக்காலம்மையாரும். இந்த அளவில் தமிழ் இலக்கியப் பரப்பில் வேறு காணக் கிடக்கிறதா என்பது சந்தேகம்தான்.

மணி : கம்பனுடைய ராமாயணத்தில் இது இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம் தான் அது. கம்பனின் சிறந்த பகுதிகளிலே விஷயமும் உருவமும் மிகவும் பொருத்தமாக, மாற்ற முடியாத அளவில் வந்து கலந்து விடுகின்றன. திருமூலரின் பல பாட்டுகளிலும் உலக அனுபவத்தைச் சிறப்பாக வைத்துப் பட்டினத்தார் பாடிய சில பாடல்களிலும் இந்த அமைதி தமிழில் காணப்படுகிறது. குரலை உயர்த்தாது, உணர்ச்சிகளுக்கு இடம் தராமல், இலக்கிய அமைதியை மையமாகக் கொண்ட சிலப்பதிகாரத்திலும் இக்கருத்து உருவ அமைதி காணக் கிடைப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அது பற்றிப் பின்னர் விரிவாக விசாரித்துப் பார்க்க வேண்டும்.

மணி : தமிழ் இலக்கியத்திலே நீ சொல்லுகிற இந்தக் குறுகிய அளவிலே தான், கருத்து – உருவ அமைதி ஏற்பட்டிருக்கிறது பிற நூல்களில் இல்லை என்று ஒரே அடியாகச் சொல்லி விடுவாயா நீ?

ராஜா : அப்படிச் சொல்ல மாட்டேன். வேறு எத்தனையோ கவிதைகள் இருக்கலாம் பார்த்த அளவில்தான் நான் சொல்லுவது. இந்த நோக்கத்துடன் பார்க்க வேண்டியது அநேகம் உண்டு – பார்க்க அவகாசம் கிடைக்க வேண்டும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மணி : சமீப காலத்தில் பாரதி . . .

ராஜா : அதையே தான் நானும் சொல்ல வந்தேன். பக்தியையும், சிறப்பாக தேசபக்தியைக் கருத்தாகக் கொண்டு கவி பாரதியார் உருவச் சிறப்பும் அமைதியையும் பெற்ற பல பாடல்களை நமக்குத் தந்திருக்கிறார். கரும்பை எங்கே கடித்தாலும் சுரீர் என்று இனித்துக் கிடக்கிறது.

மணி : சொல்லு

ராஜா : பாரதியைப் பற்றிக் கேட்பதிலே பரவசப்படுகிற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். அது போதாது – அவனை இலக்கிய ஆசிரியனாக அறிந்து கொள்ள, என்று எனக்குத் தோன்றுகிறது.

மணி : பரவசம் முக்கியமே தவிர, இல்க்கிய ஆசிரியனாக அறிந்து கொள்வது முக்கியமாக எனக்குத் தோன்றவில்லை.

ராஜா : பரவசம் எதைப் பற்றியும் சாத்தியம் என்பதுதான் அதில் இருக்கிற பலஹீனம். பாரதி என்பது பற்றிய வரையில் பரவசம் சரியானதாகப் பட்டு விடுகிறது. ஆனால் ஒரு மூன்றாந்தரமான கவியையும் படித்துப் பரசவப்பட்டு விடப் பலராலும் முடிகிறது.

மணி : நல்ல கவி, மட்டமான கவி என்று புரிந்து கொள்ள ஒரு பழக்கம். ஒரு பயிற்சி வேண்டாமா?

ராஜா : அந்தப் பயிற்சிக்கு அடிப்படை போட்டுத்தரத்தான், இலக்கிய விசாரம் அவசியமாகிறது. பாரதியைப் பற்றிப் பரவசப்படுவது சரியல்ல; நியாயமில்லை; என்றும் சொல் வதற்குத் தான் இலக்கிய விசாரம் உபயோகப்பட வேண்டும்.

மணி : பரவசம் என்பது அறிவுக்கு அப்பாற்பட்டது.

ராஜா : அதனால் தான் மனித அறிவால் அறிந்து கொள்வது சாத்தியம் என்கிறாயா நீ?

ராஜா : இல்லை. அறிவுக்கு அப்பாற்பட்டதும் உண்டு என்று எனக் கும் தெரிகிறது. ஏன் அது அறிவுக்கு அப்பாற்பட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அறிவு, ஆராய்ச்சி திறம்படச் செயல்பட்டதாகச் சொல்ல இயலும்.

மணி : புரியவில்லை எனக்கு.

ராஜா : புரியும்படியாக உதாரணங்களால் தான் சொல்ல முடியும். கவி பாரதியாரிலே கருத்தும் உருவமும் அமைந்துள்ள கவிதைகள் அநேகமாக, அவர் கவிதைகள் எல்லாமேதான் – நமக்குப் பரவசமூட்டுகின்றன. இரண்டாந்தரமான கவிஞ னின் கவிதையும் நமக்குப் பரவசமூட்டும்போது, கருத்தும் உருவமும் அமைந்திருக்கிறதா என்று பார்க்க, அறிவு தூண்டியதேயானால் அந்தப் பரவசம் அஸ்திவார மற்றதாகி தானே மறந்து விடும். விசாரிக்காத வரையில் தேவாரத்தில் பெரும் பகுதி பற்றியும், ஆழ்வார்களின் பெரும் பகுதி பற்றியும், சேக்கிழார், திருவிளையாடற் புராணம் மற்றும் பல ஸ்தல புராணங்கள் பற்றியும் பரவசம் நீடித்துக் கொண்டே தான் இருக்கும்.

மணி : பாரதி உதாரணத்தைக் கொண்டே சொல்லு. அதுதான் இன்றுள்ள நிலையில் சுலபம். அநாவசியமாகப் பிறருடைய விரோதத்தையும் தேடிக் கொள்வானேன்?

ராஜா : இலக்கிய விசாரத்தில் ஆதரவு, அனுதாபம், விரோதம், பாராட்டு என்கிற வார்த்தைக்கெல்லாம் அர்த்தம் கிடை யாது. உண்மையான இலக்கிய விசாரம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டது. யாருடைய விரோதத்தையும் பாராட்டையும் பொருட்படுத்த வேண்டியதேயில்லை.



மணி : அது சரி. நீ பரவசம் அடைய ஆரம்பித்து விடாதே. இலக்கிய விசார பக்தியினாலே, பாரதியையே உதாரணமாகக் கொண்டு, கருத்தும் உருவமும் என்பது பற்றி விளக்கமாகச் சொல்லு.

ராஜா : குயில்பாட்டை எடுத்துக் கொள். அதில் உள்ள விஷயம் கருத்து நமக்கு லேசாகத்தான் புரிகிறது. ஆனால் அதன் உருவம் அந்த விஷயத்துக்கு – அதாவது நமக்குச் சரிவர தெரியாத விஷயத்துக்கு – ஏற்ற மாதிரி இருப்பதாக ஒரு நினைப்பு நமக்கு ஏற்பட்டு விடுகிற போது நாம் குயிலை மிகச் சிறந்ததோர் காவியமாகக் கருதத் தொடங்குகிறோம்.

மணி : அப்படிச் சிறந்த காவியமாகத் தானே அது தோன்றுகிறது?

ராஜா : அது எதனால் என்பதே கேள்வி. உருவத்தாலா? கருத்தாலா?

மணி : கருத்தினால் தான் என்று, முதலில் சொல்லத் தோன்றினாலும் கூட சற்று யோசித்துப் பார்க்கும் போது அது அவ்வளவாகத் திடமாகாத கருத்துத் தான் என்பதை ஏற்றுக் கொள்ளவே வேண்டியதாக இருக்கிறது. நிழல்போல லேசாகத்தான் அக்கருத்து நமக்குத் தெரிகிறது.

ராஜா : பாரதியாரின் குயில் என்கிற உருவ அமைதியை, நீயே புலனாக்கிக் கொள்ள ஆரம்பித்து விட்டாய். அது போல் டாண்டேயைக் கவனிக்கும் போது . . .

மணி : டாண்டேயைப் பற்றிச் சொல்லாமலே மழுப்புகிறாயே.

ராஜா : சொல்லுகிறேன். ஆனால் அதற்கு முன் அது பற்றிப் பேசுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண் டாமா?

மணி : அதாவது டாண்டே பற்றிய உன் சிந்தனைக் கருத்துக்கும் ஓர் உருவம் தர முயலுகிறேன் என்கிறாய்.

ராஜா : உண்மை அதுவே தான்.

மணி : நீ உன் சிந்தனைக்கு உருத் தரமுயலுகிற வகையில் சிந்தித்துப் பார்க்கிறாய். ஆனால் சிந்தனைகள், கருத்து திடமானது. உருவம் தான் தரப்பட வேண்டியது என்பது ஏற்படுகிறது அல்லவா?

ராஜா : ஆமாம்.

மணி : அதனால் கருத்தே இலக்கியம் பற்றிய வரையில் முக்கியம்; அடிப்படை ஆதாரம். உருவம் என்பது அதன் மேல் ஏற்றி வைக்கப்பட்ட, மாறக் கூடிய ஒரு விஷயம் என்பது பெறப்படும் அல்லவா?

ராஜா : கருத்தின் பின்தோன்றி அதன் மேல் ஏற்றி வைக்கக் கூடுவதே உருவம் என்பது உண்மை தான். ஆனால் அது மாறக் கூடியது என்று ஏற்படாது.

மணி : அதாவது

ராஜா : கருத்து ஒன்று இலக்கியமாகி விடும்போது அதற்கு என்று தனியாக ஓர் உருவம் இல்லாவிட்டால், கருத்து வெறும் கருத்தாக இருக்குமே தவிர இலக்கியமாயிராது. கலையா யிராது.

மணி : புரிகிற மாதிரித் தான் இருக்கிறது. ஆனால் உருவம் மாறாது என்று சொன்னாயே – அது எப்படி என்று தான் விளங்கவேயில்லை.

ராஜா : எந்தக் கருத்துக்கும் எந்த, உருவமும் தரலாம்தான். ஆனால் ஒரு நல்ல சிருஷ்டியாளன் கையில் ஒரு கருத்துக்கு ஒரு உருவம் ஏற்பட்ட பின், அது தவிர்க்க முடியாதது – வேறு உருவம் ஏற்றதாக இராது என்று தோன்றச் செய்துவிடுகிறது. வேறு ஒரு கலைஞன் தோன்றி அதே கருத்துக்கு வேறு உருவம் தரலாம் தான்; ஆனால் இதனால் முதல் இலக்கிய உருவம் அழிந்து விடாது. இரண்டு இலக்கிய சிருஷ்டிகள் தோன்றி விடக்கூடும்.

மணி : புரிகிற மாதிரிச் சொல்லேன்.

ராஜா : எப்படி புரிகிற மாதிரிச் சொல்வது? இரு. உதாரணம் ஒன்றி னால் விளக்கப் பார்க்கிறேன். ராஜாலியர் என்கிற ஷேக்ஸ்பியர் நாடகத்தைப் படித்திருக்கிறாய் – அதே போல ஹோனேர்டி பால்ஸாக்கின் கிழவன் கோரியோ நாவலையும் படித்திருக்கிறாய் அல்லவா?

மணி : படித்திருக்கிறேன்.

ராஜா : இது நாவல் – அது நாடகம்; இது பால்ஸாக் – அது ஷேக்ஸ்பியர்; இது வசனம் – அது கவிதை; உருவங்கள் இரண்டும் வெகுவாக மாறுபட்டவை – ஆனால் கருத்து ஒன்று தான்.

மணி : ஆமாம். கருத்து ஒன்றுதான்.

ராஜா : ஓரளவுக்கு பால்ஸாக் தனது கலைத் திறமையினால் கருத்துக்கு ஏற்ப ஒருபடி அதிகமாகவே கலை செய்து விட்டார் என்று எனக்குத் தோன்றுகிறது!

மணி : அதாவது இந்தக் கருத்தைப் பற்றிய வரையில் பால்ஸாக்தான் ஷேக்ஸ்பியரை விடச் சிறப்பான கலைஞர் என்பாயா நீ?

ராஜா : அப்படியும் சொல்லமாட்டேன் நான். பால்ஸாக்கின் வசனம் என்கிற கருவியும், நாவல் என்கிற இலக்கியத் துறையும் இந்த விஷயத்துக்குச் சிறப்பு தந்து விட்டது என்பது ஒன்று. மற்றது ஷேக்ஸ்பியர் தனது லியரை பெண்கள் நன்றி மறந்தது பற்றிப் பேச வைத்துவிட்டார். பால்ஸாக்கில் கடைசிவரையில் கிழவன் தன் பெயரர்



களைக் குற்றஞ் சாட்டாமல் உயிர் துறந்தான் என்பது பால்ஸாக்கின் கலையை உயர்த்திக் காட்டுகிறது.

மணி : இது நீயாக புதுசாகச் சொல்கிற விஷயம். யோசித்துத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ராஜா : நம் விசாரணைக்கு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒரு கருத்துக்கு இருவர் தந்த உருவங்களும் – அளவில், தனித்துப் பூரணத்வம் பெற்று விட்டிருப்பது போலவே தோன்றுகிறது. இரண்டுமே தப்ப முடியாமல் தவிர்க்க முடியாத கலை உருவங்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

மணி : இதிலிருந்து பெறப்படுவது யாதெனிலோ ...?

ராஜா : நீ என்னைக் கிண்டல் செய்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. நான் ஏதோ முடிச்சுப் போட்டு விட்டு அவிழ்க்க முடியாமல் திணறுகிறேன் என்று எண்ணுகிறாய் நீ, அதுவும் ஓரளவுக்கு உண்மைதான். இலக்கிய விசாரத்தில் ஓர் இழையைப் பிடித்துக் கொண்டு கோடி வரை நடக்கும்போது இடையில் சிக்கல் விழலாம் தான். பல குருட்டுச் சந்துகளில் நுழைந்து, போன பாதையே திரும்பி வந்து கால் வலிக்க நடக்க வேண்டியதாக இருக்கலாம். அதனால் பாதகமில்லை. சிந்திக்கவே மறுப்பதற்குப் பதில், சிந்தித்து முடிவு காண முடியாவிட்டாலும் பாதகமில்லை – சிந்திப்பது என்பது தான் முக்கியம் என்பேன் நான்.

மணி : சொல்லு, கிண்டல் என்பதும் இலக்கியத் துறைகளிலே ஒன்று தானே? நாம் இலக்கியத்தை விட்டு நகர்ந்து விடவில்லை.

ராஜா : ஷேக்ஸ்பியர், பால்ஸாக் இருவரும் கலைஞர்கள் இருவருமே சக்தி வாய்ந்த கலைஞர்கள். அதனால் அவர்கள் ஒரே கருத்தைக் கையாண்டு கலை செய்தபோது இருவேறு கலை உருவங்கள் ஏற்பட்டன. இரண்டையும் தனித்தனி உருவமாக அறிய முடிகிறது. அதே போல ஒவ்வொரு சிறப்பான கருத்துக்குமே ஒன்றுக்கு மேற்பட்ட உருவங்கள் தரலாம் தான். ஆனால் இப்படி உருவம் தருகிற காரியத்தை ஒரு கலைஞன் செய்கிறபோது தான், அதற்கு இரண்டாவது மூன்றாவது உருவம் ஏற்படுகிறது. பால்ஸாக் தவிர, மட்டமான கலைஞன் எவனாலும், இந்தக் கலை உருவம் ஏற்றுவதில் வெற்றி பெற்றிருக்க முடியாது.

மணி : சரி, இந்த கருத்து பற்றி எழுந்த இன்னொரு கலை உருவம் பற்றியும் சிந்திப்போம்.

ராஜா : எதைப் பற்றிச் சொல்கிறாய் நீ?

மணி : டர்கனெவின் ...

ராஜா : கருத்து சரி, ஆனால் உருவம் அவ்வளவாக பால்ஸாக் போல சிறப்பாக அமையாத சிருஷ்டி அது.

மணி : அதற்கும் ஓர் உருவம் இருக்கிறதல்லவா?

ராஜா : பூரணத்வம் அடையாத உருவம் அது! தலைப்பில் டர்கனிவ் இந்தப் பூரணத்வமற்ற தன்மையைக் கருதியே லியர் என்கிற வார்த்தையைச் சேர்த்துக் கொண்டார், தன் தலைப்பில் என்று எனக்குத் தோன்றுகிறது.

மணி : அப்படித்தான் நானும் சொல்வேன். பால்ஸாக் கையாண்ட கருத்து முழுவதும் அவருடையதேயாகி விட்டதனால் அவரால் புதுசாக, முற்றிலும் புதுசான ஒரு உருவத்தைக் கிழவன் கோரியோவில் சிருஷ்டிக்க முடிந்தது. ஒரு விதத்தில் பார்க்கப் போனால் பால்ஸாக்கின் மிகச் சிறந்த நாவல் இதுவே என்றும் சொல்லலாம் இல்லையா? இந்த மாதிரி ஒரே கருத்தை இரண்டு மூன்று மேதைகள் கையாண்டுள்ளது என்று வேறு எதையாவது சொல்ல முடியுமோ?

ராஜா : இருக்கத்தான் வேண்டும்.

மணி : உண்மையிலேயே கருத்துக்கும் உருவத்துக்கும் போட்டி இருக்கிறது. போட்டி மாதிரிப் பேசுவது சரியல்லவே!

ராஜா : சரியல்லதான். தெரிகிறது. இலக்கியம் உருவத்தால் மட்டும் நிரந்தரமாவதில்லை; கருத்தால்தான் நிரந்தரமாகிறது.

மணி : அது உண்மையே! ஆனால் கருத்து மட்டும் எப்போதும், ஒரு போதும் இலக்கியமாக முடியாது. சிறு கவிதையாக, காவியமாக, நாடகமாக, கதையாக, நாவலாக, கட்டுரையின் பல தினுசுகளில் ஒன்றாக உருப்பெறும் போது தானே கருத்து இலக்கியமாகிறது?

ராஜா : ஆமாம். அதனால் உருவம்தான் இலக்கியத்தைப் பற்றிய அளவில் முக்கியம் கருத்தல் என்றும் சொல்லிவிட முடியாதே?

மணி : முடியவில்லை என்பதனால்தானே இந்தப் பேச்சே வருகிறது. கருத்துத்தான் முக்கியம் என்றால் இலக்கியம் என்று நாம் இன்று ஏற்காத பலவும் இலக்கியமாகிவிடும். உருவம் தான் முக்கியம் என்றால் ...

ராஜா : குறளில் கலந்திருக்கிறது.

மணி : சில குறள்களில் கருத்துக்கு நல்ல உருவமும் தரப்பட்டிருக்கிறது என்பதனால்தான் அதை இலக்கியமாகவும் கருதலாம் என்கிற எண்ணமே ஏற்படுகிறது.

ராஜா : அதே போல திருமூலரில் ...

மணி : ஆமாம். திருமந்திரத்தில் எந்தப் பாட்டை எடுத்துக் கொண்டாலும் அதிலே கருத்தும் உருவமும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.



ராஜா : கம்பனின் சிறந்த கவிகளிலே ...

மணி : கருத்தும் உருவமும் கலந்து அமைதி பெறுகிறபோது தான் இலக்கியமே பிறக்கிற மாதிரித் தோன்றுகிறது.

ராஜா : ஆகவே கருத்தும் முக்கியம் உருவமும் முக்கியம் இரண்டும் ஒன்று சேர வேண்டும்.

மணி : இப்படி இரண்டும் ஒன்று சேருகிற இடத்தில்தான் இலக்கியம் பிறப்பதை நாம் காண முடிகிறது.

ராஜா : இலக்கிய கர்த்தா, சிருஷ்டி சமயத்திலே கருத்து முக்கியமா – உருவம் முக்கியமா என்று எண்ணிப் பார்ப்பதில்லை. கருத்தையும் உருவத்தையும் ஒருங்கே நிர்ணயித்துக் கொண்டு தன்னளவில் எட்டியவரை படைக்கிறான்.

மணி : வாசகனுக்கோ வெனில் ...

ராஜா : இது மிகை. இது குறைவு என்கிற எண்ணம் ஏற்படுகிறபோது இலக்கிய அமைதி ஏற்படவில்லை என்று சொல்லி விடலாமல்லவா?

மணி : அது ஒன்று. இரண்டாவதாக ஒரு நாவலை ஒரு ஜீவிய சரித்திரமே போல உருவாக்க முயன்று பலர் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இங்கு கருத்து உருவம் அமைதி பெறாத மாதிரி இருந்தாலும், வெற்றி என்கிற அளவில் வெற்றி பெற்றதாகத் தான் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

ராஜா : வசனத்தைக் கவிதை போல எழுதியிருக்கிறார் என்று ஒரு ஆசிரியரைப் பற்றிச் சொல்லும் போது நாம் புகழ்கிறோமோ, அவரை இகழ்கிறோமா?

மணி : இரண்டுமில்லை என்ற எண்ணுகிறேன் நான். வசனமாகவோ கவிதையாகவோ எழுதுவதில் வெற்றி பெறாதவரைப் பற்றித் தான் இப்படிச் சொல்ல இயலும். கவிதைக்கான கருத்தை வசனமாக உருவத்தில் அமைத்துக் காண முயன்று தோல்வியுற்றிருக்கிறார் என்று சொல்வதற்குப் பதில் இப்படிச் சொல்கிறார்கள் என்று தோன்றுகிறது.

ராஜா : புரியவில்லையே!

மணி : வசனத்துக்கு ஒரு கருத்து, கவிதைக்கு ஒரு விஷயம் என்று பிரித்துக் காண முயலுவது பண்டைய வழக்கு.

ராஜா : இன்று அது ஒத்து வராது என்கிறாயா?

மணி : வருமா சொல்லு? வசனமோ கவிதையோ இரண்டும் இலக்கியத்தில் இரண்டு துறைகளே தவிர இரண்டும் வெவ்வேறு உருவங்கள் அல்ல. நாடகத்தை உருவம் என்று சொல்லலாம். சிறு கவிதையை உருவம் என்று சொல்லலாம்.

ராஜா : புரிகிற மாதிரித்தான் இருக்கிறது. நாடக உருவம் செய்யுள் துறையில் இருக்கலாம். வசனத் துறையிலும் இருக்கலாம். சிறுகதை, நாவல் எல்லாம் அப்படி என்கிறாய்.

மணி : ஆமாம். உருவம், துறை, கருத்து இதிலே ஒரு குழப்பம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

ராஜா : அப்படியானால் கருத்து உருவம் என்று பிரித்துக் காண முயற்சி செய்வானேன்?

மணி : பிரித்துக் காண முயற்சி செய்வதில் சிருஷ்டி தத்துவத்தை ஓரளவு அறிவு கொள்ள முடிகிறது என்பதற்காகத்தான். கலைஞனின் சிருஷ்டி தத்துவத்தை விளக்குகிற எதையும் காணமுயலுவது அவசியம் என்றே தோன்றுகிறது.

ராஜா : ஏற்றுக் கொள்கிறேன். சிருஷ்டி தத்துவத்தை முழுவதும் அறிய முடியாது. அறிந்து கொள்கிற வரையில் லாபம்தான்.

மணி : கருத்து என்கிற விஷயம் உருவம் எடுக்கிற அளவில் முக்கியமாகி விடுகிறது. கலை உருவம் பெற்ற கருத்து வெறும் தத்துவ உருப்பெற்ற கருத்தைவிட முக்கியமானதாக இருக்கிறது. ஆகவேதான் ஏசுவின் உபதேசங்களிலும் Parableளுக்கு இருக்கிற முக்கியத்வம் வெறும் சிந்தனைகளுக்கு இல்லை.

ராஜா : சிந்தனைகளுக்கும் முக்கியத்வம் உண்டு தானே?

மணி : உண்டுதான். ஓர் இலக்கியாசிரியனுடைய சிந்தனைகளே அவன் எழுதுகிறவை எல்லாவற்றிற்கும் அடிப்படை. அவன் அந்த சிந்தனைகளுக்குத் தருகிற உருவம் அதைக் கலையாக நிரந்தரமாக வாழ வைக்கிறது.

ராஜா : நல்லதும் தீயதும் போராடுவதை மஹாபலிபுரத்து மஹிஷாசுமர்த்தனியில் உருத் தந்த கலைஞன் அதைக் கருத்தாகக் கருதினானா? உருவமாகக் கருதினானா?

மணி : அந்தக் கேள்வியிலேயே பதிலும் அடங்கியில்லையா? உருவம் கலையளவு பெற்றதனால் தானே அது தனித்து நிற்கிறது. இயங்குகிறது. நம் மனத்தைக் கப்பிக் கொள்கிறது. இல்லாவிட்டால் நல்லது தீயது போராட்டம் வெறும் போராட்டமான கருத்தாக இருக்குமே தவிர உருப்பெறாது.

ராஜா : அதே போலத்தானே ராமராவணயுத்தமும்?

மணி : இப்படிப் பல விஷயங்களுக்குத் தாவ வேண்டாம். மகிஷாசுமர்த்தனியையே கவனிப்போம் ஒரு நிமிஷம்.

ராஜா : சொல்லு.

மணி : இந்த உருவத்துக்கு ஓர் அர்த்தம் இருக்கிறதை அறியாத ஓர் அன்னியனுக்கு இந்தச் சிற்பம் அர்த்தமுள்ளதாகக் காட்சியளிக்குமா?



ராஜா : அதாவது ...

மணி : இந்தக் கலை கலையாகியுள்ளது, கருந்து – உருவம் என்கிற இரண்டாலும்தான் என்பது நமக்குத் தெரிகிறது. ஆனால் நமது மரபு, கதை சிந்தனை இவற்றை அறியாத அந்நியன் ..

ராஜா : அதாவது நவராத்திரிக் கதையையோ நல்லது தீயது போராட்டத்தின் நித்தியமான வருஷாந்திரப் புதுமையையோ அறியாத அன்னியன் –

மணி : அதை எப்படி அர்த்தம் பண்ணுவான்?

ராஜா : அர்த்தமே ஆகாது அவனுக்கு.

மணி : எருமை மாட்டுத் தலையையோ அல்லது சிங்க வாஹனமேறிய பராசக்தியின் உருவத்தையோ அவன் அநாகரீகமானது, அர்த்தமற்றது என்று கருதினாலும் கருதலாம். ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ராஜா : கருத்து, உருவம் என்பதற்கப்பால் நமது மரபு, நமது சிந்தனைப் போக்கு என்றும் ஒன்று இருப்பதாகச் சொல்கிறாய்.

மணி : அந்த மரபும் போக்கும் தருகிற உருவமும் கருத்தும் தான் நமது கலைக்கு அர்த்தம் தருகின்றன. அதில்லாவிட்டால் கலைக்கு அர்த்தம் வராது.

ராஜா : புதுக்கவிதை போல ...

மணி : புதுக்கவிதை பற்றிப் பேசுவது கருத்து உருவம் என்கிற விஷயம் பற்றிய வரையில் முக்கியமானதுதான். பார்க்கலாம். புதுக்கவிதையில் கருத்து முக்கியமா? உருவம் முக்கியமா?

ராஜா : புதுக்கவிதை என்று தமிழில் வருவதைச் சொல்கிறாயா அல்லது ...

மணி : தமிழில் அது (1965) ல் இன்னும் குறிப்பிடக்கூடிய சாதனை காட்டவில்லையே, வெறும் சோதனையாகத் தான் இருக்கிறது. மேலை நாட்டு உதாரணங்களைக் கொண்டே தான் இதை விவரிக்கலாம்.

✖

# உலக இலக்கியம்

ஒவ்வொரு மனிதனும் தத்தமது ஊரில் வசிப்பவன்தான்; தத்தமது மொழி பேசுபவன் தான்; அவனவன் குடும்பத்துக்கு உரியவன்தான்.

எனினும் மனிதன் என்கிற அளவில் உலகத்தைச் சேர்ந்தவன். தேசியம், மொழிப்பற்று எல்லாமே உலகம் என்று பரந்த அளவில் உள்ள மனுஷ்யத்வத்தை ஒட்டி நிற்கிற போதுதான் சிறப்புப் பெறு கிறது என்று சொல்ல வேண்டும்.

தனிமனிதனோ தனி நாடோ தனிப்பட்டு நிற்பது என்பது இனி சாத்தியமில்லை. இன்று, பல விஞ்ஞான முன்னேற்றங்களினால், மனிதனுடைய ஒரே உலகத்து விஷயம் கற்பனையாக இல்லாமல் எட்டித் தொடக்கூடிய லட்சியமாக உணரமுடிகிறது. அறிவு பூர்வ மாகக் கவனிக்கும்போது, இதுவே வித்தியாசங்களை வேற்றுமைகளை அதிகப்படுத்துவதற்கும் உபயோகப்படலாம் தான்.

இருந்தாலும் மனித குலம் பூராவுமே ஒரே குடும்பம் என்கிற நினைப்பு சரித்திரத்தில் இந்தக் கால கட்டத்தில் போல வேறு எந்தக் காலகட்டத்திலும் உருப்பெற்றதில்லை. அதை நமது பிரதான முன் னேற்றம் என்று மனிதன் பெருமை கொள்ளலாம்.

தமிழ் இலக்கியம், தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் சொந்த மானது என்கிற நினைப்புடன், உலகத்துக்கும் சொந்தமானது என்கிற நினைப்பும் நமக்கு ஏற்படும்போது தான் மனிதனாக வாழ்வதன் லட்சியத்தை நாம் ஏற்றுக் கொண்ட மாதிரியாகும்.

அதை விடுத்து தமிழ் தமிழ் என்று குறுக்கிக் கொண்டும் குறுகிக் கொண்டும் போனோமேயானால் பயனே இல்லை. சமீபகாலத்தில் இந்தக் குறுக்கிக் குறுகும் முயற்சிதான் நம்மிடையே அதிகமாகக் காணப்பட்டு வருகிறது என்று சொல்ல வேண்டும்.

தமிழ். தமிழ் என்று பாராட்டிச் சுயநலத்துக்காகப் பெருமை பேசு கிறவர்கள் உலக இலக்கியத்தில் தமிழ் தன் ஸ்தானத்தை ஏற்பதற்கு ஒன்றும் செய்யாதவர்கள், செய்ய இயலாதவர்கள் என்று காண்கிறோம்.

உலக .இலக்கியத்தில் தமிழ் இலக்கியம் உன்னதமான ஸ்தானம் வகிக்கவும், தமிழ் இலக்கியத்தில் உலக இலக்கியம் பூராவும் உன்னத



மான ஸ்தானம் வகிக்கவும் ஆவதற்கான வழி வகைகள் செய்வது, எண்ணுவது இன்றைய தமிழ் இலக்கியாசிரியர்களின் கடமையாகும்.

ஓரளவுக்கு அது – இரண்டு போக்குகளும் தான் – இருக்கின்றன. அது போதாது போதாது என்கிற உணர்வைத்தான் பாரதியார் நமக் குள்ளே பழங்கதைகள் பேசுவதையும் பிறவற்றையும் பற்றிக் குறிப் பிட்டுச் சொன்னார்.

பாரதியார் காலத்துக்கு இன்று நாம் அதிகமாக முன்னேறிவிட வில்லை. இந்த விஷயத்தில் வழிகாட்ட ஒளியில்லாத காரணத்தினால் சற்றுப் பின் வாங்கியேயிருக்கிறோம் என்று சொல்லத் தோன்றுகிறது.

உலக இலக்கியம் என்று ஒன்றை உணர்ந்து முதலில் அதைப் பற்றிச் சொன்னவர் ஜோஹான் வுல்ஃப்காங் கதே என்கிற ஜெர்மன் இலக்கிய மேதையாகும்.

அவர் முக்கியமாக இந்திய சீன பண்டைய இலக்கியங்கள் ஐரோப் பிய பிரக்ஞையில் தாக்கியதை முன்னிட்டு உலக இலக்கியம் என்கிற கண்ணோட்டத்தைத் தனக்கென்று ஏற்படுத்திக் கொண்டார்.

இன்று இன்னும் அதிகமாகவே கதே காலத்துக்கும் அதிகமாகவே – உலகமும் உலக இலக்கியமும் பரந்து கிடக்கிறது. அதில் உரிய ஸ்தானத்தைத் தரவும் இன்றைய தமிழ் இலக்கியாசிரியன் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

உலக இலக்கியத்தின் பரப்பும், விஸ்தீரணமும், முதல் தடவை கணிக்கும் போது, நமக்கு பிரமையூட்டுவதாகத் தான் இருக்கிறது. இத்தனையையும் நாம் தெரிந்துகொள்ள முடியுமா, ஒரு ஆயுட் காலத் தில் ஒரு மனிதன் அறிந்துகொள்ளக் கூடியதா இவ்வளம் என்று தோன்றலாம்.

கில்காமெஷ் ஆதிகாவியத்திலிருந்து இன்று ப்ரூஸ்ட் ஜாய்ஸ் வரை, தென் அமெரிக்காவிலிருந்து சீனா, ஜப்பான், பரந்து கிடக்கும் இலக்கியம் – ருஷ்யா ஆஸ்திரேலியா என்று விரிந்து கிடக்கும் இலக் கியத்திலே, மனிதன் என்கிற சரடு ஊடுருவிக் கிடக்கிறது.

அதனால அதை யாரும் சுலபமாக அறிந்து கொள்ள இயலும்.

ஆழ்ந்து படிப்பது மட்டும் போதும், அகன்று பரந்து படிக்கவேண் டிய அவசியமில்லை என்று ஒரு நினைப்பு நமக்கு எப்போதுமே இருந்து வந்திருக்கிறது.

வால்மீகி மட்டும் போதாதா? கம்பன் மட்டும் போதாதா? குறள் மட்டும் போதாதா? என்று அடிக்கடி எதிரொலிக்கும் வாக்கியங்கள் ஆழ்ந்து படிப்பதை விரும்பி ஏற்பட்டதாகக் கொள்ளலாம். ஆனால் இன்று படிப்பதாகச் சொல்லுபவர்கள் ஆழ்ந்தும் படிப்பதில்லை. பரந்தும் படிப்பதில்லை.

உலக இலக்கியத்தில் ஒரே ஒரு பகுதியை மட்டும் கண்டு கொண் டால் போதுமானதாக இருக்கலாம். ஆனால் அதற்குப் பகைப்

புலனாக உலக இலக்கியப் பரப்பு பூராவும் இலக்கியாசிரியரின் என்று சொல்லிக் கொள்பவனுக்காவது தெரியவேண்டும்.

எத்தனையைத் தெரிந்துகொள்வது, அதற்கு மேலும் தெரிந்து கொள்ளவேண்டியது இருந்து கொண்டேதானே இருக்கும் என்று கேட்கலாம். உண்மைதான். தெரிந்துகொள்வதைத் தெரிந்துகொண்டு, இன்னும் இருக்கிறது என்கிற உணர்வையும் ஏற்படுத்திக்கொண்டு விட்டால் இலக்கியம் வளரும்.

ஆயிரத்தில் ஒன்றிரண்டு மேதைகளுக்கு – எழுத முன் வருகிற மேதைகளுக்கு – இந்த அடிப்படை அறிவு தேவையில்லாதிருக்கலாம். ஆனால் மற்றபடி இலக்கியாசிரியன் ஒவ்வொருவனுமே உலக இலக்கியத்தின் வாரிசாகத் தன்னை உணர்ந்து எழுத முற்படுவதே கலையாகப் பயன்தரும் எழுத்தைச் சிருஷ்டிக்க உதவும்.

உலக இலக்கியப் பரப்பையும், அதில் சில பகுதிகளையுமாவது எடுத்துச் சொல்ல அவ்வப்போது இலக்கிய விமர்சனம் முயன்று வருகிறது.

உலக இலக்கியம் என்பது ஓர் இயக்கமாக உரு எடுக்க வேண்டும். அதற்கான வழி வகைகள் என்னவென்று சிந்திப்பது இலக்கிய விமர்சகனின் கடமையாகும்.

உலகத்தில் எந்த மொழியில் எந்தப் பகுதியில் மிகத் தரமானது, உயர்ந்தது, சிரேஷ்டமானது வந்திருந்தாலும் அது உடனடியாகத் தமிழில் மட்டுமல்ல, தமிழ் போன்ற எல்லா மொழிகளிலுமே வருவதற்கான வழி வகைகள் வகுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழில் பாடாவதியான சொந்த நாவல்கள் – அதுவும் சரித்திர நாவல்கள் விற்பது போல் முதல் தரமான மொழி பெயர்ப்புகள் விற்பனையாவதில்லை என்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இதற்குக் காரணம் தமிழில் எல்லாமே இருக்கிறது; வேறு ஒன்றும் நமக்குத் தேவையில்லை என்று ஆரம்பத்தில் பண்டிதர் பேராசிரியர்களும், அவர்களைத் தொடர்ந்து அவர்கள் கருத்தைத் தங்களுக்கு அனுசரணையாக உபயோகித்துக் கொண்ட அரசியல் வாதிகளும், பின்னர் வந்த தமிழ் மட்டும் பற்றி வெறி கொண்டவர்களும் சூழ்நிலையை வீணாக்கிவிட்டார்கள். உலகில் உள்ளதில் சிறந்ததை அங்கீகரித்துப் படித்துத் தெரிந்து கொள்வதற்கு ஓர் ஆர்வம் வேண்டும். முதலில் அந்த ஆர்வத்தை வளர்ப்பதற்கு ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும்.

உலகப்பரப்பில், அஸ்ஸிரிய மொழியில் தொடங்கி, இன்றுள்ள ஜப்பானிய மக்கியோகா சகோதரிகள் வரையில் பலப்பல ஆயிரம் நல்ல நூல்கள் இருப்பது போல நமக்குத் தோன்றுகிறது.

இத்தனையும் ஒருவன் படித்துக் கடைத்தேறுவது எக்காலம் என்று கேட்கத் தோன்றலாம்.



அத்தனையும் பற்றி அறிவு வேண்டும். பிரக்ஞை வேண்டும். சிறந்ததை மட்டும் ஒவ்வொருவரும் படித்தால் போதும்.

சிறந்தது என்று சொல்லும் போது அது அப்படி ஒன்றும் அதிகம் இல்லை என்றும் அதே மூச்சிலே சொல்லி விடலாம்.

உலகத்து இலக்கியத்தில் மிகச் சிறந்ததையெல்லாம் நூறு இருநூறு நூல்கள் என்று பெயர் சொல்லி அடக்கி விடலாம் இதிலேகூட ஒரு பகுதி, கால்வாசியாவது. அவரவர் சௌகரியத்துக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக, ஒதுக்கிவிடக்கூடியதாக இருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இங்கிலாந்து தேசத்திலும் பொதுவாக ஐரோப்பாவிலும், கீழை நாட்டு இலக்கியப் புது அறிவு காரணமாக, உலகத்துச் சிறந்த நூறு நூல்களை வரிசைப் படுத்திப் பட்டியல் தயாரிக்கிறது என்று ஓர் இயக்கம் இருந்தது.

அந்தப் பட்டியல்களில் ஒன்றுக்கொன்று பல அம்சங்களில் மாறு பட்டிருந்தாலும் அடிப்படையில் வித்தியாசமில்லை. நூறு என்பதை இருநூறு என்று முதல் தரமானதற்கும், ஐநூறு என்று இரண்டாந் தரமானதையும் சேர்த்துக் கொண்டும் சொல்லலாம்.

இந்தப் பரப்பை அறிந்து கொண்டு பிறகு ஆழ்ந்து படிப்பது சாத்தியமே.

உலக இலக்கிய இயக்கம் தமிழைப்பற்றிய வரையில் என்ன உரு எடுக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்கும்போது ஒன்று தெளிவாகவே தெரிகிறது.

தமிழிலிருந்தும் உலக இலக்கிய அரங்கில் இடம் பெறக்கூடிய நூல்கள் ஒன்றிரண்டு மூன்று இல்லாமல் இல்லை. அற நூல்களில் குறள், காவியத்தில் சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், சங்க இலக்கியத் தொகுப்பு ஒன்று, இடைக்காலக் கவிதைத் தொகுப்பு ஒன்று என்று சில நூல்களேனும் இடம்பெறும்.

இதை ஏற்று ஜப்பானிலிருந்து லேடி முராஸகி, ஹெய்க்குக்கள் முதலியன, சீனாவிலிருந்து குரு குங், லிபோ, டூஃபூ முதலியோர் மற்றும் ஐரோப்பிய இலக்கியத்திலிருந்து ஹோமர் முதல் டாஸ்டாவஸ்கி, டால்ஸ்டாய், மன், ஜாய்ஸ், ப்ரூஸ்ட், காஃப்கா, ரில்கே வரையில் தமிழில் இல்லாததெல்லாம் தமிழில் இடம் பெற வழி செய்ய வேண்டும் – உடனடியாகச் செய்ய வேண்டும் என்கிற அளவில் சிந்திக்க வேண்டும்.

மொழிபெயர்ப்புகள் தமிழில் விற்பனையாகாதது தமிழுக்கும் பெருமையல்ல, தமிழனுக்கும் பெருமையல்ல. அந்த நிலையை மாற்றவும் செய்தாக வேண்டும்.

பழசைப் பற்றியே எழுதித் தங்கள் பொழுதையும் நம் பொழுதையும் புதுசாக எதுவும் சொல்லாமல் போக்கிக் கொண்டிருப்பவர்களை, சமூகத்திலும் அறிவுலகத்திலும் பகிஷ்கரிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இந்த பகிஷ்கரிப்பில் நல்லது போய்விடக்கூடாது. தனித் தன்மையுள்ள சிருஷ்டிநோக்கு அடிபட்டுவிடக்கூடாது. கதாகாலக்ஷேபம் (கால விரயம்) பற்றி இலக்கியப் புல்லுருவிகள் இவை மட்டும் புறக்கணிக்கப்பட வேண்டும்.

நல்லதைத் தெரிந்துகொள்ளப் பயிற்சி எப்படி வரும்? நல்லது என்று நம்பப்படுவதைப் படித்துப் படித்துத்தான் தெரிந்து கொள்ள முடியும்.

இலக்கியத்தில் ரசனை வளருவதே நல்லதைப் படித்துத்தான்.

முதல் நூல்களைப் பற்றிப் போதிய அறிவில்லாமல் விமர்சனங்களை மட்டும் படித்துவிட்டு எழுதுவதனால் இலக்கியத்துக்கு லாபம் இராது – நிச்சயமாக இராது.

விமர்சனத்தின் நோக்கமே இலக்கியத்தின் சிறப்புகளை எடுத்துக் காட்டுவதற்குத் தான். அதை விடுத்து, நூலை மறந்துவிட்டு, இலக்கிய விமர்சனம் செய்வது அவசியமில்லாத ஒரு காரியமாகும்.

உலக இலக்கிய இயக்கம் வளருவதற்கு, வறட்டு விமர்சனம் – நூலைப் படித்து ரசிப்பதில் ஈடுபாடு கொள்ளத் தெரியாத விமர்சனம் எதிரியாகும். ஒரு நூல் நல்ல நூலா என்று படித்துத் தெரிந்து கொள்வதற்கான பயிற்சி முதல் நூல்களைப் படித்தால் ஏற்படுமே தவிர, எத்தனை விமர்சன நூல்களைப் படித்தாலும் ஏற்படாது.

ஆகவே உலக இலக்கிய இயக்கம் என்று சொல்லப்படுவதில் அதிகமாக விமர்சன நூல்கள் இடம் பெறாது. ஒன்றிரண்டு இருக்கலாம். மற்ற எல்லா இலக்கியத் துறைகளிலுமே உள்ள நல்ல நூல்கள் அறிமுகம் இன்றைய வாசகன் ஒவ்வொருவனுக்குமே தேவையாகும்.

இலக்கியாசிரியனுக்கு இந்த அறிவு தேவையா? நான் எழுதுவதற்கு எதுவும் படிப்பது அவசியம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது என்று சில ஆசிரியர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.

இது பற்றி இரண்டு அபிப்பிராயங்கள் சொல்லலாம். படிக்காத மேதைகள், கலைஞர்கள் இருக்கலாம் தான். ஆனால் கலைக்கும் சிருஷ்டிக்கும் படிப்பு உதவுகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இரண்டாவது விஷயம் – இலக்கியாசிரியனும் மனிதன் தானே! உலகத்திலுள்ள இன்பங்களிலே படிப்பும் படித்ததை அனுபவிப்பதும் ஒன்று தானே! அதை வளர்த்துக் கொள்வதால் நஷ்டமில்லை. மனிதனுக்குள் ஒரு முழுமை வளருகிறது.

அந்த அளவில் பார்த்தால், படிக்காத இலக்கியாசிரியன் குருடனைப் போல கிடைக்கக் கூடிய ஓர் இன்பத்தை, அவன் கைக்கும் கண்ணுக்கும் மனசுக்கும் சுலபமாக எட்டக்கூடிய இன்பத்தை இழந்து விடுகிறான்.

படிக்கப் பயிற்சி செய்து கொள்ளாத இலக்கியாசிரியன் சில சமயம் மட்டமானதையும் உயர்ந்தது என்று எண்ணி ஏமாந்துவிடுவான்.



தன் எழுத்தில் மட்டும் அல்லாமல் மற்ற எழுத்திலும் தரம் பார்க்க அவன் அறியாது இருந்துவிடுவான். அதற்காகவேனும் படிக்கப் பயிற்சி செய்துகொள்வது இலக்கியாசிரியனுக்கும் நல்லது – மற்ற வருக்கும் நல்லது.

மொழிபெயர்ப்புகள் எந்த மொழியில் அதிகமாக வருகின்றனவோ அந்த மொழிதான் தாராளமான வளம் காட்டுகிறது என்பது இலக்கிய விமர்சகர்கள் ஒரு மனதாக ஏற்றுக் கொள்கிற ஒரு விஷயமாகும்.

உதாரணமாக, ஆங்கிலத்தில் இலக்கிய வளம் பிரமாதமாக இருந்த முதல் எலிஸபெத்தின் காலத்தில் ஏராளமான மொழிபெயர்ப்புகள் தோன்றின. அவை மிகவும் தரமான மொழிபெயர்ப்புகளாகவும் இருந்தன.

உதாரணமாக, இன்றும் ஆங்கில மொழியில் உலகத்து மொழிகளில் வருகிற சிறந்த நூல்கள் எல்லாமே அப்போதைக்கப்போது மொழிபெயர்க்கப்பட்டு வருவதினாலேயே ஆங்கில இலக்கிய வளம் பெருமைப்படக்கூடிய அளவில் உயர்ந்திருக்கிறது.

மொழிபெயர்ப்புகள் இரண்டு விதங்களில் ஒரு மொழிக்கு உபயோகமாகின்றன. (ஒன்று) நமக்கு. முக்கியமாகத் தமிழ் (மற்றும் பல இந்திய மொழிகளிலுதான்) உள்ள கிணற்றுத்தவளை மனப்பான்மையைப் போக்க உதவுகின்றன. (இரண்டு) இப்படித்தான் எழுத வேண்டும் என்பது போல, இப்படியும் எழுதலாம், அப்படியும் எழுதலாம் என்று தரத்தை, உத்தியை உத்தேசித்து மாறுபட்ட கருத்து நோக்கங்களுக்கு மொழிபெயர்ப்புகள் வழி வகுத்துத் தருகின்றன.

மொழிபெயர்ப்புகள் எப்படியிருக்க வேண்டும் என்பது அடுத்த கேள்வி. அதாவது அவை தமிழேயாகிவிட வேண்டுமா அல்லது முதனூலின் குணாதிசயங்கள், மொழிச் சிறப்பு அம்சங்கள் திகழ்வதாக இருக்க வேண்டுமா என்பது கேள்வி.

என்னைப் பற்றிய வரையில், மொழிபெயர்ப்பு நூல்கள் முழுத் தமிழ் நூலாகிவிடாமல் மொழிபெயர்ப்பு நூல்களாகவே இருந்தால் தான் தமிழுக்கு அதனால் லாபம் என்று தோன்றுகிறது.

முழுவதும் தமிழ்ப்படுத்தி விடுவதால் மொழி வளத்துக்கு அடிகோலிய மாதிரி ஆவதில்லை என்று எண்ணுகிறேன். முதனூலின் மொழிக்குரிய சிறப்பு அம்சங்கள் மொழிபெயர்ப்பிலே அப்படியே இடம் பெற வேண்டும் என்றே நான் கருதுகின்றேன்.

“கண்ணே மணியே கன்றுக்குட்டியே” என்று கொஞ்சுவது தமிழ் மரபு என்றால் நார்வேஜியன் நாடகாசிரியர் அவர் ஊர் வழக்கப்படி “அணில் குஞ்சே பெட்டைக் கோழியே” என்பதை மாற்றியமைப்பது தவறு என்றே நான் எண்ணுவேன்.

பின்னது தமிழ் மரபுக்கொவ்வாது என்று சொல்லி ஒதுக்கி விடுவது சரியல்ல. தமிழ் மரபு பின்னதையும் மொழிபெயர்ப்பு என்கிற அளவில் ஏற்றுகொள்கிற மாதிரி இடம் தரத்தான் வேண்டும்.

மொழிபெயர்ப்புகள் ஏராளமாக வரவேண்டும். அவை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய அபிப்ராயபேதம் இருக்கலாம். ஆனால் ஒரு முதனூலில் ஈடுபாடும் பக்தி சிரத்தையும் உள்ள மொழி பெயர்ப்பாளன் ஒரு நூலை மொழிபெயர்க்கும்போது, அதன் கௌரதைக்கோ இலக்கியத் தரத்துக்கோ ஹானி வராமல்தான் மொழிபெயர்க்க முன் வருவான்.

ஈடுபாடுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்று விட்டுவிடலாம். பணத்துக்காகவோ, பவிஷுக்காகவோ, முன் பின் கேள்விப்படாத ஓர் ஆசிரியரை மொழிபெயர்க்க முன் வருகிற கூலிகள்தான் முதனூல் கெட்டு விடுகிற அளவில் மொழிபெயர்ப்புச் செய்வார்கள். இது ஓர் அடிப்படையான உண்மை. இப்சனை மொழி பெயர்க்க, இசனைப் பற்றிக் கேள்விப்பட்டிராத ஆசிரியரை, பேரா சிரியரைக் கூப்பிடு முன் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் யோசனை செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

எந்தெந்த நூல்களைத் தமிழுக்குக் கொண்டுவருவது என்பது பற்றியும் சிந்தனை அவசியம்.

ஒருவர் வாசித்து ஈடுபட்டு அனுபவிக்க எந்த நூலையுமே ஒருவர் – அவருக்கு வசதியும் மொழிபெயர்ப்பதில் ஆவலுமிருக்குமானால் – மொழி பெயர்க்க வசதி செய்து தருவது அவசியமாகும்.

இன்றுள்ள நிலை மாற வேண்டும். மொழிபெயர்ப்பு நூல்கள் அவசியமா என்று பேராசிரியர்கள் கேட்கிறார்கள். மோலியேரும் முராஸகியும் ஷேக்ஸ்பியரும் தமிழில் எதற்கு? படிக்கக்கூடியவர்கள் ஆங்கிலத்திலோ எந்த மொழியிலோ படித்துக்கொள்ளட்டும் என்கிறார்கள்.

வங்க, கலிங்க, பஞ்சாப, ஸிந்தி, மராட்டி, குஜராத்தி, மலையாள, ஆந்திர இலக்கியங்கள் தெரியவில்லை. எதற்காக ஐரோப்பிய மற்றும் சீன ஜப்பானிய இலக்கியங்களைக் கட்டிக் கொண்டு நாம் மாரடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இதற்கு பல தினுசாகப் பதில் சொல்லலாம். இந்த மொழிகள் பற்றி இலக்கியத் தரமான மதிப்பீடு இல்லாத காரணத்தால் தமிழில் தரம், தரமல்லாதது என்கிற பாகுபாடு ஏற்படவில்லை. ஆகவே தெரிந்துகொள்ள, மற்ற உலகமொழி இலக்கியங்கள்போல, இது அவசியமில்லை என்று சொல்லலாம்.

எனினும் இருப்பதில் சிறந்ததைத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். இந்தியப் பகுதி என்பதால் மட்டும் அல்ல – உலகப் பகுதிப் பகுதி என்பதனால், உலகப் பகுதியில் இடம் பெறக்கூடிய அளவில் இந்த மொழிகளிலெல்லாம் என்ன எழுதப்பட்டிருக்கிறது சரிவர நமக்குத் தெரியவில்லை.

இதைத் தெரிந்து கொள்வதற்கே நமக்கு உலக இலக்கிய மொழி பெயர்ப்புகள் வேண்டும். அவை தரம் தெரிந்துகொள்ள நமக்கு வழிகாட்டும்.



இந்திய மொழிகளில் உள்ளது பற்றித் தெரிந்துகொள்ள வேண டாம் என்று யாரும் சொல்லவில்லை. ஓரளவுக்கு பகைப் புலம் சூழ்நிலை இரண்டையும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அத்துடன் உலக இலக்கியத்தில் உள்ளதில் சிறந்ததையும் தெரிந்து கொண்டால்தான் அவற்றிற்கே உள்ள இடத்தை; தரத்தால் ஏற்படுகிற இடத்தைக் கண்டு கொள்ள இயலும்.

உலகில் சிறந்த நூல்கள் என்று எதை எதைத் தேர்ந்தெடுப்பது என்பது அடுத்தபடியாக நமக்கு ஏற்படக் கூடிய பிரச்னை.

ஏற்கனவே கூறியபடி பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந் தில் உலகத்துச் சிறந்த நூறு நூல்களைத் தேர்ந்தெடுக்க முயற்சிகள் நடைபெற்றன. அதே மாதிரியாகச் சமீபகாலத்தில் உலகத்து அடிப்படை இலக்கியங்களைப் பற்றி ஒரு முயற்சி அமெரிக்க சர்வ கலாசாலைகள் ஆதரவில் நடைபெற்றது.

அதையெல்லாம் முன்மாதிரியாகக் கொண்டு, உலக இலக்கியத்தி லிருந்து வரவேண்டியது என்று இருநூறு முந்நூறு நூல்கள் பட்டியல் தயாரித்துக் கொண்டு ஆவன செய்வது முதல் தேவையாகும்.

அதேபோலத் தமிழில் சிறந்ததை உருவாக்கி அளிக்கவும் முயற்சி கள் செய்யப்பட வேண்டும். இந்த முயற்சிக்குத் தர விமர்சனம் இன்றியமையாததாகும்.

பழசு பற்றியும், புதுசு பற்றியும் தரவிமர்சனம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இன்றும் அது செய்யப்படாவிட்டால் பண்டித – பேராசிரியர்கள் கையில் அகப்பட்டுத் தமிழ் சில ஆண்டுகளிலே – சில தலைமுறைகளிலே – நசித்துவிடும்.

இலக்கியத்தில் நல்லதும் உண்டு, நல்லதல்லாததும் உண்டு. கவிதை யில் தரமானதும் உண்டு – தரமல்லாததும் உண்டு.

இரண்டையும் பழசு பற்றிய வரையில் கண்டுகொள்ள தமிழில் இன்று வரை ஒரு முயற்சியும் செய்யப்படவில்லை. புதுசு பற்றியோ சொல்லவே வேண்டாம்.

சாகித்ய அக்காதெமிக்காக இன்றைத் தமிழ் இலக்கியம் பற்றி எழுதத் துணிந்து முன் வந்த பேராசிரியர் உதாரணம் – தமிழில் தர விமர்சனம் செய்யப் பேராசிரியர்களுக்கு நிச்சயமாகத் தைரியம் வராது என்பதற்கு.

இந்தமாதிரி – அதாவது இந்தப் பேராசிரியரது மாதிரியான எக் காலத்துக்கும் பொதுவான விமர்சனம் செய்வது என்பது, தான் பட்டுக்கொள்ளாமல், நமக்கேன் வம்பு, இலக்கியம் எக்கேடு கெட் டால் என்ன என்கிற மனப்பான்மையுடன் விமர்சனம் செய்வதுதான் சாகித்ய அகாதெமி அழைத்தால் கூட அந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்கிவிடுவது தான் – இன்றுள்ள நிலைமையாக இருக்கிறது.

இந்த நிலைமை மாற வேண்டும். எவ்வளவு வெறுப்பான விஷய மானாலும் அதுபற்றி அபிப்பிராயம் சொல்லித் தரவும் பெறவும் செய்ய வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறது.

ஏதோ விவாதங்கள் தவறான காரியம் – எல்லோருக்கும் உகப்பதை, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதைத்தான் சொல்ல வேண்டும் என்று ஒரு மனப்பான்மையை நம்மிடையே வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

உலக இலக்கிய அறிவு வளர வளர விவாதங்களும் பல கோணங்களில் நின்று பார்க்கவும், பார்த்து நாம் காண்பதை உள்ளபடி சொல்லவும் பழக்கம் நமக்கு ஏற்படும்.

தமிழை மட்டும் படித்து ஜெரித்துக் கொண்டிருந்தால், ஆமாம் போடவும் ஒரு பிரமை தட்டிப் போன அளவில் திருப்பித் திருப்பி ஒன்றையே சொல்லவும் தான் வரும்.

அந்த ஒன்றும் விசேஷமானதாகவும், உருப்படியானதாகவும் இராது. புதுமையானதாக வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்காது.



# பயிற்சி வேண்டும்

இலக்கியத் தரம் உயர வாசகர்களும், விமர்சகர்களும் போதும் – ஆயிரம் இரண்டாயிரம் பேர் தரமறிந்தவர்களாக இருந்தால் போதும் என்று சொல்லலாம்.

தரம் அறியப் பழகிக்கொள்வது எப்படி என்றும் கொஞ்சம் கவனிப்பது அவசியமாகிறது.

தச்சு வேலைக்கோ, கொத்தனார் வேலைக்கோ போக வேண்டுமானால் ஓரளவுக்கு ஒரு நபருக்குப் பயிற்சியும் தேர்ச்சியும் வேண்டும் என்று எல்லோரும் ஏற்றுக்கொண்டு விடுவார்கள். ஆனால் படிப்பதற்கும், படித்ததை ரசிப்பதற்கும் படித்ததில் தரம் கண்டு கொள்வதற்கும் ஒரு பயிற்சி, தேர்ச்சி வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல என்று நினைக்கத் தோன்றுகிறது.

பேனா பிடித்தவன் எல்லாம் எழுத்தாளன். ஏதோ, ஒரு பத்திரிகையில் எந்தக் காலத்திலோ, ஏதோ எப்படியோ எழுதி வெளியிட்டு விட்டவன் எவனும் இலக்கியாசிரியன் என்று எண்ணிக் கொள்ளுகிற ஜனநாயக யுகம் இது.

"என் நாவல்களை, வாராவாரம் நான் எழுதுவதைப் பத்தாயிரக் கணக்கில் ஜனங்கள் விரும்பிப் படிக்கிறார்கள். நான் எழுதுவது இலக்கியம் அல்லவாம். யாரும் படிக்காத, யாருமே விரும்பிப் படித்துப் புரிந்து கொள்ளாத அவர் எழுதுவது தான் இலக்கியமாம்!" என்று தொடர்கதை ஆசிரியர்கள் என்னைக் குறை கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

"இந்த வாரத்து என் நாவல் பகுதியைப் படித்துவிட்டு ஒரு நூற்றியிருபது அன்பர் கடிதங்கள் வந்தன. அவர் நாவல் எழுதுகிறபோது ஒரு வாரம்கூட எண்பது கடிதங்களுக்கு மேல் வரவில்லை. நானே பெரிய எழுத்தாளன்" என்று தமிழ்நாட்டுத் தொடர்கதை ஆசிரியர்கள் கொக்கரித்து ஒருவருக்கொருவர் சவால் விடுவதையும் நான் கேட்டிருக்கிறேன்.

குறிப்பிட்ட ஒருவரின் பெயரைச் சொல்லி "அவர் தொடர்கதை எழுதும்போது, இந்தப் பத்திரிகையின் இதழ்கள் ஓர் ஐயாயிரம் அதி

கம் விற்கின்றன – ஆகையால் அவருக்குக் கிராக்கி – அவரே பெரிய எழுத்தாளர்" என்றும் சொல்லுகிறார்கள்.

இப்படியெல்லாம் சொல்வது இலக்கிய மதிப்பீடா என்று கேட்டால் – நெருக்கிப் பொது ஜனத்தையோ, இதைப் பெருமையாக சொல்லிக்கொள்கிற எழுத்தாளர்களையோ கேட்டால் அவர்களும் 'இது இலக்கிய மதிப்பீடு அல்ல' என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

மனித மனம் – பண்படாத மனித மனம் – ஆபாசத்தைப் பொது வாக விரும்புகிறது. கேட்டால் ஆபாசம் என்று ஒப்புக் கொள்பவனும் கூட ஆபாசமானதை விரும்பிப் படிக்கிறான். ஓர் ஆசிரியர் அத்தியா யத்துக்கு ஓர் ஆபாசப் பாரா சேர்த்துவிடுகிறார் என்பதற்காக ஓர் ஆசிரியனைப் பொது ஜனம் விரும்பிப் படிக்கிறது.

மனித மனம் சிரமப்பட்டு புரிந்து கொள்வதைவிடச் சுலப மானதை விரும்புகிறது. இன்ப முடிவுகளையே நாடுகிறது. பழக்கப் பட்டதையே நாடுகிறது.

பக்குவப்படாத மனித மனம் மட்டமானதை விரும்புகிறது. வயது வந்து கொண்டிருப்பவர்களின் சேஷ்டைகளில் ஒன்று – பழைய குமுதத்தையும் கல்கியையும் ஆனந்தவிகடனையும் வாங்கிப் பார்த் தால் தெரியும் – அனந்த லக்ஷ்மிக்கு மீசை ஒட்டியிருக்கும் – க்ருஷே வுக்குப் புடவை கட்டியிருக்கும் – பொட்டிட்டிருக்கும். சுருட்டுப் பிடிக் கும் ஒருவருக்கு பட்டை பட்டையாக விபூதி போட்டிருக்கும் – நாம் இட்டிருக்கும் இந்த மாதிரியாக வயது வராதவர்களின் சேஷ்டை களை உயர் ஹாஸ்யமாகப் பாவித்து நம் பத்திரிகைகளில் பல வெளி யிடுகின்றன.

அதே லெவலில் உள்ள நாவலாசிரியர்கள் பலர், பலவிதமான சேஷ்டைகள், சுவாரசியங்களைத் தங்கள் கதைகளில் சேர்த்துப் பலரு டைய கவனத்தை ஈர்க்க முயலுகிறார்கள்.

அது போகட்டும் – ஆயிரக்கணக்கானவரின் மனத்தை ஈர்ப்பது தான் இன்றைய இலக்கியத்தில் சிறந்ததா? பலர் பாராட்டுவது தான் சிறப்பானதா?

இலக்கியத்தின் தரம், அடிப்படை அம்சம் எல்லாம் பாராட்டுக் கும், பொது ஜன மனத்தை ஈர்ப்பதற்கும் அப்பாற்பட்டது.

எப்படி, எந்த அளவில் இலக்கியம் உருவாகிறது; எழுத்தில் இலக் கியம் அல்லாதது எது என்பதைக் கண்டு கொள்ளத்தான் வாசகனுக் கும் விமர்சகனுக்கும் பயிற்சி தேவைப்படுகிறது.

இந்தப் பயிற்சியும் தேர்ச்சியும் படிப்பால், இலக்கிய நூல்களில் பரிச்சயத்தால் வரவேண்டிய ஒரு விஷயம். தானாகவே தெரிந்து உழைத்துக் கற்றுகொள்ளவேண்டிய ஒரு விஷயம்.

ஓடுகிற போது படிக்கிற வாசகர்களும், தனக்கு லாபகரமானது எது என்று நினைத்து நிதானித்து தீர்மானித்து அபிப்பிராயம்



சொல்லுகிற விமர்சகனும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ மாட்டார்கள். தீர்மானமான உழைப்புத் தேவை வாசகனுக்கு. அப்படி உழைக்க இஷ்டமில்லாதவர்கள் – பொழுது போக்குக்காக மட்டும் படிப்பவர் கள் – இலக்கியத்திற்கு இழுக்கே தவிர வேறு அல்ல.

"படிப்பது இன்பம் பயக்க வேண்டும்" என்று படிப்பது தவறா? என்று சிலர் பதறிக் கேட்டார்கள்.

உழைப்பிலே இன்பங் காண முடியாது என்று எண்ணுகிறவர்கள் மனிதர்கள் அல்ல. உழைப்பிலே தான் இன்பங் காண இயலும். அந்த இன்பமே உயர்ந்தது. தரமானது. இலக்கியத்தில் மட்டும் அல்ல – வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலுமே அதுதான் உயர்வானது.

## விமர்சனம் என்றால் என்ன?

**வி**மர்சனம் என்றால் என்ன?

விமர்சிப்பது. குற்றங்குறை கண்டு பிடிப்பது. நிறைகளை எடுத்துச் சொல்வது என்று வார்த்தைக்கு அகராதி அர்த்தம் கண்டு சொல்லிப் பயன் இல்லை.

விமர்சனம் என்கிற வார்த்தையைத் தமிழ்ப்படுத்தி திறனாய்வு என்று சொல்லி திறன் சொல்வது என்று சொல்லியும் பயன் இல்லை.

இலக்கியத்தில் கவிதை என்பது போல, நாடகம் என்பது போல, நாவல் என்பது போல, சிறுகதை என்பது போல, விமர்சனம் என்பதும் இலக்கியப் பரப்பிலே ஒருதுறை.

இந்தத் துறையின் முக்கிய அடிப்படை அம்சங்கள் என்னென்ன என்று அறிய முற்படுவது நல்லது.

முதலில் விமர்சனம் என்பது மதிப்புரை என்று சொல்லப்படுவதினின்றும் மாறுபட்டது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் நாவலுக்கும் தொடர்கதைக்கும் உள்ள சம்பந்தம் தான் விமர்சனத்துக்கும் மதிப்புரைக்கும் உண்டு. நாவல், விமர்சனம் இரண்டும் இலக்கியத் துறைகள். தொடர்கதை, மதிப்புரை இரண்டும் பத்திரிகைச் சரக்கு. தொடர்கதை என்பது நாவல் போன்ற சரக்கு; மதிப்புரை என்பது விமர்சனம் போன்ற சரக்கு – இரண்டும் போலி.

கவிதை எழுதுவதற்கு, நாடகம் எழுதுவதற்கு, நாவல் எழுதுவதற்கு, சிறுகதை எழுதுவதற்கு ஒரு பயிற்சியும் தேர்ச்சியும் தேவை என்பது போல விமர்சனம் எழுதுவதற்கும், செய்வதற்கும் ஒரு பயிற்சி, தேர்ச்சி தேவை.

இந்தப் பயிற்சி இந்தத் தேர்ச்சி உலக இலக்கியத்தில் செய்யப்பட்டுள்ளதில் சிறந்ததையெல்லாம் படித்துத் தெரிந்துகொள்வதினால் விளைகிற விஷயமாகும்.

தெரிந்து சொல்கிறது என்று சொல்லுகிறபோது அதைப் பற்றியெல்லாம் எழுதப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்வது என்று அர்த்தம் இல்லை. அவற்றையே நேரடியாகத் தெரிந்துகொள்வது என்றுதான் அர்த்தம்.



சிறுகதையைப் பற்றி விமர்சனம் செய்ய முற்படுகிறவனுக்கு சிறுகதை இலக்கியம் – தமிழ் அல்லது குறிப்பிட்ட ஒரு மொழியில் உள்ளது மட்டும் போதாது. உலகம் பூராவிலும் உள்ளது பூராவும் ஓரளவு நேரடியாகத் தெரிந்திருக்க வேண்டும்.

நாவல் பற்றி, நாடகம் பற்றி, கவிதை பற்றி விமர்சனம் செய்யவும் இப்படித்தான்.

அதனால்தான் உலகத்தில் நல்ல விமர்சனம் குறைவாக இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் நல்ல விமர்சகனாவதற்கு அசுர சாதகம் – சங்கீதத்தில் உள்ளதை விட அதிகமாக – தேவையாக இருக்கிறது.

மதிப்புரை செய்ய இந்தப் பயிற்சி – தேர்ச்சி தேவையில்லை. பத்திரிகையாளர்கள் மொழி பெயர்ப்பது போல் வாக்கியம் எப்படி முடியப் போகிறது என்று முழுக்கப் படித்துக்கொள்ளாமலே முதல் பகுதியை மொழிபெயர்க்கத் தொடங்கிவிடலாம். அதேபோல மதிப்புரை எழுதப் பத்திரிக்கைத் தேவையை உத்தேசித்து எது வேண்டுமானாலும் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம்.

விமர்சனத்துக்கும் கவிதைக்கும் போல, நாடகங்களுக்கும் நாவல்களுக்கும் போல, ஒரு பர்ஸனாலிடி – ஒரு தனித்துவம் – ஒரு முழுமையான தத்துவ தரிசனமும் தேவையாக இருக்கிறது.

இந்த தனித்துவமும் தத்துவ தரிசனமும் இல்லாவிட்டால் விமர்சனம் குறைபாடுள்ளதாகத்தான் இருக்கும்.

எந்த ஆசிரியனையும் நூலையும் விமர்சனம் செய்யும்போது அதுவும் அவனும் அந்தத் துறையில் காட்டியுள்ள சாதனை எப்படி என்பது மட்டுமின்றி மரபுக்கு அப்பாற்பட்டும் உலக மொழிகளில் அத்துறையில் செய்யப்பட்டிருப்பதற்கும் எப்படி உறவு பூண்டிருக்கிறது என்று கண்டு சொல்ல வேண்டும்.

வரிவரியாக எடுத்து கதாகாலக்ஷேப முறையில் வியாக்கியானமோ அலசலோ செய்து கொண்டிருப்பதால் விமர்சனம் பிறந்து விடாது.

ஒட்டு மொத்தமான படிப்பின் விளைவாகத்தான் ஒரு நல்ல விமர்சகனின் அபிப்பிராயங்கள் கணிசமான அளவுக்கு அவற்றைப் படிப்பவர்களைப் பாதிக்க இயலும்.

நல்ல நூல் என்று நல்ல விமர்சகன் சொல்கிறபோது தன் அபிப்பிராயங்களை மட்டும்தான் அவன் சொல்கிறான் என்பதில்லை – தனது தத்துவ தரிசனத்துக்கே தனது தனித்துவத்துக்கே உருத்தருகிறான் அவன். தன் இலக்கிய அறிவு பூராவையும் ரசனை பூராவையும் பணயம் வைத்து காலம் செய்ய இருக்கும் காரியத்தைச் செய்து முடிக்கிறான்.

காலத்தின் போக்குக்கு விசேஷ உருத்தருவதே அவன் செய்யும் விமர்சனம்தான்.

விமர்சனத்தின் எல்லைகளையும் அளவுகோல்களையும் அந்தந்த விமர்சகனின் தனித்துவமும் தத்துவ தரிசனமும் விதிக்கிறது. அதை மீறி எதுவும் செய்துவிடமுடியாது.

தமிழ் போன்ற விமர்சனத்துக்குப் பழக்கப்படாத இலக்கியங்களில், மொத்தமாகக் கீழைநாட்டு இலக்கியங்களில் பூராவுக்குமே இந்த அபிப்பிராயம் பொருந்தும். விமர்சனம் என்று பாட புத்தக தத்துவங்கள், பற்றி இலக்கிய வல்லுநர்கள், சதா கால சோம்பல் பொழுது போக்குகள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. இவைதான் உயர்ந்தது என்று எண்ணிவிடுகிறார்கள் பாமரர்கள் – பத்திரிகைக் கதைகளை சிறுகதைகள் என்று எண்ணி ஏமாந்துவிடுகிற மாதிரி.

இலக்கியப் போக்கின் நுட்பத்தையும் தொடர்ச்சியையும் அறுபடாத மரபையும் மரபுக்கு ஒரு கணு சேர்க்கப்படுவதையும் கண்டு சொல்வதே விமர்சனத்தின் முடிவாகும்.

விமர்சனத்தில் ஒரு நோக்குத்தான் உண்டு என்பதில்லை. பலதரப்பட்ட, பலவிதமான, அடிப்படைகளில் வித்தியாசப் பட்ட நோக்குகள் பலவும் உண்டு.

சமுதாய வளர்ச்சி, அரசியல், தத்துவம், மதம், பொருளாதாரம், பலவிதமான, அடிப்படைகளில் வித்தியாசப்பட்ட நோக்குகள் பலவும் உண்டு.

சமுதாய வளர்ச்சி, அரசியல், தத்துவம், மதம், பொருளாதாரம், பண்பாடு என்று பல அடிப்படைகளிலிருந்து எதையும் விமர்சனம் செய்யலாம். ஒருவரே பல கோணங்களிலிருந்து ஒரு நூல் ஓர் ஆசிரியனின் ஒரு போக்கு இது பற்றி விமர்சனம் செய்ய இயலும்.

இத்தனை நோக்குகளும் சரியானவைதான். சரியானவை அல்லவும்தான். அதாவது இந்த நோக்குகள், கண்ணோட்டங்கள் எல்லாம் உண்டு என்பதுடன் இன்னும் பல நோக்குகளும் கண்ணோட்டங்களும் அவசியம் என்பதையும் உணர்ந்து விமர்சனம் செய்ய முற்பட வேண்டும்.

அப்போதுதான் இலக்கிய விமர்சனம் சிறப்பானதொரு இலக்கியத் துறையாக அமைய இயலும்.

கல்கி நினைவுப் பேச்சுக்கள் என்று சென்னை சர்வகலாசாலை ஆதரவில் பேராசிரியர் அ. சீனுவாசராகவன் ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிகள் என்று மூன்று நாட்கள் பேசினார் கோபாலகிருஷ்ண பாரதி, ஜோதி ராமலிங்கர்; வேத நாயகம் பிள்ளை, கிருஷ்ணப் பிள்ளை, சுந்தரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி இந்த ஆறு கவிகளையும் பற்றி பேசினார். கோபாலகிருஷ்ணபாரதியையும் சுப்பிரமணிய பாரதியையும் பற்றிய வரையில் சுவாரஸ்யமாகப் பேசினார் என்றும் மற்றவர்களைப் பற்றித் தகவல்கள் தந்த அளவில் பேச்சு பயனுள்ளதாக இருந்தது என்றும் சொல்லலாம்.



சென்னை சர்வகலாசாலை வரலாற்றுத்துறை இலாகா ஏற்பாடு செய்திருந்த தென்கிழக்கு ஆசிரியாவில் ஆரியமும் திராவிடமும் என்பது பற்றிய பேச்சையும், இங்கு குறிப்பிடலாம். பேசியவர் பேராசிரியர் ஏ. எல். பாஷம். இனவேற்றுமையைக் குறிப்பதாக இவ்வார்த்தைகளை இன்று ஏற்பது சரியல்ல – இன்று அவை மொழி வித்தியாசங்களைத் தான் குறிப்பிடும் என்றும் தான் டாக்டர் ஹொரலின் முடிவுகளைப் பூராவும் ஏற்காமல், ஹரப்பா நாகரீகத்தில் திராவிட அம்சங்கள் அதிகமாக இருந்தன என்று சொல்லலாம் என்றும் கூறினார் பாஷம். இந்திய ஒருமைப்பாடு, ஒரே நாகரீகம் என்பது சமீபத்தில் தோன்றிய சிந்தனை, சரித்திர நோக்கில் என்றும் கூறினார்.

இலக்கிய விமர்சனம் எப்படி அமையக்கூடும் என்பதற்கு இவை உதாரணங்கள்.

# விமர்சனத்தின் நோக்கம்

இலக்கியத்தில் சமீபகாலத்திய சாதனைகளையும் நமது பாரம்பரியத்தின் சாதனைகளையும் அறிந்துகொள்ள நமக்கு விமர்சனம் உபயோகப்பட வேண்டும்.

இலக்கிய விமர்சனத்தின் பயன் ஒரு நூலை அணுகி அணுகி அலசி அதன் அம்சங்கள் அறிந்துகொள்வது அல்ல. அந்த நூலை சரித்திரப் பார்வையிலே அதன் இடத்தில் வைத்துக் காணவும், அந்த நூலை அனுபவிக்கவும் உதவ வேண்டும். இந்த இரண்டுமே முக்கியமான அடிப்படை விமர்சன நோக்கங்கள்.

இலக்கிய விமர்சனத்துக்கான அடிப்படையைத் தருவது நூல்களை அனுபவித்து அனுபவித்துப் பண்பட்ட உள்ளமும் அறிவும்தான்.

பல்லாயிரக்கணக்கான நூல்களிலே ஒரு பத்திருபது முப்பது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து அனுபவிக்க விமர்சனம் உதவ வேண்டும்.

விமர்சகன் ஆழ்ந்தும் படித்திருக்க வேண்டும் – பரந்தும் படித்திருக்க வேண்டும்.

முதல்நூல் அறிவில்லாத, அனுபவமில்லாத விமர்சகர்களால் இலக்கியத்துக்கு எவ்விதப் பயனும் இராது.

பயனுக்குப் பதில் அவர்களால் குழப்பமே உண்டாகும். அவர்களும் குழம்புவார்கள். பிறரையும் குழப்புவார்கள். தெளிவு குறையும்.

விமர்சனத்தில் மிகவும் பயனுள்ளது என்று சொல்லக்கூடியது. "நான் படித்து இதை அனுபவித்தேன் – நீங்களும் படித்து அனுபவியுங்கள்" என்று சொல்வதுதான்.

ஒரு குறிப்பிட்ட நூலில் தான் இன்னின்னது கண்டேன் என்று சொல்வது இரண்டாம் பக்ஷம்தான். ஒருவர் ஒரு நூலில் கண்டதைப் போல வேறு ஒரு பத்துப் பங்கு வேறு ஒருவரால் காண முடியும். ஒருவர் காண்பது எதையுமே மற்றவரால் காண முடியாமலும் இருக்கலாம்.

அலசல் விமர்சனம் விமர்சகனின் கெட்டிக்காரத்தனத்தைப் பொறுத்தது. அனுபவத்தை ரசனையைப் பொறுத்தது அல்ல.

அலசல் விமர்சனம் எப்போதும் பூரணமற்றதாகத் தான் இருக்க முடியும்; பூர்த்தியேயாகாது.



குறிப்பிட்ட ஒரு நூலில் ஆயிரக் கணக்கான குறை அம்சங்களைக் காணலாம்; நிறை அம்சங்களும் கண்டுகொண்டே போக முடியும்.

பற்றுவரவு கணக்குப் போல கணக்குப் போட்டு நேர் செய்து கொள்ள இயலாது இதில்.

மேலை நாடுகளில் இலக்கிய விமர்சனம் அதிகமாக வளர்ந்து உருப்படியான காரியங்கள் செய்யாததற்குக் காரணம் அது ஆரம்பத்திலேயே அலசல் காரியங்களில் இறங்கிவிட்டது தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

இரண்டாயிரம் வருஷத்து மரபு இருந்தும் மேலை நாடுகளிலும் கூட இலக்கிய விமர்சனம் அவ்வளவாகப் பிரமாதமாக வளர்ந்து விடவில்லை. அளவில் வளர்ந்துவிட்டது; தரத்தில் வளரவில்லை.

இந்திய மரபிலே இலக்கிய விமர்சனம் அனுபவ விமர்சனமாகச் சிறிது தூரம் நகர்ந்துவிட்டு, மேலே செல்லாமல் நின்றுவிட்டது.

விமர்சனத் துறையில் வளர்ச்சிக்கு ஏராளமாக இடம் இருப்பது போலவே தோன்றுகிறது.

சிறுகதையும், நாவலும், கவிதையும் ஓரளவுக்கு வளர்ந்து பூரணத்வத்தை எட்டிவிட்டன. இனி வளர்ச்சி சாத்தியமில்லை என்று சொல்கிற அளவில் இன்றுள்ளதாக மேலை நாட்டு விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

விமர்சனத் துறை அப்படி அல்ல; ஒரு ஹென்றி ஜேம்ஸை ஒதுக்கிவிட்டால் விமர்சனத் துறையில் சிருஷ்டித் தரமான சாதனை இன்னும் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இலக்கிய விமர்சன ரீதியாகக் கவனிக்கும்போது கூட இலக்கியத்துக்கு அப்பாற்பட்ட விஷய மனத்தினால்தான் ஒரு இலக்கியம் – ஒருநூல் நிலைக்கிறது என்று டி.எஸ்.எலியட் போன்ற கவிஞர் – விமர்சகர்கள் உணர்ந்துகொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த இலக்கியத்துக்கு அப்பாற்பட்ட விஷயகனமும் எப்படி இலக்கியத்தில் வருகிறது. வந்து, உருப்பெறுகிறது என்று காண வேண்டியது இலக்கிய விமர்சனத்தின் நோக்கம்.

இந்த விஷய கனத்தை உணர்ந்துகொள்ள இந்தியச் சிந்தனை இந்திய விமர்சகனுக்கு உதவக்கூடும் என்பதே என் நம்பிக்கை.

இலக்கியத்தைப் பற்றியும், வாழக்கை பற்றியும் திடமான சித்தாந்த அடிப்படையிலான நம்பிக்கைகள் தேவையில்லை. ஆனால் ஒரு நோக்கு, ஒரு பார்வை அவசியமாகிறது. அது இலக்கிய நோக்காக இலக்கியப் பார்வையாக இருப்பது அவசியம். அதில்லாவிட்டால் எதுவுமே சாத்தியம் அல்ல – எதுமே புலனாகாது.

எனது அனுபவமும், அந்த அனுபவத்தில் ஆனந்தமும் எப்படி ஏற்படுகிறது என்று அறிந்துகொள்ளச் செய்யப்படுகிற முயற்சியை – இலக்கியத்திலானால் விமர்சனம் என்றும், வாழ்க்கையிலானால் தத்துவதரிசனம் என்றும் சொல்கிறோம்.

தெரிந்தோ, தெரியாமலோ கடைப்பிடிக்கிற ஒரு தத்துவம் மனிதனாகப் பிறந்துவிட்ட ஒவ்வொருவனுக்கும் அவசியமாகிறது.

அதே அளவில் இலக்கியத்தில் விமர்சனமும் அவசியமாகிறது.

அதில்லாவிட்டால் வளர்ச்சி சாத்தியமில்லை; அனுபவமே சாத்தியமில்லாமல் போனாலும் போய்விடும்.

அலசல் விமர்சனம் வளர வளர இலக்கிய அனுபவம் சாத்தியமில்லாமல் தான் போகும்.

அலசல்விமர்சனத்துக்கு ஒரு அடிப்படை நோக்கம் அவசியமில்லை. வார்த்தைப் பந்தல் போதுமானது.

இலக்கிய அனுபவத்தை சாத்தியமாக்குகிற இலக்கிய விமர்சனத்தை வளர்த்துக்கொள்ளப் பாடுபட வேண்டும்.



## இலக்கியாசிரியனும் வாசகனும்

35338

**வா**சகன் ஒருவன் இருக்கிறான் என்கிற நினைப்பில்லாமலே தான் சிருஷ்டிகர்த்தா தன் நூல்களை எழுதுகிறானா? அப்படியிருந்தால் எதற்காக எழுதுகிறான்? என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு நூல், கவிதை, கதை, எதுவானாலும், சிருஷ்டியாகும் போது அதன் பயனோ பலனோ லாப நஷ்டக் கணக்கோ வாசகர்கள் நினைப்போ இலக்கியாசிரியனுக்கு இருப்பதில்லை என்பதுதான் உண்மை.

நல்ல இலக்கியாசிரியன் எவனைப் பற்றியும் இதுவே உண்மை. சிருஷ்டி செய்த பிறகு, பிரசுரம், வாசகன் எல்லா நினைப்பும் உண்டு தான். லாப நஷ்டக் கணக்கும் உண்டுதான்.

சிருஷ்டி இலக்கியம் உள்ளத்தில் திரண்டு எழுகிற ஓர் உணர்ச்சியின் அரிப்பில் ஏற்படுகிறது. சிருஷ்டி செய்யாவிட்டால் நினைவு தீராது என்பது உண்மை. தோளில், உள்ளத்தில், மூளையில் பிரக்ஞையில் ஏறிவிட்ட ஒரு சுமையை இறக்கி விட்டு மீண்டும் பொறுப்பின்மையை அடையவே இலக்கியாசிரியன் இலக்கிய சிருஷ்டியில் ஈடுபடுகிறான்.

இலக்கியத்தின் தன்மை அது. முடிவோ ஆரம்பமோ நடுவோ யாருக்காகவும் எதற்காகவும் மாறாது; மாற்றப்படாது. அதன் தவிர்க்க முடியாத – தப்பமுடியாத தன்மை அதிலேதான் இருக்கிறது.

விமர்சகன் அப்படியில்லை. ஒரு நூலைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது எதிரில் ஒருவனை – யாருக்காகச் சொல்லுகிறோம் என்று ஒருவன்ன – உருவகப்படுத்திக் கொண்டுதான் எதுவும் சொல்லுகிறான். ஒருவனுக்கு ஒருவன் சொல்வதை உலகம் பூராவும் ஒட்டுக் கேட்கிறது – நல்ல விமர்சகனானால்.

பத்திரிகையாளன் விஷயமும் வேறு. அவனும் தன் வாசகர்கள் – குறிப்பிட்ட ஒரு கூட்டத்தினரை மனத்தில் கொண்டுதான் எழுதுகிறான். அந்தக் கூட்டத்தினரைத் திருப்திப்படுத்த முயலுவதே அவன் நோக்கம். அவன் எதிர்பார்க்கிற பயன். இலக்கியாசிரியன் எந்தக் குறிப்பிட்ட வாசகனையும் கூட்டத்தையும் மனத்தில் கொண்டு எழுது

வதில்லை. எழுத வேண்டிய அவசியம், அரிப்பு, அர்ஜ், வேகம் ஏற்படுகிறது – எழுதினான்.

இலக்கியாசிரியன் தன் வாசகனைப் பற்றி எண்ணத் தொடங்குகிற நேரத்திலே அவன் சிருஷ்டியில் ஏகாக்கரம் ஒன்றிப்பு அற்றுவிடுகிறது. அவன் சிருஷ்டியின் தரம் குறைந்துவிடுகிறது. அவன் நோக்கு இரண்டாகிவிடுகிறது.

உண்மையில் இலக்கிய சிருஷ்டி என்பது யார் கண்ணிலும் படாமல் ரகசியத்தில், தனிமையில் நடப்பது. நடந்து முடிந்துவிட்ட பிறகு வாசகர் விமர்சகர்கள் யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் அதுபற்றிச் சொல்லலாம். இலக்கிய சிருஷ்டி நடந்துவிட்ட பிறகு இலக்கியாசிரியனும் கூட அதனின்றும் விலகித் தூரத்திலேதான் நிற்க வேண்டியதாக இருக்கிறது.

இலக்கியாசிரியன் வாசகனைத் தேடுவதில்லை. நல்ல வாசகன் தான் இலக்கியாசிரியனைத் தேடுகிறான். இது எவ்வளவு உண்மை என்று சற்றே சிந்தித்துப் பார்த்தால் விளங்கும்.

நல்ல இலக்கியாசிரியர்கள் எங்கே எங்கே என்று தேடுகிற கூட்டம் இன்று தமிழ்நாட்டில் அதிகம் இல்லை; ஏற்படவேண்டும்.

✖



# பத்திரிகைத் தரம்

**த**ரமற்ற பத்திரிகைகளும் பத்திரிகை எழுத்துக்களும் நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம் மக்கள் கவனத்தையும், நேரத்தையும் கவர்ந்த வண்ணமாக இருக்கின்றன. உலகம் பூராவிலும்தான் – தமிழ்நாட்டில் மட்டுமல்ல. இரண்டு லட்சம் மூன்று லட்சம் என்று விற்பனையாகிற பத்திரிகைகளை வைத்துக் கணிக்கும்போது தமிழ்நாட்டில் லட்சக் கணக்கான வாசகர்கள் படிப்பதற்கு விஷயம் தேடி அலைவது தெரிகிறது.

பத்திரிகைகளில் வெளிவருவதே இலக்கியம். வெளிவருவது எல்லாமே இலக்கியம் என்கிற நம்பிக்கையை வளர்க்கப் பத்திரிகைகளும் பாடுபடுகின்றன என்பதைக் காண்கிறோம்.

இலக்கியத்தரமானது – உயர்ந்தது வேறு, பத்திரிகைத் தரமானது வேறு என்கிற எண்ணம் ஏற்படாதவாறு இலக்கிய அறிவு, அளவுகோல்கள் போதாத தமிழ்நாட்டிலே நியாயமற்ற அளவில் தரக் குறைவுக்கு, ரசக் குறைவுக்கு, ருசிக் குறைவுக்கு வழி செய்துவிடுகின்றன பத்திரிகைகள்.

பணத்துக்காக எழுதுவதும், மக்கள் விரும்பிப் படிப்பதற்காக எழுதுவதும் வேறு பல நாடுகளிலும் மொழிகளிலும் உண்டுதான். அப்படி எழுதுவதில் தவறும் இல்லை. ஆனால் அதை இலக்கியம் என்று எண்ணி எழுதியவர்கள் ஏமாறுவதில்லை; வாசகர்களை எண்ணும்படி ஏமாற்றுவதுமில்லை.

போலியும் கலப்படமும் – பட்டணத்து நெய் போன்ற சரக்குகள் நமது வாழ்விலே கலந்திருப்பது போலவே, நமது கலைகளிலும் இலக்கியத்திலும் போலியும் கலப்படமும் அதிகமாகவே கலந்துவிட்டன.

இலக்கிய அறிவை, இலக்கிய அளவுகோல்கள் பற்றிய ஆனா, ஆவன்னாவை ஓர் ஆயிரம் பேர்வழிகளுக்காவது கற்றுத்தர இப்போது ஒரு சிறு கோஷ்டியினராவது முனைந்து முன்வராவிட்டால் நிலைமை வெகு மோசமாகிவிடும்.

மேலைநாடுகளில் பத்திரிகைகள் அதிகம்கூட விற்கவில்லையா? இரண்டு லட்சம் மூன்றும் லட்சம் என்பது பெரிய தொகையா என்று

கேட்கலாம். ஆனால் மேலை நாடுகளில் போல இலக்கியத் தரமானது என்று அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளாத ரீடர்ஸ் டைஜஸ்டு போன்ற பத்திரிகைகளும்கூட விஷயங்களைச் சேகரித்துத் தருவதிலும், ஓர ளவுக்காவது ஓர் அடிப்படைத் தர நேர்த்தியை எட்டுவதிலும் காண் பிக்கிற சிரத்தையையும் நமது தமிழ் பத்திரிகைகளில் 'சிறந்தவை' கூடக் காண்பிப்பதில்லை.

இந்த சாதாரணப் பத்திரிகைகளைத் தவிர, இலக்கியத் தரமான பல சில்லரைப் பத்திரிகைகளையும்கூட அமெரிக்க ஆங்கிலப் பொது மக்கள் தரமறிந்து ஆதரிக்கிறார்கள்.

இலக்கிய வட்டத்துக்கு இதுவரை கிடைத்திருக்கிற ஆதரவை நோக்கும்போது இரண்டு விஷயங்கள் தெளிவாகவே தெரிகின்றன. தமிழிலும் இலக்கியத்தரமான பத்திரிகைகளுக்கு இடம் இருக்கிறது; அதை வளர்க்க வேண்டிய அவசியமும் சூழ்நிலையும் இன்று இருக்கிறது.

இரண்டு மூன்று லட்சம் தரமறியாத வாசகர்களை விட இலக்கியத் தரம் அறிந்த இரண்டாயிரம் வாசகர்கள் மேல் அது ஒரு லட்சியம் – ஒரு குறிக்கோள் என்கிற நம்பிக்கை உலகெங்கும் இலக்கியத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிறது. அதுதான் புதுத் தமிழ் இலக்கியத் துக்கும் உயிர்தரும்.

பண்டித பேராசிரியர்கள் சமாதி கட்டி முடித்துவிட்ட தமிழ் இலக்கியம், மாஸ் பத்திரிகைக்காரர்கள் ரத்தஞ் சாக அடித்துக் கொண்டிருக்கும் தமிழ் இலக்கியம், புத்துயிர் பெறச் சிறுசிறு இலக் கியப் பத்திரிகைகள் பலப்பல தமிழ்நாட்டில் தோன்ற வேண்டும். அது மிகமிக அவசியம்.



# இலக்கிய ரசனை

இலக்கியம் என்று ஒன்று உண்டென்றும் அதில் ரசனை என்கிற அம்சம் ஒரு சிறப்பாக உண்டென்றும் நம்புகிறவர்களுக்காக எழுதப் படுகிற கட்டுரை இது. படிப்பதா? எதற்கு? என்று கேட்பவர்களி லிருந்து, படித்தேன் நன்றாக இருக்கிறது. நன்றாக இல்லை என்று சொல்லுகிறவர்கள் வரையில் உலகில் பலரும் இருக்கிறார்கள். தின சரித் தாள்களைத் தவிர, அந்தத் தாள்களிலும் சினிமாப் பகுதி களையோ, சிரிக்கும் பகுதிகளையோ தவிர வேறு எதையும் படிக்காத வர்கள் உண்டு. படித்த தினசரித் தாள்களையே காலையிலிருந்து மாலை வரை எட்டுத் தரம் படிப்பவர்கள் ஒரே சினிமாவைப் பத்துத் தரம் பார்ப்பவர்கள் போல, நிறையவுண்டு. பள்ளிக்கூடத்துப் பாடப் புஸ்தகங்களை அதிலேயும் சுலபமாக நோட்ஸ்களைத் தவிர பரீட் சைக்குத் தேவையானதைத் தவிர வேறு எதையும் கண்ணெடுத்தும் பாராதவர்கள் உண்டு. "பள்ளிக்கூடம் (அல்லது காலேஜ்) விட்டு வெளியேறிய பிறகு நான் ஒரு புஸ்தகத்தைக் கூடத்திருப்பிப் பார்த்த தும் இல்லை ஸார்" என்று பெருமை பேசி, ஒலிம்பிக் பந்தயத்தில் ரிகார்டு ஏற்படுத்திவிட்ட அளவு பெருமை பாராட்டிப் பேசிக் கொள் பவர்கள் உண்டு "ஏதோ பொழுதுபோக்குக்காக துப்பறியும் நாவல் களைப் படிப்பேன் சார்; அதற்கு மேல் படிப்பதற்கு நமக்குப் பொழுது ஏது? மனம் ஏது?" என்று சற்றுக் குறைபட்டுக் கொள்பவர்களும் உண்டு. கவனித்துப் படிக்க நேரமில்லை. "கடைசிப் பக்கத்தை புரட்டி முடிவைப் பார்த்துவிட்டு இடையில் சுவாரஸ்யம் தட்டுகிற பகுதி களையெல்லாம் விடாது படித்துப் பார்த்திருக்கிறேன் சார். இப்படி சுமார் நூறு புஸ்தகங்கள் படித்திருப்பேன்" என்பார் ஒருவர், "நான் டெஸ் என்கிற ஒரே ஒரு நாவலைத்தான் என் ஜன்மத்தில் படித்திருக் கிறேன். அது போதும் எனக்கு. மற்றப்படி எளிய விஞ்ஞான முறைப் புத்தகங்கள் படித்திருப்பேன்" என்பார் ஒருவர். "பைபிள், கீதை, ராமா யணம், குறள் என்று ஏதாவதொன்றைப் பாராயணம் பண்ணுகிறேன். அது போதுமானதாக இருக்கிறது எனக்கு என்று" சொல்பவர்கள் பலர் உண்டு. 'ஹானி மன்னுடைய ஆர்கனம் போன்ற நூல் உலகி லேயே கிடையாது" என்று சொல்லுகிற இலக்கிய ஆசிரியர்களும் உண்டு.

இவர்கள் எல்லாருமே வாசகர்கள்தான். ஒவ்வொரு வாசகனுக்கும் ஓர் அபிப்ராயம் உண்டு. இலக்கியம் என்பதுபற்றி தினசரி பத்திரிக்கை, ரெயில்வே கைடு, டெலிபோன் டைரக்டரி, இவை நீங்கலாக இலக்கியம் என்று ஒன்று உண்டு என்பது சமீப காலம் வரையில் அபிப்ராயம். ஆனால் சமீப காலத்தில் தினசரிப் பத்திரிகைகளில் பல பகுதிகளும்கூட – கிரிக்கெட் விவரணம், புஸ்தக மதிப்புரை, சினிமா விமர்சனம், நாட்டு நடப்பு அலசல் முதலிய பகுதிகளும் இலக்கியப் பகுதிகளே என்று சொல்லுகிற அளவுக்கு வந்தாகிவிட்டது. பத்திரிகைகளில் வருகிற தொடர்கதை, தொடர் கட்டுரைப் பகுதிகள், தினசரியில்லாத மாத, வாராந்திரப் பத்திரிகைகளில் வரும் மேற்சொன்ன கதைகள் இலக்கியம் அல்ல, என்று சொன்னால் கோபித்துக் கொள்கிற அளவுக்கு நம்மில் பலரும் வளர்ந்திருக்கிறார்கள்.

இவர்களில் யாருக்கு இலக்கிய ரசனை இருப்பதாச் சொல்வது என்பது பிரச்னை. இலக்கியம் என்றால் என்ன? ரசனை என்பது என்ன என்பதும் பிரச்னைகளே. 'ஒரு குறிப்பிட்ட போக்கில்' நூல்கள் மொழிகள், வெளியீடுகள் உலகத்தில் பல பாகங்களில் அறிவு, கலை, கலாசிருஷ்டி இலக்கியத் தராதரம், இலக்கியத்தில் பல துறைகள் இவற்றைப்பற்றி எனக்குத் தோன்றுகிற கருத்துக்களை வெளியிடவே இத்தொடரை எழுதுகிறேன். பாடப் புத்தகமாக எழுதவும் உத்தேசமில்லை. மிகவும் அடிப்படையான விஷயங்களிலிருந்து, மேலெழுந்தவாரியான கருத்துக்களிலிருந்து, மிகமிக ஆழ்ந்த நுட்பமான அறிவுக் கெல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்குப் போகக்கூடிய கருத்துக்கள் வரையில் கலாசிருஷ்டி பற்றிய வரையில் சொல்லுக்கு அகப்படாதவை என்று பலரும் மேதைகளும் விட்டுவிட்ட விஷயங்கள் வரையில் எல்லாவற்றையும், எனக்கும் மற்றவருக்கும் உபயோகமான வகையில் குறிப்புகளாக, உரக்கச் செய்யப்படும் சிந்தனைகளாக, எழுதி வருவதாக உத்தேசம்.

வாசகர்கள், நூல்கள், தராதரங்கள் இவற்றையெல்லாம் பற்றிப் பேசும் முன், இலக்கியம் பற்றிப் பொழுதுவாகப் பல விஷயங்களைச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. இலக்கியம் என்றால் என்ன என்கிற கேள்விக்குப் பதில் அல்ல இது; அதைக் கட்டுரைத் தொடர் முடிவில் கவனிக்கலாம். இலக்கியம் என்று நான் எதைச் சொல்லுகிறேன் என்பதை முதலில் தெளிவு செய்துகொள்வது அவசியம் என்று எண்ணுகிறேன்.

**இலக்கியம்**

நான் எதை இலக்கியம் என்று சொல்கிறேன்? இது என்னையே நான் கேட்கிற கேள்வியாக வைத்துக்கொண்டு பதில் அளிக்க முயலுகிறேன்.

நான் அகதா கிறிஸ்டியையும் படிக்கிறேன். ஏர்ள் ஸடான்ஸி கார்டனரையும் படிக்கிறேன். டாஸ்டாவ்ஸ்கியை படிக்கிறேன். பாவை



விளக்கையும் படிக்கிறேன். புதுமைப் பித்தனையும் படிக்கிறேன் மேதாவியையும் படிக்கிறேன். சிரஞ்சீவியையும் படிக்கிறேன் கல்கியையும் படிக்கிறேன். துமிலனையும் படிக்கிறேன். கு. ப. ராஜகோபாலனையும், ஜேன் ஆஸ்டினையும் படிக்கிறேன். பி. எம். கண்ணனையும் படிக்கிறேன். சங்கரராமையும் படிக்கிறேன். சேவற் கொடியோனையும் படிக்கிறேன் கோவி. மணிசேகரனையும் படிக்கிறேன். சுந்தர ராமசாமியையும் படிக்கிறேன். பி. ஸ்ரீயையும் படிக்கிறேன். கி. வா. ஜகந்நாதனையும் படிக்கிறேன். மௌனியையும் படிக்கிறேன். லா. ச. ராமாமிருதத்தையும் படிக்கிறேன். ஜெகசிறபியனையும் தான் படிக்கிறேன். ராஜாராவையும் படிக்கிறேன். ஃபிராங்க் ஓகாநரையும் படிக்கிறேன். ஸான் ஓ காஸியையும் படிக்கிறேன். ஏ. எஸ். ராமனைப் படிக்கிறேன். ப்ராவர் ஜாப்வாலாவையும் படிக்கிறேன். கிருத்திகாவையும் படிக்கிறேன். தி. ஜானகிராமனையும் மாயாவியையும் பாஸ்டர் நாக்கையும் படிக்கிறேன். தாமஸ் மன்னையும் படிக்கிறேன். காஃப்காவையும் படிக்கிறேன். இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம்.

இதில் சிலது எனக்கு இலக்கியத் தரமானதாகப்படுகிறது. சிலது இலக்கியத் தரமில்லாததாகப்படுகிறது. கிருத்திகாவையும் தி. ஜானகிராமனையும், மௌனியையும், புதுமைப்பித்தனையும், கு. ப. ராஜகோபாலனையும், சுந்தர ராமசாமியையும் இலக்கியத் தரமானவர்களாக ஏற்றுக்கொள்கிற என்னால் அகிலனையோ, ஆர்வியையோ, எல்லார்வியையோ, மாயாவியையோ, சிரஞ்சீவியையோ, மேதாவியையோ, ஜெகசிற்பியையோ, கோவி. மணிசேகரனையோ இலக்கியத் தரமாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இதற்கு என்ன காரணம் என்று என்னையே நான் கேட்டுக்கொள்கிறேன். பழைய காலத்தவர் பற்றி இத் தொந்தரவு இல்லை. தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தவிர மற்ற உலக மொழிகளிலெல்லாம் அதாவது ஆங்கிலம் போன்ற பிரெஞ்ச் போன்ற ஜெர்மன் போன்ற மொழிகளில் எல்லாம் இலக்கியமல்லாதது ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றி நிலவிவிட்டு மனிதர் கவனத்தில் நில்லாது மறைந்துவிட்டது. தமிழிலும் சமஸ்கிருதத்திலும் மட்டும் – இது பொதுவாக கிழை நாட்டு மொழிகளுக்கெல்லாமே உண்மையாக இருக்கலாம். மற்றபடி டாஸ்டாவ்ஸ்கியையும், ஜேன் ஆஸ்டினையும் தாமஸ் மன்னையும் ஃபிரான்ஸ் காஃப்காவையும் தரம் பிரித்துக் காண்பது சுலபமாகவே இருக்கிறது.

இலக்கியத்துக்கு – எந்த மொழி இலக்கியமானாலும் அதிலே தரம் உண்டென்றால் உண்டுதானே! தரமல்லாதது என்பது தெளிவாகத் தெரிய வேண்டும் தானே! ஜேன் ஆஸ்டினுக்கும் டிக்கன்ஸுக்கும் அகாதா கிறிஸ்டிக்கும் உள்ள தர வித்தியாசம் சுலபமாகத் தரத்தை விட்டுவிட்டு, இலக்கியம் என்று படைக்கப்பட்டு விட்டதையெல்லாம் அறிந்துகொள்வது சாத்தியமா? முதல் தரமானது. நடுத்தரமானது, மூன்றாந்தரமானது – எல்லாவற்றையுமே அறிந்துகொள்ள இயலுமா?

மொழிகள் – உலகத்திலுள்ள இலக்கிய மொழிகள் எத்தனையோ – அத்தனை மொழி இலக்கியங்களையும் அறிந்து ஒரு அளவுகோல் கொண்டு இன்று தமிழில் வெளிவருவதை அளக்க இயலுமா? சாத்தியமானாலும் அவசியமா என்றெல்லாம் கேள்விகள். அப்படியே கேள்விகளை கிளப்பிக்கொண்டு போனால் ஓர் இடத்தில் நின்று திரும்பி பதில் சொல்லக்கூடிய கட்டம் வரும் என்கிற எண்ணத்துடன் இப்படியே சிந்தித்துக்கொண்டு போகலாம்.

## உலக இலக்கியம்

ஐயாயிரம், ஆறாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆஸ்திரியாவில் கியூனி பார்ம் எழுத்துக்களில் கற்களில் வெட்டப்பட்ட கில்காமெஷ் காவியம் அநேகமாக முழுமையாகக் கிடைத்திருக்கிறது. அது உலகத்தின் ஆதி காவியம்.

வேத காலத்துக் கவிதைகள், மற்றும் ஹிப்ரேய இலக்கியங்களில் மிகவும் பழமையான பல பகுதிகள் இவையும் பூரணமாகவே கிடைத் துள்ளன.

பிறகு ஹோமர், கிரேக்க நாடகங்கள், கிரேக்க சிந்தனை.

சீன சிந்தனை, குருகங், குரு லாவ், புத்தர், கவர், சம்பாஷணைகள், ஹிப்ரேய சிந்தனைகள் – ஏசு உள்பட ஹீப்ரு இலக்கியம் என்று சொல்லப்படுவதெல்லாம்.

சமஸ்கிருத, சீன இலக்கியங்கள்
தமிழ்
அரேபிய சிந்தனையாளர்கள்
கிறிஸ்தவ இலக்கியம்
மத்திய கால ஐரோப்பிய இலக்கியம்
ஜப்பானிய இலக்கியம்; முராஸகி
டான்டே
சாஸர்
ஷேக்ஸ்பியர்
டாஸ்டாவ்ஸ்கி
மார்சல் ப்ரூஸ்ட்

என்று தற்காலம் வரை ஜாய்ஸ், காஃப்கா, ரில்கே, யேட்ஸ், எலியட் என்று வருவோம்.

இதன் பரப்பும் விஸ்தீரணமும், ஆழமும் உயரமும் அதிகம். ஆனால் ஒவ்வொருவரும் தேடிப் படித்திருப்பது அவரவருக்கு உகந்த அளவில் – ஏற்கிற அளவில், ஸஹ்ருதயமான நூல்களைப் படிக்கலாம். என் பட்டியலே என்னைக் காட்டிக் கொடுத்துவிடும். என் நண்பர் களைவிட அதிகமாகவே என் படிப்பு என் மனப்போக்கைக் காட்டு வதாகும்.



இந்தப் பரப்பை உலக இலக்கியம் என்று சொல்லுகிறோம்.

இன்று தமிழில் எழுதப்படுகிற ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு வாக்கியமும், ஒவ்வொரு சிறுகதையும், நாவலும் இந்த மரபில் வரு வது – இலக்கியத்தின் வாரிசு. இந்த மரபையும் வாரிசுத் தன்மை யையும் ஏற்க மறுத்துப் பின்னோக்கிச் செல்கிற – ரியாக்ஷனரி – எந்த எழுத்தையும் என் மனது, கலை அறிவு, அதாவது ரசனை, இலக்கிய மாக ஏற்காது.

சென்ற தடத்திலேயே செல்வது ஆடுதான் – இலக்கியமாகாது. மரபு பிறழ்ந்துவிடக்கூடாது. ஆனால் மரபையும் மீறிவிட வேண்டும். இது கத்திமேல் நடப்பது போன்றுதான். மரபு மீறுவதும். மரபுக்குள் நிற் பதும் ஒரே சமயத்தில் நடப்பதில்தான் கலை இலக்கியம் அழிவின்மை சாத்தியம். இது தெரிந்தும் சாத்தியமாகலாம் தெரியாமலேயும் சாத் தியமாகலாம்.

உலக இலக்கியத்துக்கெல்லாம் ஒருமித்த ஒரு மரபு உண்டா – அந்த மரபு என்ன என்று யாராவது சொல்ல இயலுமா என்பது கேள்வி? பதில் எங்காவது கிடைக்குமா பார்க்கலாம்.

### மரபு

உலக இலக்கியத்தில் பல பகுதிகளில் உலகில் பல்வேறு ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாத இடங்களிலும் காலங்களிலும் பல்வேறு மொழிகளிலும் வளர்ச்சியிலும் தோன்றியுள்ளது – இலக்கியம் என்கிற பிரக்ஞை. சமீப காலத்தில் ஏற்பட்டதுதான் என்று சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு மொழியின் ஆரம்பத் திணறல்களிலுமே ஒரு லட்சிய நோக்கம். இலக்கியம் இருந்து வந்திருக்கிறது. கலை என்கிற உயர்வு ஏற்பட்டு, மறைந்து நினைவுகூர்ந்து, மீண்டும் மறைந்து மீண் டும் ஏற்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது. ஒரு தரத்ததாகவோ ஒரு தொடர்ச்சியினதாகவோ ஒரேவித குறிக்கோள் உள்ளதாகவோ இருக்க வில்லை.

எதற்காக இலக்கியம், கலை, பல்வேறு சமுதாயங்களில் தோன்றி யது என்பது மிகவும் ரசமானதோர் கேள்வி. பதில் சொல்லத்தான் தெரியவில்லை. பதில் எங்காவது உலக இலக்கியத்தில் காணப்படு கிறதா என்று தேடத்தான் வேண்டும். ஒவ்வொரு சமுதாயத்திலும் மனிதக் கூட்டத்தினரிடையேயும் ஒரு ஒரு நோக்கம் ஒரு ஒரு சமயத் தில் ஆட்சி செலுத்தி வந்திருக்கிறது. கட்டுப்பாட்டுக்குள்பட்ட அரசி யல் அதிகாரத்துக்குக் கீழ்ப்படுகிற சமுதாயங்களில் ஒரே ஒரு நோக்க மும் சுதந்தரமான ஜனநாயக சமுதாயங்களில் பல்வேறு நோக்கங் களும் ஏற்பட்டு அவற்றிற்கும் இலக்கியத்துக்கும் உண்டாகிற உறவு முறைகளையும் நோக்கலாம்.

இப்பொழுது சிந்திக்கத் தொடங்குகிறது என்னவென்றால் உலக இலக்கியத்தில் மரபு என்று ஒன்று உண்டா. ஒரு மரபு என்று சொல் வது சாத்தியமா, அந்த மரபு என்ன என்பது பற்றியாகும்.

இலக்கியம் மொழியைக் கொண்டு ஆவது. ஆனந்தம், எக்களிப்பு, வெறுப்பு, கோபம், ஆங்காரம் ஆத்திரம், வேடிக்கை, விளையாட்டு, கிண்டல், கேலி என்று எத்தனையோ பாவங்களை வெளியிட மனிதன் ஆரம்ப முதல் சொற்களை உபயோகித்து வந்திருக்கிறான். இந்தச் சொற்கள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்கி ஏற்றுக்கொண்ட அர்த்தத்தைத் தருகின்றன என்பது மனிதன் செய்துகொண்ட அற்புதமான சிருஷ்டி.

அற்புதம் என்று சொல்லக்கூடிய சொற்களைக்கொண்டு அற்புதங்களை விளைவிக்கிறான் மனிதன். இது இன்றைய விந்தை மாத்திரமல்ல – ஹிட்லரும், ஸ்டாலினும் மட்டும் புதுசாகக் கண்ட உண்மையல்ல. கில்காமெஷ் காலத்துக் கவிதை பற்றி நமக்குத் தகவலில்லை. ஹோமர் காலத்திய கவிதையிலிருந்து உலகத்துக்குப் பழக்கமாகிவிட்ட ஒரு காரியம் இது. அதாவது சற்றேறக் குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கி ஏற்பட்டு வருவது இது.

ராமாயணம் அதற்கும் முந்தி, தொல்காப்பியம் அதற்கும் முந்தி, வேதம் அதற்கும் முந்தி என்கிற சண்டை இங்கு வேண்டாம்.

இலக்கியம் உலக அரங்கில் தோன்றி சற்றேறக் குறைய மூவாயிரம் ஆண்டுகள் ஆகியுள்ளன என்று ஏற்றுக்கொள்ளலாம்.

தவிரவும் ஹோமரை ஆதியாக வைத்துப் பேசுவது, மரபு பற்றிப் பேசுவதில் நல்லது. ஏனென்றால் முக்கியமாக மேலை நாடுகளின் பாதிப்பினால் தான் ஆசிய நாடுகளிலும் கூட இன்று இலக்கியம் என்று சொல்லக்கூடிய அளவில் தோன்றி உருவெடுத்திருக்கிறது.

ஆசிய நாடுகளில் முக்கியமாக இந்தியாவிலும் சீனாவிலும் ஜப்பானிலும் வேறு பல தேசங்களிலும் அவற்றின் மொழிகளில் இலக்கியம் இருந்திருப்பது என்னவோ உண்மைதான்.

அவற்றில் மறுமலர்ச்சி மறுபார்வை ஏற்பட்டதும் ஐரோப்பிய இலக்கிய பாதிப்பினால்தான் என்பதுடன் கலை, இலக்கிய விஷயங்களில் ஒரு தரம் பாதிப்பு இன்றுள்ள இலக்கியத்தையும், இனிவரும் இலக்கியுத்தையும் மரபையும் பாதிக்கவே பாதிக்கும்.

மனிதன் சிருஷ்டித்தது மனம் கொண்டு, கலை உள்ளத்துடன் சிருஷ்டித்தது என்பதுதான் உலக இலக்கியத்தின் ஒருமித்த மரபின் முக்கிய அடிப்படை என்று எனக்குத் தோன்றுகிறது.

நீதி புகட்டலாம். பொழுது போக்காக உதவலாம். மனிதனை உயர்த்த உபயோகப்படலாம். ஆன்மிகத் தேவைகளை வற்புறுத்தலாம். அன்றாடப் போராட்டங்களைப் பெரிதுப்படுத்திக் காட்டலாம். பிரச்சனைகளை எழுப்பலாம். பிரச்னைகளுக்கு முடிவு சொல்லலாம் – ஹோமரும், கிரேக்க நாடக கவிகளும் குருகுங்கும், முராஸகியும், டாண்டேயும், ஷேக்ஸ்பியரும், டாஸ்டாவ்ஸ்கியும், டால்ஸ்டாயும், தாமஸ் மன்னும், மாஹோந்நதமான சிகரங்களில் செய்தவை இவைதான்.



இது பொதுவான மரபு. உணர்ச்சி வசப்படச் செய்வது அந்த உணர்ச்சியைச் சமனப்படுத்துவது இரண்டும் அடிப்படை அளவிலும், ஒதுங்கி நின்று, உலகத்தைத் – தான் சம்பந்தப்படாத பட்டுக்கொள்ளாத அளவில் பார்ப்பதும் கலைஞன் விடாமல் செய்துவந்திருக்கிற காரியம். எல்லாத் துயரங்களும் எல்லாச் சுகங்களும் என் பார்வைக்குட்பட்டவை. ஆனால் நான் எதற்கும் அடிமையல்ல என்பது இலக்கியம் சொல்கிற நியதியாகத் தோன்றுகிறது எனக்கு.

கடவுள் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்துவிட்டிருக்கிறார். அதில் எதையும் மாற்றவோ கூட்டவோ குறைக்கவோ யாருக்கும் அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. எத்தனையோ பேர் முயன்றும் எதுவும் மாற்றம் நிகழ மறுக்கிறது. ஆனந்தமே உருவமாக உலகை அனுபவிப்பதே நாம் செய்யக்கூடியது. அதன் அந்தரார்த்தத்தை, போக்கை, நோக்கைக் கண்டுபிடிக்கக்கூட நம்மால் இயலாது என்று சொல்பவர்கள் தான் நம்மிடையே பலரும்.

கண்டு பார்க்கவும் புரட்சி செய்து மாற்றவும் முயலலாம் என்றும் அம்முயற்சியிலே சிறப்புற்றவர்கள் பலருண்டு என்றும் தெரிகிறது.

இதே போல ஒவ்வொரு கலாசிருஷ்டியும் ஒரு புதுப் பிரபஞ்சம். அதை ஏற்று அனுபவிக்கலாமே தவிர வேறு எதுவும் செய்ய இயலாது என்று இலக்கியம் பற்றிய வரையில் முடிவுகட்டிவிடுவது மரபாகவே இருந்து வந்திருக்கிறது."

சில ஆரியர்களைப்பற்றி அவர்கள் எதனால் இந்த மாதிரி எழுதினார்கள் என்று அலசிப் பார்த்து முடிவு சொன்னவர்கள் உண்டு. அந்த முடிவுகள் திருப்தி தராத முடிவுகளேயானானாலும் அரைகுறையான திருப்தியையும் ஆனந்தமும் அளிப்பவை என்று ஏற்றுக்கொள்கிறோம்.

டிக்கன்ஸின் பிரபஞ்சத்தையும், பால்ஸாக்கின் பிரபஞ்சத்தையும் பார்க்கும்போது கலைச் சிருஷ்டிகள் வேறு ஒரு பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கவே முயல்கின்றன என்றும், எவ்வளவுக்கெவ்வளவு இந்தப் புதுப் பிரஞ்ச சிருஷ்டி உருவாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த இலக்கியாசிரியன் உலக இலக்கிய மரபில் உள்ளவன் என்றும் ஏற்றுக்கொள்கிறோம்.

பரிபூரணமான ஒரு புதுப் பிரபஞ்சத்தைச் உற்பத்தி செய்து தந்தவர் டாண்டே. அவர் பிரபஞ்சத்தில் குற்றங் குறைகள் கிடையாது. அறிவுமயமான பிரபஞ்சத்துக்கு ஈடான இது போன்ற ஒரு பிரபஞ்சத்தை உலக இலக்கியப் பரப்பிலே வேறு ஒருவரும் சிருஷ்டிக்கவில்லை.

டிக்கன்ஸும் பால்ஸாக்கும் சிருஷ்டித்த பிரபஞ்சம் நம்முடைய நாம் வாழுகிற பிரபஞ்சத்தைப் போலவே அபூர்த்தியானது. பூரணமாக அறிந்துகொள்ள இயலாதது. ஒரு தத்துவச் சரடு இல்லாதது. ஷேக்ஸ்பியரின் பிரபஞ்சத்திலே ஒரு தத்துவச் சரடு சொல்ல முடியாவிட்டாலும் ஒரு அற்புதமான கவிதைச் சரடு ஓடுகிறது.

இந்தப் பிரபஞ்சமும் நாம் நன்கு அறிந்த நம்மோடு தினப்படி உருவாகிற பிரபஞ்சம். இப்படியே தனித்தனியாக டால்ஸ்டாய் ஓர் உலகையும் டாஸ்டாவ்ஸ்கி ஓர் உலகையும், ஜேன் ஆஸ்டின் தான் கண்ட இங்கிலாந்தின் உலகத்தையும், செல்மா லாகர்லெவ் ஒரு புராண காவிய உலகத்தையும், ப்ரூஸ்ட் ஒரு மன உலகத்தையும், ஜாய்ஸ் அறிவு மயமாக இயங்கும் ஓர் உலகத்தையும், ஸார்த்தர் ஒரு 'இருந்து வாழும்' உலகத்தையும், சிருஷ்டித்திருக்கிறார்கள். இவ்வளவு உலகங்களும் தனித்தனித் தனித்தன்மை பெற்றவை.

இத்தனையும் எப்படிச் சாத்தியமாகிறது என்று மயங்குகிறோம். சாதாரண நடைமுறையில் வாழ்க்கையில் ஒருவர் நோக்குவது போல மற்றொருவர் அதே விஷயத்தை நோக்குவதில்லை. ஒரு சிறிய விஷயத்தைப் பற்றிப் பல பேருடைய கருத்துக்கள் பல தினுசாக உள்ளன.

இலக்கியம் இந்த வேறுபாட்டையும் இந்த வேறுபாட்டிலேயே காணக் கிடைக்கிற ஒரு ஒற்றுமையையும் மனிதத் தன்மையையும் கோடிட்டுக் காட்டுகிறது.

உலக இலக்கியத்தின் பொது மரபு உண்மையும் அழகும் என்று இருவார்த்தைகளில் கூறி விடலாம்.

ஆனால் இந்த உண்மை, அழகு இரண்டு வார்த்தைகளும் கூட அவரவர் இஷ்டத்துக்கு அர்த்தம் பண்ணிக் கொள்கிற அளவுக்கு விரிந்த இடம் தர கூடியவையாகும்.

எனினும் ஒருவர் எழுதியதைப் படிக்கும்போது அதில் உள்ள உண்மை இவ்வளவு, அதில் உள்ள அழகு இவ்வளவு என்று ஒவ்வொரு வாசகனும் எடைபோடுவதை வைத்துத்தான் இது இலக்கியம், இது இலக்கியமல்ல, போலி என்று முடிவு கட்டுகிறான்.

உலக இலக்கியப் பரப்பின் அகல நிற ஆழங்களை அறிந்தவனுக்கு இது சுலபமாக கைவருகிற காரியம். இவ்வித அடிப்படையைக் கொண்டே இலக்கிய ரசனை ஏற்பட்டதாகவோ ஏற்படவில்லை என்றோ சொல்ல முடியும்.

இதையெல்லாம் அப்படியொன்றாம் தெளிவாகவும் யாரும் ஏற்றுக் கொள்ளும்படியாகவும் சொல்லிவிட முடியும் என்று நான் நம்பவில்லை. அப்படிச் சொல்லிவிட்டேன் என்று மார்தட்டிக் கொள்ளவும் இல்லை நான். அப்படிச் சொல்லிவிடுவேன் என்றும் எனக்குத் தைரியம் இல்லை. எனக்குத் தோன்றுவதைச் சிந்தித்துச் சொல்கிறேன். எவ்வளவு தூரம் அந்த வழியில் சிந்தித்து எந்தப் பக்கம் உங்களால் செல்ல முடியுமோ செல்லுங்கள் என்கிற அடிப்படையில் இலக்கிய மரபு பற்றிப் பொதுவாக உண்மை அழகு என்கிற இரு தத்துவங்கள் ஆட்சி செலுத்துகின்றன என்று சொல்கிறேன்.

குறிப்பிட்டுப் பல துறைகளிலும் மரபுகள் படிப்படியாக அம்சங்களில் வித்தியாசப்படுகின்றன. காலதேச வர்த்தமானத்துக்கேற்ப வித்தியாசப்படுகின்றன.

O



இலக்கியத்தில் ரசனை என்பது தானாக ருசி பார்த்து ருசி பார்த்து அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று. எத்தனை சொல்லிக் கொடுத்தாலும் வராது பள்ளியில் படிப்பதுபோலப் படித்து மனப்பாடம் பண்ணிக்கொள்வது அல்ல அது.

பல நூல்களைப் படித்துப் படித்து ருசியை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

எந்த நூல்களைப் படித்து எப்படி வளர்த்துக்கொள்வது சாத்தியம் என்பது பிரச்னை.

நூலளவே யாகுமாம் நுண்ணறிவு என்பது ஒரு வழிகாட்டியாகும்.

டால்ஸ்டாயின் நூல்களைப் படித்துப்படித்து டால்ஸ்டாய் ஆகிவிட முடியாது என்பது ஒன்று – டால்ஸ்டாய் ஆக வேண்டுமா என்பது இன்னொன்று.

ஆனால் டால்ஸ்டாயைப் படித்துப் படித்து அன்பு என்னும் சிந்தனையையும் வேறு பல மகோந்நதமான சிந்தனைகளையும் பழக்கப்படுத்திக்கொள்ளலாம்.

ஷேக்ஸ்பியர் என்கிற இலக்கியாசிரியனைப் படித்து மனிதனின் சாதாரணத்தையும் அசாதாரணத்தையும், மேன்மையையும், தாழ்மையையும் புரிந்துகொள்ளலாம்.

டாஸ்டாவ்ஸ்கியின் நாவல்களைப் படித்துப் படித்து மனிதனின் ஆன்மிகத்தின் மேற்போக்கையும் – கீழ்ப்போக்கையும்தான் – உணரலாம்.

இப்படி எத்தனை எத்தனையோ இன்பங்களை இலக்கியத்தில் ஏற்றி வைத்திருக்கிறார்கள் இலக்கியாசிரியர்கள். அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சுவைக்கக் கற்றுக்கொண்டால் இலக்கிய ரசனை ஏற்பட்டுவிடுகிறது.

தமிழில் (மற்று உலக மொழிகள் எல்லாவற்றிலும் தான்) பல பண்டித பேராசிரியர்கள் பலவற்றைச் சுவைக்கக் கற்றுக் கொண்டிருந்தும் இலக்கிய ரசனை உள்ளவர்களாக இல்லையே ஏன் என்கிற கேள்வி எழுகிறது.

இதற்குப் பதில் சொல்வது அவசியம். ஏனென்றால் தமிழையோ, சமஸ்கிருதத்தையோ, ஆங்கிலத்தையோ, ஜெர்மன் மொழியையோ முறையாகக் கற்றவர்களுக்கு ரசனை அவ்வளவாக இருப்பதில்லை என்பது நாம் கண்கூடாகக் காண்கிற விஷயம் ஆகும்.

இதற்கு ஒரு காரணம் சொல்லலாம். தாங்கள் படித்த தற்கப்பாலும் ரசிக்கத் தகுந்தது இருக்கலாம் என்கிற சிந்தனை முறையாகப் படித்தவர்களுக்கு இருப்பதில்லை. அதுதான் அவர்கள் ரசனையின்மைக்குக் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

டாஸ்டாவ்ஸ்கியை விரும்பிப் படிப்பவன் டால்ஸ்டாயை விருப்பத்துடன் படிக்காதவனாக இருக்கலாம். அதற்காக டால்ஸ்டாயில் இலக்கிய இன்பம் இல்லை என்று ஏற்பட்டுவிடாது.

முறையாகக் கற்க முனைபவர்கள் செய்கிற இது பிசகுதான். தங்கள் கண்ணோட்டத்துக்கு அப்பாற்பட்ட ரசனைப் பிராந்தியங்களும் உண்டு என்பதை மறந்துவிடுகிறார்கள்.

இது தவிர விமர்சனத்தில் அலசல் ரீதியாக எதையோ எடுத்துக் காட்ட முயலுபவர்களும் இலக்கிய ரசனையற்றவர்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

முதல்நூலைவிட – வழி நூல் பற்றி நூல், விமர்சன அறிவுத் தாக்கம் அவர்களுக்கு முக்கியமாகி விடுகிறது. முதல் நூலை மறந்து விடுகிறார்கள்; அல்லது படிக்க வேண்டிய அவசியமே இல்லை என்று எண்ணி விடுகிறார்கள்.



# இலக்கியத் தரம் உயர . . . . .

இலக்கிய தரம் உயர விமர்சகர், இலக்கியாசிரியர், வாசகர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிச் சிந்திப்பது அவசியம். அதற்காக இலக்கியத்துக்கு ஓர் ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பது என்பது சரியல்ல.

விமர்சகர், எழுத்தாளர், வாசகர் என்று மூன்று நோக்குகளிலிருந்தும் பார்த்து, என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றித் தங்களுக்குள் இலக்கியத்தில் ஈடுபாடுள்ள ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தச் சிந்தனைகளை வெளியிடவும் செய்யலாம். ஆனால் அதை எல்லோரும் பின்பற்ற வேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுவது சரியல்ல.

நான் நினைக்கிற அளவில் ரசிகன் பற்றி இது. விமர்சகன் பற்றி இது. எழுத்தாளன் பற்றி இது என்று தெளிவாக சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவிக்கலாம்.

குரு சிஷ்ய பாவத்தில் நான் சொன்னேன். நீ கேள் என்பதோ, என் வழியே உன் வழியாகவும் இருக்க வேண்டும் என்பதோ, தலைவர் – பின்பற்றுபவர் என்பதோ சரியல்ல.

என்னைப் பற்றிய வரையில் என் அபிப்ராயம் சரி. உன்னைப் பற்றிய வரையில் நீ சிந்தித்துக்கொள் என்று கூறுவதுவே விமர்சகனின் முக்கியமான வேலை என்று நான் கருதுகிறேன்.

மேலை நாடுகளில் விமர்சனம் ஓர் இடத்தில் தடைப்பட்டு, அலசல் முறையோடு தேக்கமுற்று, மேலே செல்ல வழியில்லாமல் நிற்கிறது.

இலக்கியத் துறையாக விமர்சனம் இடம் பெற வேண்டுமானால் என் அபிப்ராயம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மற்றவன் அபிப்பிராயமும் என்று ஏற்றுக் கொண்டு சிந்திக்க வேண்டும்.

அதைச் செய்யாமல், அலசல் விமர்சனத்தில் ஈடுபட்டு, முதல் நூலை மறந்துவிட்டு, தமது முக்கியத்துவத்தை தாமே உணர்ந்தவைகளாகச் செயல்படுகிற மேலைநாட்டு விமர்சன முறைகள், சிந்தனைகள் இங்கு தேவையில்லை என்பது என் நினைப்பு.

இந்த விமர்சனத்துக்கும் இலக்கியத் துறையாக ஒரு தத்துவ தரிசனம், ஒரு அஸ்திவாரம் தர முடியலாம்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் இலக்கியத்தின் இன்றையத் தரம் உயர, வாசகர், விமர்சகர், எழுத்தாளர், இன்னின்ன செய்யலாம் என்பதுப்ற்றி இலக்கிய வட்ட வாசகர்கள், எழுத்தாளர்கள் சிந்தித்து எழுதி அனுப்பினார்களானால் அதை ஒரு கருத்துக் கோவையாக ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் இல்லாவிட்டாலும், தொடர்ந்து பல இடங்களில் வெளியிட இயலும்.

இலக்கியத் தரம் உயர, நல்ல நூல்களை அறிந்து கொள்ள, எது இலக்கியம் என்று சிந்திக்க, ஏற்றுக்கொள்ள நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பிரச்னை.

அவர்வர் பதில் அவரவருக்குத்தான் திருப்தி தரும். வேறு யாரும் ஏற்று, சிஷ்ய பாவத்துடன் பின்பற்ற வேண்டும் என்கிற நினைப்பில் லாமல் எழுதி அனுப்பலாம். விவாதப் பாணியில் அல்ல – உரக்கச் சிந்திக்கிற பாணியில்.

✘



# இலக்கியத்தில் பயிற்சி

படிப்பதையும் ஒரு கலையாகப் பயின்றால்தான் அதில் பூரணமான அனுபவத்தைப் பெற முடியும்.

இலக்கியத்தைச் சிருஷ்டிப்பதில் எத்தனை சிரமம் இருக்கிறதோ– அவ்வளவு இல்லாவிட்டாலும் அதில் ஒரு கால்வாசியாவது சிரமம் எடுத்துத் தான் படிக்க வேண்டும்.

ஓடுகிறபோதே படிப்பதற்கும், உறங்கிக் கொண்டே படிப்பதற்கும், நடுவில் ஓர் அத்தியாயம் விட்டுப் போச்சு, பாதமில்லை; அதில் ஆசிரியர் ஒன்றும் பிரமாதமாகச் சொல்லியிருக்கப் போவதில்லை என்று சொல்வதற்கும் தொடர் நாவல்கள் இருக்கவே இருக்கின்றன. மரபுக் கவிதைகள் இருக்கவே இருக்கின்றன.

தமிழில் மட்டும்தான் இப்படி என்பதில்லை. உலகில் உள்ள எல்லா மொழி இலக்கியங்களிலுமே இப்படித்தான்.

லகுவான எழுத்து இலக்கியத்தை விட அதிகமாகத்தான் எங்கும் விலை போகும்.

தவறு அதில் இல்லை. தவறெல்லாம் லகுவானதுதான் இலக்கியம், விலைபோவது தான் நல்ல எழுத்து, தொடர் கதைகள் தான் நாவல் கள் என்று எண்ணிக் கொள்வதில் தான் இருக்கிறது.

இப்படி எண்ணிக்கொள்வதற்கு; வியாபாரிகள் உணவில் கலப் படம் செய்து பணம் சம்பாதிப்பதுபோல சம்பாதிப்பதற்கு மட்டு மென்று தோன்றி, பின்னர் சமய சந்தர்ப்பத்தால் எழுத்துத் துறையில் நிலைத்துவிட்டு, இலக்கியத்துக்குச் சேவை செய்வதாகச் சொல்லிக் கொள்ளும் பெரும் பத்திரிகைகள் தான் காரணம்.

தமிழைப் பற்றிய வரையில் பெரும் பத்திரிகைகள் தான் காரணம் என்று சொல்லுகிற மூச்சிலேயே சிறு பத்திரிகைகள் இல்லாததையும் ஒரு காரணமாகச் சொல்லலாம்.

சிறு பத்திரிகைகள் வியாபார ஸ்தாபனமாக இயங்க முடியாது. ஓர் இலக்கியக் குறிக்கோளுடன், எந்தவிதமான தியாகத்தையும் செய்துதான் சிறு பத்திரிக்கைகள் நடத்த முடியும். இந்தப் பத்திரிகை

கள் எல்லாமும், எல்லாக் காலத்துக்கும் உபயோகமுள்ள சிறு பத்திரிகையாகவும் ஜீவனுள்ளதாகவும் இருக்க இயலாது.

சிறு பத்திரிகையானாலும் அது ஜீவனுள்ளதாக இருப்பதென்பது ஒரு குறிப்பிட்ட குறுகிய கால அளவில்தான் சாத்தியம். அது பிறந்த போதிருந்த வேகம் – ஒரு மூன்று வருஷங்கள் என்று சொல்லுவோமே, இது ஒரு எண்தான்; இதற்குத் தனி அதாரிடி கிடையாது. ஒரு மூன்று ஆண்டுகளில் – ஆரம்பிக்கப்பட்ட நோக்கம், கருத்து வேகம் தேய ஆரம்பித்துவிடுகிறது.

இது ஒரு விஷயம்; அப்படியும் மூன்று வருஷங்கள் கூட நீடிக்காத சிறு பத்திரிகைகள் *1935* – முதல் *1945 – 48* வரை பல இருந்தன. *1948* க்குப் பிறகு அப்படிப்பட்ட சிறு பத்திரிகைகளே *1950* கால கட்டம்வரையில் தமிழில் தோன்றவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாகத் தமிழ் நாட்டில் எழுத்தாளர் என்று சொல்லிக் கொண்டு தலையெடுக்கிற கோஷ்டியிருக்கிறதே அது பற்றி வெட்கப் பட வேண்டிய நிலைதான்.

எழுத்தாளர் என்று சொல்லிக் கொள்பவருக்காக, ஒரு பயிற்சி, ஒரு பண்பு, ஓர் அடிப்படை, எல்லாவற்றிற்கும் மேலாக ஆக்க அளவில் சிந்திக்கும் ஒரு சக்தி இருந்து இயங்க வேண்டும்.

குறிப்பிட்ட பாட்டை விவரித்துப் பொருள் சொல்பவர்களும், ஒரே கதையை (அல்லது நாவலை) திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருப்பவர்களும் தான் நம்மிடையே இன்று பெரும்பாலான எழுத்தாளர்கள்.

தமிழில் மட்டுமல்ல – ஆங்கிலத்திலும் கூட இந்த எழுத்தாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தவறிப் போயும் எதையும் படித்து விட மாட்டார்கள். படித்தது பற்றிச் சிந்திப்பது என்பதோ பூஜ்யம். எதுவுமே கிடையாது.

கதை எழுதச் சொன்னால் ராமன் என்று ஆரம்பித்து எதிர்வீட்டு (அல்லது) பக்கத்து வீட்டுச் சீதையில் முடித்துவிடுவார்கள். ஒரு சிந்தனையை ஆரம்ப முதல் கோடி வரை தொடர்ந்து செல்ல வலுவில்லாமல் ஓடிவிடுவார்கள்.

கருத்துத் திறமோ, உண்மையோ, பயிற்சியோ அற்றவன் எழுத்தாளன் ஆக முடியாது – நிச்சயமாக இலக்கிய எழுத்தாளன் ஆக முடியாது. 'பத்திரிகை எழுத்தாளன்' ஆகிவிடலாம் என்பதை நாம் தான் தினமும் காண்கிறோமே!

கருத்து, உண்மை, பயிற்சி – இவை மூன்றும் இல்லாத எழுத்தாளர் மண்டிக்கிடக்கிற தமிழ்நாட்டிலே பத்திருபது நல்ல இலக்கியாசிரியர்களைத் தேடிப்பிடித்துத் தெரிந்துகொள்வது சிரமமான காரியம்தான்.



அந்தச் சிரமமான காரியத்தைச் செய்துகாட்ட சிறு பத்திரிகைகளோ மதிப்புரை கூறுபவர்களோ இல்லாததுதான் தமிழ் இலக்கியத்தில் இன்றைய வேகமின்மைக்கு, தேக்கத்துக்குக் காரணம்.

ஏதோ சொல்பம் வந்து கொண்டுதான் இருக்கிறது. வராமல் இல்லை என்பது உண்மையே. அது போதாது அளவில் தரத்தில் பாதிப்பில் அது போதாது என்கிற எண்ணம் இலக்கியத்தில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

வந்து கொண்டிருக்கிற சொல்பத்தையும் சரிவரக் கணித்துக் கவனிக்கத் தவறி விடுவோமானால், நாம் நமது காலத்தில் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் தீங்கு செய்தவர்களாவோம்.

இன்றைய எழுத்தில் உள்ள சொல்பத்தையும் பண்டைய மரபின் நிரந்தரமான இலக்கிய அம்சங்களையும், உலக மரபின் உன்னதமான போக்குகளையும் அறிந்துகொள்வது இன்றியமையாத ஒரு விஷயமாகும். இலக்கியத்தில் பயிற்சி இதுதான்.

மறுபடியும் சொல்லலாம் அதை – அதில் தவறில்லை. அனுபவத்தை அதிகரிப்பதற்கே தான் இலக்கிய விமர்சனம் பூரணமாக உபயோகப்பட வேண்டும்.

இந்த அனுபவம் தான் இலக்கியத்தின் நோக்கம் பயன் எல்லாமும் ஆகும்.

ஆகவே இலக்கியத்தில் பயிற்சி என்பது உலகத்தின் சிறந்த நூல்களை விரும்பித் திரும்பத்திரும்பப் படித்து அனுபவித்துக் கொண்டிருப்பது தான் என்று ஏற்படும்.

# இன்றைய இலக்கியத் துறைகள்

கதையும் நாவலும் தான் உங்கள் அபிப்ராயத்தில் இலக்கியமா – வேறு பல துறைகள் இல்லையா என்று பலரும் சொல்கிறார்கள்.

கதையையும் நாவலையும் பற்றிப் பேசுகிற அளவுக்காவது தமிழில் இலக்கிய இயக்கம் இருக்கிறது. மற்ற துறைகளைப் பற்றிப் பேசுகிற அளவில்கூட இல்லையே என்று பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

ஒரு காலத்தில் எல்லா மொழி இலக்கியங்களிலுமே கவிதை ஒன்றைப் பற்றி மட்டுமே பேசி வந்தார்கள்.

தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகள் கவிதை இருந்திருக்கிறது – வேறு எதுவும் இருந்ததாகச் சொல்ல முடியாது.

கவிதையிலேயே பல துறைகள் இருந்திருக்கின்றன. அந்த அளவில் தமிழ் வளம் அதிகம்தான்.

வசனத்தில் நூல்கள் சமீப காலத்தில் – ஓர் இருநூறு ஆண்டுகளுக்கு முன், கிறிஸ்துவ சமய போதகர்கள் தோன்றிய பிறகு தான் – தோன்றிற்று.

அதற்கு முன்னும் வசனம், உரைநடை இல்லையா என்று கேட்கலாம்.

உரை சொல்லும் நடை இருந்ததுண்டு. தனித்துறையாக வசனம் – வீரமாமுனிவர் பரமார்த்த குருகதை என்னும் தனிநூலை இயற்றித் தரும் வரையில்.

பின்னர் பலர் வசன நடையில் சோதனைகள் செய்தார்கள். சாதனை என்று சொல்லக் கூடிய அளவில் இப்ராஹீம் ராவுத்தரின் விக்கிரமாதித்தன் கதைகள், வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார், ராஜமையரின் கமலாம்பாள், அ. மாதவையாவின் பத்மாவதி என்கிற சரித்திரங்கள் (நாவல்கள்) எஞ்சியவை.

இவை தவிர கருநாடக் தேசத்து ராஜாக்கள் கதைகள், ஆனந்தரங்கம் பிள்ளையின் டையரி, ஆறுமுக நாவலரின் புராணங்கள் இவை கவனத்தில் வைக்கவேண்டிய வசன நூல்கள்.



நாடகத் துறையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதிகளிலிருந்தே நிறைய முயற்சிகள் இருந்தன – இன்று வரை நாடகத் துறையில் முயற்சிகள் பல இருக்கின்றன. சாதனைகள் என்று சொல்லக்கூடியவை மிகக்குறைவு.

இருபதாம் நூற்றாண்டிலே பாரதியாரின் வசன இலக்கியங்களும், வ.வே.ஸு. ஐயரின் சிறுகதை, விமர்சன சாதனைகளும், தமிழ்ப் பழமை பற்றியும் எண்ணிக்கையில் அடங்காத பல தரப்பட்ட வசன நூல்களும் தோன்றலாயின.

கவிதைத் துறையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஜோதி ராமலிங்கம் தனியானதொரு முயற்சி, கவிதையோடு கருத்தும், சமூக சமுதாயச் சிந்தனைகளும் அவர் எழுத்திலே பின்னிக் கிடந்தன. ஸ்தாபனரீதியான மத சம்பிரதாயங்களையும் சமூக சம்பிரதாயங்களையும் எதிர்த்து சமுதாய நலம் பேசியவர் அவர். அவருடைய கருத்துக்களுக்கு நாம் இன்று வாரிசாக இருக்கிறோம். இத்துடன் கோபாலகிருஷ்ண பாரதியையும் சொல்லாம்.

அந்த அளவுக்குக் கருத்தும் கவிதையும் ஒருங்கே தோன்றியது. ராமலிங்கத்துக்குப் பின் பாரதியார் ஒருவரிடம் தான்.

பாரதியாருக்குப் பின் கவிதையில் நயம் என்கிற ஓர் அம்சம் மட்டும் பாரதிதாசன், ச.து.சு. யோகியார், தேசிகவிநாயகம்பிள்ளை இவர்களிடம் இருந்தது. கவிதை அதற்கு மேல் வளம் பெறவில்லை.

புதுக்கவிதை முயற்சிகளை புதுமைப் பித்தன், கு.ப. ராஜகோபாலன் இருவரும் – ஓரளவு பாரதியாரின் முயற்சிகளைப் பின்பற்றித் தொடங்கி வைத்தார்கள். சோதனைகள் செய்தார்கள். சாதனைகள் காட்டவில்லை. தொடர்ந்து இத்துறையில் இப்போது பலரும் சோதனை செய்து பார்க்கிறார்கள் – கணிசமான அளவில் சாதனை என்று சொல்ல இப்பவும் இயலாது.

ஆனால் வசனத்துறையில், குறிப்பாக, சிறுகதை, நாவல் என்கிற துறைகளில் சோதனைகள் நல்ல தரமான – கதைகள்; சாதனையும் காட்டியவை.

பிச்சமூர்த்தி, மௌனி, லா. ச. ராமாமிருதம், தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி இவர்களோடு இன்னும் பத்துப் பேரைச் சிறு கதைகளில் சாதன்ன உள்ளவர்கள் என்று சொல்லலாம்.

இது தவிர நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் சாதனை என்றில்லா விட்டாலும் படிக்கும் பத்திரிகைத் தரத்தில் எழுதுகிறார்கள்.

அதேபோல நாவலில் எஸ். வி. வி. தொடங்கி சங்கரராம், சிதம்பர சுப்ரமணியம், ஆர். ஷண்முக சுந்தரம், சி. சு. செல்லப்பா, தி. ஜானகிராமன், க. நா. சுப்ரமண்யம் இவர்களோடு இன்னும் இரண்டொருவரைச் சேர்த்து நாவல்துறையில் சாதனை காட்டியவர்கள் என்று சொல்லலாம்.

விமர்சனத்தில் வ. வே. ஸு. ஐயர் தொடங்கி வைத்த பாதையைப் பின்பற்றாமல் தனக்கென்று ஒரு தனிமையுடன் டி. கே. சி. தமிழ்க் கவிதை அனுபவத்தைச் சாத்தியமாக்கினார்.

விமர்சனமும் இலக்கியத்துறைகளில் ஒன்றுதான் என்று ஏற்றுக் கொள்ள வைப்பதே பெரும் பாடாக இருக்கிறது. எனினும் இதிலும் ஓர் உற்சாகம் தோன்றி ஓரளவு வளர்ச்சி கண்ட மாதிரித்தான் இருக்கிறது.

கட்டுரைகளில் லகுகட்டுரைகள் தோன்றியுள்ளன. ஆனால் போதாது.

ஜீவிய சரித்திரங்கள் என்றால் ஒன்றிரண்டு சொல்லலாம். டாக்டர் சாமிநாதையருடைய மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கி. சந்திரசேகரனுடைய வி. கிருஷ்ணசாமி ஐயர் என்று இருந்தாலும் இத்துறையில் போதுமான வளம் இல்லை.

நாடகங்களில் ஏற்கனவே சொன்னபடி முயற்சிகள்தான்; சாதனைகள் இல்லை.

பத்திரிகைத் துறையில் வளம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் பத்திரிகைத் துறை என்பது ஏதோ ஒரு அளவுக்குத்தான் இலக்கியத் துறைகளில் ஒன்றாகும்.

ஆராய்ச்சித் துறையில் வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கு வாரிசாக இனிமேல்தான் ஏற்பட வேண்டும். ஓரளவுக்காவது திருப்தி தருகிற ஆசிரியர்கள் என்று இந்தத் துறையில் சதாசிவப்பண்டாரத்தார், மயிலை சீனி. வேங்கடசாமி, சாமி. சிதம்பரனார் இவர்களைச் சொல்லலாம். மேலே செய்வதற்கு நிறைய இருந்தும் செய்யத்தான் ஆட்களைக் காணவில்லை.

ஆக, தமிழில் சிறுகதையும், நாவலும் சாதனை காட்டியுள்ள அளவு வேறு இலக்கியத் துறைகளில் சாதனை காணவில்லை. ஆகவேதான் இத்துறைகளைப் பற்றி அதிகம் பேச இடம் இருக்கிறது.

உலக இலக்கியத்திலும் கூட இன்றைய நிலைமை இதுதான். சிறுகதை, நாவல் என்பது பற்றி எழுதப்படுகிற அளவு வேறு துறைகள் பற்றி எழுதப்படுவதில்லை. எனினும் பிற மொழி இலக்கியங்களில் போல் எல்லாத் துறைகளிலும் கட்டுரை, நாடகம், கவிதை (புதுசு, மரபு இரண்டிலுமே) சாதனைகள் காணவேண்டியது மிக அவசியம். சாதனைகள் காணும் நாள் எட்டாக்கையிலில்லை என்று நம்புவோமாக.

**குறிப்பு. இது 1965 – ல் எழுதப்பட்ட கட்டுரை. 20 ஆண்டுகளில் அப்படி ஒன்றும் அதிகமாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை.**



# தேசீய இலக்கியச் சங்கம்

எல்லா நல்ல எழுத்தாளர்களுமே தேசீய இலக்கியாசிரியர்கள் தான். அவரவர் சூழ்நிலையை நல்ல அளவில் கிரஹித்து தன் சிருஷ்டி சக்தியால் உருத்தந்து வெளியிடுபவனே நல்ல எழுத்தாளன். இதில் சந்தேகம் இல்லை.

எல்லா எழுத்துமே ஒரு விதத்தில் பார்க்கப் போனால் பிரச்சாரமேயாகும்.

ஆனால், பிரச்சாரம் என்று எழுதப்படுவதெல்லாம் நல்ல இலக்கியமாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

நல்ல இலக்கியம் ஆசிரியனின் கொள்கைகளைப் பிரசாரம் செய்கிற எழுத்தாக இருக்கலாம் என்பதற்கு மிக நல்ல உதாரணங்களை மேலை நாடுகளிலிருந்து எடுத்துக்காட்டலாம் – அது இங்கு அவசியம் இல்லை.

நமது நாட்டின் பண்பையும், நமது இன்றைச் சூழ்நிலையையும், எதிர்காலத்து நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுகிற அளவில் எழுத்தாளனுடைய எழுத்துக்கள் எல்லாமே தேசீய எழுத்துத்தான்.

பிரச்சாரத்துக்கென்று நல்ல எழுத்தாளர் நால்வர் ஒரு ஸ்தாபனத்துக்குக் கிடைப்பார்களேயானால் அந்த ஸ்தாபனத்துக்கு பொது மக்களிடையே ஆக்கமாக உருப்படியாக சில எண்ணங்களை உருவாக்க உதவுவார்கள்.

இந்தச் சிந்தனைகள் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் சமீபத்தில் சத்தியமூர்த்தி பவனில் கூட்டிய தேசீய இலக்கியாசிரியர்கள் கூட்டம் இரண்டின் காரணமாக என் மனத்தில் எழுந்தவை. அரசியல் வாதிகள் எந்தக் காரணத்தை மனத்தில்கொண்டு எந்தக் காரியம் செய்கிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது என்பது ஒரு பிரசித்தமான சித்தாந்தம். ஆகவே நான் அரசியல்வாதிகளுக்கு யோசனை சொல்வதற்காக இதை எழுதவில்லை. எனக்காகவும் என் போன்ற எழுத்தில் ஈடுபாடுள்ள இலக்கியாசிரியர்களுக்காகவும் நல்ல இலக்கியத்தில் நாட்டமுள்ள வாசகர்களுக்காகவும் இதை எழுதுகிறேன்.

தேசிய இலக்கியம் என்று ஒன்று தனியாகக் கிடையாது. அவசரத் தேவைகளினால் தேசியம் சிலசமயங்களில் விசித்திரமான உருக்கூட எடுக்கமுடியும். இது ஒன்று.

இரண்டாவதாகத் தமிழில் இன்று நன்றாக, உண்மைத் தெளிவுடன் எழுதப்படுவதெல்லாம் தேசிய இலக்கியம்தான் – தேசத்துச் சொத்து தான்.

நல்ல எழுத்து என்பது மக்கள் ஒருமைப்பாட்டையும், பண்டைய – புதிய பண்பாட்டை ஒட்டியும் வருவதாகும். நல்ல எழுத்தாக இருந் தால் அதில் தேசியப் பெருமிதம் இல்லாதிருக்க முடியாது.

உதாரணமாக அரசியல் இயக்கங்களில் எவ்விதத்திலும் சம்பந்தப் படாது ஒதுங்கி இருந்துவிட்டவனும்கூட மகாத்மா காந்தியின் சிந்தனைகளால் பாதிக்கப்பட்டவன் தான். நமது இன்றைய சமுதாய பொருளாதார அரசியல் இயக்கங்களால் பாதிக்கப்பட்டவன் தான்.

சில எழுத்தாளர்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வருவார்கள் – பெரும்பாலான நல்ல எழுத்தாளர்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வரமாட்டார்கள். ஆகவே தேசிய இலக்கிய சங்கம் என்று ஏதாவது ஒரு சங்கத்தை உருவாக்கும் திட்டம் எதுவும் இருக்குமேயானால் அது பொதுவாகச் சில காரியங்களைச் செய்வதற்கு என்று குறிப்பிடப் பட்ட குறிக்கோளுடன் அமைவது நல்லது என்று எனக்குத் தோன்று கிறது.

இந்திய தேசிய இயக்கத்தையும் அதன் சம்பந்தப்பட்ட பெரியவர் களையும் பற்றி ஆதார பூர்வமான, சரித்திர நோக்குடன் தயாரிக்கப் பட்ட பல நூல்கள் நமக்குத் தேவை. எழுத்தாளர்களுக்கு மட்டும்தான் இவை தேவை என்பதில்லை. பொது ஜனத்துக்கும் இதை தேவை.

ஒவ்வொருவர் பற்றி ஒரு நூல் வந்துவிட்டாலும் போதும் என்ப சரியல்ல. ஒவ்வொன்று பற்றியும் பல கோணங்களிலிருந்து ஆராய்கிற நூல்கள் பலப்பல தேவை.

அது தவிர இன்றைய நடப்புகள் பற்றியும் தெளிவாகச் சிந்தித்து எழுதக் கூடியவர்களைக் கொண்டு பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமாகும். இதிலேயும் பல நோக்குகள் அவசியப்படுகின்றன என்றுதான் சொல்லவேண்டும் – விவாதத்துக்குரிய, உறுதிப்படாத பல விஷயங்கள் தெளிவாக அலசப்படல் வேண்டும். நாட்டு நடப்பில் பல அம்சங்கள் பற்றி இலக்கியப் பண்டிதர்கள் இலக்கியத்தில் பல விஷயங் கள் பற்றி மௌனம் சாதிப்பது போல் மௌனம் சாதிப்பது சரியல்ல.

கட்சிச் சார்பற்றது, கட்சிச் சார்பற்றது என்று ஏதோ இல்லாத வொன்றைக் குறித்துப் பெருமைப்படுவதுபோல சொல்லிக் கொள் வதில் சாரமில்லை. காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயே தேசியப் பிரச் சாரம் செய்தால் அது குற்றமா அல்லது தவறாகுமா? வேறு சில கட்சிக்காரர்களுக்கு எதையோ எங்கேயோ ஒளித்து வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது; கட்சிச் சார்பற்றது என்கிற திரையில் கட்சிக்



கொள்கைகளை ஒளித்து வைக்கிறார்கள். அது ஸ்ரீ காமராஜ் கூட்டுகிற கூட்டத்துக்கு அவசியம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

தேசிய இலக்கிய சங்கம் கட்சிச் சார்பற்றதாக இருக்க வேண்டும் (அப்படி ஒன்று உருவானால்) என்று பேசுபவர்கள் இங்கொருகாலும் வேறு எங்கோ ஒரு காலும் வைத்திருப்பார்கள். இங்கும் அங்கும் கிடைப்பதை ஏற்றுக்கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

அதற்கு இடம் தருவது பிரச்சாரத்தின் நோக்கத்தை ஆரம்பத்தி லேயே ஆட்டங்காண விட்டுவிடுவதாகும்.

ஆக்க வேலைகளில், ஒரு பிரசார நோக்கத்துடன் ஈடுபட தேசிய இலக்கியச் சங்கம் ஒன்று அவசியம் என்றுதான் தோன்றுகிறது. அது கட்சிச் சார்புள்ளதாக இருப்பதே நல்லது என்றும் தோன்றுகிறது. அதற்குக் கூடுமானவரை அதிகாரவர்க்க ஆபீஸர் தோரணைகளோ, முக்கியமாகப் பணமோ இல்லாமல் பார்த்துக் கொள்வதும் நல்லது.

ஏதோ நடக்கப் போகிறது. நமக்கும் கொஞ்சம் கிடைக்கும் என்று வந்துவிடக்கூடியவர்கள் அதிகம். பணம் இராது – செய்கிற வேலைக்கு சொல்ப பலனே இருக்கலாம் என்று தெளிவு செய்துவிட்டால் கூட் டம் – அனாவசியக் கூட்டம் – குறைந்துவிடும். வேலை செய்வதில் நாட்டமுள்ளவர்கள் மட்டுமே மிஞ்சுவார்கள்.

தேசிய எழுத்தில் ஆர்வமுள்ளவர்கள் பத்துப் பேர் இருந்தால் போதும் – எத்தனையோ சாதித்துவிடலாம். ஆனால் நல்ல எழுத்தெல் லாமே தேசிய எழுத்துத்தான் என்று ஏற்கனவே சொன்னேன்.

நல்ல எழுத்தாளர்களை, உண்மையான எழுத்தாளர்களைத் தமிழர் கள் என்று தெரிந்து கொள்ளப் போகிறார்கள்?

எப்படித்தான் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்? என்பது வேறு பிரச்னை – பெரிய பிரச்னை.

# படிப்பதும் ஒரு கலை

**ந**ல்ல நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்வதற்கும் ஒரு பயிற்சி அவசியம். எல்லாவற்றையும் கலை, கலை என்று கூறுகிற இக்காலத்திலே இவ்வாறு கூறுவது மிகையாகத் தோன்றலாம். ஆனால் படிப்பதற்கு, படித்ததில் நல்லது எது, நல்லது அல்லாதது எது என்று தெரிந்து கொள்வதற்கு ஒரு பயிற்சி வேண்டியதாக இருக்கிறது.

இந்தப் பயிற்சி எப்படி வரும்?

சொல்லிக் கொடுத்து வருவதில்லை. படித்துப்படித்து – நல்லது கெட்டது இரண்டையும் படித்துப்படித்துப் பரிச்சயம் செய்து கொண்டு தரம் பிரித்துக் காணக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆங்கிலத்திலும், மற்றுமுள்ள ஐரோப்பிய மொழி இலக்கியங்களிலும் கிளாஸிக்ஸ் என்று சொல்லி பலப்பல நூல்களை தேர்ந்தெடுத்து வைத்து விடுகிறார்கள்.

இவற்றை அதிகம் பேர் படிப்பதுகூடக் கிடையாது. அதாவது எல்லாவற்றையும் படிக்க வேண்டும் என்கிற அவசியமும் கிடையாது. பொதுவாக இந்த நூல்களைப் பற்றிய அறிவு மக்களிடையே பரவியிருக்கிறது.

இந்த கிளாஸிக்ஸிலேயும் மட்டம், உயர்ந்தது, முதல் தரமானது என்று பிரித்துக் கொள்கிறார்கள். ஏன், எப்படி, ஒவ்வொரு நூலுக்கு அதனதன் தரம் மதிப்பு ஏற்படுகிறது என்று சொல்வது கூடக் கடினம். ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

இந்த மதிப்பீட்டை வைத்து ஒரு பத்து நூல்களைத் தெளிவாகக் கற்று உணர்ந்தவனுக்கு இன்று வருகிற நூல்களையும் தரம் கண்டு கொள்ளக் கூடிய திறமை ஏற்படுகிறது. எந்த அம்சங்கள் காலத்தை மீறி நிற்கும், எந்த அம்சங்களைக் காலம் அரித்துத் தின்றுவிடும் என்று எந்த நூலைப் பற்றியும் குத்து மதிப்பாக உணர்ந்து சொல்ல முடிகிறது.

இப்படி உணர்ந்துகொள்வதையே விமர்சன மனப்பாங்கு என்கிறோம் – படிக்கும் கலை என்கிறோம்.



தமிழிலும் (சம்ஸ்கிருதத்திலும் தான்) மனப்பாடம் பண்ணுகிற கலை பொதுவாக எல்லோருக்கும் வந்திருக்கிறது. தரம் பிரித்துக் காண்கிற பயிற்சி ஏற்படவில்லை.

தரம் பிரித்து நமது பழைய நூல்களை கிளாஸிக்ஸ் எனவ, எவை வெறும் சக்கை, தட்டை என்று ஒருவரும் பார்ப்பதில்லை. அப்படிப் பார்ப்பது தவறு என்று எண்ணுகிறார்கள். பழசு எல்லாமே ஒரு தரத்து நூல்கள்போல பாவித்துவிடுகிறார்கள்.

அபிராமி அந்தாதியும் ஒன்றுதான் – சேக்கிழார் பெரிய புராணமும் ஒன்றுதான் – திருக்குறளும் ஒன்றுதான் – திருவிளையாடற் புராணமும் ஒன்றுதான் – சிலப்பதிகாரமும் ஒன்றுதான் – மனோன்மணியும் ஒன்றுதான் – மறைமலையடிகளும் ஒன்றுதான் – கம்பராமாயணமும் ஒன்றுதான் – சங்க நூல்களில் எல்லாப் பாட்டுகளும் ஒன்றுதான் என்று, தரம் பற்றி ஒரு அபேதமின்மை ஏற்பட்டிருக்கிறது.

இது ஒழியும் வரை – தராதரம் தெரிய வரும் வரை – இலக்கியம் முன்னேறாது; வளராது. விமர்சன மதிப்பீடுகள் சாத்தியமில்லை; விமர்சன பூர்வமான இலக்கிய அறிவு மழுங்கி விடும்.

பழசைத் தர நிர்ணம் செய்து கொண்டு நல்லது – இரண்டாந் தரமானது – மூன்றாந்தரமானது என்று பிரித்துக் கிளாஸிக்ஸைத் தீர்மானம் செய்து கொண்டு படிப்புக் கலையில் தமிழர்கள் முன்னேற வேண்டும்.

அப்போதுதான் பழைய இலக்கிய அறிவு உயிருள்ளதாக இருக்கும் – உயிரூட்டுவதாக இருக்கும். இப்போதுள்ளதுபோல வெறும் சுமையாக அமையாதிருக்கும். ஆமாம். இன்றையப் பழந்தமிழ் அறிவு வெறும் சுமையாகத்தான் இருக்கிறது. ஒன்றிரண்டு பேரிடத்தில் தவிர, அது கலையாக, உயிருள்ள மரபாக மாற வேண்டும்.

# சோதனைகள்

இலக்கியத்தில் சோதனைகளுக்குள்ள இடம் பற்றிச் சந்தேகம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

ஆனால் வளரும் இலக்கியம் சோதனைகள் செய்து பார்க்காவிட்டால் வளரவே வளராது.

சாதனைகள் செய்துகாட்ட வேண்டிய இடத்தில் சோதனைகள் செய்து தோல்வியுறுவதில் என்ன லாபம் என்று கேட்கலாம்?

சோதனைகள் என்றாலே ஓரளவுக்கு வெற்றி பெறாத முயற்சி தானே என்று கேட்கலாம்.

உண்மைதான். சோதனைகள் வெற்றி பெறுவதென்பது ஆயிரத்தில் ஒன்றுதான்.

அந்த ஒரு வெற்றிக்காக ஆயிரம் சோதனைகளையும் செய்து பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

பழக்கப்பட்டுவிட்ட பாதையில், எல்லோரும் உபயோகித்துத் தேய்ந்துபோன கருத்துக்களை எடுத்துக் கையாளாமல், உபயோகித்து நைந்துபோன உருவங்களை விட்டுவிட்டுப் புதுசு புதுசாக ஏதாவது செய்து பார்க்க வேண்டும் என்று செய்வதையே சோதனைகள் என்று சொல்கிறோம்.

இப்படிச் சோதனை செய்துபார்க்கக்கூடிய முதல் தரமான எழுத்தாளர்கள் ஒரு குறிப்பிட்ட மொழி இலக்கியத்தில் ஒரே சமயத்தில் நாலைந்து பேர் இருப்பது அருமை. இந்த நாலைந்து பேர்வழிகளும் என்ன செய்ய முற்படுகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு அவர்களைக் கௌரவிக்க வேண்டியது இலக்கியத்தில் ஈடுபாடுள்ள ரசிகர்களின் கடமையாகும்.

அவர்கள் சாதனைக்கு அப்பாற்பட்ட அளவுக்கு அவர்களுக்கு மதிப்புத் தருவதுதான் இலக்கிய வளர்ச்சிக்கு அடையாளமாகும்.

பிரான்சு தேசத்தில் இந்த மதிப்பு அளவுகடந்து இருக்கிறது. இங்கிலாந்திலே அவ்வளவு கிடையாது. தமிழ்நாட்டிலே துளிக்கூட இல்லை.

சொன்னதையே சொல்பவனையே தான் நம்மில் பலரும் மதிக்கிறார்கள்.



அதுவும் திருப்பிச் சொல்வதையும் – தேய்ந்து உயிரிழந்துவிட்ட, ஆனால் ஏற்கனவே சொல்லப்பட்டது என்று சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடியது என்று நினைவுகூரக் கூடியதையே மதிக்கிறார்கள்.

இது இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் ஹானி விளைவிக்கும் ஒரு மனப்பான்மை.

சோதனைகளின் முக்கியத்தை உணர்ந்து, அவற்றை எல்லாத் துறைகளிலும் செய்துபார்க்கிற எழுத்தாளர்களை மதிக்கத் தமிழ் வாசகர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

கவிதையில் பல துறைகள் வசனத்தில் மிகப்பல என்று எல்லாவற்றிலும் சோதனைகள் செய்து பார்க்காவிட்டால் தமிழில் புதுச் சாதனையே வர இடமில்லாது போய்விடும்.

சோதனை எழுத்து என்று சுயப்பிரக்ஞையுடன் இலக்கிய ஆசிரியர்கள் தைரியமாகச் செய்து பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் பிரசுரிக்க வேண்டும் என்கிற அவ்சியம் கூடக் கிடையாது.

எழுதுகிறவனுடைய அப்பியாசமாக ரகசியத்தில் பலவற்றையும் எழுதிப் பார்க்கலாம்.

## திரும்பத் திரும்ப . . .

பல நண்பர்கள், இலக்கிய வட்டம் டி. கே. சி. மலரைப் பற்றி பல குறைகள் நிறைந்ததுதான், எனினும் பாராட்டப்பட வேண்டியது தான் – மிகவும் அவசியமான ஒரு பார்வையைச் செலுத்தியது என்று சொல்லி எழுதியிருக்கிறார்கள்.

இலக்கிய வட்டத்தின் போக்கைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டு எழுதியவர்களும் – நமது நண்பர்கள் தான். அவர்களும் இலக்கியத் தில் அபிமானம் உள்ளவர்கள்தான். டி. கே. சியிடம் ஓரளவு மதிப் புள்ளவர்கள்தான் – சிலர் இல்லாமல் இல்லை.

குறைபட்டு எழுதியவர்களில் ஒருவருக்குப் பதில் வேண்டிய அவசி யம் என்று எனக்குத் தோன்றுகிறது – விவாத ரீதியில் அல்ல – ஆக்க ரீதியில்.

திரும்பத் திரும்ப என்பது அவசியமாவதே நம்மிடையே அடிப் படைகளின் தாக்குதல், பாதிப்பு தேய்கிறது என்பதனால்தான்.

இதனால்தான் உண்மை, நாணயம், நேர்மை, நீதி என்பதெல்லாம் பற்றிக்கூடத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதற்கான அவசியம் ஏற்படுகிறது.

ஷேக்ஸ்பியர், டாண்டே, டாஸ்டாவ்ஸ்கி என்று குறிப்பிட்ட ஒரு பத்துப் பேரையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதற்கும் இதுதான் காரணம்.

மனித வாழ்க்கையில் போலவே, இலக்கியத்திலும் பொதுவாகத் தரம் குறைவதற்கு ஒரு காரணம் நமது அளவு கோல்களை, தர மதிப்பிடும் கருவிகளைத் தளரவிட்டு விடுவதால்தான்.

திரும்பத் திரும்ப உலகத்து மகான்கள் போலவே இலக்கிய விமர்சகர்களும் ஒரே உண்மையை அல்லது உண்மைகளைச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

வாழ்க்கையில் தெய்வம்போல, ஆன்மீக நன்னெறி போல – இலக் கியமும் இலக்கிய நெறியும், கலையும் கலைநெறியும் அவசியமானது; அடிப்படையானது என்று ஏற்றுக் கொள்பவர்களுக்கு – எனக்கு –



விமர்சகன் செய்கிற காரியத்துக்கும் மகான்கள் செய்கிற காரியத்துக் கும் வித்தியாசம் தெரியவில்லை.

டி. கே. சி. மலரிலிருந்து வெகுதூரம் நகர்ந்துவிட்டதாகத் தோன்ற லாம். ஆனால் உண்மையில் அப்படியல்ல.

தன் உள்ளத்து உண்மையைச் சொன்னவர்கள், தங்கள் அசௌகரிய சௌகரியங்கள், பிறரிடமிருந்து லாபம் முதலியவற்றைக் கவனிக்காமல் உண்மையைச் சொன்னவர்கள் எல்லோருமே மகான் கள்தான். அந்த மகான்கள் வரிசையில், இலக்கியத்தைப் பற்றிய வரையில், டி. கே. சி. யும் ஒரு மகான்தான்.

விமர்சனத்தில், ஷேக்ஸ்பியரையும், டாண்டேயையும் டாஸ் டாவ்ஸ்கியையும் அடிக்கடி உயர்ந்தவர்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்வது குற்றமேயல்ல – அவசியமான சேவையாகும்.

அதே அளவில் ஒவ்வொருவர் பற்றியும், உண்மை என்று எனக்குத் தோன்றுவதை திரும்பத் திரும்பச் சொல்லி என் அளவுகோல் க்ளையும் மதிப்பீட்டுக் கருவிகளையும் துருப்பிடிக்காமல் வைத்திருப் பது விமர்சகனான என் வேலை என்றே நான் கருதுகிறேன்.

## தமிழில் சிறுகதை

**செ**ன்னை சர்க்கார் ஆதரவில் வெளிவந்திருக்கிற தமிழ் சிறுகதைத் தொகுப்பு – ஆங்கில மொழி பெயர்ப்பு, திப்ளோ அண் தி ஸ்டார்ஸ் என்கிற பெயரில் – திருப்திகரமானதாக இல்லை.

தமிழ் மொழியில் சிறுகதை என்கிற இலக்கியத்துறையில் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக இல்லை.

உண்மைதான். இது போன்ற ஒரு தொகுப்பு எல்லோருக்கும் திருப்தி தருவதாக அமைய முடியாது என்பது உண்மைதான்.

ஆனால் இது போன்ற பத்திருபது திருப்தி தராத தொகுப்புகள் வந்து புழுதியைக் கிளப்பிவிட்டு புழுதி அடங்கினால்தான் தமிழ்ச் சிறுகதையின் சாதனை தெரியவரும் – ஒன்றிரண்டு தொகுப்புகளும் திருப்தி தருவதாக அமைய முடியும்.

முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாகவே சிறுகதைத் துறை தோன்றித் தமிழில் வளர்ந்து வந்திருக்கிறது.

சிறுகதையில் வளர்ச்சியிருக்கிறது என்று ஏற்றுக் கொள்பவர்கள் இன்று பத்திரிகைகளில் வருகிற பெரும்பாலான கதைகள் தரமானவையாக – திருப்தி தருவனவாக இல்லை என்றும் ஏற்றுக் கொள்வார்கள்.

பத்திரிகைகளில் வராத சிறுகதைகள் நூல் வடிவில் வெளிவருவதென்பது நமது பிரசுரகர்த்தாக்களின் இன்றைய மனநிலையில் சாத்தியமில்லை என்றும் தெரிகிறது.

அரசியல் அரங்கில் அல்லது பத்திரிகைகளில் இடம்பெற்று சுலபமாக விற்கக்கூடிய நூல்களைத் தவிர பிற நூல்களைப் பிரசுரகர்த்தர்கள் தேடி வெளியிடுவதில்லை.

இந்த நிலையில் ஒன்றிரண்டு நல்ல நூல்களும் எல்லோரையும் மீறி வெளிவந்துவிடுகின்றனவே என்று மகிழ வேண்டிய நிலைதான்.

சிறுகதைகளில் நாம் எதிர்பார்ப்பது என்ன? சுவாரசியம். ஒரு கதை, குணச்சித்திரங்கள், மனோபாவ மோதல் அல்லது வர்ணனை,



இத்தியாதிகளுடன் ஓர் 'உருவ அமைதியும்' காண வேண்டும் என்று எண்ணுகிறோம்.

'உருவ அமைதி' என்பது அவரவர் ஏற்படுத்திக் கொள்கிற விதத்துக்கேற்ப அமைந்து வரும் – உருவம் பெறும்.

எந்தக் கதைக்கும் முன் கூட்டியே, ஓர் உருவம், இது தான் உருவம் என்று கிடையாது.

ஆசிரியர் தருகிற உருவம் – ஒரு கதைக்கு அதன் ஆசிரியர் தந்திருக்கிற உருவம் திருப்தி தருகிறதா, மனசை நிறைக்கிறதா என்பதை வைத்துத்தான் இந்த 'உருவ அமைதி'ப் பிரச்னை முடிவு செய்யப்பட வேண்டும்.

"உருவ அமைதி", உத்திகளைப் பொறுத்து ஆசிரியரின் திறனுக்கேற்ப ஏற்படுவதாகும்.

இப்படி உருவ அமைதியுடன் சிறுகதைகள் எழுதியிருப்பவர்கள் – ஆளுக்கு ஐந்தாறு சிறுகதைகளாவது எழுதியிருப்பவர்கள் என்று பின் வருகிறவர்களைச் சொல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி – இவர்கள் நால்வரும் இறந்துவிட்டவர்கள்.

உயிருடனிருப்பவர்களில் மௌனி, ந. பிச்சமூர்த்தி, ந. சிதம்பர சுப்ரமணியம், லா. ச. ராமாம்ருதம், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி. (இது *1965ல்*)

இந்தப் பத்து பேரும் தமிழ்ச் சிறுகதைக்கு சிறப்பாக சேவை செய்திருப்பதாகச் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

இந்தப் பத்துப் பேரிலேயே ஒன்றிரண்டு ஆசிரியர்களை விட்டுவிட வேண்டியதாக இருக்குமே தவிர, சேர்ப்பதற்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இந்தப் பத்துப் பேருடைய சிறுகதைகளில் சிறந்ததைப் பொறுக்கி எடுத்து ஒரு பத்திருபது பக்க இலக்கியத் தரமான முகவுரையுடன் ஒரு தொகுதி, என்று வெளி வருகிறதோ அன்றுதான் தமிழ்ச் சிறுகதை வயது வந்ததாகக் கருதப்பட வேண்டிய நாள் என்று நான் எண்ணுவேன்.

அதுவரையில் எருமை மாட்டை குளத்தில் போட்டுக்கொண்டு விலை பேசுகிற கதைதான் தமிழில் சிறுகதை பற்றி, அதன் வளர்ச்சி பற்றிப் பெருமை பேசுவதும்.

சிறுகதைகளில் மட்டுமின்றி இலக்கியத்தில் எல்லாத் துறைகளிலுமே எழுதப்படுவதில் ஒரு தனித்வம், ஆசிரியரின் பர்ஸனாலிடி இல்லாது போனால் அது உபயோகமற்றதாகும்.

நன்றாகவே சிறுகதைகள், சுவாரசியமாக, கெட்டிக்காரத் தனமாக இன்று பத்திரிகைகளில் எழுதுகிற பலருடைய கதைகளிலும் இந்த இலக்கிய தனித்வம், நோக்கு, பர்ஸனாலிடி இல்லாத காரணத்தினால் தான் அவர்கள் சிறுகதைகள் ஒரு சாதனையைக் காட்டவில்லை என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது.

லேசான, குழப்பமான மனிதாபிமானப் போக்கு அதிருந்தால் போதும் என்று பத்திரிக்கைகளுக்கு எழுதுபவர்கள் முடிவு கட்டி விடுவதில் அவர்கள் அளவில் தவறில்லை.

சிறுகதை ஏதோ வேடிக்கையாக தட்டித் தடுமாறாமல் நின்று யோசிக்காமல், ஒரே ஓட்டமாக வாசித்து முடிக்கும்படியாக இருந் தால் போதும் என்கிற நினைப்பும் பத்திரிகை அளவில் சரியே.

ஒரே இலக்கியாசிரியன் மாதம் ஒரு சிறுகதை என்று திட்டமிட்டு கதை எழுதிப் பணம் பண்ண வேண்டிய நிலை ஏற்படுகிற போது லியோனார்டு மொர்ரிக்கையும் அல்பெர்ட்டோ மோரேவியாவையும் நம்ப வேண்டியதாக வந்து விடுகிறது. இதை எடுத்து எவ்வளவு தான் திறம்படச் செய்தாலும் பத்திரிகைகளுக்குப் போதும் – இலக்கியத் துக்குப் போதாது என்று சொல்கிற விமர்சகனைக் குறை கூறிப் பய னில்லை. இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

ஆவரேஜிக் (சராசரிக் கணக்கில்) என்று எழுதப்படுகிற கதை முப்பதுகளில் எழுதப்பட்டதைவிட நன்றாக இருக்கிறது. அதுவே தமிழில் சிறுகதைகளின் வளர்ச்சி என்று சொல்லிப் பயனில்லை.

அதுவே சிறுகதையின் தேக்கமும் ஆகும். மலையாளத்தில், மராட்டியில், சராசரிச் சிறுகதை உயர்வாகவே இருக்கிறது. தமிழின் பெருமை அதில் ஒரு புதுமைப்பித்தன், ஒரு மௌனி, ஒரு லா. ச. ராமாமிருதம் தோன்றியதுதான்.

இலக்கியத்தில் சராசரி பார்த்துப் பயன் இல்லை. அது சர்க்கார் இலாகா புள்ளி விவர நிபுணர் பிறரைத் திருப்தி செய்வதற்காகச் செய்ய வேண்டிய வேலை.

நமது சிகரங்கள் என்ன என்று கவனிப்பதே ரசிகனாக, வாசகனாக, விமர்சகனாக, என் வேலை.

ஒரு முப்பது வருஷ வளர்ச்சியில் ஒரு பத்து நல்ல சிறு கதாசிரியர் கள் போதாது என்பதில்லை.

அடுத்து வருகிற ஆண்டுகளில் ஒரு நல்ல சிறு கதை ஆசிரியர் கூடத் தோன்றாமல், இந்தச் சராசரிப் பத்திரிகையுகம் செய்துவிடுமோ என்கிற பயம் தான் தேக்கம் என்கிற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

குறிப்பிடப்பட்டவர்களும் அன்று நன்றாக எழுதியிருக்கலாம். இன்று சுமாராகத் தானே எழுதுகிறார்கள் என்று கேட்கலாம்.



எந்த இலக்கியாசிரியரையுமே அவருடைய [illegible] சிறுகதையை வைத்துத்தான் மதிப்பீடு சொல்ல வேண்டும் என்ப தில்லை – அவருடைய சிறந்ததை வைத்துத் தான் சொல்ல வேண்டும். அந்தச் சிறந்தது சமீபத்தில் எழுதப்பட்டதனாலும் சரிதான் – இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதனாலும் சரிதான்.

வளர்ந்திருக்கிற அளவில் சிறுகதைகள் வளர்ச்சி சரிவரக் கணிக்கப்படவில்லை என்பது நிச்சயம்.

# நாடகங்கள்

**த**மிழில் ஓரளவுக்குச் சிறுகதைகளும், நாவல்களும் இப்போது விமர் சனமும் இலக்கியத் துறைகளாக இயங்குகின்றன என்று சொல்லலாம். போதாது – தரம் ஏறவில்லை – என்பதெல்லாம் எல்லாக் காலத்துக்கும் எல்லா மொழிகளுக்கும் பொதுவான குறைதான்.

தமிழில் நாடகத்தில் ஓர் எழுபது எண்பது ஆண்டுகளாகவே ஆர்ப் பாட்டங்கள் இருந்து வந்திருந்தும், அறிகுறிகள் இருந்து வந்திருந்தும், இலக்கியத் தரமான அளவில் சிறிதும் சலனமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றுள்ள நாடகங்கள் பற்றி – இலக்கியம் என்கிற அளவில் பேசா திருப்பதே நல்லது – கசப்புத் தோன்றாமல் இருக்கும்.

நாடகங்கள் வெற்றி பெறப் பலருடைய ஒத்துழைப்புத் தேவைப் படுகிறது.

ஆசிரியன் மட்டும் ரேடியோவையோ மேடையையோ மனத்தில் கொள்ளாமல் நாடக பாத்திரங்கள், சம்பாஷணைகள், உச்சக்கட்டம் முதலியன மூலம் நாடகங்களை எழுதிப் பார்க்கிற பழக்கம் ஏற்பட வில்லை.

ஏற்பட்டு இலக்கியத்தரமான முயற்சிகள் வந்தால் அவற்றை வைத்துப் பிறகு அவர் ஒத்துழைப்பால் நாடகத்தை நடத்திப் பார்க் கலாம்.

சுலபமான சிந்தனைகள், கைதட்டல் பெறக் கூடிய ஹாஸ்யம், கிண்டல், உகந்ததாக இருக்க வேண்டும் என்கிற ஆசை இவை இல்லாமல் நாடகங்கள் எழுதப்பட வேண்டும்.

பல தனி மனிதர்களாலான கோஷ்டி, மக்கள் மனப்பான்மையைச் சித்தரிக்க நாடகாசிரியனுக்குத் திறமை வேண்டும்.

தார்ண்டன் வைல்டர் சொல்வதுபோல நாடகத்தின் காலம் எப்போதும் நீடிக்கும் ஒரு தற்காலம்தான்.

இந்த அடிப்படைக் கருத்துக்களை எல்லாம் மனத்தில் கொண்டு தமிழ் நாடகாசிரியர்கள் எழுதத் தொடங்கினால் தமிழ் நாடக இலக்கிய மறுமலர்ச்சி உருவாகிவிடும்.



நாடகங்களே இல்லாமல் நாடகமேடை, உத்திகள் நடிப்பு பற்றிப் பேசிப் பயன் இல்லை.

நாடகங்கள் தோன்றுவதற்கான சூழ்நிலையை சிறுகதை விமர் சனம், புதுக்கவிதை, நாவல் முதலியவற்றைச் சிருஷ்டிப்பதற்கான சூழ்நிலையை இலக்கிய ஆசிரியர்களே ஏற்படுத்திக்கொண்டு [illegible] செய்யவேண்டும்.

மேதைதான் தேவை. அப்படி ஒரு மேதை தோன்றினால் புதுமைப் பித்தனை உணர்ந்து கொண்ட மாதிரி, மௌனியை உணர்ந்து கொண்ட மாதிரி, நாவலில் இன்றுள்ள சிலரை உணர்ந்து கொண்ட மாதிரி உணர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதே தமிழ் வாசகர்கள் விமர்சகர்கள் கடமையாகும்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர்

**வி**ல்லியம் ஷேக்ஸ்பியர் நானூறு வருஷங்களுக்கு முன் பிறந்தவர். இந்த நானூறு ஆண்டுகளில் அவரைப்பற்றி நூற்றுக்கணக்கான சிந்தனையாளர்கள், விமர்சகர்கள், கலைஞர்கள் ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதியிருக்கிறார்கள். இன்னமும் சொல்ல விஷயம் இருக்கிறது. இன்னும் நானூறு வருஷங்களுக்கும் சொல்லிக்கொண்டேயிருப்பார்கள் என்பதுதான் விசேஷம்.

ஷேக்ஸ்பியர் என்ற மனிதர் இருந்தார் என்பது உண்மைதான். அவர் படிப்பில்லாதவர். நாட்டுப்புறத்தவர். அவர் காலத்திய அறிவு பூராவும்கூட அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட மஹோந்நதமான சிந்தனைகளை இப்படிப்பட்ட கவிதையாக அவரால் வெளியிட்டு இருக்க முடியுமா? வேறு யாரோ எழுதி ஷேக்ஸ்பியர் பெயரில் வெளியிட்டுவிட்டார்கள் என்று சொல்கிற அளவுக்கு ஷேக்ஸ்பியர் ஆராய்ச்சி ஒரு பக்கத்தில் வளர்ந்திருக்கிறது.

கவிதையின் சிகரமாக – ஆங்கிலக் கவிதையின் சிகரமாக மட்டுமின்றி உலகக் கவிதையின் சிகரமாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் பல பகுதிகள் அமைந்திருப்பது கண்கூடாகத் தெரிகிற விஷயம். படிக்கப்படிக்க நவநவமான கருத்துக்களை ஊற வைக்கும் சொற்சேர்க்கை அவருடையது. மனித மனத்தையும் குணாதிசயங்களையும் போக்கையும் அவரைப் போல அறிந்தவர்கள் உலகில் இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு ஒரு மேதை. எல்லாவற்றிற்கும் மேலோக நாடகமாக அமைக்க முடியாததையும் நாடகமாக்கி விடுகிற ஓர் உத்தி மேதை. இவ்வளவும் தான் ஷேக்ஸ்பியர்.

எத்தனையோ ஆயிரக்கணக்கான நூல்கள் ஒரு தரம் கூடப் படிக்கத் தேவையில்லை என்று சொல்லக் கூடியவை அவ்வப்போது வெளியாகிக் கொண்டேயிருக்கின்றன. எத்தனையோ நூல்கள் ஒருதரம் படித்தால் இன்பம் பயக்கும் இரண்டாம் தரம் படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லக்கூடியவை உண்டு. பலநூல்கள் இரண்டாந்தரமும் படிக்கலாம்.

மூன்றாம் தரமும் படிக்கலாம். சிலநூல்கள் எத்தனை தரம் படித்தாலும் அலுப்பே தட்டாது. புதுப்புது சிந்தனைகளுக்கும்



அனுபவங்களுக்கு அடித்தளம் போட்டுத் தரும். அந்த மாதிரியான சில நூல்களிலே ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பலவற்றையும் சொல்ல வேண்டும்; ஹாம்லெட், மாக்பெத், ராஜா லியர், ஹென்றி மன்னர்கள் பற்றிய நாடகங்கள். லியர், விரும்பிய விதமே, சிம்பலின் – முப்பத்தியேழு நாடகங்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்றதையெல்லாம் சொல்லிவிடலாமே போலத்தான் இருக்கிறது. ஜூலியஸ் சீஸர், கொரியாலானாஸ், ஆண்டனியும் கிளியோ பாட்ராவும், ரோமியோ ஜூலியட்.

ஷேக்ஸ் பியருடன் ஒப்பிடக் கூடிய மகாகவிகள், உலக இலக்கிய பரப்பிலே மிகச் சிலர்தான் உண்டு. ஒப்பிடக் கூடியவர்களில் பலரும் கூட இப்படி ஒரு முழு பிரபஞ்சத்தையுமே மீண்டும் சிருஷ்டித்து உயிருள்ள பல மனிதர்கள் – ஆண் பெண் குழந்தைகளை நடமாட விட்டு இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மனித மன இயக்கத்தை ஆன்மீக அடிப்படையில் கவனித்து – கணித்து கேஷ்ஸ்பியர் சொன்ன பரப்புக்கு, ஆழத்திற்குச் சொன்னவர்கள் மிகவும் குறைவு.

ஆங்கிலம் இன்று உலக மொழிகளில் சிறந்ததொன்றாக விளங்குகிறது என்பதற்கு அதில் கேஷ்க்ஸ்பியர் எழுதினார் என்பதை ஒரு காரணமாகச் சொல்ல வேண்டும். சொல், வேகமும், அழுத்தமும், ஆழமும் அழகும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் உள்ள – கவிதையால் மட்டுமல்ல, சிறு வசனப் பகுதியாலும்கூட – உள்ளது போல அமையச் செய்வது ஒரு மேதையினால்தான் முடியும். பலருக்கு ஒவ்வொரு சமயம் முடிந்ததை ஷேக்ஸ்பியர் இடைவிடாது ஒரு இருபது வருஷத்து இலக்கிய சிருஷ்டியால் காட்டியிருக்கிறார். ஆங்கில இலக்கியத்திலிருந்து ஷேக்ஸ்பியரை அகற்றிவிட்டால் அதன் வளத்தில் முக்கால் வாசியும் குறைந்துவிடும் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்கிலம் அறிந்தவர்கள் எல்லோரும் ஷேக்ஸ்பியரை அறிந்து படித்து அனுபவிக்க முடியும் என்பதனால் அதிருஷ்டக்காரர்கள் என்றே சொல்ல வேண்டும். தொட்ட இடமெல்லாம் சுவை ஊறும் கலைக்களஞ்சியங்கள் அவர் நாடகங்கள் பலவும். ஏன், எப்படி, எதனால் என்றெல்லாம் அலசிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு அவரவர் அளவில் படித்து அனுபவிக்க முற்பட வேண்டியது அவசியம். ஷேக்ஸ்பியர்பற்றி ஒரு நூல்படிப்பதற்குப் பதில் ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஒரு காட்சியை படிப்பது மேலான காரியம். இலக்கியம் சொந்த அனுபவமாகப் பரிணமிக்கும் போதுதான் அதற்கு முக்கியத்துவம் இருக்கிறது. அர்த்தமே உண்டாகிறது. ஷேக்ஸ்பியரைப் பற்றிய வரையில் படித்து ரசிக்கிற சொந்த அனுபவிமல்லாதவனை துரதிர்ஷ்டசாலி; கண்ணிருந்தும் குருடன் என்றுதான் சொல்ல வேண்டும். இதைப்படித்து ரசிக்கும் அனுபவம் பெற்றவர்கள் மீண்டும் மீண்டும், தேடித் தேடி காண முயலுவார்கள். ஒரு நாட்கத்தை – புயல் மாக்பெத் – நூறாவது தடவையாக, இருநூறாவது தடவையாக படித்தாலும் இந்த ரச அனுபவத்தைப் புதிதாகப் பெறமுடியும் என்

பதுதான் ஷேக்ஸ்பியரின் பெருமை. இப்படி ரசிக்கக்கூடிய இலக்கிய நூல்கள் ஒவ்வொருவர் தாய் மொழியிலும் ஐந்தாறு தேறும். உலக இலக்கியப் பரப்பில் பத்து வரை தேறும். எல்லோருக்கும் பொதுவாக ஷேக்ஸ்பியர் ஒருவராக இருப்பவர் என்பது குறித்து இலக்கிய விமர்சன உலகம் வியப்படைகிறது. இந்த வியப்பு காரணமாகத்தான் ஷேக்ஸ்பியர் பற்றி இத்தனை நூல்கள் எழுதப்படுகின்றன என்று சொல்ல வேண்டும்.

கடவுளைப் போலவே மிக உயர்ந்த கலைஞர்களும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். எந்த வார்த்தைகளைச் சொல்லியும் அவர்களை எட்டித் தொட்டுவிட முடியாது. தொடரமுடியாது என்பதைச் சொல்லி அவருடைய வார்த்தைகள் கலாசிருஷ்டியாயிருக்கின்றன என்று சொல்லி நீங்களே கண்டு கொள்ளுங்கள் என்று சொல்வது விமர்சகனின் லட்சியம். ஷேக்ஸ்பியரின் சிருஷ்டிகளைக் கொண்டேதான் அவரை எட்ட முடியும். ரசிகனால் நூறாவது, இருநூறாவது, முன்னூறாவது, ஆயிரமாவது பிறந்த நாளை விழா என்று கொண்டாடுவது நமக்குள்ளே மரபாகிவிட்டது. ஆட்சி செலுத்துகிறது. ஷேக்ஸ்பியரை நேற்று படித்திருக்கலாம் – இன்று படிக்கலாம் – நாளையும் படிக்கலாம். விழாக்களை விட அது தான் முக்கியம் – இலக்கியத்தைப் பற்றிய வரையில்.



## ஷேக்ஸ்பியரும் கம்பனும்

**யா**ரோ சொல்லிக் கொண்டிருப்பது காதில் விழுகிறது. ஷேக்ஸ்பியருக்கு விழாக் கொண்டாடுகிறார்கள்.

கம்பனுக்கும்தான் விழாக் கொண்டாடுகிறார்கள். அமர்க்களமாகவே கொண்டாடுகிறார்கள். இரண்டுக்கும் எத்தனை வித்தியாசம்?

ஷேக்ஸ்பியரைப் பற்றி எத்தனை நூல்கள் எத்தனை பேர் வழிகள் வாழ்வின் லட்சியமாக வைத்துக் கொண்டு. அதே மூச்சாக இருந்து உழைத்திருக்கிறார்கள்? பதிப்புகள் என்ன? வாழ்க்கை ஆராய்ச்சிகள் என்ன? விமர்சனங்கள் என்ன? அப்படி ஒருவர் இருந்தாரா இல்லையா என்பது பற்றி என்ன? இப்படியாக ஒரு லைப்ரரியை நிரப்புகிற அளவுக்கு நூல்கள் வந்திருக்கின்றன.

நூல்கள் மட்டும் அல்ல; ஷேக்ஸ்பியர் படிப்பது, அனுபவிப்பது, ரசிப்பது, ரசித்தது ஒன்றை எடுத்துச் சொல்வது என்று தங்கள் வாழ்நாள் பூராவையும் செலவிட்டவர்கள் உண்டு.

கம்பன் ஷேக்ஸ்பியருக்கும் முந்நூறு – அல்லது ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தவன். அதற்கு முந்தி சிலப்பதிகாரம் – திருக்குறள் – மூன்றாஞ்சங்கம் – இரண்டாஞ் சங்கம் – முதற் சங்கம் – தொல்காப்பியர் – அகத்தியர் – சிவபெருமான் என்று கதைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நம்மிடையே பஞ்சமே இல்லை.

கம்பனைப் பற்றிய வரையில், அந்த ரசனைக்குத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் ஒருவர் உண்டு. தான் அனுபவித்ததையும் பிறர் அனுபவிக்கச் செய்தவர். அவரைத் தமிழ் அன்பர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள் என்ன பாடுபடுத்தினார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும்.

ஷேக்ஸ்பியர் என்று ஒருவர் இருந்ததேயில்லை. இருந்திருந்தாலும் அவர் இந்த நாடகங்களையெல்லாம் எழுதியிருக்க முடியாது என்று சொல்கிற அளவுக்கு இங்கிலாந்தில் ஆராய்ச்சி பெருகுகிறது.

இங்கு கம்பராமாயணத்தில் செருகு கவிகள் ஏராளம் என்று ஏற்றுக் கொள்கிறவர்கள் கூட ரசிகமணி டி.கே.சி. இவைதான் கம்பன் பாடல்கள் என்று எடுத்து அறுதியிட்டு தன் ரசனையை வைத்துச் சொன்னால் ஆட்சேபம் சொன்னார்கள்.

கம்பனுக்கு ஒரு நல்ல பதிப்பாக, ஒரு நல்ல விமர்சனமாக, படிப் பதற்கு ஒரு தூண்டுதலாக – ரசிகமணி டி. கே. சி. தந்ததற்குப் பிறகு தமிழ் நாட்டில் ஒன்றும் கிடையாது.

இருந்தும் கம்பனைப் பற்றிய புத்தக உற்பத்தி பெருந்தொழிலாகத் தான் இருக்கிறது. விழாத் தம்பட்டங்கள் பெரிதாகத்தான் ஒலிக் கின்றன.

வ. வே. ஸு. ஐயர் தன் போக்கில் கம்பராமாயண ஆராய்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

அந்தப்பாதைகளில் செல்ல முழுநேர இலக்கிய ஈடுபாடுள்ளவர் கள் தமிழ்நாட்டில் பத்துத் தலைமுறைகளில் ஓர் ஆயிரம் பேராவது தோன்றாவிட்டால் கம்பன் – கம்பன் என்கிற முழக்கம்தான் இருக் குமே தவிர காரியம் எதுவும் இராது.

தவிரவும் கம்பனை அணுகி, அணுகி அறிந்து ரசிக்க வ. வே. ஸு. ஐயர் பாதை, டி. கே. சி. பாதை என்று இரண்டுதான் உண்டு என்பதும் தவறு. எத்தனையோ பாதைகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். எத்தனை பேருக்குக் கம்பனிடம் ஈடுபாடு இருக்கிறதோ அத்தனை பாதைகள் உண்டு.

பண்டித பேராசிரியர்களுடையதும் ஒரு பாதைதான். இந்த ஐம்பது நூறு ஆண்டுகளில் நாம் காண்பது இதுதான். அவர்கள் பின்பற்றுகிற பாதை இருட்டுப்பாதை. எங்கும் செல்லாது. சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் என்பதுதான்.

✕ ✕ ✕



35338

## க. நா. சு. இயற்றிய நூல்கள்

நாவல்கள் : சர்மாவின் உயில், சத்யாக்ரஹி, பசி, வாழ்வும் தாழ்வும், சக்தி விலாசம், பொய்த்தேவு, ஏழுபேர், ஒரு நாள், அசுரகணம், புழுதித்தேர், ஏழுமலை, வக்கீல் ஐயா, மால்தேடி, ஜாதி முத்து, வாழ்ந்தவர் கெட்டால், ஆயுள் தண்டனை, கந்தர்வ லோகத்தில் கொலை, நடுத்தெரு, திருஆலங்காடு, ஆட் கொல்லி, கோபுர வாசல், சமூக சித்திரம், அவரவர் பாடு

சிறுகதைத் தொகுப்புகள் : மணிக்கூண்டு, ஆடரங்கு, கருகாத மொட்டு.

விமரிசனம் : விமரிசனக்கலை, படித்திருக்கிறீர்களா ?, உலகத்துச் சிறந்த நாவல்கள், முதல் ஐந்து தமிழ் நாவல்கள், இலக்கிய விசாரம், இந்திய இலக்கியம், பத்து சிறந்த இந்திய நாவல்கள், நாவல்கலை.

மொழிபெயர்ப்பு : அன்பு வழி (ஸ்வீடிஷ் நாவல்), தபால்காரன் (பிரெஞ்சு நாவல்), மதகுரு (ஸ்வீடிஷ் நாவல்), நிலவளம் (நார்வீஜிய நாவல்), 1984, மிருகங்கள் பண்ணை (ஆங்கில நாவல்கள்).

ஆணைக்குழு திண்டிவனம் நாள்:.......... எண்